ஏற்பாடுகளை மீறும் அலுவலர்கள் தனிப்பட்ட ரீதியில் அதற்காக பொறுப்புக் கூற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதும் அதற்கு இணங்காத வகையில் 2023 ஆண்டில் கடன் அடிப்படையில் அச்சக பணிகளை மேற்கொண்டதற்காக 2023 திசெம்பர் 31 திகதியன்று அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய வருமானம் ரூபா 210,048,234 தொகை ஆகும்.

தலைப்பு - 212 பரீட்சைகள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 3,682,151,293 | 62,717,256 | 3,619,434,037 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,689,449,880 | 18,625,851 | 3,670,824,029 | முனைப்பழியுள்ள |
| **2023** | 3,779,664,005 | 302,817,886 | 3,476,846,119 | முனைப்பழியுள்ள |

| தொடர். இல. | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கை | அறிக்கை திகதியில் பரிந்துரையின் செயற்பாட்டு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | ஒப்பந்தக் கிரயம் ரூபா 564,320,835 தொகைக்கான ஆறு மாடி பல் கரும கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 2017 ஆம் ஆண்டு ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 2019 பெப்ரவரி 02 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்காக பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி நிர்மாணத்தின் செயல் முன்னேற்றம் 92 சதவீதம் அளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் , அத் திகதி அளவில் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகம் மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு முறையே ரூபா 81,729,560 தொகை மற்றும் ரூபா 369,555,925 தொகை ஆக ரூபா 451,285,486 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2021<br>2022<br>2023 | திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்துரைத்த காலத்தில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்யதல் வேண்டும். | 2019 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற உயிர்த்தஞாயிறு தாக்குதல் காணப்பட்ட மோசமான காலநிலை, கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை, நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக நிர்மாணங்கள் தாமதமடைந்திருந்தது . | நிர்மாணப் பணிகள் முழுஜமயாக பூர்த்தி செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02 | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா .546,264,452 பெறுமதியான இணைய டிஜிட்டல் அச்சீட்டு ,யந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது, ஆனால் அந்த இயந்திரத்தின் உயர் ,யலளவைப் பயன்படுத்த திணைக்களம் தவறிவிட்டது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட மொத்த வினாத்தாள்களில் முறையே 10 சதவீதம் மற்றும் 17 சதவீதம் மட்டுமே உரிய இயந்திரத்தைப் பயன்படுத்தி அச்சிடக் கூடியதாக ,ருந்தது | 2021<br>2022<br>2023 | தேவைகளை சரியாக இனங்கண்டு சொத்துக்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டியிருந் ததுடன். கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களின் ஆகக்கூடிய இயலளவில் பயன்படுத்துதல் வேண்டும். | ஏதாவது தொழில்நுட்ப பிரச்சனை காரணமாக இயந்திரத்தில் ஆகக்கூடிய இயலளவில் அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் 2023.08.28 ஆந் திகதி வரையும் பிரச்சினைகளைத் தீர்த்து கல்வி க.பொ.த(உயர்தரம்) 2023(2024) பரீட்சை வினாப்பத்திரங்களின் எண்ணிக்கை 26.59 சதவீதம் அச்சிடப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப சிக்கல்களை தீர்வு செய்வதற்கு முயற்சிக்கிறது |
| 03 | வினாப்பத்திரங்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 8,428,637 பெறுமதியில் வெப் டிஜிட்டல் அச்சிடல் இயந்திரத்தின் றுசயிpைபெ ளுழடரவழைெ பகுதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற இரகசிய குறியீட்டு பொதியிடல் செயற்பாடுகளுடன் அந்த பகுதி இணங்காமையின் காரணமாக 2024 யூலை வரையும் அந்த இயந்திரத்தின் பகுதி பயனற்றுக் காணப்பட்டது. | 2021<br>2022<br>2023 | உரிய இயந்திரத்தின் பகுதிகளை கொள்வனவு செய்வதற்காக கோரப்பட்டதிலிருந்து கொள்வனவு செய்யும் வரையான செயற்பாடுகள் தொடர்பாக சகல பொறுப்புக்களையும் உடைய தரப்பினரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அந்த பகுதி இரகசிய பாடசாலை பரீட்சைகள் கிளையின் தேவையுடன் இணங்காமையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில் லை. ஏனைய எந்தவொரு கிளைக்கும் அதன் தேவை காணப்படாததாக அறிவிக்கப்பட்டிருந்த மையினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய முகவர் நிறுவனத்துடன் கலந்துரையாடப்படுகி ன்றது. | .இயந்திரப் பகுதி பாவனையிலி ருந்து அகற்றப்பட்டு ள்ளது. |
| 04 | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 630,000,000 பெறுமதியுடைய திணைக்களத்தின் பிரதான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பத்தரமுல்லையில் | 2021<br>2022<br>2023 | காணி கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் கட்டணம் செலுத்தப்படாமல் காணி கையேற்பதற்காக | 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி காணி கையேற்கப்பட வில்லை.<br>. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைந்துள்ள 1.356 ஹெக்ரேயர் காணியின் சட்டரீதியான உரித்து இதுவரை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | | | 2024 மார்ச் 06 ஆந் திகதிய கல்வி அமைச்சின் செயலாளருக்கு புதிய அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| 05 | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 28,500,000 செலவில் திணைக்களத்தால் கிலோவோல்ட் 250 சூரிய வலு சக்தி முறைமையொன்று பொருத்தப்பட்டிருந்ததுடன் முறைமை ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு வருட காலமாக அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் வழங்கவேண்டியிருந்த போதும் நிறுத்தி வைத்த பணம் 10 சதவீதம் விடுவிப்பதற்கு முன்னர் வழங்குனரால் பராமரிப்பு சேவை வழங்குதல் தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடவேண்டியிருந்தமை கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் 2018 யூலை 12 ஆம் திகதி வரையிலும் அந்த செயற்திட்டத்திற்குரிய சகல பணமும் செலுத்தி முடிவடைந்திருந்ததுடன் இதுவரையில் சேவை வழங்கிய நிறுவனத்துடன் பராமரிப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சூரிய வலு சக்தி முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022<br>2023 | சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்ததுடன் பராமரிப்பு நிறுவனத்துடன் கலந்துரையாடி சேவை நடவடிக்கைகளை மிகவும் விரைவாக மேற்கொண்டு இயலளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதிய சேவை உடன்படிக்கை சமர்ப்பிக்குமாறு புளெழ நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அது கிடைத்த பின்னர் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | 2024 ஆகஸ்ட் 31 வரை, எந்த சேவை ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06 | 2005 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட Stitch Master Gathering and wire Stitching machine இயந்திரம் செயற்படுத்தும் போது தாள் விழுந்ததன் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட முதலாவது சந்தர்ப்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. மேலும் உரிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்குரிய கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022<br>2023 | இயந்திரத்தைக் கையேற்கும் போது அதன் செயற்படு நிலையினை பரீட்சித்து திணைக்களத்தின் தேவைக்கு ஈடுகொடுக்காதவிடத்து இயந்திரத்தை மீண்டும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினரையும் இனங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய வழங்குனர் கம்பனியிடம் விசாரணை செய்து இயந்திரத்தின் தேவையின் பிரகாரம் செயல்நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய வகையில் தயார் செய்யப்படவில்லை |
| 07 | 2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட, 1990 ஆம் ஆண்டுக்கு முன்னைய ஆண்டுகளின் பரீட்சை பெறுபேறுகளின் ஆவணங்களை பொதுமக்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் வழங்க கூடிய வகையில் அந்த ஆவணங்களை ஸ்கேன் (scan) செய்து வைத்திருக்கும் மென்பொருளை உருவாக்கும் திட்டம், 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | 2022<br>2023 | பழைய மற்றும் புதிய ஆவணங்களை பாதுகாப்பதற்குரிய திட்ட முறைமையின் தாமதமின்றும் முறையாகவும் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனத்திற்கு ஆரம்பிக்கப்பட்ட கட்டத்தில் கையளிக்கப்பட்ட 5000 ஆவணங்களின் தெரிவாக எதிர்பார்க்கப்பட்ட தொழில்நுட்ப மாதிரியை அடைந்து கொள்ளும் வகையில் நிறைவேற்றாமையின் காரணமாக அந்த கம்பனியின் கட்டளைக் கடிதம் இரத்து செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மீண்டும் பெறுகை செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பெறுகை செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 08 | திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளம் மற்றும் இலத்திரணியல் சேவைகளுக்குரிய சேவை உடன்படிக்கை 2021 | 2023 | இணையதளம் மற்றும் இலத்திரனியல் சேவைகளை பாதுகாப்பாக பேணிச்செல்வதற்கு | பராமரிப்பு மற்றும் சேவைகளுக்காக புதிய நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்குரிய பெறுகை | 2024 ஆகஸ்ட் 31, வரை, சேவை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் இணையதளத்தை நாளதுவரையாக்குவதற்கு முடியாமையினால் இணையதளம் மற்றும் இலத்தரணியல் சேவைகள் பாதுகாப்பின்றி இருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வில்லை அல்லது வேறு நிறுவனமொன்று தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை |

தலைப்பு - 213 கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 6,994,446,131 | 2,366,280 | 6,992,079,851 | முனைப்பழியுள்ள |
| **2022** | 6,895,821,531 | 1,761,553 | 6,894,059,978 | முனைப்பழியுள்ள |
| **2023** | 6,699,726,395 | 36,852,583 | 6,662,873,812 | முனைப்பழியுள்ள |

| தொடர் இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கை | அறிக்கை திகதியில் பரிந்துரையின் செயற்பாட்டு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | நிதியல்லாச் சொத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 92.14 மில்லியன் பெறுமதியான ஹோமாகம பிட்டிபனவில் அமைந்துள்ள பாடப்புத்தக களஞ்சிய தொகுதியை நிர்மாணிக்கின்ற காணியின் சட்டரீதியான உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2023 | காணியின் சட்டரீதியான உரித்தை திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணிக்குரிய ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் காணப்படுகின்றமையால் அந்த தீர்ப்பின் பின்னர் கையளித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமென ஹோமாகம பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | காணியன் உரிமை திணைக்களத்திற்கு மாற்றப்படவில்லை. |
| 02 | 2009 ஆம் ஆண்டு முதல் நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டட் இல் இலிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,431,012 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடுதவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | 2022<br>2023 | அறவிட வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டியிருந்ததுடன் காலரீதியில் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத | உரிய கடனை பதிவழித்தல் தொடர்பாக கைத்தொழில் அமைச்சுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அறவீடு செய்யப்படவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | |
| 03 | 2008 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்க கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ரூபா 312,831,071 பெறுமதியான புத்தகங்கள் 2017 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களில் நீக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத புத்தகங்களாக ரூபா 93,420,366 தொகையினை திணைக்களம் இனங்கண்டிருந்தது. | 2022 | வருடாந்த பாடப்புத்தகங்களின் தேவைப்பாட்டினை இனங்கண்டு அச்சிடப்பட வேண்டிய புத்தகங்களின் அளவு தீர்மானிக்கப்படுதல் வேண்டும். | களஞ்சிய மீதியினையும் மீண்டும் பயன்படுத்திய சதவீதத்தினையும் கணித்து 2024 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகங்களின் தேவைப்பாடு கணிக்கப்பட்டுள்ளது. | குழந்தைகளின் மனப்பாங்கில் மாற்றத்தை உருவாக்கவும், பாடப்புத்தகங்களை மீண்டும் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், அரசசி செலவினங்களைக் குறைக்கவும் போதியவில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவில்லை. |
| 04 | 2022 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின் நிதியத்தில் ரூபா 7,678,441 பயன்படுத்தப்பட்டு சமூக சுகாதாரம் தொடர்பான வள புத்தகம் (16+) 15,000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. அதில் 2024 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பகிர்ந்தளிக்கப்படாமல் 1765 புத்தகங்கள் | 2023 | திட்டமிடப்பட்ட பிரகாரம் அச்சிடப்பட்ட புத்தகங்களை பகிர்ந்தளித்தல் வேண்டும். | பதிலளிக்கப்படவில்லை. | 2024 செப்தம்பர் 27 இல் உள்ளவாறு 1765 புத்தகங்கள் களஞ்சியத்தில் உள்ளன். |

களஞ்சியத்தில்
எஞ்சியிருந்தது.

**தலைப்பு - 215 தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | உரிமை மூலதனம் ரூபா. | அபிப்பிராயம |
|---|---|---|---|---|
| **2021** | 8,602,688,105 | 108,713,953 | 8,493,974,152 | முனைப்பழியுள்ள |
| **2022** | 8,619,559,967 | 105,696,993 | 8,513,862,974 | முனைப்பழியற்ற |
| **2023** | 9,287,085,081 | 56,373,813 | 9,230,711,268 | முனைப்பழியுள்ள |

| தொடர் இல. | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்பட்டு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் நடைமுறை நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | “நியதிச்சட்ட கொடுப்பனவு ஒன்றிற்காக தற்காலிக நிறுத்தி வைத்தல் கணக்கு” 2023 திசெம்பர் 31 காணப்பட்ட ரூபா 48,036,824 ஆன மீதி ரூபா 27,177,140 தொகை உரிய காலப்பகுதியில் திறைசேரிக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அனுப்புவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021<br>2023 | நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்கான தற்காலிக நிறுத்தி வைத்தல் கணக்கில் நிறுத்தி வைத்து காணப்படுகின்ற எஞ்சிய பண மீதியை உரிய காலப் பகுதியில் திறைசேரிக்கும் ஏனைய நிறுவனங் களுக்கும் அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்தை மாணவர் நலன்புரிக்காக பயன்படுத்துவதற்கும் எஞ்சிய தொகையை மாணவர்களின் கல்வித் தேவைகளுக்காக பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் நிறுத்தி வைத்துள்ளதாக | மேலும் ரூபா 5,175,547.18 ஆன மீதியொன்று தீர்க்கப்பட உள்ளது |
| 2. | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ள ரூபா 2,104,197 பெறுமதியான 06 நட்டங்கள் சேதங்கள் மீதிகளில் 03 மீதிகள் அந்த நட்ட சேதங்கள் இடம் பெற்று 5 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 03 | 2021<br>2022<br>2023 | நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நட்டத்தை அறவிடுவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ள துடன் சில நட்டங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை | நிதிப்பிரமாணம் 109 ரிரகாரம் நட்ட சேதம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீதிகள் காணப்பட்டதுடன் அதற்காக நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | |
| 3. | திணைக்களத்திலிருந்து ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபை நிறுவனங்களுக்காக இடமாற்றம் பெற்றுச் சென்ற மரணித்த, ஓய்வு பெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற 63 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 5,119,650 ஆக இருந்ததுடன் அதில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் 28 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடபபட வேண்டிய ரூபா 2,378,403 ஆன மீதி ஒன்று காணப்பட்டது. | 2021<br>2022<br>2023 | அறவிட வேண்டிய கடன் மீதிகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்வதற்கு எஞ்சியுள்ள உத்தியோகத்தர்களில் 63 பேரின் கடன் தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 4. | திணைக்களத்தின் கீழுள்ள தொழிநுட்ப / 39 கைத்தொழிற்துறை கல்லூரிகளில் 15 கல்லூரிகள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை குறித்த கலலூரிக்கு அல்லது திணைக்களத்திற்கு | 2021<br>2023 | காணிகளின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும். | பல்வேறு காரணங்களினால் இதுவரை ஒப்படைப்பு மேற்கொள்ளப்படவில்லை எனவும் பிரதேச செயலாளர்கள் இது தொடர்பாக சாகமான கடமைப் | காணிகளின் உரிமையை குறித்த கல்லூரிகளிற்கு அல்லது திணைக்களத்திற்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| கையேற்றிலுக்கவில்லை. | பொறுப்புக்களை மேற்கொள்ளாததால் கொள்கையளவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை ஒன்றாகும். |

**தலைப்பு – 216 சமூக சேவைகள் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா. | மொத்த பொறுப்புக்கள் ரூபா. | உரிமை மூலதனம் ரூபா. | அபிப்பிராயம |
|---|---|---|---|---|
| **2021** | 544,414,417 | 544,414,417 | - | முனைப்பழியுள்ள |
| **2022** | 665,096,809 | 665,096,809 | - | முனைப்பழியற்ற |
| **2023** | 1,165,363,019 | 1,165,363,019 | - | முனைப்பழியுள்ள |

| தொடர் இல. | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் சிபாரிசினை அமுல்படுத்துதல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் மூலம் அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 1000 உச்ச அளவிற்கு உட்பட்டு தொலைபேசி பட்டியல்களை மீளளிப்புச் செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் அதற்கு முரணாக பணிப்பாளர்களின் தற்றுணிபிற்கு இணங்க மாவட்ட செயலகங்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிலையங்களில் இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையாற்றுகின்ற திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த தொலைபேசி படியாக ரூபா 1000 தொகை 2020 செப்தெம்பர் மாதத்திலிருந்து | 2021<br>2022 | முறையான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொலைபேசி படிகளை செலுத்துதவதற்கு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உரிய படிகளை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு செயலாளர் அங்கீகரித்துள்ளார். சமூக சேவைத் திணைக்களம், தலைமை அலுவலகம், தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள், | தற்பொழுது சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தொலைபேசி படிகள் செலுத்தப்படுகின்றன. முன்னர் செலுத்திய படிகள் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |

செலுத்தப்பட்டது. அதற்கிணங்க 872 சமூக சேவை உற்பத்தியாளர்களுக்கு 2020 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலத்தில் மொத்தமாக ரூபா 8,086,403 தொகையான தொலைபேசி படிகளைச் செலுத்துவதற்காக முறையான அதிகாரம் கிடைத்திருக்கவில்லை.

சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்கும் நிலையங்களில் சேவையாற்றுகின்ற சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு படிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டுதல் அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் அதற்காக 2021 மார்ச் 16 ஆந் திகதி உரிய படிகளை வழங்குவதற்கும் அதனை சம்பளத்துடன் செலுத்துவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சமூக சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் வேண்டுதல்களின் பிரகாரம் தொலைபேசிப்படிகளைச் செலுத்துவதற்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சுகாதா அமைச்சு செயலாளரினால் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் வைத்திய சேவைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | சேவையாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ரூபா ரூபா 1000 செலுத்துவதாக தெரிவித்து ஏனைய உத்தியோகத்தர்களும் தொலைபேசி படியை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல் அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டு அதனை சம்பளத்துடன் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | |
| 02 | 07 தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த காணிகளின் சட்டரீதியான உரிமை திணைக்கத்திற்கு ஒப்படைக்கப்படாதிருந்தமை மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் கடந்த 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் கிரயத்தை அடையாளங்கண்டு நிதியற்ற சொத்துக்களின் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வினைத்திறனாக அமுல்படுத்துவதற்கு தேவையான மீளாய்வுகளையும் மாற்றங்களையும் மேற்கொண்டு அதன் அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்படுகின்றது எனவும் முறைமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் எதிர்காலத்தில் இந்த மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்கள் தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | இதுவரை உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 03 | அரசாங்கத்தின் ஒரு வாகனம் கற்பித்தல் உதவியாக பயன்படுத்தப்படுமாகவிருந்தால் உரிய | 2022<br>2023 | வாகனங்களின் பதவியினை இரத்துச் செய்து கைதவிரப்பு | பதிவுசெய்தலினை இரத்துச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை | 05 வாகனங்களும் 19 மோட்டார் சைக்கிள்களும் சம்பந்தமான நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறைமைக்கு இணங்க வாகனத்தை கைதவிர்ப்புச் செய்து பதிவு செய்தலினை மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இரத்துச் செய்ததன் பின்னர் பயன்படுத்த வேண்டிய போதிலும் வத்தேகம தொழில்சார் பயிற்சி நிலையத்தில் உள்ள 05 வாகனங்கள் செஸி இலக்கத்துடன் கற்பித்தல் உதவியாக பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் வத்தேகம தொழிலசார் பயிற்சி நிறுவனத்தில் இருக்கின்ற 19 மோட்டார் சைக்கிள்கள் கெடவல தொழில்சார் பயிற்சி நிறவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் மோட்டார் சைக்கிள்களின் இலக்கத்தகடுகளுடன் அந்த நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்தன. | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுதல் வேண்டும்.˙ | மேற்கொள்ளுமாறு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. | இன்று வரை முடிவடைந்திருக்கவில்லை. |
| 04 | இலங்கையில் மீளாய்வாண்டு வரை விளிம்பு நிலையில் மற்றும் பின்தங்கிய நிலைமைக்கு உள்ளாகியுள்ள மக்களின் தன்மை எண்ணிக்கை மற்றும் அவர்கள் உலகளாவிய ரீதியில் பரவியுள்ளமை தொடர்பான புள்ளிவிபரங்கள், வருடாந்தம் இதில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்படுகின்ற எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட | 2022<br>2023 | விபரமான புள்ளிவிபரங்கள் தரவுகள் மற்றும் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையை பேணுவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஊனமுற்ற நபர்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையை தயாரிப்பதற்காக Child Fund நிறுவனத்துடன் இணைந்து ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தகவல்கள் பிரதேச செயலக பிரிவு மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் உள்ளடக்கி நாளதுவரையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தரவுகள் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனஙகளினால் வருடாந்தம் வலுப்படுத்தப்படுகின்ற மக்கள் தொடர்பான விபரமான புள்ளிவிபரங்கள் தரவுகள் மற்றும் தகவல்கள் உள்ளக்கப்பட்ட தரவு முறைமையினைப் பேணுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 05 | தொழில்சார் பயிற்சி நிறுவனம், புனர்வாழ்வு நிலையம் வழிகாட்டல் நிலையம் என்பவற்றை ஸ்தாபிப்பதற்காக திணைக்களத்திற்கு அன்பளிப்பாக கிடைத்த 29 அளவான 06 காணிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டு 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் மேற்கூறிய காணிகள் மற்றும் அதில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு காணிகள் மற்றும் கட்டிடங்கலாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2021 2022 2023 | காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | ஒப்படைக்கப்படாத காணிக் மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டு அறிக்கையினை பொறுப்பேற்றல் முடிவடைந்ததன் பின்னர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள 06 காணிகளை தொடர்ந்தும் மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு போறுப்பேற்பதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**தலைப்பு- 217 நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 117,069,018 | 282,714 | 116,786,304 | முனைப்பழியற்ற |
| **2022** | 115,978,879 | 81,300 | 115,897,579 | முனைப்பழியுள்ள |
| **2023** | 111,242,562 | 36,657 | 111,205,905 | முனைப்பழியுள்ள |

| தொ/ இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அனாதை, கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களும் சட்டரீதியான பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்ற சிறுவர்களையும் விசேடமாகக் கொண்டு அனைத்து சிறுவர்களினதும் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான சந்தர்ப்பமொன்று உருவாக்கிக் கொடுத்தல் திணைக்களத்தின் தொலைநோக்காக காணப்பட்ட போதிலும், திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் 65 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், சிறுவர்களின் உரிமை பாதுகாக்கப்படும் வகையில் உலகளாவிய சட்டத்திற்கு அமைவாக தேசிய கொள்கையொன்று தயாரித்தல் மற்றும் அதற்குரிய சட்டங்கள் வகுத்தல் இது வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக் | 2021 | தொலைநோக்கிற்கு அமைவாக செயற்படுவதற்காக தேசிய கொள்கையை செயற்படுத்தல் வேண்டும். | மாற்று பராமரிப்பு கொள்கை செயற்படுத்தும் 08 மாகாண செயல்நடவடிக்கை திட்டங்கள் தயாரிக்கப்பட்டது. கேகாலை, இரத்தினபுரி மாவட்டகங்களின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சேர்ந்து சபரகமுவ மாகாண செயல் நடவடிக்கைத் திட்டம் இன்னுமாக மேம்படுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் ஏனைய மகாகாணங்களின் செயல்நடவடிக்கைத் திட்டம் திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிலவிய கொவிட் 19 தொற்று நிலையினுள் போக்குவரத்து தடைகளினால் வேலைத் திட்டங்கள் நடத்துவதற்காக கட்டுப்பாடுகள் | உலகளாவிய சட்டத்திற்கு அமைவாக தேசிய கொள்கையொன்று தற்போதும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கவில்லை. மாற்று பராமரிப்பு கொள்கையொன்றிற்காக 2019 மார்ச் 06 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அக் கொள்கை 2022 மார்ச் 25 கணக்காய்வு திகதி வரையிலும் பொருண்மையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | காணப்பட்டமையும் இது தாமதித்தமைக்கு காரணமாகியது. | |
| 02 | ஆலோசனை கட்டணத்தையும் உள்ளடக்கி ரூபா 2,350,000 கிரியத்தினை செய்து ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பாக விஞ்ஞாபனத்தை அமுல்படுத்தும் போது காலரீதியில் மற்றும் சரியான அறிக்கை சமர்ப்பித்தலின் தேவைக்காக 2018 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட UNCRC தரவு முறைமை நிதியல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த தரவு முறைமையை அமுல்படுத்தாமல் பயனற்று காணப்பட்டது. | 2022 | தொழில்நுட்ப மென்பொருள் முறைமை சொத்தாக இனங்காண வேண்டியிருந்ததுடன், அந்த தரவு முறைமையை அமுல்படுத்துவதை கண்காணித்தல் வேண்டும். | சொத்தொன்றாக இந்த முறைமையை இனங்காண வேண்டுமாயின் அவ்வாறே இனங்கண்டு அமைச்சின் சொத்துக்கள் பதிவேட்டடில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என கண்டறிந்து அவ்வாறு உள்ளடக்கப்படவில்லையாயின் எங்களின் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நடைமுறை மற்றும் தொழில்நுட்ப பிரச்சனைகள் ஆய்வு செய்யப்பட்டு தரவு கட்டமைப்பு தொடர்பான பரிந்துரைகள் மற்றும் தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு தற்போது குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. |
| 03 | திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவி 2014 ஆகஸ்ட் முதல், மற்றும் நன்னடத்தை அலுவலர் பதவி 2017 முதல் வெற்றிடமான உள்ளன. | 2021, 2022, 2023 | திணைக்களத்தின் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கு நேர்முகப் பரீட்சை இடம் பெற்றுள்ளன இருப்பினும் பகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாமையின் காரணமாக ஆட்சேர்ப்பை மேற்கொள்ள முடியாது | இந்த பதவிக்காக ஆட் சேர்ப்பதற்கு, ஆட்சேர்ப்பு வர்த்தமான அறிவித்தல், விண்ணப்பம் மற்றும் புள்ளி நடைமுறை வரைவுபடுத்தப்பட்டு அரசு சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக 2024.07.03 ஆம் திகதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உள்ளது தற்போதும் நிதி அமைச்சின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள தேசிய பாதிப்பு சுற்று நிறுவம் 03/2022 இன் பிரகாரம் ஆட்சி சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியாதுள்ளது. | அனுப்பப்பட்டுள்ளது. |
| 04 | 2019 முதல் 2023 வரையான காலப்பகுதியில், 32 இலங்கைக் குழந்தைகள் வெளிநாடுகளுக்கு தத்தெடுப்பதற்காக வழங்கப்பட்டன, ஆனால் வெளிநாட்டு தத்தெடுப்பு கட்டளைச் சட்டத்தின் 10C பிரிவின்படி தத்தெடுப்பதற்காக வழங்கப்பட்ட குழந்தைகள் குறித்து தொடர்ச்சியாக 10 வருடங்களாக பின்தொடர்தல் அறிக்கைகள் எதுவும் பெறப்படவில்லை. | 2023 | வெளிநாட்டு தத்தெடுப்பு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சார்ந்திருக்கும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இலங்கையில் குடியுரிமை இல்லாத மற்றும் இலங்கையில் பதிவிடமில்லாத விண்ணப்பதாரரின் தத்தெடுப்பதற்கு குழந்தைகளுக்காக மாத்திரம் 10C ஆம் பிரிவின் பிரகாரம் முன்னேற்ற அறிக்கை பெற்றுக் கொள்ளும் வல்லமை காணப்படுகிறது. எவ்வாறான போதும் முன்னேற்ற அறிக்கை முறையாக பெற்றுக் கொள்வதற்கு முறையான நடைமுறை ஒன்று தற்போது நிறுவப்பட்டுள்ளது. | வெளிநாட்டு தத்தெடுப்பின் கீழ் பெற்றுக் கொடுத்த 14 குழந்தைகள் தேசிய தத்தெடுப்பாக கருதப்பட்டு முன்னேற்ற அறிக்கை வைத்திருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 05 | 1939 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம் பல வருடங்களாகத் திருத்தப்பட்டு வந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கட்டளைச் சட்டத்தின் திருத்தம் நிறைவு | 2023 | கட்டளைச் சட்டம் உள்ளிட்ட சட்டங்கள் தேவைக்கேற்ப திருத்தப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டத்தில் திருத்தம் செய்ய 2 குழுக்களை நீதி அமைச்சு நியமித்துள்ளதாகவும், அந்தக் குழுக்களில் தீவிரமாகப் பங்களிப்பதன் மூலம் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்ப | குழந்தைகள் தத்தெடுப்பு கட்டளை சட்டத்தினை காலத்தின் தேவையின் பிரகாரம் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நீதி அமைச்சின் ஊடாக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்படவில்லை. மேலும், 1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க குழந்தைகளைத் தத்தெடுப்புச் சட்டம் காலத்தின் தேவைக்கேற்ப திருத்தப்படவில்லை. | | | ட்டு வருவதாகவும். | |
| 06 | துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சிறுவர்களுக்கான பயிற்சி மூலம் சமூகமயமாக்கலுக்கான பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள் தேசிய மத்திய நிலையம் மற்றும் 2 தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையங்கள் 2023 யூன் 06 ஆந் திகதி மீள கையகப்படுத்தப்பட்ட போதிலும், பௌதீக வளங்களும் சுற்றுப்புறச் சூழலும் மீளமைக்கப்பட்டு பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படவில்லை. | 2021, 2022, 2023 | சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை சேவை மத்திய நிலையத்தினை சாதாரன நிலைக்கு கொண்டுவருவதற்காக துரிதமாக புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மத்திய நிலையத்தின் புனரமைப்பிற்காக கட்டிடத்தின் பழுதுபார்க்கும் பணிக்காக நிதியேற்பாடு ADB மற்றும் UNICEF ஆகியவற்றிலிருந்து பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன | தேவையான நிதியேற்பாடு ADB மற்றும் UNICEF ஆகியவற்றிலிருந்து பெறுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. |
| 07 | திணைக்களத்திற்கு சொந்தமான தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையத்தில் 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய அனைத்து குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் கூடிய இரண்டு விரிவுரை அரங்குகள் விளைவற்று இருந்தன. | 2023 | துரிதமாக பழுதுபார்த்து, மத்திய நிலையத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டும். | தற்போது திட்டமிடப்பட்டுள்ள பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என | திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**தலைப்பு- 219 விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்**

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புகள் ரூபா | உரிமைத்துவம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 3,826,921,994 | 198,372,237 | 3,628,549,757 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,985,836,741 | 143,637,644 | 3,842,199,097 | முனைப்பழியுள்ள |
| **2023** | 4,006,151,141 | 104,467,138 | 3,901,684,003 | முனைப்பழியுள்ள |

| தொ/ இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக் கை ஆண் டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட் ட தடுப்பு நடவடிக்கை | அறிக்கையின் திகதிக்கு பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | திணைக்களத்திற்கு ச் சொந்தமான டொரிங்டன் மற்றும் பொலன்னறுவை மாவட்ட விளையாட்டு வளா கங்கள் உட்பட 07 மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான காணிகளில் இதுவரை மேற்கொள்ள ப்பட்ட நிர்மாணங்களில் ரூபா 4,496.50 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் மதிப்பிடப்பட்ட ரூபா 27,713.82 மில்லியன் பெறுமதியான காணிகள் என்பன திணைக்களத்தின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிரு க்கவி ல்லை. மேலும், காணியின் சட்டப்பூர்வ உரிமைகளை மாற்றாமல் | 2021 2022 2023 | சம்பந்தப்பட்ட நிலம் மற்றும் கட்டிடங் களை உடனடியாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். | திணைக்கள அதிகா ரிகள் அடங்கிய குழு அந்தந்த மைதானங்கள் நிர்மாணிக்கப்பட்டு ள்ள நிலங்களை மதிப்பீடு செய்துள்ள துடன், எதிர்காலத் தில் மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் கணக்கீடு செய்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பரிந்துரை அமுல்படுத்தப் படவில்லை. (காணிகள் மற்றும் மாவட்ட விளையாட்டு வளாகங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து, கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை.) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்மாணிக் கப்பட்ட அம்பாறை, புத்தளம், மன்னார், மற்றும் காலி ஆகிய 04 மாவட்ட விளையாட்டு வளாகங்களின் பெறுமதிகளும் சப்ரகமுவ மாகாண விளையாட்டு வளாகங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவ ில்லை. | | | | |
| 2 | 2013 முதல் 2020 வரையிலான ஆண்டுகளில், ரூபா 1,604 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட் டிருந்த 08 செயற்திட்டங்கள் முடிக்கப்படாமல் கைவிடப்ப ட்டுள்ளதுடன், அந்த செயற்திட்டங்களுக் கு 2023 டிசம்பர் 31 வரை ரூபா 586 மில்லியன் செலவிடப்பட் டிருந்தது. | 2021<br>2022<br>2023 | தொடங்கப்பட்ட திட்டங்கள் திட்டமிட்டபடி வெற்றிகரமாக முடிக்கப்பட வேண்டும். | போதியளவு நிதி ஏற்பாடுகள் இல்லாமை காரணமாக அவை கைவிடப்பட்டன. | பரிந்துரை அமுல்படுத்தப்படவி ல்லை. |
| 3 | மாத்தளை பெர்னாட் அலுவிஹாரே விளையாட்டு மைதானத்தில் எஞ்சியுள்ள பணிகளை நிறைவு செய்வதற்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத் தினால் மாத்தளை மாவட்ட செயலகத்திற்கு வழங்கிய ரூபா 47.5 மில்லியன் தொகையில் ரூபா 1.14 மில்லியன் | 2023 | திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படை யில் செயல்படுத்தப் படும் திட்டம் என்ப தால், முன்வைக்க ப்பட்ட அவதானிப்பு களை கவனத்தில் கொண்டு, ஏற்பட்ட இழப்புகளுக்கு காரணமானவர்க ளை கண்டறிந்து, அந்த இழப்பை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இத்திட்டத்தை நடைமுறை ப்படுத்துவதற்கான முழு அதிகாரமும் மாத்தளை மாவட்டச் செயலாளருக்கே வழங்கப்பட்டுள்ள து. | பரிந்துரை அமல்ப டுத்தப்படவில்லை (இழப்புகளுக்கு காரணமானவர்கை ள கண்டறிந்து, அந்த இழப்பை வசூலிக்க நடவடி க்கை எடுக்கப்ப டவில்லை.) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகை நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணயகத்துக்கு (CECB) செலுத்தப் பட்டிருந்தது. மேலும், ஓடும் பாதைகள் மற்றும் விளையாட்டு மைதானம் அமைப்பதற் காக வெட்டி அகற்றப்பட்ட 506.12 கனமீற்றர் மண் பகுதிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு ரூபா 1.31 மில்லியன் செலுத்தப்பட்டுள்ள போதிலும், அகற்றப்பட வேண்டிய அளவு 273.58 கனமீட்டரே ஆகும். அதன்படி, கூடுதலாக 232.54 கன மீட்டர் மண் அகற்றப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு ரூபா 602,279 செலுத்தப்பட்டுள்ள து. அத்து டன், அகற்றப்பட்ட மண்ணை மீண்டும் நிரப்புவதற்கும் ஒப்பந்ததாரருக்கு ரூபா 639,485 வழங்கப்பட்டுள்ளது . | | | | |
| 4 | 2023 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா வில் நடைபெற்ற உலகக் கின்ன வலைப்பந்து போட்டிக்கு பங்கேற்பாளர் களுக்கு அனுமதி வழங்குவதற்காக முறையான காலவரைய றையுடன் கூடிய முறையை | 2023 | விமான டிக்கெட் கொள் வனவானது கொள் முதல் வழிகாட்டுத ல்களைப் பின்பற்றி வெளிப்படைத்தன்மை மயுடன் செய்யப் பட வேண்டும். | அக்ரோன் டிராவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கம்பனி ரூபா 567,260 டிக்கெட்டுக்காக ரூபா 1,010,600 வழக்கத்திற்கு மாறான விலையை வழங் கியமை குறித்து விசாரிக்க ப்பட்டதுடன், | பரிந்துரை அமல்ப டுத்தப்பட்டு வருகிறது. (வழங்குனரிடமிருந் து ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களை பெற்றுக் கொள் வதற்கு திணைக் களம் தவறியுள் ளது.) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிமுகப்படுத்த திணைக் களம் செயல்பட்டிருக்காத துடன், பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டில் இந்த போட்டியில் பங்கேற்பவர்களுக் கு விமான டிக்கெட்டுகளை வாங்குவ தற்காக ரூபா 8.78 மில்லியன் செலுத்தப்பட்டி ருந்த போதிலும், டிக்கட விற்பனை நிறுவனம் ஆரம்ப விலை கோரலில் அதிக விலையையும் இரண்டாவது விலை கோரலில் குறைந்த விலையையும் வழங்கி வழங்கல் கட்டளையினைப் பெற்றுக் கொண்டிருந்த மையால் விமான டிக்கட் கொள்வனவுச் செயற்பாடா னது வெளிப்படையானது அல்ல என்பது கணக்காய் வில் அவதானிக்கப்பட்ட து. | | | ஆனால் அதற்கான காரணங்களை எழுத்துப்பூர்வமாக பெற்றுக் கொள்ள நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். | |
| 5 | 2023 இல் நடைபெற்ற பொதுநலவாய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல் சம்பந்தமாக சரியான திட்டமிடல் இல்லா மை, மதிப்பீடுகள் தயாரிக்க ட்டிருக்காமை மற்றும் வெளிப் படைத்தன்மையற்ற டிக்கெட்டுகளை வாங்குதல் | 2023 | கூறப்பட்ட இழப்புக்கு காரணமானவர்கள் மற்றும் அதற்கான காரணங்களை எதிர் காலத்தில் கண்டறிந்து சீர்படுத்த வேண்டும். | பொதுநலவாய இளைஞர் விளையா ட்டுப் போட்டியில் இலங்கை பங்கேற்பது மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் என்பதாக கௌரவ விளையாட்டுக்கள் அமைச்சரால் அறிவுறுத்தப்பட்ட மைக்கு இணங்க, தெரிவு செய்யப்பட்ட | பரிந்துரை அமல்ப டுத்தப்படவில்லை (இழப்புகளுக்கு காரணமானவர்கை ள கண்டறிந்து, அந்த இழப்பை வசூலிக்க நடவடி க்கை எடுக்கப்ப டவில்லை.) |

ஆகியன காரணமாக விமான டிக்கெட்டுகள் மற்றும் விசாக்களை பொருளாதார ரீதியாக பயனுள்ள முறையில் வாங்க முடியாது போனமையால் திணைக்கள த்துக்கு ரூபா 13.81 மில்லியன் இழப்பு ஏற்பட்டி ருந்ததுடன், மேற்கூறியவ ற்றால், தேசிய ஒலிம்பிக் கமிட்டியால் டிக்கெட் கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டிய ரூபா 7.03 மில்லியன் தொகையும் திணைக்களத்துக்கு இழப்பாகியிருந்தது. மேலும், இந்த விளையாட்டு விழா விற்கு வீரர்கள் மற்றும் அதிகாரிகளை சரியான நேரத்தில் நிலைநிறுத்த முடியாத காரணத்தால், இலங்கை எதிர்பார்த்த வெற்றிகளை பெற முடிந்திருக்கவில்லை.

இலங்கை அணிகளை விளையாட்டுப் போட்டிக ளில் பங்குபற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக் கைகளும் மேற் கொள்ளப்பட்டன. ஆனால், உரிய நேரத்தில் விசா கிடைக்காததால் பலமுறை விமான டிக்கெட்டுகளை மாற்ற வேண்டியதா யிற்று. இறுதிக் கட்டத்தில் கௌரவ அமைச்சரால் அமெ ரிக்கத் தூதரகத்தின் உயர் ஸ்தாணிக ருக்கு அறிவிக்கப்ப ட்டதன் பின்னர் அவரிடமிருந்து கிடைத்த சாதகமான பதில் காரணமாக குறித்த குழுவை இந்தப் போட்டியில் பங்குபறச் செய்ய முடிந்திருந்ததுடன் விளையாட்டு வீர வீராங்கணைகள் 2 பதக்கங்களை வென்று நாட்டுக்கு பெருமை ஈட்டித் தந்தனர். மேலும், எதிர்காலத்தில் இது போன்று நடக்காமல் இருக்க அனைத்து அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைப்பு - 220 ஆயுர்வேதத் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புகள் ரூபா | உரிமைத்துவம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,768,600,000 | 2,257,301,318 | 511,298,682 | முனைப்பழியுள்ள |
| **2022** | 1,959,645,500 | 1,867,242,147 | 92,403,353 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,040,000,000 | 1,993,624,591 | 46,375,409 | முனைப்பழியுள்ள |

| **தொடர் இல.** | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **அறிக்கையின் ஆண்டு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள்** | **கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள்** | **அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை** |
|---|---|---|---|---|---|
| 1. | மீளாய்வாண்டு இறுதியளவில் சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமையை உரித்தாக்கியிருக்காத 12 காணிகளின் பெறுமதியாகிய ரூபா 2,318,020,000 தொகை நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன், சட்டரீதியாக திணைக்களத்திற்கு உரிமை உரித்தாக்கப்பட்டிருந்த 07 காணிகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 | காணிகளின் உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து கணக்குகளுக்கு உரிய சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், உரித்தாக்கப்பட்ட காணிகளை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை தீர்த்துவைத்ததன் பின்னர் அவ்வவ் காணிகளின் பெறுமதி மற்றும் சரியான தரவுகள் கணக்குகளின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது. சுகாதார அமைச்சுச் செயலாளரின் அறிவுரையின் படி தற்போது அனைத்துப் பிரிவுகளுக்கும் தமது காணிகள் மற்றும் கட்டிடங்களை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக பெறுமதி மதிப்பீடு செய்து அறிவிக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் அம்பாறை சிரிமாவோ பண்டாரனாயக ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வு | 2024 ஏப்ரல் மாதத்தில் மேற்கொண்ட திருத்தங்களை தவிர்த்து கணக்கு வைத்தலினை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வைத்தியசாலை அமைந்துள்ள காணி மற்றும் அங்குள்ள கட்டிடங்கள் ரூபா 137.1 மில்லியனிற்கு பெறுமதி மதிப்பீடு செய்து 2024 ஏப்ரல் மாத கணக்குப் பொழிப்பின் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| 2. | திணைக்களத்தின் அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற 27 காணிகள் காணப்பட்ட போதிலும் திணைக்களத்தின் பிரதான அலுவலக வளாகம், பொரளை போதனா வைத்தியசாலை உட்பட வைத்தியசாலைகள் மூலிகைத் தோட்டங்கள் சமூக சுகாதார பிராந்திய அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ள 19 காணிகள் மீளாய்வாண்டு இறுதிவரை திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | குறிப்பிட்ட காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும். | இந்த காணிகள் ஆயர்வேத திணைக்களத்திற்கு தற்போது அனுபவிக்கும் அடிப்படையில் உரித்தான நிறுவனங்களிடமிருந்து உரித்தாக்கிக் கொள்வதற்காக அந்த நிறுவனங்களுடன் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன், பூர்த்தியடைந்தவுடேன அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | உரிமையுள்ள மற்றும் கணக்கு வைக்கப்படாத 06 காணிகள், உரிமை இல்லாத எனினும் கணக்கு வைக்கப்பட்ட 07 காணிகள், உரிமையுள்ள எனினும் கணக்கு வைக்கப்படாத 04 காணிகள், உரிமை இல்லாத மற்றும் கணக்கு வைக்கப்படாத 03 காணிகள் மற்றும் வெளித்தரப்பினர்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய 07 காணிகள் என்பனவாக உரிய காணிகள் அடையாளங் காணப்பட்ட போதிலும் அவற்றினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கொம்ட்ரோலர் ஜெனராலிற்கு அறிவிக்கப்பட்டிருந்த கட்டிடங்களின் | 2023 | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் கொம்ட்ரோலர் | கொம்ட்ரோலர் ஜெனரால் திணைக்களத்தினால் வெளியிட்டிருந்த 06/2023 இலக்கம் கொண்ட சொத்துக்கள் | 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்வதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 635,961,733 தொகையாக காணப்பட்டதுடன், கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 1,161,120,186 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 525,158,453 தொகையான தேறிய வித்தியாசமொன்று காணப்பட்டது. | | ஜெனராலிற்கு அறிவித்து சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி தற்போது அறிமுகப்படுத்தியுள்ள இணைய வழிப்படுத்திய நிதியற்ற சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் கீழ் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் அறிக்கையிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| 4. | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயத்தை மூலதனப்படுத்தாமல் 2018 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிர்மாண வேலைகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தச் செலவுகளும் நடைபெறு வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அதன்படி, மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைபெறு வேலைக் கணக்கின் மீதி ரூபா 1,035,539,978 தொகை வரை அதிகரித்திருந்தது. | 2023<br>2022<br>2021 | வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் கிரயத்தை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஸிகாஸ் கணினி முறைமையில் சரி செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்வதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. |
| 5. | நிதிப் பிரமாணம் 891(1) இற்கு இணங்க, பிணை வைத்தல் பதிவேடு நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள். தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்படுவதுடன், அந்த விடயம் முழுமையடைந்தவுடன் பிணை வைப்புச் செய்யும் பதிவேட்டினை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 6. | திணைக்களத்திற்கு சொந்தமாக ரூபா 93,944,999 பெறுமதியான வாகனங்கள் காணப்படுகின்றதென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், ஸிகாஸ் கணினி முறைமையில் ஒவ்வொரு வாகனங்கள் தொடர்பான விரிவான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்காமையால் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களின் பெறுமதியும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | 2023 | ஸிகாஸ் கணினி முறைமையில் ஒவ்வொரு வாகனங்கள் தொடர்பான விரிவான தகவல்களை குறிப்பிட்டு போதியளவு அறிக்கைகள் பேணப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஸிகாஸ் முறைமைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்கள் போதியளவானதாக காணப்படாமையால் இந்த சரி செய்தல் தொடர்ந்தும் தாமதமாகி உள்ளதுடன், போக்குவரத்து மற்றும் கணக்குப் பிரிவுகள் தொடர்புபடுத்தி அரச கணக்குத் திணைக்களத்தின் உதவியுடன் தரவு முறைமையை சரி செய்து எதிர்காலத்தில் அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப் பட்டது. | 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரிசெய்வதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. |
| 7. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டுக்காக ஆக்க பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு | 2023 | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் ஆக்க பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை பேணிச் செல்வதற்கு தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ள | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறன் தொடர்பான மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | | குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு குறைபாடுகளை சரி செய்வதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். வருடாந்த மீளாய்வினை 2024 ஆண்டு முதல் அரச கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டு வருகின்றது. | அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 8. | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சுற்றறிக்கையின் பந்தி 2(iv) இற்கு இணங்க விரல் | 2023<br>2022<br>2021 | பொது நிருவாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | நோயளர் சிகிச்சை சேவையை தடை இன்றி நடாத்திச் செல்வதற்காக விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படாத காரணத்தினால் தினவரவுப் பதிவேட்டை | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளிச் செல்லலினை உறுதிப்படுத்தும் கட்டுப்பாட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடையாள இயந்திரத்தின் மூலம் உள்வருதல் வெளிச் செல்லல் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் தின வரவுப் பதிவேட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 53,325,525 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | முறைமையை ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. |
| 9. | ஆரம்ப செலவு மதிப்பீட்டில் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவு விடயங்கள் 16 இற்கான ஏற்பாடுகளில் 19 சதவீதத்திற்கும் 2,000 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினால் அதிகரித்து மற்றும் மேலும் 05 செலவு விடயங்களில் ஏற்பாடுகள் 54 சதவீதத்திற்கும் 83 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினால் குறைத்து திருத்துதல் ஆகிய விடயங்களின் காரணமாக ஆரம்ப செலவு மதிப்பீடு முறையாக ஆய்வு செய்யாது, புரிந்துணர்வு இல்லாது மற்றும் நடைமுறைச் சாத்தியமின்றி தயாரிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 2023 | நிதி ஏற்பாடுகளை மிட்டமிட்டவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆரம்ப செலவு மதிப்பீடு 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் திட்டமிட்ட போதிலும் அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட பணவீக்க நிலைமை காரணமாக அனைத்து பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகள் எதிர்பாரக்காதவாறு அதிகரித்திருந்த காரணத்தினால் அத்தியவசியமான செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு (அதாவது நீர், மின்சாரம், தொலைபேசி, உணவுகள் மற்றும் மருந்துகள்) நோயாளர் சிகிச்சை சேவையை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்டது. | அடுத்துவரும் மதிப்பீடு முறைப்படியாக ஆய்வு செய்து, புரிந்துணர்வுடன் மற்றும் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படும் எனவும் நிதி ஏற்பாட்டினை திட்டமிட்டவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆயர்வேத ஆணையாளர் தெரிவித்துள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | ஆயுர்வேத திணைக்களத்திற்கு ஏனைய அமைச்சுகள் மற்றும் 02 திணைக்களங்களினால் 05 தேவைப்பாடுகளுக்காக வழங்கியிருந்த ரூபா 53,083,332 நிதிஏற்பாடுகளில் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 15,630,895 நிதிஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளின் சேமிப்புக்கள் மொத்த ஏற்பாடுகளில் 08 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையான வீச்சை பெற்றிருந்தது. | 2023 | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை முடிந்தளவில் ஆக்க பூர்வமான பயன்படுத்த வேண்டும். | 2023 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட பல்கரும அபிவிருத்தி உதவியாளர்களின் சம்பளம் பல்கரும அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதனை இந்தத் திணைக்களத்தின் நிதிஏற்பாடுகளின் மூலம் முகாமைத்துவம் செய்வதற்கு முடியுமாக இருந்தமையால் 334-1-1-0-1003-11 செலவு விடய ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததென அறிவிக்கப்படுவதுடன், ஏனைய செலவு விடயங்களின் கீழ் திட்டமிடப்பட்ட அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் மதிப்பீட்டுச் செலவை விட குறைத்து நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமாக இருந்தமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டினை திட்டமிட்டவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஆயுர்வேத ஆணையாளர் தெரிவித்துள்ளார். |
| 11. | கடந்த ஆண்டுகளின் போது இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொண்ட | 2023<br>2022 | அனைத்துப் பொறுப்புக்களையும் சரியாக அடையாளங்கண்டு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் | 2022 ஆண்டிற்கு முன்னர் மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றிருந்த மருந்துப் பொருட்களுக்காக 2022 திசெம்பர் 31 | ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவிற்குச் சென்று நிலுவையான விலைப்பட்டியல்கள் சம்பந்தமாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மருந்துப் பொருட்களுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,265,768 தொகை செலுத்த வேண்டிக் காணப்பட்டதென அந்தக் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் மூலம் உறுதிப்படுத்தியிருந்த போதிலும் அந்த பொறுப்புக்கள் திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | தொடர்பான கூற்றில் காட்டுதல் வேண்டும். | திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்வதற்காக உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று வழங்குமாறு ஆயர்வேத கூட்டுத்தாபனத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. அந்த தகவல்கள் கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறிவிக்கப்படும். | காணப்பட்ட பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்குத் தேவையான தகவல்களைப் பெற்று அவை தொடர்பான எழுத்து மூல ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும் அந்த நிறுவனங்களிடம் இருந்து பதில் கிடைத்ததன் பின்னர் நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |
| 12. | தாபனக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பிரிவு 21.3 இற்கு இணங்க, வேலை இடை நிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் தொடர்பாக நடைபெறும் ஒழுக்காற்று விசாரணை அலுவல்கள் முடிந்தளவு தாமதம் இன்றி பூர்த்தி செய்தல் அத்தியாவசியமாக காணப்பட்ட போதிலும் வேலை இடைநிறுத்தப்பட்டு 03 வருடங்களுக்கும் 10 | 2023<br>2022 | பின்தொடர் நடவடிக்கை மற்றும் போதியளவு மேற்பார்வை மூலம் கடனை அறவீடு செய்தலினை விரைவுபடுத்த வேண்டும். தாபனக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுகின்ற பொறுப்புகளை நிறைவேற்றாத உத்தியோகத்தர்களிடம் இந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு நிதிப் | வேலை இடைநிறுத்தப்பட்டு 03 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 02 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 177,985 தொகைக்கான கடனை தீர்த்தல் தொடர்பாக குறிப்பிட்ட பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதெனவும், ஒழுக்காற்று விசாரணைகள் | போதிய செயல்முன்னேற்றம் அறிவிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 02 உத்தியோகத்தர்களின் ரூபா 177,985 தொகையையும் 20 வருடங்களை மிகைத்திருந்த 05 உத்தியோகத்தர்களின் ரூபா 127,060 தொகையையும் அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | | பிரமாணம் 104(2)"ஆ" இணங்க செயற்பட வேண்டும். | பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் சேவையில் செலுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து தற்போது அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றதெனவும், 05 உத்தியோகத்தர்களிடம் ரூபா 127,060 இற்கான கடனை தீர்த்தல் தொடர்பாக 20 வருடங்களை விட மிகையான காலம் கடந்திருந்தமையால் தகவல்கள் கண்டறிவதற்கு ஓரளவு கடின விடயமாக காணப்படுகின்றதெனவும், எவ்வாறாயினும், கடனை அறவீடு செய்யும் அலுவல்கள் தொடரச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | |
| 13. | தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4.2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த அனைத்து கடன் தொடர்பான விபரங்களும் ஓய்வூதியப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், பிரிவு 4.2.5 இற்கு | 2023 2022 | உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்தில் அவரிடம் அறவிடப்பட வேண்டியுள்ள அனைத்து கடன் தொடர்பான விபரங்களையும் ஓய்ீதிய பணிப்பாளருக்கு சமர்ப்பிக்காத மற்றும் கவனயீனமாக செயலாற்றிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்து எனவும், மற்றும் பணம் அறவீடு செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தரகளுக்கு மத்தியில் ஓய்வுபெற்று 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த மூன்று உத்தியோகத்தர்கள. தொடர்பாக தகவல்களை கண்டறிதல் ஓரளவு கடினமாக காணப்படுகின்றது | போதிய செயல்முன்னேற்றம் அறிவிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இணங்க உத்தியேகத்தரின் திரண்ட ஓய்ேதியத்தில் இருந்து அல்லது பணிக்கொடையில் இருந்து அறவீடு செய்யப்பட வேண்டும். எனினும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்று 02 வருடங்களை மிகைத்திருந்த 11 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 619,110 தொகை காணப்பட்ட போதிலும், அந்த கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | ஒழுக்காற்று செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எனவும் எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இந்த கடன் மீதிகள் தொடர்பான தகவல்களை கண்டறிந்து தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 14. | 2023 திசெம்பர் 31 திகதி வரை சேவையை விட்டுச் சென்று 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 09 உத்தியோகத்தர்களிடம் ரூபா 701,686 தொகையும், 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த 02 உத்தியோகத்தரிடம் ரூபா 306,950 தொகையும் 20 வருடங்களை மிகைத்திருந்த 21 உத்தியோகத்தர்களிடம் ரூபா 883,610 தொகையினையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை | 2023<br>2022 | கடன் தொகையை அறவீடு செய்வதற்கு உடனடியாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடப்பட வேண்டிய கடனை செலுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும். 2024.06.30 திகதி அளவில் கொடுப்பனவு செய்ய தவறும் பட்சத்தில் பிணையாளர்களிடம் அறவீடு செய்து அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப் பட்டது எனவும், மேலும், ஒரு உத்தியோகத்தரினால் தவணைகளாக செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, எனவும் தெரிவிக்கின்றேன். | போதிய செயல்முன்னேற்றம் அறிவிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. | | | | |
| 15. | தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 4.5, 4.6 மற்றும் 6.3 மற்றும் 2019 ஜீன் 27 திகதிய இலக்கம் 05/2019 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(ஆ) பந்தி, 2017 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 262/2017 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கு இணங்க மரணமடைந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், மரணமடைந்து 2023 திசெம்பர் 31 திகதியில் 06 மாதங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த 08 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தக் கடன்மீதி ரூபா 642,644 தொகை காணப்பட்டதுடன், அந்த கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023<br>2022 | தாபக் கோவை மற்றும் குறிப்பிட்ட நிதிச் சுற்றறிக்கைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 49,300 கடன் மீதிக்குரிய உத்தியோகத்தர் இறந்து தற்போது 20 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்ததெனவும், கூட்டுத்தொகை ரூபா 121,250 ஆன 02 உத்தியோகத்தர்கள. தொடர்பாக இறப்புப் பணிக்கொடை செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதெனவும், மற்றும் ரூபா 119,550 கடன்மீதி தொடர்பாக இறப்புப் பணிக்கொடை மற்றும் தபுதாரர் ஓய்த்தியம் செலுத்துவதற்கு முன்வரும் சந்தர்ப்பத்தில் உடனடியாக கடன்மீதியை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், ரூபா 178,910 கடன் மீதியொன்றுடனான உத்தியோகத்தர் உரித்தாகும் பிரதேச செயலகமாகன எல்பிடிய பிரதேச செயலகத்திற்கு சொத்துக்கள் தொடர்பாக உறுதிப்படுத்துதல் கிடைத்திருக்காததுடன் தபுதாரர் ஓய்த்தியம் | போதிய செயல்முன்னேற்றம் அறிவிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செலுத்தப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், அதன்படி, இறப்புப் பணிக்கொடை செலுத்தும் போது இந்தத் தொகை தீர்க்கப்பட்டுள்ளதா என ஓய்ீதியத் திணைக்களத்தின் மூலம் தகவல்களை கண்டறிந்த பின்னர் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும். ரூபா 173,634 மொத்த தொகைக்கான 03 உத்தியோகத்தர்களுக்குரிய குறிப்பிட்ட இறப்புப் பணிக்கொடை இதுவரை செலுத்தப்பட்டிருக்காமையால் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 16. | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை பின்பற்றி நடவடிக்கை எடுத்திருக்காததுடன், குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் மாறற்மடையும் போது அதன்படி செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்துவதற்கு தேவையான | 2023 | வளங்கள் மூலம் உச்சமட்ட பயன்களை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு தேவையான கால ரீதியான திருத்தங்களுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக தற்போது மூன்று பிரதான செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டுள்ளது எனவும், முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் செயலாற்றல் குறிகாட்டிகளை தோற்றுவித்து செயல் முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 17. | ஆயுர்வேத சமூக சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2001 ஆண்டு முதல் முன்னோடிச் செயற்திட்டமொன்றாக அனுராதபுர மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டு 2005 ஆண்டு முதல் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையும் அது அனுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்காக 2005 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை ரூபா 877.2 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2022 ஆண்டு முதல் செயற்திட்டத்திற்காக தனியாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காததுடன், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் நோயாளர் சிகிச்சை சேவை செயற்திட்டத்தின் கீழ் மீண்டுவரும் செலவுகளுக்காக மாத்திரம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு 218 உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 287.4 மில்லியன் | 2023<br>2022<br>2021 | செயற்திட்ட கால எல்லை முடிவடைந்து செயற்திட்டம் செயற்படுத்தப்படாவிடின் அதற்கு சொந்தமாக காணப்படும் பௌதீக மற்றும் மனித வளங்கள் திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அல்லது வடமத்திய மாகாண மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற ஆயுர்வேத சமூக சுகாதார சேவைக்காக பயன்படுத்துவதற்கு தேவையான கொள்கைசார் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டு அதன்படி, செயற்திட்ட அலுவலக பராமரிப்பு மற்றும் பதவியணியினருக்காக மேற்கொள்ளப்படும் செலவுகளை மட்டுப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்து செயற்திட்டத்தின் கீழ் காணப்படும் மனித மற்றும் பௌதீக வளங்கள் முறைப் பிரகாரம் வடமத்திய மாகாண சபை மட்டத்தில் செயற்படுத்தப்படும் ஆயுர்வேத சமூக சுகாதார சேவைக்கு ஒப்படைப்பதற்கு தேவையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் ஏனைய மாவட்டங்களுக்கு சேவையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையும் ஏனைய செலவுகளுக்காக ரூபா 5.5 மில்லியன் தொகையும் ஆக மொத்தம் ரூபா 292.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஏனைய மாவட்டங்களுக்கு விரிவாக்கக்கூடிய அளவு வெற்றிகரமாக செயற்படுத்தப்படாத இந்த செயற்திட்டத்திற்குரிய நிருவாகச் செலவு திணைக்களத்தின் நோயாளர் சிகிச்சை சேவை செலவு விடயத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு தொடரந்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது | | | | |
| 18. | தேவைப்பாட்டினை முறையாக இனங்காணாமல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வொன்று இன்றி 2015 மார்ச் 16 திகதி ரூபா 28 மில்லியன் செலவிடப்பட்டு பண்டாரநாயக ஆயுர்வேத ஆய்வு நிலையத்திற்கு 14 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 21 மில்லியன் பெறுமதியான 08 இயந்திரங்கள் 2024 ஏப்ரல் 10 திகதி அளவிலும் பொருத்தப்பட்டிருக்க | 2023 2022 2021 | தேவைப்பாட்டினை சரியாக இனங்காணாமல் மற்றும் முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று இன்றி இந்த கொள்வனவுக்கு பங்களிப்பு செய்த அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதி அமைச்சின் அங்கீகாரத்துடன் தற்போது அந்த குறிப்பிட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆயுர்வேத மருந்துப்பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | 2024 யூலை 23 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் குழுக்கூட்டத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்தும் அறிக்கை கோரப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வில்லை. மொத்தக் கிரயம் ரூபா 14,591,311 ஆன 06 இயந்திரங்கள் உற்பத்தி நிலையத்திற்கு அவசியமற்றது என 2020 ஒக்தோபர் 05 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்த குழு ஒன்றினால் இனங்காணப்பட்டிருந்தது. முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றினை மற்றும் சேவைகள் மற்றும் திருத்த வேலைக்கான உடன்படிக்கையினை மேற்கொள்ளாது இந்த ஒப்பந்த வேலை செயற்படுத்தப்பட்டிருந்தமையால் பொருத்தப்பட்டிருந்த இயந்திர உபகரணங்களும் மீளாய்வாண்டு வரை பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டது. இதன்படி, இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 28,342,712 மொத்த தொகையும் சிக்கனமற்ற செலவொன்றாக இருந்தது. | | | | |
| 19. | ஆயுர்வேத திணைக்களத்தின் மற்றும் அதன் இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் உட்பட முழு நிறுவன முறைமையும் | 2023<br>2022<br>2021 | திணைக்களத்தின் பிரதான அலுவலக வளாகம், வைத்தியசாலைகள், மூலிகைத் தோட்டங்கள், சமூக சுகாதார பிராந்திய அலுவலகங்கள் ஆகிய | 2023 ஆண்டின் போது இதற்காக நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் முறையான முகாமைத்துவ தகவல் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடங்கக்கூடியவாறு முகாமைத்துவ தகவல் முறைமையொன்றினை (MIS) தயாரிப்பதற்காக 2021 ஆண்டு போலவே 2022 ஆண்டின் போது ரூபா 25 மில்லியன் வீதம் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கருமம் மீளாய்வாண்டிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | அனைத்து பிரிவுகளின் செயற்பாடுகளையும் கூட்டிணைக்கக் கூடியவாறு முகாமைத்துவ தரவு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | | |
| 20. | திணைக்களம் மற்றும் இணைந்த நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள், மூலிகைத் தோட்டங்கள் உட்பட முழுமையான நிறுவன முறைமைக்குரிய தொழிற்பாடுகளின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு செயலாற்றுகை சுட்டிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன், தொழிற்படுகளின் முன்னேற்றமும் மீளாய்வு செய்திருக்கவில்லை. | 2023<br>2022<br>2021 | செயலாற்றுகை சுட்டிகள் விரைவாக தோற்றுவிக்கப்பட்டு தொழிற்பாடுகளின் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாக தற்போது 03 பிரதான செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருந்ததெனவும், முன்னேற்றத்தினை அறிவிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் செயலாற்றல் குறிகாட்டிகள் தோற்றுவிக்கப்பட்டு செயல் முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| 21. | ரூபா 1,164.13 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் புதிய கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 03 | 2023<br>2022 | கட்டிடத்தை முழுமையாக பயன்படுத்துவதற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி விரைவாக நடவடிக்கை எடுக்க | இந்த வாட்டு கட்டிடத் தொகுதியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக உங்கள் ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள | நாடாளவிய ரீதியில் கேள்வி மனுக்களை கோருதலானது 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், கட்டிடத்தின் முழுமையான இயலளவினை பயன்படுத்துவதற்கு தேவையான பிரதான நீர்த்தொட்டி, வடிகாலமைப்பு முறைமை, பிரதான மின்சார இணைப்பு ஆகிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காக 2023 பெப்ரவரி 10 திகதி ரூபா 715,267,800 இற்கான மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நிறைவேற்றுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | வேண்டும். | நிதிஏற்பாடுகள் தேவைப்படுகின்றது. அதன்படி, 2024 பாதீட்டு ஏற்பாடுகளின் படி ரூபா 450 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் குறிப்பிட்ட கட்டிடத்திற்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக தேவையான வேலைப் பகுதிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக நாடளாவிய விலைகூறல் அழைப்பு 2024 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும், தற்போது 03 மாடிகளில் நோயாளர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருந்த போதிலும் முறையான நோயாளர்கள் சிகிச்சை சேவைக்குத் தேவையான அடிப்படைத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | |
| 22. | பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையில் 08 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடத்தின் தள மாடி உள்ளடங்கலாக 04 மாடிகளில் 183 கட்டில்களைக் கொண்ட 05 | 2023 | புதிய கட்டத்தின் 04 மாடிகளில் 05 சாதாரண வாட்டுக்களில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவை அமுல்படுத்தப்படுவதனால் முடியுமான | உரிய குறைபாடுகளை பூரணப்படுத்துவதற்காக மதிப்பீட்டினைத் தயாரித்து 2020 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கொவிட் | இணக்கப்பாட்டு சான்றிதழ் இல்லாது உரிய கட்டிடம் பகுதியளவில் பயன்படுத்தப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சாதாரண வாட்டுக்களில் நோயாளிகளுக்கான சிகிச்சை சேவை அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பிரகாரம் இணக்கப்பாட்டுச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | அளவு விரைவாக இணக்கப்பாட்டுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். | 19 நோயாளர்கள் அதற்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததனால் அச் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. இந் நிலைமைக்கான காரணம் திணைக்களத்தின் செயற்றிறனின்மை இல்லாது நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு உள்ள சிக்கலாகும். | |
| 23. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.6.3 இற்கு இணங்க ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்பட்டு நியமங்கள் தொடர்பான ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் நான்காவது காலாண்டில் 1,980 போத்தல்கள் நல்லெண்ணெய் 22 போத்தல்கள் இலுப்பெண்ணெய் 400 போத்தல்கள் தேன் பாணி மற்றும் 200 போத்தல்கள் கடுகு எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 2023 | மருந்து வகைகள் உற்பத்தி செய்வதற்காக கொள்வனவு செய்யும் மூலப் பொருட்கள் தொடர்பாக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.6.3 இற்கு இணங்க ஏறறுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்பட்டு தரம் தொடர்பாக ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் முறைமை/ நியமம் தொடர்பான ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளல் வைத்திசாலையில் வழமையாக செயற்படுத்தப்படாததுடன், ஏதேனும் மருந்தொன்று தொடர்பாக அவ்வாறான பரிசோதனை தேவைப்படுகின்றதென மருந்து வகைக் குழுவினால் இனங்காணப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்வாறான மருந்துகளை கொழும்பு பல்கலை கழகத்திற்கு அல்லது நாவின்ன பண்டாரநாயக ஞாபகர்த்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு அறிக்கை | தரச் சான்றிதழினைப் பார்க்கும் முறைமை அல்லது நியமம் சம்பந்தமாக ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையை பெற்றுக் கொள்ளும் முறைமை ஆயர்வேத வைத்தியசாலையில் அமுல்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பெற்றுக்கொள்ளும் செய்முறை காணப்படுகின்றது. | |
| 24. | பொரளை ஆயுர்வேத தேசிய வைத்தியசாலையின் புதிய எட்டு மாடிக் கட்டிடத்தின் பொது வாட்டு 288 கட்டில்கள் இயலளவில் 120 எனப்படும் 42 சதவீதம் வைத்தியசாலையின் பழைய பொது வாட்டுக்களின் 274 கட்டில்களில் 76 எனப்படும் 28 சதவீதம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், உரிய கட்டிடத்தின் நவீன அறை வசதிகள் அடங்கிய 88 கட்டில்களின் இயலளவில் கட்டணம் செலுத்தும் அனைத்து வாட்டுக்கள் மற்றும் பழைய 32 கட்டணம் செலுத்தும் வாட்டுக்களில் 08 உம் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 2023 | தேவையான பதவியணியினர் கூடிய விரைவில் சேர்க்கப்பட்டு குறை பயன்பாட்டுடன் காணப்படும் சாதாரண வாட்டுக்கள், நவீன அறை வசதிகள் அடங்கிய புதிய கட்டணம் செலுத்தும் வாட்டு அனைத்தும் மற்றும் பழைய கட்டணம் செலுத்தும் வாட்டின் நோயாளர் பராமரிப்பு சேவைக்காக பயன்படுத்த வேண்டும். | தாதிகள் பதவியணி பற்றாக்குறையாக காணப்பட்டமையால் இந்த வாட்டுக்களை நடாத்திச் செல்வதற்கு முடியாமல் இருக்கின்றதென அறிவிக்கப்படுவதுடன், பதவியணியினர் சேர்க்கப்பட்டவுடன் இந்த வாட்டுக்களை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் செயல்முன்னேற்றம் அறிவிக்கப்படவில்லை. |
| 25. | கொழும்பு மாநகர சபையின் பொதுமக்கள் சுகாதார பரிசோதகர்களினால் பொரளை இலங்கை தேசிய ஆயுர்வேத வைத்தியசாலைக் களஞ்சியத்தில் காணப்பட்ட கொத்தமல்லி இருப்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு | 2023 | நிதிப் பிரமாணம் 104(1) இன் படி அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களை நிர்ணயித்து அந்த இருப்பின் நட்டத்தை அவர்களிடம் அறவீடு செய்வதற்கு | குறிப்பிட்ட நட்டத்தை கொழும்பு மாநகர சபையிலிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு குறித்துக்கொண்டேன். | இது சம்மந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவை நுகர்வுக்கு தகைமை உடையவை அல்ல என அறிவித்து மருந்து வகை உற்பத்தி நிலையத்தின் அறையொன்றில் இடப்பட்டு சீல் வைக்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், உரிய முறையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படாமையால் ரூபா 327,700 கிரயத்தை உடைய 1,130 கிலோகிராம் கொத்தமல்லி அழிவடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதிப் பிரமாணங்கள் 104(1) இன் படி அதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய தரப்பினரை நிர்ணயித்து அந்த இருப்பின் நட்டத்தை அவர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| 26. | மஞ்சத்தொடுவாய் ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றி வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஆயுர்வேத வைத்தியர் ஒருவருக்கு 2012 ஜீலை மாதம் முதல் 2013 செப்தம்பர் மாதம் வரை 15 மாதங்களில் திணைக்களத்தினா | 2023<br>2022<br>2021 | மேலும் அறவிடப்பட வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்காக நிதிப் பிரமாணம் 104(2) “ஆ” இற்கு இணங்க பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக மிகை விதிப்பு செய்வதற்கு நடவடிக்கை | குறிப்பிட்ட வைத்தியரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 185,870 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2024.04.03 திகதி ரூபா 20,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், மீதித் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக சட்ட | இது சம்மந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ல் சம்பளமாக ரூபா 548,376 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் 25 சதவீத மிகை விதிப்பொன்று உட்பட 2024 ஏப்ரல் 05 திகதி அளவில் ரூபா 519,600 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. இந்த சம்பவத்திற்கு 10 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக மற்றும் உரிய பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிதிப் பிரமாணங்கள் 104(2) ''ஆ'' இன் படி பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடம் மிகைக் கட்டணம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | எடுக்க வேண்டும். | நடவடிக்கை மேற்கொள்ளும் படி விசாரணைப் பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டது. | |
| 27. | திணைக்களத்திற்கு சொந்தமாக 08 மூலிகைத் தோட்டங்கள் காணப்படுவதுடன், மீளாய்வாண்டின் போது 05 | 2023 | மூலிகைத் தோட்டங்கள் மூலம் கிடைக்கக் கூடிய விளைச்சல்களை ஆயுர்வேத | நாவின்ன மூலிகைத் தோட்டம் ஆய்வு மற்றும் விரிவாக்கல் சேவைக்காக மாத்திரம் | மூலிகைத் தோட்டங்களை முறைப்படியாக முகாமைத்துவம் செய்து அவற்றின் விளைச்சலை வைத்தியசாலைகளி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலிகைத் தோட்டங்களில் இருந்து மாத்திரம் 35 வகையான மருந்து மூலிகைகள் 629.17 கிலோ கிராம் மருந்து மூலிகைகள் பெற்றுக்கொண்டு ஆயுர்வேத தேசிய வைத்தியசாலைக்கு 552 கிலோ கிராமும் பண்டாரநாயக ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வு நிலையத்திற்கு 18 கிலோ கிராம்களும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்திற்கு 59.5 கிலோ கிராம்களும் வழங்கப்பட்டிருந்தது. நாவின்ன, கன்னெலிய மற்றும் மிகிந்தளை ஆகிய மூலிகைத் தோட்டங்களில் இருந்து முன்னைய ஆண்டைப் போலவே மீளாய்வாண்டிலும் மருந்து வகை ஏதும் வழங்கியிருக்கவில்லை. | | வைத்தியசாலைகளின் மருந்து உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கும் மற்றும் அது தொடர்பான போதியளவு அறிக்கைகள் பேணப்படுவதற்கும் முறையான பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். | பயன்படுத்தப்படுவதுடன் அது ஆய்வு நிலையத்தின் தோட்டம் என கருதப்படுகின்றது. மிகிந்தளை இதுவரை மூலிகைத் தோட்டம் என செயற்படுத்தியிருக்காததுடன், ஆய்வு வைத்தியசாலை அமைந்துள்ள காணி என கருதப்படுகின்றது. கன்னெலிய மூலிகைத் தோட்டத்தினுள்ளும் பெரிய அளவிலான மூலிகைகள் பயிர் செய்யப்படாததுடன், அது ஆய்வு மற்றும் விரிவாக்கல் சேவைக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றதென மற்றும் தற்போது மூலிகைத் தோட்டங்களில் பணிப் பொறுப்புக்கள் மற்றும் குறிக்கோள்கள் திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் மாற்றப்பட்டு பாரியளவில் மருந்துகள் உற்பத்தி அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ன் மருந்து தேவைப்பாட்டிற்காக ஈடுபடுத்துவதன் மூலம் செலவினைக் குறைப்பதற்கு முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறான நோக்கத்தை ஸ்தாபிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 28. | திணைக்களத்திற்கு சொந்தமாக 57 வாகனங்கள் காணப்பட்டதுடன் இந்த வாகனங்களுக்குரிய சம்பவக் குறிப்பேடு மற்றும் ஓட்ட அட்டவணைகள் முறைப் படியாக | 2023 | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையின் படி கட்டுப்பாட்டு நடைமுறை உரிய முறையில் நடைபெறுகின்றது என | சம்பவக் குறிப்பேடு நாளதுவரையாக ஆக்கப்பட்டு உள்ளதெனவும் போக்குவரத்துப் பிரிவில் அனைத்து கடமை அலுவல்களுக்குமாக போக்குவரத்து உத்தியோகத்தர் | வாகனங்களை முறைகேடாகப் பயன்படுத்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| நாளதுவரை ஆக்கப்பட்டு பேணியிருக்காமை, காலரீதியாக எரிபொருள் பரிசோதனை நடாத்தியிருக்காமை , சில உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரமின்றி வாகனங்களை பயன்படுத்தி இருத்தல், வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய உத்தியோகத்தர் மற்றும் சாரதிகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமை, வாகனங்களுக்காக எரிபொருள் நிரப்பும் போது அந்த அலுவல்கள் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொண்டிருக்காமை, சில உத்தியோகத்தர்கள் முறையான அங்கீகாரமின்றி வானங்களை பயன்படுத்தியிருத்தல், மற்றும் வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய உத்தியோகத்தர் மற்றும் சாரதிகள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, வாகனங்களின் ஓட்ட அனுமதிப்பத்திர பரிசோதனைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படா | அவதானிக்கப்படாமையால் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மாத்திரமே காணப்படுவதனால் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தொடர்ச்சியாக பரிசோதனை செய்வதற்கு முடியாமல் காணப்படுவதுடன் உங்களால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்கள. அறிவுறுத்தப்பட்டு அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஓட்ட அங்கீகாரப் பத்திரத்தில் பதவிநிலை உத்தியோகத்தரின் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்தின் படி கடமைகளுக்காக வாகனங்கள் ஈடுபடுத்தப்படுவதுடன் சில சந்தர்ப்பங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்கள. அலுவலகங்களில் இருக்காத சந்தரப்பங்களில் கடமையின் தன்மையைப் பொறுத்து பதவியணி உத்தியோகத்தரின் வாய்மொழி மூலமான அங்கீகாரத்துடன் வாகனங்கள் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதெனவும் எவ்வாறாயினும் இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மை மற்றும் சாரதிகளின் ஒழுங்கீனங்களை தவிர்த்துக் கொள்வதற்கு போதியளவு கட்டுப்பாட்டு முறை கடைபிடித்திருக்காமை ஆகிய விடயங்கள் காரணமாக திணைக்களத்தின் வாகன நிருவாகம் மற்றும் வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பாக திருப்திகரமான நிலைமை காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | | | | |
| 29. | பொரளை தேசிய ஆயுர்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் 44 உத்தியோகத்தர்களினால் முறையான அங்கீகாரமின்றி பெற்றுக் கொண்டிருந்த விடுமுறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரையறையை மிகைத்து பெற்றுக் கொண்டிருந்த விடுமுறை நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகள் என கருதி நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 453,475 இற்கான சம்பளம் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையின் படி கட்டுப்பாட்டு நடைமுறை உரிய முறையில் நடைபெறுகின்றது என அவதானிக்கப்படாமையால் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | அரச சுகாதார முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 12 ஆகக் காணப்பட்டதுடன் அப்போது 04 உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமையாற்றினார். எனவே இந்த உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவைப்பட்டதன் அடிப்படையில் முறையான அங்கீகாரமின்றி மற்றும் தெரியப்படுத்தப்படாமல் ஊழியர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விடுமுறைகள் | உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தொடர்பாக குறிப்பிட்ட காலப்பகுதியில் தெரியப்படுத்துவதற்கு முடியாமல் போனது எனவும் கருணையுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இந்த நிலைமையினை எதிர்காலத்தில் சரி செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | |
| 30. | கொழும்பு பல்கலைகழத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் சுதேச வைத்திய பட்டப் பின் படிப்பு நிறுவகம் 2017 ஜீன் 02 திகதி முதல் பொரளை ஆயர்வேத தேசிய வைத்தியசாலையின் 05 ஆவது மாடியில் நிறுவப்பட்ட போதிலும் அதற்காக முறையான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், மாதாந்த வாடகையும் அறவீடு செய்திருக்கவில்லை. மேலும், குறிப்பிட்ட நிறுவனத்தினால் 2018 முதல் 2023 நவம்பர் வரை பயன்படுத்தப்பட்டிருந்த மின்சாரத்திற்காக திணைக்களம் கணித்திருந்த ரூபா 7,571,445 இற்கான நிலுவை மின்சார நுகர்வுக் கட்டணத்தை | 2023<br>2022 | சுதேச வைத்திய பட்டப்பின் படிப்பு நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொண்டு கட்டணம் அறவீடு செய்வதற்கு முறையான உடன்படிக்கையை மேற்கொண்டு மாதாந்த வாடகையை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுதேச வைத்திய பட்டப்பின் படிப்பு நிறுவகம் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையின் 05 ஆம் மாடியில் நிறுவப்பட்டமை தொடர்பாக முறையாக கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு ஆவணங்கள் ஏதும் எம்மிடம் காணப்படாததுடன், அது தொடர்பாக கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு இணங்குகின்றேன். முறைப் படியாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொண்டு கட்டணம் அறவீடு செய்வதற்கு கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்ட அலுவல்கள் பூர்த்தி | 20 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து ரூபா 8 மில்லியனுக்கு மேற்பட்ட மின்சார செலவுகளையேனும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் முடியாமல் இருந்தது. | | | செய்யப்பட்டு கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு குறித்துக்கொண்டேன். நிலுவையான நீர் நுகர்வுக் கட்டணம் மற்றும் நிலுவையான மின்சாரக் கட்டணத்தை அறவீடு செய்தல் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதில் 2023 திசெம்பர் மாதம் வரை குறிப்பிட்ட நீர் நுகர்வுக் கட்டணமாக ரூபா 22,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | |
| 31. | பொரளை தேசிய ஆயுர்வேத வைத்தியசாலையில் நடாத்தி செல்லப்படுகின்ற வியாபார குடில்களை பரிசோதனை செய்து பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவினால் 2020 மார்ச் 14 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்புக்களின் படி வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை நலனோம்பு சங்கத்தினால் ரூபா 41,600 இற்கான மாதாந்த வாடகைக்கு வெளித் தரப்பினர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டு, குறிப்பிட்ட வாடகை | 2023 2022 | குறிப்பிட்ட பணத்தை நலனோம்பு சங்கத்திடம் அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆயுர்வேத தேசிய வைத்தியசாலை ஊழியர் நலனோம்பு சங்கத்தின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட எனது இலக்கம் 03/01/05-2-ii மற்றும் 2021.03.26 திகதிய கடிதத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மாதாந்த குத்தகை வாடகை செலுத்த தவறியதாக கணிக்கப்பட்டிருந்த ரூபா 400,000 தொகை அப்போதைய நலனோம்பு சங்கத்தின் நிறைவேற்றுக் குழு பிரதிநிதிகளின் சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட அறவீடுகள் 2024 | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் எந்த பணமும் அறிவிடப்பட்டிருக்காததுடன் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அந்த சங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததென கண்டறியப்பட்டது. 2020 இன் 24 திகதிய 02/03/பெறுமதிமதிப்பீடு/2020 ஆம் இலக்கம் கொண்ட ஆயுர்வேத ஆணையாளரின் கடிதத்தின் மூலம் 2020 இன் மாதம் வரை அறவிடப்பட்ட வாடகைத் தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும் என நலனோம்பு சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணத்தை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | ஏப்ரல் மாதம் முதல் சம்பளத்திலிருந்து அறவீடு செய்து அதன் முன்னேற்றத்தை உங்களுக்கு அறிவிக்க குறித்துக்கொண்டேன் | |
| 32. | அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 612, நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 பந்திக்கு இணங்க 2024 மார்ச் 31 திகதி அளவில் ஆயுர்வேத திணைக்களம் மற்றும் அதற்கு உரித்தான நிறுவனங்களில் பிணை வைக்க வேண்டிய 18 | 2023<br>2022 | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்திக்கு இணங்க பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பான சிக்கல் தன்மையை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2024 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து நிதிப் பிரமாணம் 892 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் திருத்திய அறிக்கையினை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட ஏறப்பாடுகளுக்கு இணங்க பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 33. | 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரிவுகள் 3.6, 3.9, 11 மற்றும் 11.2 இற்கு இணங்க நிறுவனத்தின் குறிக்கோளை அடைந்து கொள்வதனை முன்னிட்டு தமது வளங்களை செயற்திறனுடன் செயற்படுத்த வேண்டியதுடன் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காணப்படும் இடைவெளிகளும், முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக பொருத்தமான சுட்டிகளை இனங்காண வேண்டியிருந்தது. எனினும் திணைக்களத்தினால் அவ்வாறான சுட்டிகளை இனங்கண்டு குறிக்கோள்களில் அடைந்து கொண்ட அளவு மற்றும் விலகல்கள் போல | 2023 2022 2021 | நிலையான அபிவிருத்தி குறிக்கோளை அடைந்து கொள்ளல் தொடர்பான இலக்குகள் சுட்டிகளை இனங்காண்பதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை தயாரித்தல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உதவியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2024.06.30 திகதி குறிப்பிட்ட அலுவல்களை நிறைவேறறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் நிலைபேறான அபிவிருத்தி குறிகோள்களை அடைந்து கொள்ளும் வகையில் நிறுவனத்தினால் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காணப்படுகின்ற இடைவெளிகளையும் செயல்முன்னேற்றத்தையும் அளவீடு செய்வதற்கு பொருத்தமான குறிகாட்டிகள் அடையாளம் காணப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கவனம் செலுத்த வேண்டிய பல்வேறு துறைகள் இனங்கண்டிருக்கவில்லை. | | | | |
| 34. | பண்டார நாயக்க ஞாபகார்த்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 12 ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் எவரும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் ஷமல் ராஜபக்ஷ ஆராய்ச்சி வைத்தியசாலைக்கு ஆராய்ச்சி பதவியணியினர் அங்கீகரித்திருக்கவில்லை. | 2023<br>2022 | ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகள் நிறுவப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகையை நெருங்குவதற்காக ஒவ்வொரு விடயத்துறை தொடர்பாகவும் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | நாவின்ன, பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பது தொடர்பாக எதிர்காலத்தில் கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆயர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையினை தோற்றுவிப்பதன் மூலம் எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் அமைப்பும் முறைமையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 35. | திணைக்களத்தின் தலைமை அலுவலகம், ஆயுள்வேத வைத்தியசாலைகள் மற்றும் 09 பிரிவுகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஆயுர்வேத ஆணையாளர் நாயக பதவிக்கு முழு நேர அடிப்படையில் பதில் கடமையாற்றுவதற்கும், பிரதி ஆயுள்வேத ஆணையாளர் பதவிக்கு மற்றும் சுதேச வைத்திய | 2023 | தகைமை உடைய உத்தியோகத்தர்களைக் கொண்டு குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதி ஆயுர்வேத ஆணையாளர் பதவி இலங்கையின் நிருவாக சேவை I தரத்திலுள்ள உத்தியோகத்தர் காணப்படாமையால் III ஆம் தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தர் முழு நேர அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்வதற்கு பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. சுதேச வைத்தியமுறை தொடர்பான தேசிய | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் வித்தியாசம் ஏற்பட்டிருக்கவில்லை. |

முறை தொடர்பான தேசிய நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்காக முழு நேர அடிப்படையில் கடமை நிறைவேற்றுவதற்காகவும், உதவி ஆணையாளர்கள் - கலைசாரர் உதவிப் பணிப்பாளர் (கல்விசார் தொழிநுட்பம்), 08 வைத்தியசாலை பணிப்பாளர் பதவிகள் மற்றும் 02 பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்காக கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்கு இலங்கை நிருவாக சேவையின் I ஆம் தர உத்தியோகத்தர் காணப்படாமையால் II ஆம் தர உத்தியோகத்தர் முழு நேர அடிப்படையில் கடமை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆயுர்வேத வைத்தியசாலை பணிப்பாளர் பொரளை, கம்பஹா, மஞ்சத்தொடுவாய் கோனேஷ்புரி, அம்பாறை, மதவாச்சி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பதவிகள் இலங்கை ஆயுர்வேத வைத்திய நிருவாக I ஆம் தர பதவியாகக் காணப்படுவதுடன் II ஆம் தர பதவியாகிய உதவி ஆணையாளர் (கலைசார்), சுதேச வைத்திய முறைமை தொடர்பான தேசிய நிறுவகத்தின் உதவிப் பணிப்பாளர் (கல்வி தொழிநுட்ப) மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாவின்ன வைத்தியசாலை ஆகிய பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக வைத்திய உத்தியோகத்தர்கள. நியமனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செய்யப்பட்டுள்ளனர். | |
| 36. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 5.5 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களினால் புதிய கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் பாராளுமன்ற அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் ஆயுர்வேத அதிகாரச் சட்டம் அல்லது ஏனைய அவ்வாறான எழுத்துமூல சட்டங்களின் மூலம் ஏற்பாடு வழங்கப்படாது மீளாய்வாண்டில் திணைக்களத்தின் சேவை நாடுனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 21,564,057 தொகையான பல்வேறு கடட்ணங்கள் திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக நடவடிக்கை எடுக்கின்ற விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் 20.03.99.00 என்ற வருமான குறியீட்டின் கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு | 2022 | ஆரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆயுர்வேத திணைக்களத்தின் அனைத்து வருமானங்களுக்குமாக பொதுத் திறைசேரியில் அங்கீகரித்த வருமான குறியீட்டின் கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக ஆயுர்வேத ஆணையாளருக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் முடியுமான வகையில் சட்டரீதியான பின்னணி யினை முறைப்படியாக தயாரிப்பதற்கும் 2023 ஆம் ஆண்டின் போது ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவின் தீர்மானத்திற்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க கட்டணங்களை திருத்தம் செய்வதற்கும் புதிதாக கட்டணங்களை அறிமுகப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக ஆயர்வேத ஆணையாளருக்கு நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமான வகையில் சட்டப் பின்னணியை தயாரிப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் போது ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன் அக் குழுவின் தீர்மானத்திற்கிணங்க தயாரித்த முன்மொழிவிற்காக திறைசேரியின் இணக்கப்பாட்டினைப் பெற்று சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டது என ஆயுர்வேத ஆணையாளர் தெரிவித்துள்ளார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்தது. | | | | |
| 37. | ரூபா 350 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான மரபுரீதியான மருத்துவ அறிவினை பேணிப்பாதுகாக்கும் செயற்திட்டத்தின் II ஆவது கட்டம் 2020 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் 04 ஆண்டுகளுக்குள் அமுல்ப்படுத்துவதற்காக 2019 ஏப்ரல் 03 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்காததுடன் 2023 ஆம் ஆண்டில் ரூபா 1,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு 04 செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தும் பாரம்பரிய மருத்துவர்களை மதிப்பீடு செய்தல் என்ற ஒரு செயற்பாடு மாத்திரம் நிறைவேற்றப்பட்டு அதற்காக ரூபா 697,408 செலவு செய்யப்பட்டிருந்தது. | 2023<br>2022 | நாட்டில் கணப்பட்ட பொருளாதார நிலைமையுடன் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அமுல்ப்படுத்தும் போது உருவாகிய சிக்கல்களை மீண்டும் மீளாய்வு செய்து நிகழ்கால பொருளாதார நிலைமைக்கு பொருந்தும் வகையில் செயற்திட்டத்தை மீளமைப்புச் செய்வதற்குத் தேவையான கொள்கை ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அப்போது நாட்டில் காணப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இணங்க இச்செயற்திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடு குறித்த அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக அங்கீகரித்த திட்டத்தின் பிரகாரம் நிதி ஏற்பாடு கிடைக்க வேண்டியிருந்தது. அதற்கிணங்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை முகாமைத்துவம் செய்து திட்டமிட்ட ஒவ்வொரு நடவடிக்கையும் நிறைவேற்றப்படும். | 2024 ஆம் ஆண்டில் மிகுதிச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா ஒரு மில்லியன் நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் ஆயர்வேத ஆணையாளர் தெரிவித்துள்ளார். |
| 38. | மீளாய்வாண்டின் யூன் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை ஆயர்வேத திணைக்களம் மற்றும் அதனுடன் | 2022 | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க பெறுகைகள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் | எதிர்காலத்தில் பெறுகைத் திட்டத்திற்கு இணங்க முறைப்படியாக நாளதுவரையாக பெறுகை | எதிர்காலத்தில் பொறுகை வழிகாட்டி கோவைக்கு இணங்க முறைப்படியாக நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| இணைந்த 18 நிறுவனங்களில் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக ரூபா 74,759,059 தொகையான ஒப்பந்தம் சம்பந்தமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (உ), 2.12, 4.2.2, 4.2.3, 4.3 ஆகிய வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் நாளாந்தம் 24 மணித்திலாயங்களை நிவர்த்தி செய்யும் வகையில் அனைத்து சேவை நிலையங்களில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்படியாக மேற் பாரவ்வை உத்தியோகத்தர்களை நியமித்து நாளாந்தம் பெயர்ப்பட்டியலை பெற்றுக்கொள்ளல், சம்பவக்குறிப்புக்களை பரீட்சித்தல், அடிக்கடி சேவை நிலையத்தை பரீட்சித்துப் பார்த்தல் முதலிய உள்ளக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல் சம்பந்தமாக தாமதமின்றி நடவடிக்கை எடுத்து பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படுதல் வேண்டும். பெறுகை வழிகாட்டிக் கோவைகள் சரியாக பின்பற்றப்பட்டன என்பதனையும் வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் உறுதிபப்டுத்துவதற்காக எழுத்து மூல சான்றுகள் பேணப்படுதல் வேண்டும். | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எடுக்கப்படும் என இணங்கிக் கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39. | மீளாய்வாண்டின் யூலை மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான காலத்திற்காக ஆயுர்வேத திணைக்களத்தின் சுற்றாடலினை சுத்தம் செய்யும் சேவையை வழங்குவதற்காக ரூபா 1,947,258 தொகையான ஒப்பந்தம் சம்பந்தமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.4.3, 2.5.1 (ஆ), 2.6.1 (ஆ) (i) மற்றும் 4.2.2 ஆகிய வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களின் அங்கத்தவர்கள் உரிய குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கியிருக்காததுடன் பெறுகைக் கால அட்டவணை சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு வழங்கப்பட்டிருக்காததனால் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய ஒப்பந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தகாரரினால் ஊழியர்களின் | 2022 | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கைகள் எடுப்பதற்கும் ஒப்பந்த உடன்படிக்கைகளை மீறுவது சம்பந்தமாக தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதற்கும் பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படுதல் வேண்டும். பெறுகை வழிகாட்டிக் கோவை சரியாக பின்பற்றப்பட்டது என்பதனையும் வெளிப்படை தன்மையுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதனையும் உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகள் பேணப்படுதல் வேண்டும். | கொவிட் தொற்று நோய் மற்றும் ஆர்ப்பாட்ட நிலைமையினால் ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டமையின் காரணமாக பெறுகைக் குழுவினைக் கூட்டுவதில் தாமதம் ஏற்பட்டது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஊழியர்களின் பெயர், கையொப்பம், விலாசம் என்பவற்றினை உள்ளடக்கிய ஒரு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கு சீருடைகளையும் அடையாள அட்டைகளையும் வழங்குமாறு ஒப்பந்த நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. சேவைக்கு சமூகமளித்தல் மற்றும் வெளிச்செல்லல் சம்பந்தமான ஒரு அறிக்கை தாபன பிரிவினால் பேணப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டின் போது கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு முறையான சம்பளங்களையும் படிகளையும் செலுத்துகின்றன என்பதனையும் ஊழியர் சேமலாப | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெயர், கையொப்பம், விலாசம் என்பவற்றை உள்ளடக்கிய அறிக்கைகளையும் துப்பரவு செய்யும் இரசாயனப் பொருட்களின் சேர்மானம் மற்றும் பயன்படுத்துவதற்கு பொருத்தமானது என்பதற்கான முறையான தரச்சான்றிதழ்களும் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் ஊழியர்களுக்கு சீருடை மற்றும் அணிந்து கொள்வதற்காக அடையாள அட்டையையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் சம்பந்தமான தகவல்கள் மற்றும் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் மேற்கொள்ளப்பட்ட பணம் அனுப்புதல்கள் முதலிய தகவல்களும் வழங்கப்படவில்லை. | | | நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு பணம் அனுப்பிவைக்கப்படுகின்றன. என்பதனையும் உறுதிப்படுத்துமாறு சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய விடயங்களை உறுதிப்படுத்தி உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| 40. | 2017 இன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் | 2022 | சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் உரிய | காணிகள் மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமான அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் சரியான மற்றும் நாளது வரையான அறிக்கையினை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் கைதவிர்ப்புச் செய்தல் தொடர்பான நாளதுவரையான மற்றும் சரியான தகவல்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படவில்லை. | | அறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய சொத்துக்கள் சம்பந்தமாக அறிக்கைகளை தயாரித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் செயல்முன்னேற்றத்தை எதிர்காலத்தில் அறிக்கையிடுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 41. | பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் மருந்து உற்பத்தி பிரிவின் மூலம் 23 வகையான தைலங்கள் கொண்ட 13,500 போத்தல்கள் மற்றும் 08 வகையான 790 கிராம் குகுல் உற்பத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பதவியணி பற்றாக்குறை மற்றும் மருந்து மூலிகைகள் போதியளவு பெற்றுக்கொண்டிருக்காமை ஆகிய காரணத்தினால் 09 வகையான தைலங்களில் 2,977 போத்தல்கள் மற்றும் 07 வகையான 268 கிலோ கிராம் குகுல் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. | 2021 | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து வளங்களின் மூலம் உச்ச மட்ட பயனை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்கால உற்பத்தி நடவடிக்கைகளை திட்டமிடும் போது திணைக்களத்தில் காணப்படும் பௌதீக மற்றும் மனிதவள இயலளவினை கவனத்தில் எடுத்து மதிப்பீடுகள் தயாரிப்பதற்காக குறிப்பிட்ட பிரிவுத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | 2024 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையும் குறிப்பிடத்தக்க அளவு செயல் முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. ஆளணியினர் பற்றாக்குறை மற்றும் மருந்து மூலிகைகள் போதியளவில் வழங்கப்படாமையின் காரணமாக பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் மருந்து உற்பத்திப் பிரிவின் மூலம் போதியளவு மருந்து உற்பத்தி இடம்பெற்றிருக்கவில்லை. |
| 42. | மீளாய்வாண்டின் போது ரூபா 20,799,715 தொகை மொத்த கிரயமான | 2021 | பெறுகை வழிகாட்டல்கள் சரியாக கடைபிடிக்கப்பட் | ஒவ்வொரு பிரிவுகளில் இருந்தும் கிடைத்திருந்த | 2024 யூலை 23 ஆந் திகதிய அரசாங்கக் கணக்குகள் |

| | | | |
|---|---|---|---|
| 23 விடயங்களைக் கொண்ட அலுவலக தளபாட 1239 அலகுகள் மற்றும் மொத்த கிரயம் ரூபா 6,987,850 ஆன வைத்தியசாலை தளபாடங்களின் 312 அலகுகள் மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த வழங்குனர் ஒருவரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல், அலுவலக தளபாட உபகரணங்கள் தொடர்பாக நியமனம் செய்யப்பட்டிருந்த தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவில் விடயத்திற்குரிய விஷேட அறிவையுடைய ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்காமை, விவரக் குறிப்புகள் தயாரித்தல் மற்றும் அந்த விவரக் குறிப்புகளுக்கு இணங்க உபகரணங்கள் பெற்றுக் கொள்ளல் தொடரப்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காமை, அனைத்து உபகரணங்களும் விவரக் குறிப்புக்களுக்கு இணங்க கிடைக்கப் பெற்றதற்கான முறைப்படியாக உறுதி செய்து கொள்ளாமல் கொடுப்பனவு | டது மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூல சான்றுகளை பேணி பெறுகைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். | எழுத்துமூல கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேவைப்பாட்டு பதிவேடு தயாரிக்கப்பட்டது எனவும், வைத்தியசாலை தளபாடங்களை கொள்வனவு செய்யும் போது விடய விஷேடத்துவர் ஒருவர் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தார் எனவும், அனைத்து உபகரணங்களும் விவரக் குறிப்புகளுக்கு அமைவாக காணப்பட்டது என பௌதீக ரீதியாக பரிசோதனை செய்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும், அப்போது நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் காரணமாக மற்றும் மூலிகைகள் பற்றாக்குறை காரணத்தினால் பண்டங்கள் வழங்குதல் தாமதம் அடைந்தததற்காக தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை எனவும் மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் மேற்கொள்ளக் கூடாது என குறிப்பிட்ட உத்தியோகத்தரக்ளுக்கு | குழுக்கூட்டத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருத்தல், கட்டளை சமர்ப்பிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக வழங்கப்பட்டிருந்த உபகரணங்களுக்காக கொடுப்பனவு செய்தல், கட்டளையிடப்பட்ட உபகரணங்களை விட வித்தியாசமான உபகரணங்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளல், தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்காமை மற்றும் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத செலவு விடயங்களின் கீழ் ரூபா 11,809,305 தொகை கொடுப்பனவு செய்தல் ஆகிய குறைபாடுகள் இந்த பெறுகை செய்முறையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | | | அறிவுறுத்தப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| 43. | சுதேச மருந்துகளின் மூலம் கொவிட் 19 தொற்றுநோயை கட்டுப்படுத்துவதற்காக ஒன்று ரூபா 1,000 கிரயத்தையுடைய 60 இலட்சம் சுவதாரணி மருந்துக் குப்பிகளை விநியோகிக்கும் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. ஆரம்பத்தில் மேல் மாகாணத்திற்கு 250,000 மருந்துக் குப்பிகளை வழங்குவதற்காக | 2021 | அரசாங்க பணத்தை சிக்கனமாக பயன்படுத்தி அத்தியவசியமான மற்றும் முக்கியமான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் செயற்திட்ட யோசனைகளை செயற்படுத்த வேண்டியதுடன், பெறுகை வழிகாட்டல்களை சரியாக கடைப்பிடித்து மற்றும் வெளிப்படைத் | விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது காணப்பட்ட குறைபாடுகளை கொடுப்பனவு செய்ய முன்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் அச்சிடப்பட்ட காலவதியாகும் திகதி சிக்கல் தன்மை ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக நடவடிக்கை | 2024 யூலை 23 ஆந் திகதிய அரசாங்கக் கணக்குகள் குழுக் கூட்டத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. |

குறைநிரப்பு நிதிஏற்பாடு ரூபா 250,000,000 ஒதுக்கப்பட்டு அவற்றிலிருந்து ரூபா 142,562,809 தொகை செலவிடப்பட்டிருந்தது மருந்துக் குப்பிகளை தயாரிக்கும் அனைத்து கருமங்களும் ஒரு வழங்குனரிற்கு கொடுக்கக்கூடிய விதமாக கூறுவிலைகள் அழைப்பதற்காக எடுக்கப்படும் காலம், உற்பத்திகளின் தரத்தில் விரயம் மற்றும் கிரயத்தை குறைத்துக்கொள்ளல் ஆகியவற்றில் கவனம் செலுத்தாமல் மருந்து மற்றும் கூழ் உற்பத்திக்கு 07 வழங்குனர்களும், பொதிகள் அச்சிடுவதற்கு ஒரு வழங்குனரும், காட்போட் பெட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுவதற்காக ஒரு வழங்குனரும், மருந்து மற்றும் கூழ் பொதி செய்வதற்காக 07 வழங்குனர்களுமாக வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மேலும், கூறுவிலைகளை மதிப்பாய்வு செய்யும் போது காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளை பின்னர் நிவர்த்தி செய்யும்

தன்மையை உறுதிப்படுத்தி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எடுக்கப்பட்டதெனவும், மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதெனவும், கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக கம்பஹா மாவட்டத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதெனவும், ஏனைய மாவட்டங்கள் பெரும்பாலும் உள்ளடக்கப்பட்டது எனவும் மற்றும் செயற்திட்டத்தின் குறிக்கோளை நூறு சதவீதம் நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போனது எனவும் தெரிவிக்கப்பட்டது.

அடிப்படையில் வழங்குனர்கள் தெரிவு செய்தல் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைக்கு கவனம் செலுத்தாமல் செயற்படுதல், அனைத்துப் பெறுகைகளையும் குறிப்பிட்ட நாளில் பூர்த்தி செய்யாமை, பெறுகைக் குழுவின் அங்கீகாரம் இன்றி கால நீடிப்பு செய்தல், தாமதக் கட்டணம் அறவிடப்படாமை, விலைக்குழுவின் கூறுவிலைகளை மிகைத்து கொடுப்பனவு செய்தல் ஆகிய குறைபாடுகள் இந்தப் பெறுகை செய்முறையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது . மருந்துக் குப்பிகள் சுகாதாரப் பாதுகாப்புடன் களஞ்சியப்படுத்தப்படாமை, முறையற்ற வகையில் விநியோகித்தல், மருந்துகளை நிரப்புவதற்கு முன்னர் பொதிகளில் காலவதியாகும் நாளை அச்சிட்டிருந்தமையால் சில மருந்துகள் காலவதியானவை என கணித்து அப்புறப்படுத்தல், காலவதியாக முன்னர் மருந்துகளை பயன்படுத்துவற்கு போதியளவு காலம் நலன்பெறுவோருக்கு

கிடைத்திருக்காமை, இலக்கிடப்பட்ட நலன்பெறுவோருக்கு மருந்துகள் கிடைத்தல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பாக கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை எடுக்காமை, மேல் மாகாணத்திற்கு விநியோகிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த 250,000 குப்பிகளில் 183,776 உம் கம்பஹா மாவட்டத்திற்கு மாத்திரம் விநியோகித்தமை, 60 நாட்களுக்குள் 60 இலட்சம் பேழைகளை விநியோகிப்பதற்காக அவசர பெறுகைமுறையை கடைபிடிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 122 நாட்கள் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தின் மூலம் 05 சதவீதத்தையேனும் பூர்த்தி செய்திருக்காமை ஆகிய குறைபாடுகள் இந்த பெறுகையில் காணப்பட்டதென மேலும் அவதானிக்கப்பட்டது.

தலைப்பு - 221 தொழில் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 17,798,856,135 | 767,737,985 | 17,201,018,694 | முனைப்பழியுள்ள |
| **2022** | 17,968,756,679 | 710,278,354 | 17,088,577,781 | முனைப்பழியுள்ள |
| **2023** | 18,098,111,763 | 962,656,533 | 17,135,455,231 | முனைப்பழியுள்ள |

| தொடர் இலக்கம் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் வருடம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | நிதிப்பிரமாணம் 208 இன் பிரகாரம் தொழில் திணைக்களத்தினால் ஒப்பந்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மொத்த தொகை கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தால் ரூபா 397,410,290 செலவிடப்படாது செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2021 | முகாமைத்துவத் தினால் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை தீர்மானங்கள், கட்டடத் திணைக்களத்தின் கோரிக்கை மற்றும் பொறியியலாளரின் (சிவில்) பரிந்துரையின் அடிப்படையில் நிர்மாண மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு நிதி விடுவிக்கப்படுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலும் ரூபா. 127,687,802 பெறுமதியான நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்படவில்லை. வேறு செயற்திட்டங்களுக்கு நிதி மாற்றப்பட்டு மீதி நிதியினை ஒப்படைப்பதற்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. |
| | 2010 யூலை 21 ஆம் திகதி தொடக்கம் 2011 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் இலங்கை “பரகும்பா” நிறுவனத்தில் இருந்து உணவு களஞ்சிய சாலைக்கு விநியோகத்தர்களினால் உணவு விநியோகிக்கும் போது மற்றும் உணவு களஞ்சிய சாலையில் இருந்து சமையலறைக்கு உணவு வழங்கும் போது ஏற்பட்டிருந்த ரூபா 7,721,406 ஆன நட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை சபை அறிக்கைக்கு அமைய 11 குற்றவாளிகள் 2015 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அதில் 04 பேருக்கு குறித்த நட்டம் கடற்படை வீரர்களின் நல்லெண்ண பரிசு நிதியத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் மிகுதி 07 கடற்படை வீரர்களுக்கு உரிய நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | இந்த நட்டத்தினை அறவிடுவதற்குப் போதியளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | இந்த நட்டத்துடன் தொடர்புடைய கடற்படை வீரர்கள் இருவர் கடற்படை சேவையில் உள்ளதுடன் இன்னும் ஒருவரின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மீதி கடற்படை வீரர்கள் மூவர் 22 வருடங்கள் சேவை பூர்த்தி அடைவதற்கு முன்னர் கடற்படையிலிருந்து விலகி உள்ளதுடன் ஒருவர் 22 வருட சேவை காலம் பூர்த்தி அடைந்ததன் பின்னர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். மேலும் அவர்களது சேவைப் பணிக்கொடையின் மூலமும் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது தெரிய வருகின்றது. ஓய்வூதியத்திற்கு உரித்துடைய நபரின் ஓய்வூதியத்தினை இடைநிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இந்த நபர்களிடமிருந்து அறவிடுதல் தொடர்பில் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கு கடற்படையின் சட்டப் பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மூலம் மூதூர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 22. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நி.பி. 104 இன் பிரகாரம் நட்டம் | 2023 | விசாரணையை விரைவில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் | 2023 நவம்பர் 23 ஆம் திகதி கடற்படை விசாரணை சபை நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த அறிக்கையில் நட்டம் தொடர்பாக | விசாரணை சபை அறிக்கை மீண்டும் தயாரிக்கப்பட வேண்டும் என்பது தெரிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அல்லது நட்ட சேதம் ஒன்று ஏற்பட்டவுடன் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், வெளிநாட்டுக் கொள்வனவுப் பிரிவில் கொள்வனவுகளின் போது பெறுமதி சேர் வரி (VAT) விலக்களிக்கப்பட்ட பொருட்களுக்கு விநியோகத்தர்களுக்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 2,329,345 செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கு அமைய பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் யார் எனப் பெயரிடப்பட்டிருக்கவில்லை என்பதனால் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டுள்ளது. | வருகின்றது என்பதனால் விசாரணை சபை அறிக்கையை மீண்டும் தயாரிப்பதற்கு விசாரணைக் குழுவிடம் மீண்டும் அனுப்பப்பட்டுள்ளது. |
| 23. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் நி.பி. 177 (1) இன் பிரகாரம் சேகரிக்கப்படும் அரச நிதி திறைசேரிக்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், கடற்படை உத்தியோகத்தர்களின் மற்றும் கடற்படை வீரர்களின் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள 04 சொகுசு பேருந்துகளில் இருந்து மற்றும் 02 | 2023 | திரட்டிய நிதியத்திற்குரிய வருமானத்தினைச் சேகரிப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | சேவையில் ஈடுபட்டுள்ள, ஓய்வு பெற்ற, யுத்தத்தில் மரணமடைந்த மற்றும் ஊனமடைந்த கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களின் நலனோம்பல் நோக்கில் நிவாரண விலையின் கீழ் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காக கடற்படை தலைமை அதிபதியின் பத்திரத்தின் மூலம் முறையான ஒழுங்கு விதிகளுக்கு அமைய அனுமதியினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்த பேருந்து மற்றும் வான் என்பவற்றை வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. அதிலிருந்து அறவிடப்படும் நிதி அந்த வாகனங்களைச் செலுத்தும் போது ஏற்படும் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு | முப்படை, பாதுகாப்பு அமைச்சு மற்றும் திறைசேரியுடன் இது தொடர்பில் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் இறுதி தீர்மானம் இதுவரையில் எட்டப்படவில்லை என்பதனால், எதிர்காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் மூலம் வழங்கப்படும் அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வான்களில் இருந்து கடற்படையானது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஈட்டியிருந்த ரூபா 19,880,407 ஆன வருமானம் கடற்படையின் நலனோம்பல் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அந்த காலப்பகுதிக்கு உரிய எரிபொருளுக்காக ரூபா 17,113,256 உம், திருத்த வேலைகளுக்கான செலவினமாக ரூபா 4,486,420 உம் என ரூபா 21,599,676 ஆன தொகை அந்த வாகனங்களுக்காக கடற்படையினால் செலவிடப்பட்டிருந்தது. | | | பயன்படுத்தப்படும். | |
| 24. | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 7.9.6 (அ) பிரிவின் பிரகாரம் இலங்கையில் உள்ள உழைப்பு, மூலப் பொருட்கள் மற்றும் ஆக்கக்கூறுகள் வழங்கப்படுகின்ற உற்பத்தியின் ex-work விலையில் 30 சதவீதம் வரையில் அல்லது ஆக குறைந்தது விலைமனு சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பம் தொடக்கம் அந்த பொருட்கள் உற்பத்தி செய்தல்/ சேகரித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் வரையில் உள்நாட்டு | 2023 | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் மற்றும் முரண்படுதல் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை சபை ஒன்றை நியமிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு கணக்காளரிடம் (வருமானம் மற்றும் சொத்து முகாமைத்துவம்) 2024 மே 01 ஆம் திகதி கடற்படை தலைமை அதிபதியின் கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறித்த விசாரணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது மேலும் குறித்துக் கொள்ளப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முன்னுரிமை அடிப்படையில் 20 சதவீத விளிம்பு மட்டத்தினை வழங்க வேண்டிய போதிலும், அதற்கு முரணாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததன் அடிப்படையில் 3000 பாதுகாப்பு காலணி சோடிகளைக் கொள்வனவு செய்யும் போது ரூபா. 2,236,500 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதே போன்று மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்த காலணிகளுள் இந்த காலணிகள் எடையில் அதிகமானவை என்பதும் தரத்தில் திருப்தியற்றதாக இருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 25. | கடற்படையில் Material digital camouflage, Material Olive Green, Black Drill மற்றும் Material cloth Trouser Inner ஆகிய துணி வகைகளில் 57,014 மீட்டர் துணி 2019 ஆம் ஆண்டு இறுதி வரையில் களஞ்சியசாலையில் இருந்த போதில் மற்றும் வருடாந்த இருப்புத் தேவைப்பாடு தொடர்பான மதிப்பீடு இன்றி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 164,520 மீட்டர் துணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 2023 | அரச நிதி அத்தியாவசியமான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | 2024 ஆம் ஆண்டில் சுமார் 4,169 கடற்படை வீரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனக் கடற்படை பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 383 பேர் மாத்திரமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | இந்த வருடத்தினுள் மிகுதி எண்ணிக்கையினை ஆட்சேர்ப்பு செய்யப்படாவிட்டால் கட்டளை இடப்பட்டுள்ள சீருடை அளவானது விநியோகிக்கப்படாது காணப்படக்கூடும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான 04 வருட காலத்தினுள் அந்தத் துணி வகைகளில் 96,175 மீட்டர் துணி மட்டுமே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் , அதற்கமைய 2019 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வரும் இருப்புகளையும் உள்ளடக்கியதான 125,359 மீட்டர் அளவிலான இருப்பு மீளாய்வாண்டு இறுதியில் களஞ்சிய சாலையில் காணப்பட்டதுடன் அந்த துணிகளின் தரம் குறைவடைந்து இருந்தது என்பதும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 26. | Material Woollen Polyester dark blue 6 (A), Material woolen polyester reefer suit மற்றும் Material woollen mess Jacket துணி 18,145 மீட்டர்கள் ரூபா 24,949,100 பெறுமதிக்கு 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது டன் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியினுள் அந்த உருப்படிகளில் 12,378 மீட்டர் துணி மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்ததனால் மீளாய்வாண்டின் | 2023 | அரச நிதி அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதும் மற்றும் இருக்கும் துணிகளை உற்பத்தித் திறனான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும். | துணிக் களஞ்சியசாலையினுள் தற்போது Material Woolen Polyester Dark Blue 6(A) 2,997.30 மீட்டர் துணியும், Material Woolen Polyester Reefer Suit 1,750.85 மீட்டர் துணியும், மற்றும் Material Woolen Mess Jacket 1,019.00 மீட்டர் துணியுமான இருப்பு காணப்படுகின்றது. இந்தத் துணிகள் 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2014 திசெம்பர் 10 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் WAS/01/2024 கொண்ட ஆய்வு அறிக்கையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதன் பிரகாரம், இந்த மூன்று சீருடை வகைகளைப் | இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காகப் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கடற்படை உள்ளக ஆய்வு சபை ஒன்றினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இறுதியளவில் 5,767 மீட்டர் துணி களஞ்சியசாலையில் காணப்பட்டது. பாரியளவிலான துணி இருப்பினை கொள்வனவு செய்ததன் பின்னர் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தத் துணிகளில் சீருடை தைப்பதை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் 11 வருடங்களுக்கும் அதிகமான காலமாக துணியானது களஞ்சியசாலையில் குவிந்துள்ளதுடன் அவற்றின் தரமும் குறைவடைந்திருந்தது. | | | புதிதாகத் தைத்தல் நிறுத்தப்பட்டுள்ளது. | |
| 27. | மத்திய சீருடை களஞ்சியசாலைக்குப் புதிய பதவியணியினர் இணைக்கப்பட்டதன் பின்னர் 2023 ஒக்தோபர் 31 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த களஞ்சியசாலை இருப்புக் கணிப்பீட்டு அறிக்கைக்கு அமைய 269 இருப்பு உருப்படிகளில் 9401 அலகு இருப்புக்கள் மிகையைகவும், 227 இருப்பு உருப்படிகளில் 8,635 அலகு இருப்புக்கள் குறைவாகவும் காணப்பட்டதுடன் அது தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிரு | 2023 | விரைவில் விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | மத்திய சீருடை களஞ்சியசாலையில் இருப்பு உருப்படிகளில் மிகை மற்றும் குறைவு காணப்படுதல் தொடர்பில் முறையான விசாரணை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விசாரணைச் சபை அறிக்கையின் பரிந்துரைகள் கடற்படைத் தளபதியினால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | க்கவில்லை. | | | | |
| 28. | வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக ஈட்டப்பட்ட வருமானத்தில் திரண்ட நிதியத்திற்கு ரூபா 337.5 மில்லியனை செலவு வைப்பதற்கு இணங்கி இருந்தபோதிலும் 40 சதவீத அளவான ரூபா 135 மில்லியன் மீளாய்வாண்டு இறுதி வரையில் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | அரச கணக்குகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் கடற்படை பணிப்பாளர் நாயகத்தின் பயிற்சி அலகின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சி பாடநெறியில் பங்கு பற்றிய கடற்படை வீரர்களின் தேவைப்பாட்டுக்காக மீள்நிரப்பல் அடிப்படையில் கடற்படை தலைமை அதிபதியின் அங்கீகாரத்தின் பிரகாரம் ரூபா 147.4 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் தற்போது இந்த நிதிகள் மீள்நிரப்பல் செய்யப்பட்டிருக்கவில்லை | அந்த நிதியை திரும்ப செலுத்திய பின்னர் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 337.5 மில்லியனில் 40 சதவீதத்தை குறிக்கின்ற ரூபா 135 மில்லியனனை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 29. | கடற்படையின் மூலம் பேணப்பட்டு வரும் அனைத்து வருமானம் ஈட்டும் வணிக நடவடிக்கைகள் தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு காணப்படும் நிதிப் பிரமாணங்களுக்கு அமைய செயற்படுவது தொடர்பில் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு அதன் அறிக்கை பொதுக் கணக்குகள் குழுவிற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2023 | பொதுக் கணக்குகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | கடற்படை மாலிமா உபசரணை சேவைகள், மாலிமா என்டர்பிரைசஸ், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், திமிங்கிலம் பார்வையிடல் செயற்திட்டம், விவசாய செயற்திட்டம், ஓய்வு விடுதிகள் போன்ற வருமானம் ஈட்டும் வணிக நடவடிக்கைகள் தொடர்பில் 2024 மே 14 ஆம் திகதி நிதி அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. | பாதுகாப்பு அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. |
| 30. | அரச மருத்துவ விநியோகப் பிரிவிலிருந்து | 2023 | மொத்த செலவினை அறவிடுவதற் | அவ்வாறு அறிவுரை வழங்கப்பட்ட அந்த மருந்துகளில் ஒரு சில | அந்த உருப்படிகளுக்குப் பதிலாகப் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,860,619 மொத்த செலவிலான 49 வகையான மருந்துகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தொடர்ந்தும் பாவனையை நிறுத்துமாறு மருத்துவ விநியோகப் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரையின் காரணமாக மத்திய மருத்துவ களஞ்சியசாலையில் மீளாய்வாண்டு இறுதிவரையிலும் காணப்பட்டன. | | கு அல்லது அந்த மருந்துகளுக்கு மாற்று மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டும். | மருந்துகள் தற்போது காலாவதியாகி உள்ளன. | புதிய மருந்துகளைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது அதன் பெறுமதிக்குப் பதிலாக வேறு மருந்துகளை வழங்குமாறு அவ்வப்போது கடிதம் மூலம் மருத்துவ விநியோக பிரிவிற்குத் தெரிவித்த போதிலும் தீர்மானமான பதில் இதுவரையிலும் வழங்கப்படவில்லை. மருத்துவ விநியோகப் பிரிவின் மூலம் வழங்கப்படும் பதிலின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. |
| 31. | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டு காலப் பகுதியினுள் உத்தியோகத்தர்கள் 537 பேர் மற்றும் 9,011 பேர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட போது ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற எண்ணிக்கை முறையே 580 உத்தியோகத்தர்கள் மற்றும் 17,734 கடற்படை வீரர்கள் ஆவர். அதற்கு அமைய கடற்படையில் | 2023 | சேவையினைக் கைவிட்டுச் செல்லுவதை குறைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் ஆட்சேர்ப்பு செய்தலைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | பாரிய எண்ணிக்கையானோர் குறுகிய காலத்தினுள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றமை எதிர்கால சேவைக் காலத்திற்காக மீண்டும் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பமின்மையை தெரிவித்திருந்தமை, அங்கீகரிக்கப்பட்ட சேவைக் காலத்திற்கு முன்னரே வேறு தொழிலில் ஈடுபட்டமை / வெளிநாட்டுக்குச் சென்றமை போன்ற நடவடிக்கைகளுக்காக சேவையிலிருந்து நிரந்தரமாக விலகியமை அல்லது சேவையைக் கைவிட்டுச் சென்றமை, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் | ஆட்சேர்ப்பு செய்தலை அதிகரிப்பதற்காக கடற்படை இணைய தளத்தின் ஊடாக போன்றே சமூக வலைத் தளங்களின் ஊடாக மக்களைத் தெளிவுபடுத்தும் வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் பிரதேச அலுவலகங்கள், பாடசாலைகள் மூலம் கடற்படை சேவையில் உள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இருந்து வெளியேறிச் செல்லும் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட எண்ணிக்கை 52 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | | ஆண்டு வரையில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைக்கு முகம் கொடுத்தமையால் புதிய ஆட்சிசேர்ப்பு வீழ்ச்சி அடைந்தமை, 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் அரச நிறுவனங்களுக்கான புதிய ஆட்சேர்ப்பினை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை போன்ற காரணங்கள் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. | முக்கியத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தும் வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 32. | உடற்பயிற்சி, சட்டம், தகவல் தொழில்நுட்பம், இசை, பொறியியல், சிவில் பொறியியல், நாளாந்த கடற் சேவை, விசேட முறைமையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கடற்படை வீரர் போன்று பிரிவுகளில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஜனவரி வரையிலான காலப் பகுதியினுள் ஏற்பட்டிருந்த பொறியியல் தொழில் உத்தியோகத்தர்கள் 68 பேர், நிர்மாணம் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு உரிய கடற்படை வீரர்கள் 3,896 பேர் உள்ளிட்ட விசேட திறமைகளைக் கொண்ட 90 உத்தியோகத்தர்கள் மற்றும் 4,103 கடற்படை வீரர்களுக்கான வெற்றிடம் நீண்ட காலம் தொட்டு காணப்படுகின்றது. | 2023 | பதவியணிக்கான தேவைப்பாடுகள் காலத்திற்கு காலம் மற்றும் சரியாக இனங்காணப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் அல்லது அவசியமில்லை எனில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட கடற்படை வீரர்களின் எண்ணிக்கையினையே ஆட்சேர்ப்பு செய்வதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை ஒரே தடவையில் பாரிய எண்ணிக்கையானோரை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது வசதிகள் போதிய அளவில் இல்லாமை மற்றும் அதற்குக் கவனத்தில் கொள்ளத்தக்க காலம் தேவைப்படுகின்றமை போன்ற விடயங்கள் காணப்பட்டதன் காரணமாக ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்படும். | ஒவ்வொரு பிரிவிற்கும் இடையே சதவீதமாக அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் இந்த நிலைமையை தவிர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

**தலைப்பு- 224 இலங்கை வான்படை**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| 2021 | 116,727,748,169 | 95,095,343 | 116,929,972,600 | முனைப்பழியுள்ள |
| 2022 | 117,014,063,684 | 84,091,084 | 116,929,972,600 | முனைப்பழியுள்ள |
| 2023 | 123,705,252,774 | 84,413,240 | 123,620,839,534 | முனைப்பழியுள்ள |

| தொடர் இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுத்துள்ள தடுப்பு செயன்முறை | அறிக்கை திகதியன்று பரிந்துரையின் செயற்படுத்துவதன் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 231 (1) பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் முடிந்தவரை வேறு எந்த ஆவணத்தையும் பார்க்காமல் தவறுகளைக் கண்டறியக்கூடியதாக அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அந்த விதிமுறைகளிலிருந்து விலகி சிற்றுண்டி செலவினங்களிற்காக மீளாய்வாண்டின் போது 21 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 4,566,882 ஆன உபசரிப்பு செலவினத்திற்காக, செலவினத் தலைப்பு 224-1-2-1203 மூலம் | 2021 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். | இலங்கை விமானப்படைக்கு உபசரிப்பு வழங்கும் போது பாதுகாப்பு மற்றும் இரகசியம் போன்ற காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டது. 2021 ஆகஸ்ட் முதல் இந்த நிலைமையை சீர்செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | 2023 ஆண்டு வரை இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Officers' Mess இற்கு செலுத்தப்பட்டிருந்தது. | | | | |
| 02. | இலங்கை விமானப்படையின் 70 வது ஆண்டு விழாவிற்காக உரிய உள்ளூர்/வெளிநாட்டு அதிகாரிகளுக்கு ஹோட்டல் தங்குமிடத்தை வழங்குவதற்காக ரூபா 5,256,425 தொகை SLAF Command Welfare நிதியத்திலிருந்து செலுத்தி பின்னர் விமானப்படையின் செலவினத் தலைப்பிலிருந்து மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தது. இதற்காக டெண்டர் நடைமுறையை பின்பற்றப்பட்டு இருக்கவில்லை. | 2021 | பெறுகை வழிகாட்டக் கோவையில் நிச்சயித்து குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | இலங்கை விமானப்படையின் 70 வது ஆண்டு நிறைவு விழாவிற்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை உறுதிப்படுத்தல் சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றமை, கொவிட் தொற்று காரணமாக பெறுகை செயன்முறையுடன் இணங்கத் தவறியமை, கடன் வசதிகளுடன் கூடிய ஹோட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை, தங்குமிட வசதிகளை வழங்கும் போது அவர்களின் விருப்பு வெருப்புகளை கவனித்தமை போன்ற காரணங்களால் பெறுகை நடைமுறையைப் பின்பற்ற முடியவில்லை. | 2023 ஆண்டு வரை இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |
| 03. | கட்டுநாயக்க விமானப்படை தள முகாமிற்குரிய 37 உத்தியோகத்தர் விடுதிகள் 02 மாதங்கள் முதல் 11 வருடங்கள் வரை குடியிருக்க முடியாத நிலையில் பழுதடைந்திருந்தன. விடுதிகளை பழுதுபார்த்து குடியிருப்பதற்காக வழங்கப்படாததால் கட்டிட வாடகை வருமானமாக அரசாங்கத்திற்கு அறவிடக் கூடியதாகவிருந்த | 2021 | நிறுவனத்தினால் திருத்தம் செய்யப்பட வேண்டிய மற்றும் புனரமைக்கப்பட வேண்டிய சொத்துக்களை திறமையான முறையின் மூலம் திருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோகத்தர் விடுதிகளின் புனரமைப்பிற்கு தேவையான நிதியேற்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ள போதிலும், முன்மொழிவுக்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை. | 2023 ஆண்டு வரை இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 5,718,900 தொகை இழக்கப்பட்டிருந்தது | | | | |
| 04. | நிதிப்பிரமாணம் 128 (1) (ஆ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணத்தை முறையாக நிர்ணயம் செய்து முழுமையாக அறவீடு செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த விதிமுறைகளுக்கு முரணாக கட்டுநாயக்க விமானப்படை முகாம் மற்றும் கொழும்பு விமானப்படை முகாமில் உள்ள 15 அரசாங்க கட்டிடங்களை வெளித் தரப்பினருக்கு வழங்குவதில், இலங்கை விமானப்படையின் நிர்வாகப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் உடன்பட்ட பெறுமதியின் ஒரு பகுதி அரச வருமானமாகவும் மற்றைய பகுதி அரச சார்பற்ற நிதியத்திற்கும் (Non Public Fund) செலவு வைக்க நவடடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது. அதனால் 2021 சனவரி முதல் | 2021 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணத்தை முறையாக நிர்ணயம் செய்து முழுமையாக அறவீடு செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளி தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் சொத்துக்களை வழங்குவதன் மூலம் இலங்கை விமானப்படைக்கு கிடைத்த வருமானம் அரசாங்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 ஆண்டு வரை இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நவம்பர் வரையான காலத்தினுள் கூட்டுத் தொகை ரூபா 11,596,650 ஆன வருமானம் அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது. | | | | |
| 05. | 2011 நவம்பர் 30 ஆம் திகதிய விமானப்படை கட்டளை இலக்கம் 852 இன் 5 ஆம் பநிதியின் பிரகாரம் இலங்கை விமானப்படை தலைமையகம், பல்வேறு முகாம்கள் மற்றும் பிரிவுகளில் உள்ளக நிதியங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மற்றும் நிதியங்களால் செயற்படுத்தப்படும் இலாபம் ஈட்டும் கருத்திட்டங்களிற்காக இலங்கை விமானப்படையின் பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. நிதிப் பிரமாணம் 154 பிரகாரம் இந்த உள்ளக நிதியங்கள் நியதிச் சட்ட நிதியங்களாக நிறுவப்படாததால் அந்த நிதியங்களின் நடவடிக்கைகளை பொதுத் திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் | 2021 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரமும் மற்றும் 2016 யூன் 24 இல் நடைபெற்ற பொதுக் கணக்குக் குழுவின் கூட்டத்தின் பணிப்புரைகளின் பிரகாரமும் இலாபம் ஈட்டும் கருத்திட்டங்களின் நடவடிக்கைகளின் பாராளுமன்ற மேற்பார்வையை நெறிப்படுத்துவதற்கு பொறிமுறையொன்றை அமைப்பது அவசியமானதாகும் | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. | 2023 ஆண்டு வரை இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 06. | கட்டுநாயக்க விமானப்படை தள முகாமின் எரிபொருள் பிரிவின் 2021 திசெம்பர் 06 இல் உள்ளவாறு 04 எரிபொருள் இருப்பு உருப்படிகளின் பௌதீக மீதியை அத்திகதியில் உள்ளவாறு கணனி மென்பொருள் முறைமையில் (EPASS) உள்ள மீதியுடன் பெறுமதி ரூபா 29,451,200 ஆன எரிபொருள் 222,944 லீற்றரினால் அல்லது 48 சதவிகிதத்திலிருந்து 1137 சதவீதம் வரை கணனித் தொகுதியின் இருப்பு மீதி பாதகமாக மிகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டு இருந்தது. | 2021 | கணினி முறைமை மூலம் செயற்படும் போது அனைத்து தரவுகளும் கணனி முறைமையில் சேர்க்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட வேண்டும். | விமானங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கான எரிபொருள் இந்த கணனி மென்பொருள் முறைமையின் மூலம் நாளாந்தம் வழங்கப்படுவதில்லை என்பதால் இந்த வேறுபாடு உள்ளது. | பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |
| 07. | யுஊயு 6 படிவத்தின் படி நிதியல்லாத சொத்துக்கள் - 9152 போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் வரவு மற்றும் செலவு வைத்தல்கள் தொடர்பாக பெறுமதிகள் | 2022 | திணைக்கள ஏடுகளில் கணக்கீடு செய்தல் தொடர்புடைய வரவு மற்றும் செலவு கணக்கு பொழிப்புக்களின் மூலம் திறைசேரிக்கு அறிவிக்கப்படுவதனால் திணைக்களம் மற்றும் | ACA 6 படிவத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது சிகாஸ் ஊடாக உருவாக்கப்படும் நிதியல்லா சொத்துக்களின் அறிக்கையாகும். எனினும் திறைச்சேரியின் பரீட்சை மீதியில் வரவு மற்றும் செலவு மீதிகளில் உட்படுத்தப்படுவது | 2023 ஆண்டளவிலும் சரிசெய்யப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திறைசேரியின் பரீட்சை மீதியில் வரவு மற்றும் செலவு மீதிகளுடன் முறையே ரூபா 54,396,990 தொகை மற்றும் ரூபா 87,423,189 தொகையினால் இணங்கியிருக்கவில்லை. | | திறைசேரியின் பரீட்சை மீதி இடையே வித்தியாசம் காணப்பட முடியாதென. | ஆண்டிற்கான நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஜர்னல் பெறுமதிகள் மாத்திரமே. | |
| 08. | நி.பி. 109 இன் கீழ் 03 விமானங்களுக்கான நட்ட சேதங்களை பதிவழிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை விட ரூபா 85,255,268 தொகை குறைவாக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் ஒரு விமானத்தின் நட்ட சேதங்களின் கீழ் பதிவழிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை விட ரூபா 14,772,702 தொகை மிகையாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2022 | சேதங்கள் நட்டங்களை சரியாக இனங்கண்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் மற்றும் பதிவழித்தல் மேற்கொள்ள வேண்டும். | விசாரணை நீதி சபைகளினால் 4 சம்பவங்கள் தொடர்பாக நட்டங்களை வெவ்வேறாக கணிக்கப்பட்ட பின்னர் ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தேவையான அங்கீகாரத்தை பாதுகாப்பு அமைச்சின் பெற்றுக் கொண்டு, பொறுப்பான பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டது. | 2023 ஆண்டளவிலும் சரிசெய்யப்பட்டு இருக்கவில்லை. |
| 09. | இரத்மலான விமானப் படை தளமுகாமில் காணப்படும் விமானப்படை நூதன சாலையின் மூலம் 2022 ஆண்டில் உழைத்த ரூபா 21,303,078 இற்கான வருமானத்திலிருந்து அரசு இழந்திருந்த வருமானம் ரூபா 18,912,131 | 2022 | அரச சொத்துக்களை பயன்படுத்துவதன் மூலம் உழைக்கக் கூடிய வருமானம் முழுமையாக அரசாங்கத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | நிதியமைச்சில் இருந்து கிடைக்கும் அறிவுரைகளின் படி உள்ளக நிதியங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு விமானப் படையினால் திட்டமிடப்பட்டுள்ளது. | 2023 ஆண்டளவிலும் சரிசெய்யப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையாகும். | | | | |
| 10. | அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக 2022 ஏப்ரல் 26 திகதிய நிதியமைச்சின் திறைசேரிச் செயலாளரின் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 3/2022 இன் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அரச செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு அனைத்து அரச நிறுவனங்களும் கடுமையான நடவடிக்கை முறைகளை கடைபிடிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு கல்வி சுற்றுலா மற்றும் பயிற்சிகளுக்காக செலவுத் தலைப்பு 224-1-1-1102 கீழ் ரூபா 8,342,043 தொகைக்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் செலவுத் தலைப்பு 224-1-1-2401 இன் கீழ் வெளிநாட்டு பயிற்சிக்கான சுற்றுலாகளுக்காக மீளாய்வாண்டு மே மாதம் முதல் ஆகஸ்ட் வரை ரூபா 31,246,205 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2022 | அரச செலவினங்கள் கடுமையாக கட்டுப்படுத்துவதற்கான சுற்றறிக்கைக்கு இணங்க போலவே நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணத்தினால் காலத்திற்குரிய தேவைப்பாடுகளையும் கவனத்திற்கு எடுத்து செலவுகளை கட்டுப்படுத்த வேண்மென. | குறிப்பிட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் 2022 மே மாதம் முதல் 2022 திசெம்பர் வரையான காலப் பகுதியில் 224-1-1-0-1102 இன் கீழ் பாதுகாப்பு அமைச்சின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் வெளிநாட்டு பிரயாணங்களுக்காக ரூபா 8,342,042 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு வரை சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| 11. | நிதிப் பிரமாணம் 128 (2) (எ) பிரகாரம் அரச | 2022 | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அரச | தேவையான அறிவுரைகள் பொறுப்பு வாய்ந்த | 2023 ஆண்டளவிலும் சரிசெய்யப்பட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருமானங்கள் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தரினால், தேவையான இடங்களில் பொருளாதார முறைமையில் மற்றும் ஏனைய நிலமைகளில் மாற்றங்கள் தொடர்பாக கவனத்துடன் வரிக் கட்டணங்கள் அறவீட்டினை மீளாய்வு செய்து அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் அதற்கு புறம்பாக இரத்மலான தள முகாமின் 04 கட்டிடங்கள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக அறவிடப்பட்டிருந்த மொத்த வாடகை வருமானம் ரூபா 1,511,000 தொகையில் ரூபா 161,200 தொகையினை மாத்திரம் அரசிற்கு செலவு வைக்கப்பட்டு இருந்ததுடன், மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,349,200 தொகைக்கான கட்டிட வாடகை வருமானத்தை அரசு இழந்துள்ளது. | | வருமானம் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தரினால், தேவையான இடங்களில் பொருளாதார நிலைமையில் மற்றும் ஏனைய நிலைமை மாற்றங்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்து வரி கட்டணங்கள் அறவீடு செய்தல் மீளாய்வு செய்யப்பட்டு அவை திருத்தப்பட வேண்டும் மற்றும் அந்த வருமானம் அரச வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டும். | பிரிவுகளிற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நிறுவன நிதியத்தின் மூலம் முகாம் சேவைகள் நபர்களின் நலன்புரி நடவடிக்கைகளிற்கு ஈடுபடுத்தப்படும். | இருக்கவில்லை. |
| 12. | நிதிப் பிரமாணம் 128 (2) (ஊ) இன் படி அரசுக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பாக | 2022 | அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் | 27 வகையான 66 விமானங்கள் நீண்ட காலமாக செயற்படாமல் உள்ளன. | 2023 ஆண்டளவிலும் சரிசெய்யப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவான முறையான ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டுமென கணக்கீட்டு உத்தியோத்தரின் பொறுப்பான போதும் அதற்கு புறம்பாக ACA 6 படிவத்திற்கு பிரகாரம் இலங்கை விமானப் படைக்கு சொந்தமான கூட்டுப்பெறுமதி ரூபா 53,846,539,763 தொகைக்கான 110 விமானங்களில் 66 விமானங்கள் 1 வருடம் முதல் 23 வருடங்கள் வரையான நீண்டகாலம் முதல் செயற்பாட்டு அலுவல்களிலிருந்து நீங்கி செயற்படாமல் காணப்பட்டன. | | பாதுகாப்பிற்காக போதியளவு முறையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | | |
| 13 | அமைதிப் படைக்கு அனுப்புவதற்காக 2022 ஏப்ரல் 22 திகதி ரூபா 41.9 மில்லியன் தொகை செலுத்தி லேண்ட்ரோவர் டிபென்டர் ஜீப் வண்டி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2023 மே 19 திகதி வரை அந்த ஜீப் வண்டி அமைதிப் படைக்கு அனுப்பியிருக்கவில்லை. | 2022 | மிகையான செலவொன்று மேற்கொண்டு சபைக்கு பெற்றுக் கொண்ட சொத்துக்கள் விளைவற்றதாக்காமல் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டுமென. அரச நிதியை செலவிடும் போது அதற்குரிய நோக்கத்திற்கு பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வண்டியை கொள்வனவு செய்வதற்கு தேவையான அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது 2020 ஆண்டிலேயே ஆவதுடன் வாகனத்தை விண்ணப்பிக்கும் போது இரண்டு அமைதிப் படை செயற்பாடுகள் காணப்பட்ட போதிலும் தற்போது ஒரு செயற்பாடு மாத்திரமே காணப்படுகிறது. | 2023 ஆண்டு வரை விமானப் படை நிறைவேற்று வாகனங்கள் தொகுதியின் கீழ் உள்ளன.. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அதன் படி வாகனத்தை அமைதி படை செயற்பாடுகளிற்கு அனுப்பாது தற்போது விமானப் படை நிறைவேற்று வாகனத் தொகுதியின் கீழ் உள்ளது. | |
| 14. | இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விமான பயிற்சி வழங்கும் படையினை அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஒக்தோபர் 17 திகதி ரூபா 946.32 மில்லியன் தொகை செலுத்தி சீனாவில் இருந்து கொள்வனவு செய்திருந்த ஆரம்ப பயிற்சி வழங்கும் 06 விமானங்களில் ஒன்று 2020 திசெம்பர் 15 திகதி விபத்துக்குள்ளாகி முழுமையாக அழிவடைந்திருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய 05 விமானங்களின் இயந்திரம் பழுதுபார்த்தல் தாமதமடைந்த காரணத்தினால் 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயிற்சி அலுவல்களுக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதன் படி மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவும் சிக்கனமற்ற செலவொன்றாகியிருந்தது. | 2022 | இந்த விமானங்களின் என்ஜின்களின் பறக்கும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை முடிவடையும் போது அதற்காக பொருத்தப்படும் என்ஜின் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். | PT-6 விமானங்களின் இயந்திரங்கள் பறக்கும் ஆயுட்காலம் 600 மணித்தியாலங்கள் ஆகும். எனினும் தற்போது அனைத்து என்ஜின்களும் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு காணப்பட்டது. இந்த என்ஜின்களின் பராமரிப்பு (Overhaul) அலுவல்கள் தாமதமடைந்த காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது | 2023 ஆண்டிலும் இவ்வாறான சிக்கனமற்ற செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | மீளாய்வாண்டின் போது “கருணை இல்லம்” மற்றும் “எமக்காக நாம்” வீடமைப்புச் செயற்திட்டங்களுக்காக நலன்கள் செலுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சிலிருந்து ரூபா 36,572,648 தொகை அரச கணக்குகளுக்கு புறம்பான விமானப் படையின் மத்திய நலன்புரி மற்றும் மறுசீரமைப்பு நிதியத்திற்கு (இலங்கை வங்கி க.இ. 716731) செலவு வைக்கப்பட்டு பின்னர் அதற்குரிய நலன்பெறுவோருக்கு செலுத்தப்பட்டு இருந்தது. | 2022 | அரசாங்கப் பணம் அரச கணக்குகளுக்கு புறம்பாக ஏனைய அரச சார்பற்ற கணக்குகளின் மூலம் கொடுப்பனவு செய்வதற்காக பயன்படுத்தப்படக் கூடாது மற்றும் அச் செலவுகள் அரச கணக்குகளில் இருந்து விலகியிருந்த காரணத்தினால் கணக்காய்விற்கு ஆளாக்கப்படமாட்டாமை, அரச பணம் செலவிடப்படல் நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து தொகைகளையும் குறிப்பிட்ட நலன் பெறுவோரின் கணக்குகளுக்கு அனுப்பும் இலங்கை விமானப் படை (CW&RF) எனும் நலன்புரி நிதியத்தை பயன்படுத்தப்படுவதுடன் இந்த நிதியம் நலன்புரி செயற்பாடுகளிற்காக பயன்படுத்தும் கணக்காகும். | 2023 ஆண்டளவிலும் சரிசெய்யப்பட்டு இருக்கவில்லை. |
| 16. | 2021 மே 21 திகதி முதல் ஆகஸ்ட் 19 வரையான காலப் பகுதியில் “X Press Pearl” கப்பலின் விபத்தினை அடக்குவதற்காக பங்களிப்பு இலங்கை விமானப் படையின் வழங்கப்பட்டமையால் 2,875,136.55 அ.டொ.க்கான நட்டஈடொன்று மீள்நிரப்ப வேண்டியதாக காணப்பட்டதுடன் அதில் | 2022 | நட்டஈடு வழங்களுக்கு உரிய ஆபத்துக் கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்காக முறையான சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அரசு பாரிய தொகையொன்றினை இழப்பதினால் முறையான சான்றுகள் இலங்கை விமானப் படையினால் சமர்ப்பிக்கப்பட | விமானப் படையினால் கோரப்பட்டு இருந்த ஆபத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்காக குறிப்பிட்ட கப்பல் காப்புறுதி கம்பனி, அவர்களின் விருப்பமின்மையினை தெரிவித்திருந்தது. | 2023 ஆண்டளவிலும் சரிசெய்யப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடங்கியுள்ள 1,149,500 அமெ.டொ. இற்கான ஆபத்துக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்காக தேவையான மேலதிக சான்றுகள் விமானப் படையினால் சமர்ப்பிக்கப்படாமையால் குறிப்பிட்ட நட்டம் செலுத்தும் தரப்பினர் அதை செலுத்துவதனை இரத்து செய்ததால் அந்த முழுத் தொகையும் அரசிற்கு இழந்திருந்தது. | வேண்டும். | | | |
| 17. | மீளாய்வாண்டு 2022 இறுதியில் உள்ளவாறு விமானப் படையின் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 2557 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 464 வெற்றிடங்கள் காணப்பட்டது. அதிகாரம் அளிக்கப்படாத (ஏனைய பதவிகள்) உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 34,381 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 5324 வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உள்ளவாறான பதவியணிக்கு பொருத்தமான விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வெற்றிடங்கள் திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பை மட்டுப்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானித்த காரணத்தால் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2022 திசெம்பர் 31 திகதி அளவில் சிவில் பதவியணியில் (சிரேஷ்ட/ மூன்றாம்தர/ இரண்டாம்தர/ ஆரம்பதர) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 3057 இல் வெற்றிடங்கள் 769 தொகையாக காணப்பட்டது. | | | | |
| 18. | 2022 ஆம் ஆண்டினுள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கை விமானப்படைக்கு வழங்கப்பட்ட ரூபா 28,727,120 பெறுமதியான 77,000 லீற்றர் விமான எரிபொருள் செலவின விடயம் 224-1-1-1202-3 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடைமுறை ஆண்டில் எரிபொருள் செலவு ரூபா 28,727,120 தொகையினால் கூடுதலாக்க் காட்டப்பட்டுள்ளது. | 2023 | முன்னைய ஆண்டில் வெளிநாட்டு மானியத்தின் கீழ் கிடைத்த எரிபொருள் அந்த ஆண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கை விமானப்படையின் B-200 விமானத்தை ஓட்டுவதற்காக வழங்கிய எரிபொருள் 202,000 லீற்றர் அளவ வெளிநாட்டு மானியமாக 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டது. | 2022 ஆண்டில் கிடைத்த எரிபொருள் 2023 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| 19. | மீளாய்வாண்டிண் இறுதியில் உள்ளபடியான ஏ.சீ.ஏ.6- நிதியல்லாத சொத்துகள் கூற்றினூடாக 04 அவசர ஊர்தி, 14 தீயணைப்பு வண்டிகள், 03 | 2023 | ஆண்டிற்குரிய சரியான நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியினை கணக்கீடு செய்ய வேண்டும் | அந்த வாகனங்கள் நன்கொடை ஒன்றாவதுடன் அதன் மதிப்பீடு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது. | மதிப்பீடு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரேடார் வாகனங்கள் (Radar Vehicle), ஒரு ஜீப் வண்டி, ஒரு ட்ரக் வண்டி மற்றும் ஒரு GPU வாகனம் என்பவைகள் கணக்கீடுகள் செய்வது தவறி விடப்பட்டிருந்தது. | | | | |
| 20. | தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாய த்தின் 1 மற்றும் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திடமிரு ந்து சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் வேறு ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்த முடியாத போதும் அந்த நடைமுறைகளிற்கு புறம்பாக இலங்கை விமானப்படையின் நான்கு விமானப்படையினர் தனியார் நிறுவனமொன்றுக் கு விடுவிக்கப்பட்டு 2023 மார்ச் 01 முதல் செப்தெம்பர் 30 வரையான காலபத்திற்காக அரசாங்கத்தினால் ரூபா 2,360,680 சம்பளம் வழங்கப்பட்டிருந்த து. அவ்வாறே, கட்டுநாயக்காவில் உள்ள விமானப்படைத் தளத்தின் 31 விமானப்படையினர் 01 நாள் முதல் | 2023 | அலுவலர்களை பணிக்கமர்த்தும் போது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது இந்த நான்கு விமானப்படையினரும் விமானப்படை தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையிட்டுள்ளன ர். சேவை நபர்கள் விமானப்படைக்கு ஒப்படைக்கப்படும் விஷேட கடமைகள் மற்றும் சமூக நலன்புரி நடவடிக்கைகளுக்கா க இணைக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள து | நான்கு விமானப்படையின ரும் விமானப்படை தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையிட்டுள்ள னர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 03 மாதம் வரையான காலப்பகுதிக்காக தனது நிரந்தர கடமைகளிற்கு பறம்பாக ஏனைய வெளி நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். | | | | |
| 21. | நிதிப்பிரமாணம் 128 (2) (உ) இன் பிரகாரம், வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தினை தாமதமின்றி அறவிடுவது தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும், இலங்கை விமான படையின் மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 பொது நிறுவனங்களிடமிருந்து மற்றும் 02 தனியார் நிறுவனங்களிடமிருந்து விமான குத்தகை வாடகை மொத்தம் ரூபா 12,674,073 இனை 05 ஆண்டிற்கும் 20 ஆண்டிற்கும் இடையிலான காலதாமதத்துடன் நிலுவையாக காணப்பட்டன. | 2023 | வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானத்தினை தாமதமின்றி அறவிடுவது தொடர்பாக போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவை வருமானங்களினை பதிவழிப்பு செய்வதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | இந்த நிலுவை வருமானங்களினை பதிவழிப்பு செய்வதற்கு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரத்தினை சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| 22. | நிதிப்பிரமாணம் 128 (2) (ஐ) இன் | 2023 | நிதி பிரமாணங்களின் | i. குறித்த கட்டணங்களை | கட்டணங்களினை திருத்துவதற்கான |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம், அரசாங்கத்தின் வருமானம் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தேவையான இடங்களில் பொருளாதாரம் மற்றும் ஏனைய சூழ்நிலைகளின் மாற்றத்திற்கு ஏற்ப காலத்துக்கு காலம் வரிகள் மற்றும் அறவிடல் அல்லது வரி மற்றும் கட்டணம் மீளாய்வு செய்து திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதும் 2016 ஆம் ஆண்டிற்கு பின்னர் விமானம் தரையிரங்கும் கட்டணத்தினை திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் பிரகாரம் விமானம் தரையிரங்கும் கட்டணங்கள் அறவிடுவது ரூபா 120.75 ஆன குறைந்த தொகையொன்று ஆனதுடன் விமானம் தரையிரங்கும் 2009 தடவைகளிற்காக கிடைத்த வருமானம் ரூபா 236,221 ஆன மிகக் குறைந்த பெறுமானமானது. | | பிரகாரம் அரசாங்கத்தின் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தேவையான இடங்களில் பொருளாதாரம் மற்றும் ஏனைய சூழ்நிலைகளின் மாற்றத்தினை கவனத்தில் கொண்டு கட்டணங்கள் போன்றவற்றை அறவிடலை மீளாய்வு செய்து இவைகளினை திருத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | திருத்துவது போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் பயண அமைச்சு மூலம் மேற்கொள்ளப்படும்.<br>ii. கட்டணங்களினை திருத்துவதற்கு உரிய அங்கீகாரத்திற்காக பாதுகாப்பு அமைச்சு திறைசேரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரத்திற்காக பாதுகாப்பு அமைச்சு திறைசேரியிற்கு அனுப்பியுள்ளது.. |
| 23 | நிதிப்பிரமாணம் 128 (2) (ஐ) பிரகாரம் | 2023 | அரச கட்டிடங்களின் பயன்பாட்டிலிருந்த | அரசாங்கத்தினால் பெறப்பட்ட வாடகை வருமானம் அரச | இந் நிலைமைகள் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்காததனால் ஏகல விமானப்படை முகாமில் உள்ள 05 கட்டிடங்களை வாடகை வழங்குவது தொடர்பாக அரச வருமானத்திற்கான ஒரு உடன்படிக்கையும் நியதிச்சட்டமல்லாத நிதியத்திற்கு வருவானத்தை வரவு வைக்க மற்றைய உடன்படிக்கையுமாக ஒருகட்டிடத்திற்கு இரண்டு உடன்படிக்கைகளாக 10 உடன்படிக்கைகள் கைச்சாத்திட்டு வாடகை அறவிடப்படுவதனால் கூட்டுத்தொகை ரூபா 2,037,400 ஆன கட்டிட வாடகை அரசிற்கு இழக்கப்பட்டிருந்தது. | | ான உழைப்புக்கள் அரச வருமானத்திற்கு மாற்றப்பட வேண்டும். | கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டு சேவை நிறுவனங்கள் நிதியத்திற்காக பெறப்படும் குத்தகை வருமானத்தின் மூலம் நலன்புரி நடவடிக்கைகள், கட்டிட பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | ன. பரிந்துரை அமுல்படுத்தபபட்டு இருக்கவில்லை. |
| 24. | நிதிப் பிரமாணம் 2 (1) (இ) பிரகாரம் அரசாங்கத்துக்குரிய சகல வருமானங்கள் மற்றும் பெறுவனவுகள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு மாற்றமாக் மோட்டார் வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டிகளிற்கான பயிற்சி நடவடிக்கைகளுக் | 2023 | அரசாங்கத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களின் பயன்பாட்டில் இருந்தான உழைப்புக்களினை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியமை. | சேவை நிறுவனங்கள் நிதியத்தின் ஊடாக இந்த ஓடுபாதை பராமரிக்கப்படுகின்றது. இது தொடர்பாக பொருதத்தமானதொரு பொறிமுறையினை தயாரிப்பதற்கான கலந்துரையாடல் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது | பரிந்துரை அமுல்படுத்தபபட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காக கடுகுருந்த விமானப்படை முகாமின் ஓடுபாதையினை வழங்கியதன் மூலம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,383,125 தொகையினை விமானப் படையினால் உழைத்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காது நிதியதிச் சட்டமல்லா நிதியமொன்றான சேவை நிறுவனங்கள் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள து. | | | | |
| 25. | வெளிநாடட்டு கற்கைகள், பயிற்சிகள், கலந்துரையாடல் கள், மாநாடுகளிற்காக வெளிநாடு செல்வது தொடர்பாக நிதி அமைச்சின் MF/06/23/50/2023 ஆம் இலக்க 2023 மார்ச் 20 ஆம் திகதிய புதிய சுற்றறிக்கையின் 02 (1) ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நாளைக்கு ஐ.அ.டொ. 40 என்ற அமையக் கொடுப்பனவாக இருந்ததை அதிகபட்சம் 15 நாட்களுக்கு ஐ.அ.டொ. 25 ஆக குறைக்கப்பட்டது. | 2023 | சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை . | விமானப்படையின் உத்தியோகத்தர்களு க்கு அந்த அமையக் கொடுப்பனவு செலுத்தியமை தொடர்பாக பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. பரிந்துரை அமுல்படுத்தபபட் டு இருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | இருப்பினும் அந்த ஏற்பாடுகளிற்கு மாற்றமாக 2023 மார்ச் 20 இற்கு பின்னரும் வெளிநாடடு கற்கைகள் பயிற்சிகள் கலந்துரையாடல்கள், மாநாடுகளிற்கு பங்குபற்றிய 10 உத்தியோகத்தர்களுக்குக் ஒரு நாளைக்கு ஐ.அ.டொ. 40 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளிநாட்டு பிரயாண செலவிற்காக ஐ.அ.டொ. 6045 அதாவது ரூபா 2,006,109 தொகை சுற்றறிக்கைக்கு மாற்றமாக கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | | | |
| 26. | மீளாய்வாண்டில் 2023 இலங்கை விமானப்படைக்கு சீருடைகள் கொள்வனவு செய்வதனை போன்றே வாகன திருத்த வேலைகளிற்கு அதிக தேவைப்பாடு காணப்பட்ட போதிலும் உரிய வருடாந்த ஏற்பாடு 2023 நவம்பர் 30 வரையிலும் செலவிடப்படாது குறைவாக பயன்படுத்தப்பட்ட காரணத்தால் ரூபா 3,064,000,000 | வருடாந்த ஏற்பாடு குறை பயன்பாட்டுடன் இருக்கக் கூடாது. | வருடாந்த விலைமனுக்கோரல் காலப்பகுதியினை நீடிப்பதற்கு பரிந்துரைக்காமை, பண்டங்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள், பண்டங்களின் உயர்ந்த விலைகள், மீண்டெழும் செலவினத்தின் 06 சதவீத நிறுத்திவைப்பு, சேவையில் உள்ள செயற்படு ஊழியர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் | பல்வேறு காரணங்களினால் ஏற்பாடுகள் செலவிடப்படாது காணப்பட்டன. பரிந்துரை அமுல்படுத்தபபட்டு இருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையான மீண்டெழும் ஏற்பாடு மற்றும் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரண செலவின விடயம் ஊடாக ரூபா 5,491,127,000 தொகையான மூலதன ஏற்பாடு என்பன நிறுத்தி வைக்கப்பட்டு இலங்கை இராணுவத்தின் மீண்டெழும் செலவின விடயத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. | | | தயாரிக்கப்படுவதுடன் ஏனைய பல்வேறு காரணங்களினால் ஏற்பாடுகள் செலவிடப்படாது காணப்பட்டன. | |
| 27. | நிதிப் பிரமாணம் 94 (1) இன் பிரகாரம் செலவின விடணம் ஒன்றிற்காக வருமாந்தம் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் கூட்டுத் தொகை எச் சந்தர்ப்பத்திலும் நிதியாண்டிற்கான ஏற்பாடுகளை விட விஞ்சப்படக்கூடாத போதும் அற்த ஏற்பாடுகளிற்கு மாற்றமாக 2023 ஆண்டில் செலவு விடய இலக்கம் 224-1-1-1401 – போக்கு வரத்தின் கீழ் ரூபா 1,765,607 தொகையான வருடாந்த ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களிற்கு உட்பட்டு இருந்தது. | 2023 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வருடாந்தம் ஏற்படுத்தப்படும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் கூட்டுத் தொகை நிதியாண்டிற்கான ஏற்பாடுகளை விஞ்சக்கூடாது. | 1401 போக்குவரத்தின் கீழ் தேறிய ஏற்பாடு ரூபா 570,000,000 தொகையாக இருந்தது. ACA-2 (iii) படிவத்தின் மொத்த செலவினமாக ரூபா 557,850,607 தொகையாகும். அதன் பிரகாரம் ஏற்பாடுகளினை விஞ்சி எவ்வித பொறுப்புக்களும் ஏற்படுத்தப்படவில்லை. | ஏற்பாடுகளை விஞ்சி பொறுப்குக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புரிந்துரைஅமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |
| 28. | மீளாய்வாண்டிற்கு | 2023 | பொறுப்புக்கள் | ஏற்றுக் கொள்ள | பரிந்துரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ள் செலுத்தப்பட வேண்டிய சகல பொறுப்புக்களும் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் பின்னிணைப்பு III – கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், 28 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 20,121,111 பெறுமதியுடைய பொறுப்புக்கள் மீளாய்வாண்டில் அதற்கு உள்ளடக்கப்படவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத 10 சந்தர்ப்பங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 12,619,050 ஆன பொறுப்புக்களிற்காக 2023 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | | சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். | முடியுமான பதில் வழங்கப்படவில்லை. | அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை |
| 29. | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் குறிப்பிடும்வாறு கடன்களினை அறவிடுவதற்கு முன்பாக ஓய்வு பெற்ற/ உயிரிழந்த/ சேவைகள் முடிவுறுத்தப்பட்ட | 2023 | நிலுவையாக உள்ள கடன் மீதிகளினை அறவீடு செய்வது தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை கடன் மீதி 2024.04.30 அளவில் ரூபா 160,476.52 வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. தொகையுடைய பதவிகளை வெறிதாக்கிய | பரிந்துரைகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களின் இடர் கடன் மீதிகளினை அறவிடமுடியாத சந்தர்ப்பத்தில் பிணையாளிகளிடமிருந்து அல்லது உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அதனை மேற்கொள்ளத் தவறியமையினால் உயிரிழந்த/ ஓய்வு பெற்ற/பணித்தடை செய்யப்பட்ட /சேவை வெறிதாக்க்கட்ட உத்தியோகத்தரிடம் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடன் மீதி ரூபா 10,759,840 ஆக காணப்பட்டதுடன், 05 வருடங்களுக்கு மேலாக உள்ள நிலுவை கடன் மீதி ரூபா 7,734,231 ஆனது. | | | உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிலுவை கடன் மீதியிலிருந்து ரூபா 455,126.69 தொகையினை பதிவழிப்பு செய்வதற்கு பரிந்துரைகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | |
| 30. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முற்பண தனிநபர் வருமானவரி (APIT) கணிப்பிடப்பட வேண்டிய போதும் அவ்வாறு மேற்கொள்ளத் தவறியமையினால் 2023 ஆகஸ்ட், செப்தெம்பர் | 2023 | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமான அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் முற்பண தனிநபர் வருமான வரி (APIT) கணிப்பிடப்பட வேண்டும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட SEC/2023/E/01 ஆம் வழிகாட்டியின் 03 ஆம் பந்தியில் 04 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய சகல சேவைகளின் ஊழியர்களுக்கு பொதுவாக விசேட கவனம் செலுத்தப்படாத அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள | பொதுவாக விசேட கவனம் செலுத்தப்படாத அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளை 10 வருமான மூலங்களின் கீழ் கருத்திற்கொள்ளாது முற்பண தனிநபர் வருமான வரியினை (APIT) கணிப்பிடப்பட்டுள்ளது. பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் ஒக்தோபர் ஆகிய மூன்று மாதங்களிற்காக 100 உத்தியோகத்தர்களின் மாதிரி எடுத்தலிலிருந்து முற்பண தனிநபர் வருமான வரியாக(APIT) ரூபா 2,875,270 தொகையினை அறவிடுவதற்கு பதிலாக ரூபா 482,770 தொகை மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது. ஆதன் பிரகாரம் முற்பண தனிநபர் வருமான வரியாக ரூபா 2,392,500 தொகையினை அரசாங்கம் இழக்க நேரிட்டது. | | | கொடுப்பனவுகளை 10 வருமான மூலங்களின் கீழ் கருத்திற்கொள்ளாது முற்பண தனிநபர் வருமான வரியினை (APIT) கணிப்பிடப்பட்டுள்ளது. | |
| 31. | இலங்கை விமானப்படையினுடைய கட்டுநாயக்க தள முகாமின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மெத்தைகள் செயற்திட்டத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட 1380 மெத்தைகளினை 2021 முதல் 2024 பெப்ரவரி 09 திகதி வரை காலத்தினுள் ரூபா 6,915,000 யிற்கு தர சான்றிதழ் போன்றே திட்டவட்டமான உத்தரவாத | 2023 | முறையானதொரு தர சான்றிதழ் மற்றும் உத்தரவாத காலப்பகுதியுடன் கொள்வனவுகளினை மேற்கொள்வதற்கு பெறுகை நடைமுறை செயற்பாடு பின்பற்றப்பட வேண்டும். | தரத்தினை சோதனை செய்வதற்காக தனியானதொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினால் பண்டங்களை பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் பண்டங்களினை இருப்புக்குள் எடுக்கப்படும். | தனியானதொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினால் பண்டங்களை பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் பண்டங்களினை இருப்புக்குள் எடுக்கப்படும். பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காலமும் இல்லாமல் விவசாய நிதிய கருத்திட்டத்தினால் (AGRO FUND) இலங்கை விமானப்படைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | | | |
| 32. | இலங்கை விமானப்படை தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 9,675,750 (வெட்யின்றி) உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தொகையில் 03 பாதுகாப்பாளர் வாகனங்களினை திருத்துவதற்காக 2021 பெப்ரவரி 06 இல் தனியார் நிறுவனமொன்றுடன் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்த போதும் 673 நாட்கள் தாமதித்த பிற்பாடும் திருத்தம் மேற்கொள்ளப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டன. குறித்த பெறுகையை விமானப்படையினால் இரத்துச்சசெய்யப்பட்டுள்ளது. பெறுகையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டினை பரிசோதனை செய்யும் போது அரசாங்க பெறுகை | 2023 | பெறுகை வழிகாட்டிக கோவையின் வழியாட்டிகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை கோட்பாடுகளுக்கு இணங்க தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு செயற்பட வேண்டும். | கணக்காய்வு பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படி வாகனங்கிளை திருத்தும் போது வெளி நிறுவனங்களிற்காக வசதிக் கணக்காய்வு (facility audit) மேற்கொள்ளப்படுவதுடன் இங்கு மேற்கொள்ளப்பட்ட தர சோதனையின் Tech Net Auto World (Pvt) Ltd நிறுவனமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. | பரிந்துரை அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழிகாட்டிகளின் 2.6.1 (அ) IV ஆம் வழிகாட்டியின் பிரகாரம், பெறுகை வழிகாட்டிகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை கோட்பாடுகள் பின்பற்றப்படும் என்பதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு தனிப்பட்ட முறையில் பொறுப்பாக இருக்க வேண்டிய போதும், அவற்றில் மாறுபட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பெறுகை வழங்கப்பட்டுள்ளது. அதனால், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு அவர்களுடைய பொறுப்பிலிருந்து விலகலடைந்ததன் காரணமாக தொடர்புடைய பெறுகை வெற்றியளிக்காமல் போனது. | | | | |
| 33. | இலங்கை விமானப்படையின் விமானச் சிறகத்தலைவர் (Wing Commander) மேல் உத்தியோகத்தர்கள் அரசாங்க நிறுவனங்களின் ஏனைய பதவிகளுக்காக விடுவிக்கப்படும் | 2023 | உரிய வருடாந்த ஏற்பாடுகளின் மூலம் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக செலவு செய்ய வேண்டியதுடன் ஏனைய நிறுவனங்களிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிற்க | உரிய நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்பாடும் நிறுவனங்களாகும். அதனால் அந்த உத்தியோகத்தர்களிற்கான பதவி நிலை வாகனங்கள் உட்பட்ட ஏனைய சலுகைகளும் அவர்களுக்காக | உரிய நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்பாடும் நிறுவனங்களாகையால் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிந்துரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போது அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பதவி நிலை வாகனங்களையும் குறித்த நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. அத்தகைய 29 உத்தியோகத்தர்களுக்கு 2022 சனவரி 01 முதல் 2022 செப்தெம்பர் 30 திகதிக்கு 76,175 லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அந்தவாகனங்களுக்காக குத்தகை வாடகையாக ரூபா 10,800,000 தொகையும் செலுத்தப்பட்டுள்ளது. அதனால், விமானப்படைக்கு வெளியாக ஏனைய நிறுவனங்களில் கடமைகளிற்காக விமானப்படை செலவுத்தலைப்பின் கீழ் ரூபா 10,800,000 தொகை செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | ாக செலவு செய்யக்கூடாது. | வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை |
| 34. | ரூபா 50,000 தொகைப் படி மாதாந்த குத்தகை அடிப்படையில் வாடகைக்கு பெறப்பட்ட வாகனங்களிற்காக பணம் செலுத்தும் போது வவுசர்களுடன் இணைத்துள்ள பட்டியல்களில் குறிப்பிடப்படும் குத்தகை | 2023 | கொடுப்பனவு கைச்சாத்து பத்திரங்களிலும், துணை ஆவணங்களிலும் சரியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய தகவல்களினை உள்ளடக்கி பட்டியல்களை சமர்பிக்குமாறு வழங்குனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | முறையான பட்டியல்களை சமர்பிக்குமாறு வழங்குனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாடகைக் கொடுப்பனத்திற்குரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட வாகனத்தின் அத்தியாவசியமான சான்றொன்டான விமானப்படை வாகன இலக்கம் அல்லது சிவில் வாகன இலக்கம் போன்ற இரண்டும் குறிப்பிடப்படாமல் 47 வாகனங்களிற்காக கூட்டுப் பெறுமதி ரூபா 21,150,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | | | |
| 04 | அரசாங்க இலத்திரனியல் பெறுகை முறைமையை அறிமுகப்படுத்துதல் தொடர்பான 2018 ஒக்தோபர் 23 ஆம் திகதிய இலக்கம் 05/2018 மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய இலக்கம் 08/2019 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுகை நிறுவனம், விலை ஒப்பீட்டு முறையில் பெறுகைகளைச் செய்யும் போது இலத்திரணியல் பெறுகை முறைமை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது 08 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 3,330,175 ஆன பொருள் பெறுகைகள் இலத்திரணியல் பெறுகை முறைமையைப் பயன்படுத்தாமல் ஒப்பீட்டு விலை முறையில் வழங்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக் கையின் பிரகாரம் நடவடிக் கை எடுத்தல் வேண்டு ம். | இலத்திரனிய ல் பெறுகை முறைமை பயன்படுத்தி பொருள் பெறுகைகள் மேற்கொள்ளு தல் தொடர்பான நடவடிக்கைக ள் சம்பந்தமாக ஆய்வு மேற்கொள்ள ப்படுகின்றது. | 2024 ஆம் ஆண்டின் போது இலத்திரனியல் பெறுமை ஊடாக பெறுகை நடவடிக்கை கள் மேற்கொள்ளப்ப ட்டிருக்கவில்லை ல. |
| 05 | வருமானம் சேகரித்தல் தொடர்பாக 2015 யூலை 20 ஆம் திகதிய அரச நிதி கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் 4(ஆ) பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 128(2)(உ) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிக் காணப்படுகின்ற | நிலுவை வருமா னத்தை சேகரித் தல் தொடர்ப | 2015 யூலை 20 ஆந் திகதிய அரசிறைக் கொள்கை சுற்றிக்கை | 2023.12.31 ஆந் திகதி வரையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்த ால் சேகரிக்கப் |

| | | | |
|---|---|---|---|
| நிலுவை வருமானம் தாமதம் இன்றி சேகரித்தல் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் வழங்க வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் வருமானம் சேகரிக்கின்ற பிரதான நிறுவனத்தினால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சேகரிக்க வேண்டிய மொத்த நிலுவை வருமானம் (வரி வருமானம் மற்றும் வரி அல்லா) ரூபா 714,989,620,126 ஆக காணப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் ரூபா 128,986,232,809 குறைவு ஒன்றைக் காண்பித்த போதும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களத்தில் இருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 117,512,309,997 அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது. | ஆக சுற்றறிக்கை ஆலோசனை மற்றும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலக்கம் 1/2015 இன் மூலம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென காண்பிக்கப்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பாக உரிய வருமானத் தலைப்பிற்கு பொறுப்பிற்காக நேரடியாக கடப்பாடு இருப்பவர்கள் ஆன வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் கள் சகலரும் அமைச்சு / திணைக்களங்களில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்களும் இந்த நிலுவை வருமானத்தை தொடர்ச்சியாக சேகரிக்கின்றமை தொடர்பாக நேரடியாக | படவேண்டியிருந்த ரூபா 635.7 பில்லியன் ஆன நிலுவை வருமான வரி 2024.06.30 ஆந் திகதி வரையில் ரூபா 582.9 பில்லியன் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2023.12.31 இல் உள்ளவாறு சுங்கத் திணைக்களத்தால் சேகரிக்க வேண்டியி ருந்த ரூபா 58.6 பில்லியனாக காணப்பட்ட நிலுவை வரி வருமானம் 2024.06.30 ஆந் திகதி வரையில் ரூபா 65.4 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே மது வரி திணைக்களத்தின் மூலம் அறவிட வேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா 8.3 பில்லியனாக காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பொறுப்பில் உள்ளனர். | |
| 06 | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனரின் 11 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதில் 04 பதவிகள் சிரேஸ்ட நிலையின் பதவிகள் ஆகும். | | முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையைத் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் பதவி வெற்றிடங்களாக குறிப்பிட்டு அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரை 11 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. |

தலைப்பு - 239 - வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 200,933,723 | 200,933,723 | 200,933,723 | முனைப்பழியற்ற |
| **2022** | 200,533,758 | 200,533,758 | 200,533,758 | முனைப்பழியற்ற |
| **2023** | 191,487,734 | 191,487,734 | 191,487,734 | முனைப்பழியற்ற |

| தொடர் இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தற்போது பயன்படுத்தப்படுகின்ற CS-DRMS கடன் முகாமைத்துவ முறைமை, கடன் சேவையிடல் எதிர்வுகூறல்களை உள்ளடக்கிய பணிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட முறைமை ஆகும். அதன் பிரகாரம் கடன் முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம், கடன் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யும் வசதிகளுடன் மற்றும் அல்லது CS-DRMS முறைமையில் ITMIS முறைமைக்கு தேவையான தரவுகளை மாற்றக்கூடிய வசதிகளுடன் கடன் முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு திணைக்களம் இதுவரை தவறியிருந்தது. | 2023/2022/ 2021 | நாளது வரையாக்கப் பட்ட கணக்கீட்டு மற்றும் காசுப்பாய்ச்சல் வசதிகளுடன் முறைமையொன்றை பேணிச் செல்லல் வேண்டும். | புதிய கடன் முகாமைத்துவ முறைமையொன்றைக் கொள்வனவு செய்வதற்காக இந்த திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட பெறுகைகள் எதிர்காலத்தில் புதிய அரச கடன் முகாமைத்துவ அலுவலகத்திற்காக உரித்தாக இருந்ததுடன் அந்த பெறுகை நடவடிக்கைகள் நிதி அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றது. | இதுவரையில் தவறியிருந்தது. |
| 02 | வெளிநாட்டு அரச கடன் அறிக்கையில் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயன்படுத்துகின்ற CS-DRMS கடன் முகாமைத்துவ கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்ட தரவுகள் இணங்காமை | | | | |
| (i) | CSDRMS 854-1 அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் நிதி கூற்றுக்களை ஒப்பீடு செய்யும் போது இவ்வாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தப் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் ஆகும். மேலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் விளக்கமளித்தல் குறிப்பின் கீழ் குறிப்பு இலக்கம் 24(II) இன் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டு கடன்களின் மொத்தப் பெறுமதி ரூபா 17,103.2 மில்லியன் ஆக காண்பிக்கப்படடிருந்தது. இவ்வாறே மீளாய்வாண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் தேறாதிருந்த போதும் கணக்கீடு செய்யப்படாத கடன் பெறுமதி காணப்பட்டதன் காரணமாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் வெளிநாட்டு கடன் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 | அரசாங்கக் கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைகள் கணக்கீடு செய்தலை முறையாக மேற்கொள்ளல் வேண்டும். | அரச கடன் பெறுவனவு அறிக்கையிடல், விநியோகித்தல் மற்றும் வெளியிடுதல் புதிய அரச கணக்கீட்டு முகாமைத்துவ அலுவலகம் மூலம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டு ள்ளது. | 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த நிலைமை அவதானிக்கப்ப ட்டது. |
| (ii) | கடன் இலக்கம் | 2023 | -மேற்படி- | தாமதமடைந்த | 2023 ஆம் |

2018003 இற்குரிய CSDRMS 854-1 அறிக்கையில் 2023 ஆம் ஆண்டிற்குரிய எந்தவொரு மாற்றப்படாதவைகள் காணப்படாத போதிலும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 24(II) மற்றும் பாதீட்டு செயற்படு நிலைமை மற்றும் நிலுவை நிதியீட்டத்தின் கீழ் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் EUR 727,053 தேறியிருந்த தாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் சமர்ப்பித்த தகவல்களின் படி இந்த கடன் தொகைக்குரிய 2022 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் தேறாதிருந்த 2023 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுமதி EUR 335,930 மாத்திரமாகும். அதன் பிரகாரம் இந்த கடன் தொகைக்குரிய 2023 ஆம் ஆண்டில் தேறியிருந்ததுடன் EUR 391,123 வேறுபாடு காணப்பட்டது.

தேறாதாக குறிப்பிட்ட பெறுவனவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக கடன் உரிமையாளர்களுக்கு அறிவிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் கடன் மீதி பரிசோதனை வருடாந்தம் மேற்கொள்ளப் படுகின்றது. மானியமாக கிடைத்த தேறாத பதிவுகளின் பெறுமதி மற்றும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கிடைத்த மீண்டும் செலுத்தும் குறிப்பின் பிரகாரம் கிடைக்கப் பெற்ற சகல பெறுமதிகளும் தாமதமின்றி முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது செலுத்தப்படாதுள்ள கடன் தொடர்பாக அமுல்படுத்தப்படுகின்ற கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடலின் போது மேலும் தரவுகளை குறிப்பிட்டு சரியானதா என உரிய ஒவ்வொரு தரப்பினருக்கும் கடன் கொடுத்தோருடன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது இந்த இணக்கப்பாட்டை மேவுகை செய்வதாயின்

ஆண்டு வரையில் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உடனடியாக நாளதுவரை யாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 23 கடன் உடன்படிக்கைகளுக்குரிய CSDRMS 854-1 அறிக்கையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு உரிய மீதிகளுக்கிடையே கூட்டு மொத்தமாக ரூபா 30,401 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(11) பாதீட்டு செயற்படு நிலை மற்றும் பற்றாக்குறை நிதியீட்டத்தின் கீழ் குறிப்பு இலக்கம் 11 இல் மீளாய்வாண்டின் போது உள்ளபடியாக கடன் தேறல்களில் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2023 | அரசாங்க கடன் பெறுவனவு, கடன் சேவைகள் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் விநியோகித்தல் தாமதம் அடைவதை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | -மேற்படி- | மேற்படி |
| (iv) | 04 கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுமொத்தமாக ரூபா 821,115,454 மறைக்கடன் விநியோகித்தல் மீளாய்வாண்டில் அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் CS-DRMS 854-1 அறிக்கையில் அவதானிக்கப்பட்டது. | 2023/2022 | அரச கடன் பெறுவனவு, கடன் சேவையிடல் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கணக்கு வைக்கப்படுகின்ற நிறுவனத்தால் செயற்திட்ட பணிப்பாளர் அல்லது உரிய வரிசை அமைச்சிலிருந்து அல்லது செலவின அலகிலிருந்து விசாரணை செய்து தேறாத மீளக் கையளித்தல் | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தொடர்பாக குறித்துரைத்த (காரணம்) தை வெளிப்படுத்தி உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக எதிர்காலத்தில் குறிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (v) | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24(I) சமரிப்பற்றுள்ள அந்நிய செலவாணி பணம் வங்கி அலகு செயற்திட்ட கடன் மீதிகளுக்கு (Foreign Currency Banking Unit Loan (Project) Balances) உரிய CS-DRMS 854-1 அறிக்கையுடன் பரீட்சித்த போது 2017045 கடன் உடன்படிக்கைக்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு CS-DRMS 854-1 அறிக்கையில், 2023 சனவரி 01 இல் உள்ளவாறு அந்த அறிக்கையில் USD 227,823 தொகை அதாவது ரூபா 82,724,927 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் கடன் மீள செலுத்தப்பட்டிருந்த போதும் USD 227,823 வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த உள்நாட்டு பண பெறுமதியில் வேறு எந்த வேறுபாடும் அவதானிக்கப்படவில்லை. மேலும் அரசாங்கத்தின் | 2023 | அரச கடன் பெறுவனவு, கடன் சேவையிடல் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தவறுகள் தரவு முறைமையில் சரி செய்யப்பட்டுள்ளதுடன் குறிப்பிடப்பட்ட தரவுகளை மீண்டும் பரிசோதனை செய்யும் உள்ளகத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் போது எழுந்திருந்த தொழில்நுட்ப வழுக்களை நீக்கிக் கொள்வதற்காக நிலை பேறான தொழில்நுட்ப உதவியொன்றுள்ள சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் முகாமைத்துவ முறையினைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் வெளிநாட் டுக் கடன் தரவு | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களின் படி மீள செலுத்தப்பட்ட USD 332,704 பெறுமதியான தொகையை உள்நாட்டு பணமாக மாற்றும் போது USD 1 ரூபா 524.6050 ஆக அசாதாரண அந்நிய செலவாணி விகிதம் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | தொடர்பான நடவடிக்கைகள் அரச கடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | |
| (vi) | பங்களிப்பாளர்களினால் அனுப்பப்பட்ட கடன் மீதியை உறுதிப்படுத்துதல், அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களுடன் கணனி கடன் முகாமைத்துவ முறைமையில் 854-1 அறிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 13 கடன் வகைகளுக்கு உரிய மீதி ரூபா 4,775 மில்லியன் அதிகரித்தும், 14 கடன் வகைகளுக்குரிய ரூபா 5,126 மில்லியன் குறைத்தும் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 | அரச கடன் பெறுவனவு, கடன் சேவையிடல் கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | தாமதமாகி அனுப்பல் குறிப்பு பெறுவனவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக கடன் உரிமையாளர்களுக்கு அறிவிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் கடன் மீதி பரிசோதனை வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. மானியமாக கிடைத்த தேறாத பதிவுகளின் பெறுமதி மற்றும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து கிடைத்த மீண்டும் செலுத்தும் குறிப்பின் பிரகாரம் கிடைக்கப் பெற்ற சகல பெறுமதிகளும் தாமதமின்றி முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது செலுத்தப்படாதுள்ள கடன் தொடர்பாக அமுல்படுத்தப்படுகின்ற கடன் மீள் கட்டமைப்பு கலந்துரையாடலின் போது மேலும் | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தரவுகளை குறிப்பிட்டு சரியானதா என உரிய ஒவ்வொரு தரப்பினருக்கும் கடன் கொடுத்தோருடன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது இந்த இணக்கப்பாட்டை மேவுகை செய்வதாயின் உடனடியாக நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (vii) | விநியோகித்தல் பிற்போடப்பட்ட காலப்பகுதியை கருத்திற்கொள்ளும் போது 2023 ஆம் ஆண்டுக்கு உரியதாக பிற்போடப்பட்ட வெளிநாட்டுக் கடன் 2023 மே 07 ஆந் திகதி அச்சிடப்பட்ட கணனி மயப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ முறைமையில் 814-1 அறிக்கையில் அந்த தீர்வையாதல் உள்ளடக்கப்பட்ட போதிலும், 2024 பெப்ரவரி 17 ஆந் திகதி அச்சிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதன் பிரகாரம் ரூபா 1,290 மில்லியனான வெளிநாட்டுக் கடன் நிலுவை அரசின் நிதிக்கூற்றுக்களிலும் விநியோகிக்கப்பட்ட கடனாக கணக்கீடு செய்தல் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| 03 | 1994 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் | 2023/2022/ | சுற்றறிக்கை ஆலோசனையி | எதிர்காலத்தில் மொத்த மானியம் | இதுவரை இந்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 30/94 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், வெளிநாட்டு மானியம் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும், மாதிரி பரிசோதணையின் மீது பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம், 2023 ஆண்டினுள் அவ்வாறு பொது திறைசேரியை அறிவூட்டாது 11 நிறுவனங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 22,210 மில்லியன் ஆன வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதிக்கு ஏற்பாடு பெற்றுக் கொண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 | ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொடர்பாக அமுல்படுத்த வேண்டிய முறை தொடர்பாக 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் சட்ட ரீதியான ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள து. அதன் பிரகாரம் உரிய கட்டளைகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இந்த திணைக்களத்திலி ருந் தும் சுற்றறிக்கை மூலம் மொத்த மானியங்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரு க்கு அறிவிக்கப்பட்டுள் ளது. | நிலைமை அவதானிக்கப்ப ட்டது. |
| 04 | 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு மானியங்களை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியினால் ஒவ்வொரு வெளிநாட்டு மானிய நிறுவனங்கள் 13 நிறுவனங்களுடன் கூட்டுப் பெறுமதி ஜப்பான் யென் 984,000, யூரோ 134,810,000, அ.டொலர் 58,417,841, கொரியன் வொன் | 2023 | இலங்கை அரசாங்கத்தினா ல் உடன்படிக்கைக ளில் கைச்சாத்திடப்ப டுகின்ற வெளிநாட்டு மானியங்களை முழுமையாக பெற்று உச்ச அளவில் நோக்கங்களுக் கு பயன்படுத்துவத ற்கு | வெளிநாட்டு மானியங்கள் எதிர்பார்த்த பிரகாரம் தேறாமையினால் பொதுவாக பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்தமை , கொவிட் தொற்று நோயினால் வேலை நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தமை, கடன் மீள் | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலைமை அவதானிக்கப்ப ட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 400,000, சீன யுவான் 2,000,000,000 மற்றும் ரூபா 4,545,750 ஆக பல்வேறு நாணயங்களில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த வெளிநாட்டு மானியங்கள் கிடைத்திருந்தமைக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் உரிய நிறுவனத்தின் மூலம் மற்றும் மானியங்களை பயன்படுத்துதல் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமை, செயல் திட்டத்தை அமுல்படுத்துகின்ற நிறுவனத்தின் நிருவாக ரீதியிலான குறைபாடுகள் மற்றும் வழங்கும் நிறுவனங்கள் தாமதமடைந்தமை போன்றவை தாக்கமளித்திருந்தது. எனினும் மானிய நிதியத்தை உச்ச அளவில் பயன்படுத்துவதன் மூலம் நாட்டில் பொருளாதார அபிவிருத்திக்கு அதி கூடிய பங்களிப்பு வழங்க முடியுமா என இந்த திணைக்களத்தின் மூலம் எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் எடுப்பதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளது. | |
| 05 | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் காணப்பட்ட 18 வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையில் 06 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 06 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப | 2023/2022/ 2021 | தேவையான பதவி யணியினரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அத்தியவசியமற்ற | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிதியமைச்சு மற்றும் உரிய நியமன அதிகார தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

| | | |
|---|---|---|
| நிலையில் வெற்றிடங்களும் காணப்பட்டது. | 06 | பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படுமாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையைத் திருத்துதல் வேண்டும். |

**தலைப்பு 240 – தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 166,161,292 | 166,161,292 | 166,016,372 | முனைப்பழியற்ற |
| **2022** | 179,894,713 | 179,894,713 | 179,894,695 | முனைப்பழியற்ற |
| **2023** | 175,464,121 | 175,464,121 | 175,463,654 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2015 பாதீட்டு ஒதுக்கீட்டில் வெளிக்கள உத்தியொகத்தர்களிற்கு மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கான நிகழ்ச் சித்திட்டம் தொடர்பில் மோட்டார் சைக்கிளிற்கான ஆரம்ப கொடுப்பனவு 2003-04-00 செலவினத் தலைப்பின் கீழ் வரிவிதிக்க முடியாக வருமானமாக திணைக்களத்தால் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட சகல மோட்டார் சைக்கிள்களும் 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட உரிமையாண்மையை மாற்ற வேண்டியிருந்தது. திணைக்களம் 2023 திசெம்பர் 31 அளவில் திணைக்களத்தால் தொகை முழுமையாக அறவிடப்பட்டதை உறுதிப்படுத்த | 2023 | முறையான அறிவுறுத்தல்கள் மற்றும் நெறிப்படுத்தல்களால் வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு உடனடியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த பிரச்சினைகளை விரைவாக தீர்த்துவைப்பதற்காக தனித்தனியாக நிறுவனத் தலைவர்கள் / மாவட்ட செயலகங்களிலிருந்து பரீட்சிப்பதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே இந்த மோட்டார் சைக்கிளைக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை துரிப்படுத்துவதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இதுவரை பூர்த்திசெய்யப் பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தவறியிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் ரூபா 490,386 ஆன தேறிய வருமானத்தை அறவிடப்பட்டிருந்தது. | | | | |
| 02 | 1980 யூலையில் தொழிற்சங்க போராட்டம் மற்றும் வேலையை இழந்தவர்களின் நிரதரமற்ற வாழ்வாதாரத்திற்கும் 65 வயது பூர்த்தியான நபர்களிற்காக நிவாரணம் வழங்குவதற்கும் 2013 இலிருந்து பாதீட்டு பரிந்துரை அனுமதிக்கப்பட்டது. இதன்படி 2013 இலிருந்து 2014 திசெம்பர் 31 வரை மாதந்தம் ரூபா 5,000 வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் 2015 சனவரி 1 இலிருந்து 2015 திசெம்பர் 31 வரை மாதாந்தம் ரூபா 6,000 வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன் 2015 திசெம்பர் 31 இன் பின்னர் ஆண்டு ஒன்றிற்கு ரூபா 250,000 வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த விடயம் கணக்காய்வில் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டதுடன் திணைக்களம் 2023 ஆம் ஆண்டில் விரும்பிய வழியில் நலனாளிகளை இனங்கண்டு பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு முறையான நடவடிக்கைகள் | 2023 | பாதீட்டு பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். | 2013 ஆம் ஆண்டில் பாதீட்டு முன்மொழிவில் ஒன்றான இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் நிதி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு, தொழிற் சங்கங்களுடன் முன்னாள் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த தகவல்களின் பிரகாரம் 1980 யூலை வேலை நிறுத்தத்தில் தொழில் வாய்ப்பினை இழந்த நிரந்தரமாக வாழ்வாதாரம் இன்றி இருந்த 10,000 அளவிலான தரப்பினர் இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தமை கோவையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது 1980 யூலை வேலை நிறுத்தத்திற்கு | 2024 ஆம் ஆண்டின் போது படிகள் வழங்கப்பட்டதுடன் தொடர்ந்தும் நலன்களை வழங்குவதற்காக தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்களை இனங்காணும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எடுக்கப் பட்டிருக்காததுடன் 04 நலனாளிகளிற்கு ரூபா 1,673,000 ஆன கொடுப்பனவுகளை செய்திருந்தது. | | | பங்குபற்றி வேலை இழந்திருந்தவர்களின் கோரிக்கை, பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையாகக் கொண்டு முன்னாள் இருந்து இந்த ஊழியர்கள் சேவையாற்றிய விடயப் பொறுப்பு அமைச்சரான தொழில், போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் வீடமைப்பு போன்ற அமைச்சுக்களின் பரிந்துரையின் பிரகாரம் மேற்கொள் ளுதல் பொதுவான முறையாக இருந்தது. | |
| 03 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 சிரேஸ்ர மட்ட பதவிகள், இரண்டாம் நிலையில் 14 வெற்றிடம், மற்றும் ஆரம்ப மட்டத்தில் 09 வெற்றிடங்கள் உள்ளடங்கலாக 31 வெற்றிடங்கள் நிலவியதுடன் சிரேஸ்ர மட்ட மற்றும் இரண்டாம் நிலை வெற்றிடங்கள் இன்று வரையும் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 2023 | வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதிக செலவினக் கட்டுப்பாடு மற்றும் ஆட்சேர்த்தல் / வெற்றிடங்களை நிரப்புதல் கைவிடப்பட்டமை தொடர்பாக விநியோகிக்கப்பட்ட பல்வேறு ஆலோசனை மற்றும் நிலைமைகள் காரணமாக இருந்தது. அதன் பிரகாரம் தொடர்ந்தும் ஆரம்ப மட்டத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக ஊழியர்களை நியமித்துக் கொள்வதற்கு வெற்றிட கடிதங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளதுடன் சிரேஷ்ட நிலையில் | 2024 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் சிரேஷ்ட நிலையில் 07 பதவிகளும் இரண்டாம் நிலையில் 09 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 04 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. |

வெற்றிடங்களுக்கா
கவும்
உத்தியோகத்
தர்களை
நியமிப்பதற்கு
கடிதம்
விநியோகிக்கப்பட்டு
ள்ளது.

**தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 47,832,354 | 47,832,354 | 47,826,428 | முனைப்பழியற்ற |
| **2022** | 47,631,890 | 47,631,890 | 47,628,390 | முனைப்பழியற்ற |
| **2023** | 48,018,834 | 48,018,834 | 48,018,834 | முனைப்பழியற்ற |

| தொடர் இலக்கம் | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அரச வியாபார திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படும் 50 அரச கம்பனிகள் காணப்பட்ட போதிலும், முறைமையான முக்கியமான பொது முயற்சிகளின் கீழ் 16 அரச கம்பனிகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய அரச கம்பனிகள் தொடர்பாக மேற்பார்வை கீழ் மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | 2023 | பொது முயற்சிகள் திணைக்களத்தின் விடய பரப்பிற்கு உள்ளாகும் அனைத்து அரச கம்பனிகள் சம்பந்தமாகவும் முறையாக மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | இலங்கை பொருளாதாரதிற்கு விசேட பங்களிப்பினை வழங்குவதற்கான உபாய வழி ஒன்று நிச்சயமாக இருந்ததுடன் அரச கம்பனிகளின் மேற்பார்வை தொடர்பில் முன்மொழிவு வழங்கப்பட்டதுடன் ஏனைய அரச கம்பனிகளில் ஆபத்தான நிலைமை உயர்ந்த, மத்திய மற்றும் கீழ் மட்டமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அதன் பிரகாரம் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக உரிய மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதற்காக விசேட நிபுனத்துவம் உடைய மனித வளங்கள் போதிய அளவில் காணப்படவில்லை. | தற்போது வரையிலும் இந்த நிலைமை அவதானிக்கப் பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02 | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது அரசினால் மூலதன பங்களிப்பாக ரூபா 1,124,665,353,761 விநியோகிக்கப்பட்டிருந்த 13 பொது முயற்சிகளுக்கு 2022 டிசம்பர் 31 ஆம் தேதி அந்த பெறுமதி ரூபா 1,047,966,900,772 ஆக காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களின் நிதி கூற்றின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 ஆம் தேதி அவற்றின் தேறிய சொத்துக்கள் (மொத்த சொத்துக்கள்- மொத்த வெளிவாரி பொறுப்புக்கள்)இன் பெறுமதி மறையாக ரூபா 630,632,144,273 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் அரசின் நிதி கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் அந்த மூலதன பங்களிப்புக்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் அதன் பெறுமதி முழுமையாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி (impairment), உரிய நிறுவனம் முற்றிலும் வெளிவாரி பொறுப்புகளின் கீழ் பேணப்பட்டு வருகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. மேலும் அதற்கான ஆரம்ப விடயமாக தாக்கம் செலுத்தி இருந்தது உரிய நிறுவனத்தின் நட்டம் பெறுவதின் | 2023 | அரச உரிமை உடைய நிறுவனங்களின் நிதி நிலைமை கால ரீதியாக மதிப்பிடுதலுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் பெறுமதிகளின் குறைபாடுகள் அரச நிதி கூற்றுக்களினுள் முறையாக உள்ளடக்கப்பட வேண்டும். | அரச உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களில் நிதி நிலைமையை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றின் பெறுமதிகளின் குறைவை வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இந்த நிலைமை காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காரணமாக தடுத்து வைக்கப்பட்ட இலாபம் மறை பெறுமதி ஒன்று மேற்கொண்டிருப்பது மேலும்அவதானிக்கப் பட்டது. | | | | |
| 03 | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 1,019,627,985,708 மற்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 892,034,785,542 ஆன அரச மூலதன பெறுமதியுடன் ஆன 05 பொது முயற்சிகளின் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 371,771,137,033 மாத்திரமாகும். அதன் பிரகாரம் இந்த பொது முயற்சிகளில் முதலிடப் பட்டுள்ள மூலதன பங்களிப்பின் பெறுமதி துஷ்பிரயோகத்துக்கு (impairment) உள்ளாக்கப்பட்டு வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. | 2023 | அரச உரிமை யுடைய நிறுவனங்களின் நிதி நிலைமை கால ரீதியாக மதிப்பிடுதலுக்கு உட்படுத்தப்பட்டு அவற்றின் பெறுமதிகளின் குறைபாடுகள் அரச நிதி கூற்றுக்களினுள் முறையாக உள்ளடக்கப்பட வேண்டும். | பொது முயற்சிகளின் நிதி நிலைமைகளை கால ரீதியில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி தேவையான திருத்தங்கள் அரச நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| 04 | 2022 டிசம்பர் 31 ஆம் தேதி உள்ளவாரான அரச் நிதிக் கூற்றின் பிரகாரம் பொது முயற்சிகளுக்கான மூலதன பங்களிப்பின் பெறுமதி ரூபா 2,165,981,657,905 ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 2,121,653,720,125 அரச கூட்டு தாபனம், சட்டவாக்கு சபை | 2023 | -மேற்படி- | பொது முயற்சிகளின் நிதி நிலைமைகளை கால ரீதியில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி தேவையான திருத்தங்கள் அரச நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் அரசுக்கு சொந்தமான கம்பனிகளில் முதலிடப்பட்டிருந்தது . ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது அரசுக்கு சொந்தமான இந்த வியாபார நிறுவனங்களின் தேதிய சொத்துக்களின் மொத்த பெறுமதி 2022 டிசம்பர் 31 ஆம் தேதி ஆகும் போது ரூபா 1,669,676,388,290 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் மேற்குறித்த மூன்று வகைகளுக்கும் உரிய அரசின் மூலதன பங்களிப்பு அந்த நிறுவனங்களின் தேறிய சொத்துக்களுக்கு இணையாக நூற்றுக்கு 21 நாள் அவ்வாறெனில் ரூபா 451,977,331,835 ஆள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப் பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 05 | 2022 ஆம் வருடத்தினுள் அரசினால் முதலீடு செய்யப்பட்டுள்ள 32 சட்ட வாக்க சபைகளுக்குரிய ரூபா 117,718,706,426 ஆன தேதிய இலாபம் ஒன்று ஈட்டப்பட்டிருந்த போதிலும், 36 அரச கூட்டு ஸ்தாபனங்கள் மற்றும் 30 அரசுக்கு சொந்தமான கம்பனிகளுக்குரிய முறையே ரூபா 804,795,113,607 | 2023 | -மேற்படி- | அண்மைக் காலத்தில் பொதுத் திறைசேரியினால் பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பின் மூலம் பொருளாதார ஸ்திர தன்மையுடன் இதுவரை நட்டம் பெற்ற பொது முயற்சிகள் கவனத்திற்கு உரிய அளவில் இலாபம் உழைக்கும் | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் ரூபா 133,722,486,417 ஆக மொத்தம் ரூபா 938,517,600,024 ஆன தேறிய நட்டம் ஈட்டப்பட்டதன் காரணமாக இந்த 98 நிறுவனங்களுக்குரிய மொத்தமாக ரூபா 820,798,893,548 தேறிய நட்டம் ஒன்று ஈட்டப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை பிரகாரம் 2022 ஆம் வருட மத்திய வருடாந்த சராசரி ஆண்டு மக்கள் தொகை 22,181,000 ஆக காணப்படுவதுடன், அதன் பிரகாரம் அரசுக்கு சொந்தமான 98 வியாபார நிறுவனங்களுக்காக 2022 ஆம் வருடத்துக்காக செலவிடப்பட்டுள்ள தனிநபர் தேறிய நட்டம் ரூபா 37,000 காணப்படுவது மேலும் அவதானிக்கப்பட்டது. | | | நிலைமைக்கு உட்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார நிறுவனங்களுக்காக செலவிடப்பட்ட ஒரு நபரின் தேறிய நட்டத்தைக் குறைப்பதற்கு முடியுமாக உள்ளது. | |
| 06 | 2022 ஆம் வருட இறுதியாகும் போது 17 பொது முயற்சிகளுக்கு உரிய நடைமுறை விகிதம் பலவீனமாக காணப்பட்டது. விசேடமாக இலங்கை விமான கம்பனியின் நடைமுறை விகிதம் 0.15 என்ற மிகவும் பலவீனமான தொகை ஒன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், இந்த பொது முயற்சிகள் திரவத்தன்மை | 2023 | -மேற்படி- | பொது முயற்சிகளில் முதலீட்டை கட்டியெழுப்புவது தொடர்பில் வரையறுக்கப்பட்ட நிதி தேவைகள் தாக்கமளித்திருந்தது. எனினும் பொது முயற்சிகளால் முகங்கொடுக்கின்ற திரவ தன்மைப் பிரச்சனைகளை முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான நிதி சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப வழங்குவதற்கு | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய கூடிய அபாயம் ஒன்று காணப்படுவதாக மேலும் அவதானிக்கப்பட்டது. | | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 07 | 2022 ஆம் வருட இறுதியில் போது 16 பொது முயற்சிகள் தொடர்பாக மிகை மூலதன தேர்வு விகிதம் நிலைமை ஒன்று அவதானிக்கப்பட்டது. இங்கு ஒரு சில நிறுவனங்களின் அரச மூலதனத்தை விட செலுத்துவதற்கு உள்ள நீண்ட கால கடன்கள் கூடிய தொகை ஒன்றை பெற்றிருந்தது. மேலும் அரச மூலதனங்களின் பங்களிப்புகள் மறைத்தொகை ஒன்றை எடுத்திருந்தது பொது முயற்சிகளிலும் அவதானிக்கப்பட்டது டன் அந்த நிறுவனங்களின் முழுமையான நீண்ட கால கடனின் மூலம் நிதியளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த அனைத்து நிறுவனங்களிடம் கூடுதலான நிதி அபாயம் ஒன்று (Financial Risk) மற்றும் தொடர்ந்து இயங்கும் தன்மை மிகவும் மோசமான அபாயம் ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு நேர்ந்து உள்ளதாக மேலும் அவதானிக்கப்பட்டது. | 2023 | -மேற்படி- | பொது முயற்சிகளின் நிதி ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்வதற்காக 2023 ஆம் ஆண்டு முதல் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் விளைவாக அதிக திரவத் தன்மைப் பிரச்சனைகள் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு முடியமாக இருந்தது. | மேற்படி |
| 08 | 8 பொது முயற்சிகளின் மூலம் | 2023/ | அரசின் உரிமைத்துவம் | அந்த வேறுபாடுகள் | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதியை உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாரு அந்த நிறுவனங்களின் அரச மூலதன பங்களிப்பு ரூபா 10,803 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அரச நிதி கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 4,323 மில்லியன் ஆக காணப்பட்டதனால் 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் உள்ளவாரான அரசின் நிதி கூற்றினுள் மூலதன பங்களிப்பு ரூபா 6,480 மில்லியன் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | 2022 | காணப்படுகின்ற நிறுவனங்களுடன் காலத்தினுடனான மீதியை உறுதிப்படுத்திக் கொண்டு மதிப்பீட்டுக்கு உட்படுத்தி முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றும் கணக்குகளின் துல்லிய தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்படுவதற்கு தாக்கமளித்த காரணங்கள் என்ன என்பதை இனங்காண்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் உரிய வேறுபாடுகள் உரிய பிரகாரம் இனங்கண்ட பின்னர் முறையான அங்கீகாரத்துடன் முறையான பேரேட்டுக் கணக்குகளில் அறிக்கை இடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| 09 | 9 பொது முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதியை உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் அந்த நிறுவனங்களின் மூலதன பங்களிப்பு ரூபா 994,992 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அரசின் நிதிக் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 995,171 மில்லியன் ஆக காணப்பட்டதன் காரணமாக அரச நிதிக்கூற்றினுள் மூலதன பங்களிப்பு ரூபா 179 மில்லியன் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2023 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| 10 | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட | 2023/ 2022 | -மேற்படி- | இந்த வேறுபாடுகளுக்கு உரிய சரியான | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நேரடி மீதியை உறுதிப்படுத்தல் மற்றும் அரச நிதி கூற்றுக்களிடையில் 09 நிறுவனங்களுக்கு உரிய அரசுக்கு சொந்தமான பங்கு எண்ணிக்கைகளில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் அரச மூலதன பங்களிப்பு ரூபா 135 மில்லியன் குறைவாக அரச நிதி கூற்றினுள் கணக்கிடப்பட்டிருந்தது. | | | பெறுமதிகள் உரிய பிரகாரம் கணக்கீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | |
| 11 | Sri Lanka Institute of Biotechnology (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற நேரடி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் பங்கு ஒன்றின் விலை ரூபா 10 ஆன 52,472,573 பங்குகள் பொது திறைசேரியிடம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அரச நிதி கூற்றினுள் குறிப்பிடப்பட்டிருப்பது பங்கு ஒன்றின் விலை ரூபா 100 ஆன 200,000 பங்குகளின் மூலதன பங்களிப்பு ஒன்று காணப்படுவதாக ஆகும். அதன் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் தேதி அந்த நிறுவனத்தின் மூலதன பங்களிப்பு அரச நிதி கூற்றில் ரூபா 504,725,732 வால் குறைவாக | 2023 | -மேற்படி- | உரிய வரிசை அமைப்பின் செலவினத் தலைப்பிற்கு உரித்தான மூலதன செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மூலதனப் பங்களிப்பு பிரதான பேரேட்டுக் கணக்குகளில் அறிக்கை இடாமையின் அடிப்படையில் இந்த வேறுபாடுகள் ஏற்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டின் போது உரிய அறிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்தது . | | | | |
| 12 | 02 அரச கம்பனிகளின் உரிமைத்துவம் காணப்படுகின்ற பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பேர ளவிலான பெறுமதிகளின் பிரகாரம் கணக்கிடும்போது 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் பங்குகளின் பெறுமதி ரூபா 5,141 ஆக காணப்பட்டதுடன் அது அரச நிதிக்கூற்றினுள் ரூபா 14,476 மில்லியன் ஆக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அரச நிதி கூற்றுக்களின் பங்குகளின் பெறுமதி ரூபா 9,335 மில்லியனினால் கூடுதலாக மூலதன பங்களிப்பு காட்டப்பட்டிருந்தது. | 2023/ 2022 | -மேற்படி- | Bogala Graffiti Lanka PLC இல் உரிய கணிப்பீடுகளை சரி செய்வதற்கு குறிப்பிடுகின்றோம். மிகில் லங்கா (தனியார்) கம்பனியில் இருந்து அரச வங்கிகளுக்க செலுத்த வேண்டிய கடனை அறவிட முடியாதிருந்தமைய ால் அந்த கடனுக்காக அரசாங்கத்தால் திறைசேரி பிணைமுறி விநியோகிக்கப்பட்ட மையால் அந்த கடனுக்கான வருடாந்த வட்டி உரி யஅரச வங்கியின் மூலம் அரசாங்கத்திற்கு வழங்கப்படுகின்ற வரியில் இருந்து (Levy) பதிவளித்தல் தவிர மிகுதி தொகை மாத்திரம் அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. இதன் மூலம் மிகின் லங்கா (தனியார்) கம்பனிக்காக இருந்தமையால் மற்றும் மூடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட மிகின் லங்கா (தனியார்) கம்பனியுடன் அரசாங்கத்திற்கு தற்போது உள்ள ஒரே ஒரு கடப்பாடு மூலதனமாக இருந்தமையால் அந்தத் தொகையை | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மூலதனமாக அறிக்கையிடப்பட்டு ள்ளது. | |
| 13 | அரச நிதிக் கூற்றின் பிரகாரம் மீளாய் வாண்டினுள் அரசுக்கு உரித்தான வியாபாரங்களில் இருந்து மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 241,651 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், அதில் ரூபா 34,090 மில்லியன் அவ்வாறெனில் நூற்றுக்கு 14 ஆன ஒவ்வொரு நிறுவனங்களிடமிருந்து மீணடெழும் சுபாவத்தினாலான அவ்வாறெனில் கடன் மற்றும் கடன் வட்டி செலுத்துதல் மற்றும் சம்பளங்கள் மற்றும் வேதனங்களை செலுத்துவதற்காக பொது திறைசேரியிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பணங்களின் உள்ளடங்களாகும். | 2023/ 2022 | மீண்டெழும் சுபாவத்தினாலான செலவுகள் மேற்கொள்வதன் மூலம் நிறுவனங்களின் மூலதன பங்களிப்புக்கள் அதிகரிப்பு ஏற்படாது என்பதுடன் முறையான திட்டமொன்று அதற்காக பின்பற்றப்பட வேண்டும். | நிறுவனம் யாவற்றினதும் முழுமையான உரித்து திறைசேரிக்க உரியதாகும். அதன் பிரகாரம் அந்த நிறுவனங்கள் காணப்படுகின்ற தொழிற்படு மூலதன பிரச்சனைகள் அல்லது ஏனைய மீண்டெழும் வடிவிலான செலவினங்களுக்காக தேவையான நிதிப் பங்களிப்பு பொதுத் திறைசேரியினால் வழங்கப்படல் வேண்டும். | மேற்படி |
| 14 | அரச நிதிக் கூற்றின் பிரகாரம் மீளாய் வாண்டினுள் 05 பொது முயற்சிகளுக்காக ரூபா 176 மில்லியன் மூலதன பங்களிபபொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக பொதுத் திறைசேரிக்கு உரித்தான பங்குகளின் எண்ணிக்கையில் வேறுபாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | 2023 | அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற பங்குகளின் முதலீடுகளுக்கு உரிய சான்று பத்திரத்தை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பங்குச் சான்றிதழ் விரைவாக பெற்றுக் கொள்வதற்கு உரிய விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| 15 | மிஹின் லங்கா தனியார் கம்பெனியை | 2023 | நிதியங்களைப் பெற்றுக் கொடுக்கும் | இது மிகின் லங்கா (தனியார்) கம்பனிக்கு காசாக | மேற்படி |

கலைத்தல் தொடர்பாக MOF/DG/LAD/CO/142/2017 ஆம் இலக்க மற்றும் 2017 அக்டோபர் 30 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் முன்மொழிவு இலக்க (அ), (ஆ) மற்றும் (இ) காண அமப/17/2383/733/026-1 ஆம் இலக்க மற்றும் 2017 நவம்பர் 08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானங்கள் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி செயலாளர் கம்பனி கலைப்பதற்கான விசேட முன்மொழிவொன்றை நிறைவேற்றி வணிக உயர் நீதிமன்றத்தின் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் நீதிமன்றத்தினால் 2018 மார்ச் 18 ஆம் திகதி கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் மக்கள் வங்கியினால், அந்த நிறுவனம் பெற்றுக்கொண்ட கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துவதற்காக 2021 மற்றும் 2022 வருடங்களுக்காக முறையே ரூபா 272 மில்லியன் மற்றும் ரூபா 441 மில்லியனாக மொத்தம் ரூபா 713 மில்லியன் அந்த கம்பனிக்காக மீளாய்வாண்டிலே போது அரசுக்கு ஏற்பட முடியுமான பாதக நிலைமையை இழிவுபடுத்திக் கொள்வதற்கும், இடம்பெறுகின்ற நிலைமைகளை முறையாக மதிப்பிடுதலுக்கு உட்படக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வழங்கப்பட்ட மூலதனப் பங்களிப்பு அல்லாமல் அந்த ஆண்டின் போது அரச வங்கியில் இருந்து திறைசேரி பிணை முறியின் அடிப்படையில் பெறப்பட்ட கடனுக்காக செலுத்த வேண்டிய தவணை மற்றும் வட்டி அளவிற்கு உரிய வங்கியினால் திறைசேரியின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செலுத்த வேண்டிய இலாபவரி (Levy) அளவு ஈடுசெய்யப்பட்டிருந்ததாகும். இவ்வாறான நிறுவனத்தை கலைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்து மூடப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் திறைசேரிக் கடப்பாட்டிற்காக மேற்கொள்ள வேண்டிய செலவினங்களுக்காக தேவையான நிதி ஏற்பாடு பொருத்தமான செலவின குறியீட்டின் கீழ் வழங்குவதற்கு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்துடன் கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகளை எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொது திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | | | | |
| 16 | மீளாய்வாண்டின் அரச நிதி கூற்றின் கணக்கீட்டு குறிப்புகள் 15 இன் கீழ் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பெறுமதி ரூபா 1,271,480,516 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் இலங்கை அரசுக்கு உரிய ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளின் உரிமைத்துவம் நூற்றுக்கு 50.23 ஆக காணப்பட்டதுடன் அரச நிதி கூற்றில் அது நூற்றுக்கு 49.5 ஆக காட்டப்பட்டிருந்தது. | 2023 | அரசின் உரிமைத்துவம் காணப்படுகின்ற நிறுவனங்களுடன் காலத்தினுடனான மீதியை உறுதிப்படுத்திக் கொண்டு கணக்குகளின் துல்லிய தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தவறு ஒன்றினால் உரிய பங்குப் பெறுமதி குறிப்பிடப்படாது இருந்ததுடன் எதிர்காலத்தில் அந்த பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படம். உரிய சதவீதத்தைக் கணிப்பீடு செய்யும் போது ஏற்பட்ட கணிப்பீட்டு வழுவின் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் அதனை எதிர்காலத்தில் சரி செய்து கொள்ளப்படும் எனக் குறிப்பிடுகின்றோம். | மேற்படி |
| 17 | அரச நிதி கூற்றின் பிரகாரம் மீளாய் வாண்டினுள் அரசுக்குரித்தான வியாபாரங்களின் மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 269,386 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 228,771 மில்லியன் அவ்வாறெனில் நூற்றுக்கு 85 ஆன 2023 செப்டம்பர் 26 ஆம் திகதியுடைய | 2023 | அரசுக்கு உரித்தான முயற்சிகளின் அடையாளம் காணப்பட்ட பொறுப்புக்கள் அரசுக்கு பொறுப்பளிக்கப்படுவதன் காரணமாக அரசு நிதி நெருக்கடிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் அந்த பொறுப்புக்களை | ஏற்றுக் கொள்கின்றோம். குறிபிட்டுக் கொள்கின்றோம். சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் இந்த நிறுவனங்களில் ஐந்தொகை மீள் கட்டமைக்கப்படல் வேண்டும். அதற்கு இணையாக இந்த ஒரு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமப/23/1812/604/118-1 அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் இலங்கை மின்சார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட ஶ்ரீலங்கன் விமான கம்பனியின் ஐந் தொகை மறு சீரமைப்பு மேற்கொள்ளப்படுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உரிமை மூலதன முதலீடு ஒன்று காரணமாக அதிகரித்து இருந்தது. | | தேர்வு செய்வதற்கு முறையான நடைமுறை ஒன்றை நிருவிக் கொள்ள வேண்டும். | து. | |
| 18 | “பொதுமக்களின் அபிலாசைகளை பாதுகாத்தல்” என்ற பிரதான பணியின் கீழ் அரச வியாபார திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறுகின்ற நிறுவனங்களின் வருடாந்த அறிக்கை குறித்த தினங்களில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் திணைக்களத்தின் பணி ஒன்றாகும். இது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | | | |
| (i) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேற்பார்வைக்கு உள்ளாக கூடிய 305 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும் 2024 மே 25 ஆம் தேதி ஆகும் போது பாராளுமன்றத்தின் அதிகாரபூர்வ வலைத்தளத்தின் | 2023/ 2022/ 2021 | மேற்பார்வைக்கு உட்படுகின்ற அனைத்து நிறுவனங்கள் தொடர்பாகவும் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் தகவல்கள் தொடர் | நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் தொடர்பாக இந்த ஆண்டின் ஆரம்பத்தின் போது உரிய நிறுவனங்களின் பிரதான | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் திணைக்களத்தின் மூலோபாய ரீதியான முக்கியமாக கருதப்படுகின்ற 52 நிறுவனங்களில் 33 நிறுவனங்கள் மாத்திரம் 2022 வருடத்திற்கு உரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை படுத்தப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தர், நிறுவனத் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அவ்வப்போது அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ii) | 2023 ஆம் வருடத்துக்காக 2024 மே 25 ஆம் திகதி ஆகும் போது 52 பொது முயற்சிகளில் எந்த ஒரு நிறுவனத்தினதும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023/ 2022 | மேற்பார்வைக்கு உட்படுகின்ற அனைத்து நிறுவனங்கள் தொடர்பாகவும் வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும் தகவல்கள் தொடர் நடவடிக்கை படுத்தப்பட வேண்டும். | மேற்படி | மேற்படி |
| (iii) | 2021 ஆம் வருடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான நிறுவன கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டு கூட்டத்தின் போது வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிலேயும் அது தொடர்பாக பொது முயற்சிகள் | **2023/ 2022** | நிறுவனக் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக உரிய அறிவித்தல்கள் தொடர்ச்சியாக இந்தத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் வருடாந்த செயலாற்றல் மதிப்பீட்டுக் குழு நடாத்துதல் தொடர்பாக உரிய நிறுவனத்தின் பணிப்பாளர் சபை பொறுப்பாக இருத்தல் வேண்டும். | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திணைக்களத்தின் தலையீடும் மிகவும் குறைந்த அளவில் காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 19. | 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் திணைக்களத்தில் காணப்பட்ட 06 பதவி வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்ட மேலதிக பணிப்பாளர் மற்றும் 04 பணிப்பாளர் பதவிகள், மூன்றாம் நிலை மட்டத்தில் 01 பதவியும் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 01 பதவியும் வெற்றிடமாக காணப்பட்டது. | 2023/ 2022/ 2021 | தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் தேவையற்ற பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரினுள் காணப்படின் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை திருத்தப்பட வேண்டிமை. | தற்போது சிரேஸ்ட நிலையையில் 04 வெற்றிடங்களுக்கு இடையே 02 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. இலங்கை நிர்வாக சேவையின் பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் திணைக்கள மயப்படுத்தப்பட்ட உதவிப் பணிப்பாளர் பதவிக்காக குறித்துரைத்த முறைமையின் பிரகாரம் தகுதியான உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே மூன்றாம் நிலையின் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பதவிகள் திணைக்கள மயப்படுத்தப்பட்ட பதவிகளாக இருந்ததுடன் அதற்காக சேவையை விட்டுச் செல்லும் கட்டளை விநியோகித்தல் அடிப்படையில் உரிய பதவிகள் | தற்போது சிரேஸ்ட நிலையில் 04 வெற்றிடங்களில் 02 வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்பட்டுள்ளது. |

நிரப்பப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையின் உத்தியோகத்தர்கள் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டமை மற்றும் அதற்குப் பதிலாக பதிலீட்டு உத்தியோகத்தர்கள் வராமையின் அடிப்படையில் வெற்றிடம் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அதற்காக தகுதி வாய்ந்த உத்தியோத்தர்களை நியமித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தலைப்பு 242 - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 55,641,798 | 55,641,798 | 55,641,798 | முனைப்பழியற்ற |
| **2022** | 54,931,278 | 54,931,278 | 54,931,278 | முனைப்பழியற்ற |
| **2023** | 53,795,859 | 53,795,859 | 53,795,859 | முனைப்பழியற்ற |

| தோடர் இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | தபால் திணைக்களத்தின் பதவியணியினரை மீளாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணிப்பொறுப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | 2021 | திட்டமிடப்பட்ட பிரகாரம் பதவியணியினரை மீளாய்வு செய்தல் வேண்டும். | பொது மக்களினதும் ஏனைய தரப்பினர்களினதும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவையால் பெயர் குறிப்பிடப்பட்ட முறையான குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு தபால் மற்றும் புகையிர சேவைகளின் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பொருத்தமாக இருந்தமையும் 2017.12.19 ஆம் திகதியஅமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | தபால் திணைக்களத்திற்கக பதவியணியினர் மீளாய்வு ஒன்று 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அதன் பிரகாரம் இந்த அமைச்சிற்கு உரிய நிறுவன கட்டமைப்பு, ஊழியர் எண்ணிக்கை கட்டமைப்பு தொடர்பாக விரிவான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பதவியணியினரை மீளாய்வு செய்தல் பொருத்தமானதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக நாட்டில் ஏற்பட்ட நிலைமையினை அடிப்படையாகக் கொண்டு உரிய தரவுகளைச் சேகரிப்பதற்காக உத்தியோகத்தர்கள் ஒன்று சேர்வதற்கு முடியாதிருந்தமையால் மீளாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | |
| 02 | அமைச்சு மற்றும் திணைக்கள பதவியணியினரை அங்கீகரிப்பதற்கு உரிய குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | அமைச்சு மற்றும் திணைக்களங்களின் பதவியணியினர்களை சரியானதாக அங்கீகரிப்பதற்கான குறிகாட்டிகள் தயாரிக்கப்படல் வேண்டும். | திணைக்களம் மற்றும் அமைச்சிற்காக பதவியணியினரை நியமிப்பதற்கு உரிய குறிகாட்டிகள் தொடர்பாக ஆரம்ப கலந்துரையாடல் ஒன்று தேசிய சம்பள ஆணைக்குழுவுடன் இதுவரையில் மேற்கொள்ளபடா | 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளும் குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | து இருந்ததுடன் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒன்று தேசிய சம்ப ஆணைக்குழுவின் கவனத்திற்காக அனுப்பபட்டுள்ளது. | |
| 03 | திறைசேரி செயலாளரினதும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரினதும் DMS/E/1/99 ஆம் இலக்க 1999 மே 05 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முதலாவது நடவடிக்கையாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குள் பொதுத் தரவு மூலத்தினைத் தோற்றுவிப்பதற்கு மற்றும் பல்வேறு முகவர் நிறுவனங்களுக்கிடையேய ஒழுங்கற்ற முறையில் பரந்து காணப்படும் தரவுகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கீழ் ஒன்று திரட்டி நாளதுவரையாக்கி மையப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக அரசாங்க துறையின் மற்றும் மாகாண அரசாங்க சேவை ஊழியர்கள் தொடர்பான தகவல் | 2023 | தாமதமின்றி திட்டங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது திணைக்களத்தால் பேணிச் செல்லப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினருக்கு உரிய அட்டைகள் மூலம் வழங்கப்பட்ட சகல தரவு அறிக்கைகளும் கணனித் தரவு மொத்த முகாமைத்துவ முறைமையில் நிறைவேற்றுதல் தொடர்பாக ஆரம்ப பணிகள் தகவல் தொழில் நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தால் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | ஒட்டுமொத்த அரசாங்க சேவையின் பதவியணியினர் தரவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணனி தரவு முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறையை பேணுகின்ற தேவைப்பாடு அடையாளங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களம் தோற்றுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதிவரை 24 ஆண்டுகள் காலம் கடந்திருந்ததும் தரவு முறைமை உருவாக்கப்பட்டிருக்கவில்லை ல. | | | | |
| 04 | 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளல், இராஜினாமாகச் செய்தல், சேவையை கைவிட்டுச் செல்லல், சேவையிலிருந்து இடைநிறுத்தல், ஓய்வுபெறுதல், மரணமடைதல் போன்ற விடயங்கள் தொடர்பாக இடம்பெறுகின்ற மாற்றங்களைக் காட்டி அரசாங்க துறையிலுள்ள ஆளணியினர் தொடர்பான காலாண்டு ரீதியாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் 2019 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் பின்னர் உரிய ஆளணித் தகவல்கள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை ல. | 2023 | அமைச்சரவை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்லத் வேண்டும். | அமைச்சரவைக்கு காலாண்டு ரீதியில் அறிக்கை சமர்ப்பித்தல் நடைமுறை ரீதியில் முடியாதிருந்தமையால் வருடாந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இந்த ஆண்டில் இருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | 2019 முதலாம் காலாண்டின் பின்னர் உரிய பதவியணியினர் தகவல்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 05 | 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய | 2023 | அறிக்கைக்கான தரவுகளை | நிதி, பொருளாதார | நிதி அமைச்சின் 2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல், இராஜினாமாச் செய்தல், சேவையை விட்டுச் செல்லல், செவையிலிருந்து இடைநிறுத்துதல், ஓய்வு பெறுதல், மரணடைதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக இடம்பெறுகின்ற மாற்றங்களைக் காட்டி அரசாங்க துறையின் ஆளணியினர் தொடர்பாக தரவு முறைமையைப பேணுதல் மற்றும் நாளதுவரையாக்கும் பொறுப்பு திணைக்களத்திற்கு ஒபபடைக்கப்பட்டிருந்தும் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் போது அரசாங்கத்தின் 32 தொழில் முயற்சி நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவு பிரிவுகள் தொடர்பான 52 நிறுவனமாக மொத்தமாக 84 நிறுவனங்களில் காணப்படுகின்ற ஆளணியினரின் விபரங்களை உள்ளடக்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | முழுமையாகச் சமர்ப்பித்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை தயாரிக்கும் போது உள்ளடக்கப்படாதிருந்த பதவியணியினர் தகவல்களின் அளவுகள் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 0.6 சதவீதம் ஆன சிறிய சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் அந்த நிலைமையினையும் சரி செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கைத் தயாரிக்கும் போது அரச துறைகளின் சகல பதவியணியினர் தொடர்பான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| 06 | 2017 சனவரி 21 ஆந் திகதிய 01/2017 ஆம் | 2023 | காட்டப்பட்டுள்ள | அரச துறையின் நிறுவன | சகல அரச நிறுவனங்களினதும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளை சிறந்த மட்டத்தில் பேணுவதற்குத் தேவையான ஆகக் குறைந்த ஆளணியினரை அடையாளங்கண்டு அது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்கும் அதத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆளணி மீளாய்வுக் குழுவின் மூலம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவையான சிறந்த ஆளணியினைத் தீர்மானிப்பதற்கும் நிர்ணிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சுற்றறிக்கை வழங்கப்பட்டு 05 ஆண்டுகளை மிகைத்திருந்தும் 1027 அரசாங்க நிறுவனங்களுக்கு மத்தியில் 765 நிறுவங்களின் ஆளணி மீளாய்வு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | | சுற்றறிக்கைக்கு இணங்க திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு இணங்க ஆளணி மீளாய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதவியணியினர்களின் மீளாய்வு இந்தத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட பிரதான பணியாக இருந்தமையால் பதவியணியினர் மீளாய்வு செய்ய வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு பதவியணியினர் மீளாய்வு தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பதவியணியினர் மீளாய்வு அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. |
| 07 | திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிகள் 94 ஆக இருந்ததுடன் அவற்றில் 19 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவற்றில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள | 2023 | திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அத்தியவசியமான பதவிகளை நிரப்புவதற்கும் | கடந்த சில ஆண்டுகளில் அரசாங்க சேவையில் ஆட்சேர்த்தல் வரையறுக்கப்பட்டதன் காரணமாக காணப்படுகின்ற ஊழியர் | 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 91 ஆகக் காணப்பட்டதுடன் 14 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பதவிகள் 12 ஆகவும் இரண்டாம் மட்டத்திலுள்ள பதவிகள் 05 ஆகவும் ஆரம்ப மட்டத்திலுள்ள பதவிகள் 02 ஆகவும் இருந்தன. | அவ்வாறு இல்லாத பதவிகள் காணப்படுமாயின் அவற்றை அங்கீகரித்த ஆளணியில் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பற்றாக்குறையின் அடிப்படையில் பதிலீட்டு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்துதல் கஸ்டமாக இருந்தது. எனினும் சில பதவிகள் தொடர்பான தேவைகள் மேலும் கவனத்தில் கொண்டு திருத்தப்பட வேண்டிய பதவிகளை இனங்கண்டு அந்தப் பதவிகள் 2024 ஆம் ஆண்டின் போது நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

தலைப்பு 243 – அபிவிருத்தி நிதித் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,721,340,897 | 1,721,340,897 | 1,721,018,040 | முனைப்பழியற்ற |
| **2022** | 1,722,238,459 | 1,722,238,459 | (14,536,792,858) | முனைப்பழியற்ற |
| **2023** | 1,772,472,487 | 1,772,472,487 | (3,465,456,372) | முனைப்பழியற்ற |

| தொடர் இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | சிரேஸ்ட பிரஜைகளின் வைப்புக்களின் கடன் உத்தேச திட்டத்தின் கீழ் வைப்பாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வைப்புக்களுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 நிதி நிறுவனங்களுக்கு திணைக்களத்தால் செலுத்த வேண்டிய நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத நிலுவைக் கடன் வட்டி ரூபா 108,708,315,853 ஆகும். | 2023 | சகல பொறுப்புக்களையும் சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். செலுத்த வேண்டிய மொத்த வட்டி மாணியத் தொகைக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது நிதியேற்பாடு கோரப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் தொகை மாத்திரம் 2023 ஆம் ஆண்டிற்காக பாதீட்டில் ஒதுக்கப்பட்டிருந்தது. நிதியேற்பாடு இல்லாமையினால் பொறுப்பாக உள்ளடக்கப்படவில்லை. | 2024 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 20 பில்லியன் ஆக இருந்ததுடன் உரிய தொகையில் 19 வங்கிகளுக்கு செலுத்த வேண்டியிருந்த சகல வட்டி உதவிக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளதுடன் 08 வங்கிகளுக்காக மாத்திரம் ரூபா 88.7 பில்லியன் வட்டி மாணியம் தீர்க்க வேண்டியிருந்தது. |
| 02 | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவித் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கடன் உத்தேசத் திட்டம் (SMELoC) செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட | 2023 | -மேற்படி- | ஏற்றுக்கொள்கின்றோம். | 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிட வேண்டிய உப கடன் தொகை ரூபா 59,380,686,408 ஆகும். மானியம் ரூபா 2,361,441,896 ஆகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிதி நிறுவனங்களுக்கு வழங்கி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உப கடன் தொகை ரூபா 57,655,546,322 ஆக இருந்ததுடன் இந்த உத்தேச முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் ரூபா 2,214,490,586 தொகை மாணியமாக வழங்கபப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 03 | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 59 பதவிகளின் 10 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 05 பதவிகளும், இரண்டாம் நிலையிலான 02 பதவிகளும் ஆரம்ப மட்டத்திலான 03 பதவிகளுமாக காணப்பட்டது. | 2023 | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இரண்டாம் நிலையில் வெற்றிடங்கள் இரண்டில் ஒரு வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளதுடன் ஆரம்ப நிலையில் வெற்றிடங்கள் மூன்றில் வெற்றிடம் இரண்டு நிரப்பப்பட்டுள்ளது. காணப்படுகின்ற ஒரு சாரதி வெற்றிடம் ஒன்று காணப்படுகின்றமைக்கு கடிதம் ஒன்று விநியோகித்து அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சிரேஸ்ட நிலையில் வெற்றிடம் தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு மீண்டும் ஒரு தடவை அறிவித்து அந்த வெற்றிடங்கள் கூடிய விரைவில் | சிரேஸ்ட நிலையில் 07 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 02 வெற்றிடங்களும் ஆரம்ப நிலையில் 03 வெற்றிடங்களும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நிரப்பப்படும் எனக் குறிப்பிடுகின்றோம். | |
| 04 | மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்ட பின்வரும் நிறுவனம் மற்றும் செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையும் செயற்படு:ம் நிலைக்கு மாறியிருக்கவில்லை.<br><br>I. National Credit Guarantee Institution<br>II. ADB Rooftop Solar Power Generation Project (Phase II) | 2022 | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | National Credit Guarantee Institition பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் ADB Rooftop Solar Power Generation Project (Phase II) இது வரை ஆரம்பிக்கப்படவில்லை. |

**தலைப்பு 244 - வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 66,117,124 | 66,117,124 | 66,117,124 | முனைப்பழியற்ற |
| **2022** | 65,697,303 | 65,697,303 | 65,697,303 | முனைப்பழியற்ற |
| **2023** | 75,956,314 | 75,956,314 | 75,956,314 | முனைப்பழியற்ற |

| தொடர் இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 08 சார்க் வலய நாடுகளின் பங்குபற்றலுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ள தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்காக (சப்தா/SAFTA) இலங்கை 2005 ஆம் ஆண்டின் போது கையொப்பமிட்டிருந்தது. இந்த வர்த்தக உடன்படிக்கையில் வர்த்தகத்தை தளத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் இறுதித் தொகுதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள 50 சுங்க குறியீடுகளுக்காக (08-குறியீட்டினைக் கொண்ட) அமுல்ப்படுத்தப்படுகின்ற சுங்க வரியைக் குறைத்தல் 7.5 சதவீதம் மற்றும் 6 சதவீதம் அளவானவற்றினை 2018 திசெம்பர் மாதமளவில் 5 சதவீதம் வரை குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் அது 2024 யூலை 23 ஆந் திகதி வரை | 2023 | நாட்டிற்குச் சாதகமான உடன்படிக்கைக்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முன்னுரிமை சுங்கவரி விகிதம் 05 எல்லை வரை குறைத்துக் கொள்வதற்காக இலக்கம் MF/TIP/09/CM/202014/188 ஆம் இலக்க 2019.06.11 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பு நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவைக் குறிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை முல்படுத்துவதற்காக அமைச்சரவையால் இது வரை தீர்மானம் எடுத்திருக்கவில்லை. இந்த உடன்படிக்கைக்குரிய கலந்துரையாடல்கள் தன் அங்கத்துவ நாடுகளில் பங்கு பற்றுபவர்கள் வராதிருந்தமையால் இந்த நடவடிக்கைகள் தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது | 2024 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையிலும் இந்த உடன்படிக்கைக்குரிய கலந்துரையாடல் அதன் அங்கத்துவ நாடுகளின் பங்குபற்றாளர்களினால் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | என தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| 02 | இலங்கைக்கும் பங்களாதேசிற்குமிடையே முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையினை மேற்கொள்வது சம்பந்தமான கலந்துரையாடலினை ஆரம்பிப்பதற்காக 2021 யூன் 14 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அச்செயற்பாடு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கும் பங்களாதேசிற்குமிடையே வர்த்தகத்திலிருந்து சிறந்த வர்த்தக மீதியும் உயர்ந்த இறக்குமதி உள்ளடக்க மீதியும் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தின் மூலம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க பங்களாதேசிற்கும் இலங்கைக்குமிடையே முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் (BS-PTA) கையொப்பமிடுவதற்குரிய வேலைத்திட்டத் (Work Plan) திற்காக இணக்கப்பாட்டிற்கு வந்து இரண்டு நாடுகளுக்குமிடையே உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் 2022 சனவரி மாதத்திற்கு விண்ணப்பித்திருந்தும் | 2023 | வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்திற்கு இணங்க தாமதமின்றி உடன்படிக்கை செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த உடன்படிக்கைக்குரிய கலந்துரையடல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதுடன் இரண்டு நாடுகளுக்கு இடையிலான இணக்கப்பாட்டின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படும். | இந்த உடன்படிக்கை கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுவதுடன் 2024 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையில் உடன்படிக்கைக்காக கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அது 2024 யூலை 23 ஆந் திகதி வரை கையொப்பமிட்டிருக்க வில்லை. | | | | |
| 03 | சீன - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான இணக்கப்பாட்டிற்கு வருவது சம்பந்தமான கலந்துரையாடல் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 2017 ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. பின்னர் மீண்டும் 2022 ஆம் ஆண்டின் போது கலந்துரையாடலினை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | 2023 | நாட்டின் தேவைப்பாட்டிற்கு இணங்க தாமதமின்றி உடன்படிக்கை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த உத்தேசிக்கப்பட்ட உடன்படிக்கை சீனா மற்றும் இலங்கைக்கு இடையே இரு தரப்பினர் உடன்படிக்கையாக இருந்ததுடன் தற்போது இதில் 07 கலந்துரையாடல் சுற்றுவட்டம் இரண்டு நாடுகளுக்கு இடையே இணக்கப்பாட்டின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடாத்துவதற்கு சர்வதேச வர்த்தக அலுவலகம் (ITO) இன் மூலம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுவதுடன் 2024 ஒக்தோபர் 22 ஆந் திகதி வரையும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வில்லை. |
| 04 | திணைக்களத்தின் அங்கீகரித்த ஆளணியினர் 64 ஆக இருந்ததுடன் இரண்டாம் மட்டத்திலுள்ள 03 பதவிகளின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு 2024 யூன் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த ஆளணியல் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிட பதவிகளை நிரப்புவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 63 பேர் இருந்ததுடன் இரண்டாம் நிலைப் பதவிகளில் 04 வெற்றிடங்கள் காணப்பட்டது. |

தலைப்பு - 245 அரசாங்க நிதி திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 78,963,516 | 78,963,516 | 78,963,516 | முனைப்பழியற்ற |
| **2022** | 76,134,775 | 76,134,775 | 76,134,775 | முனைப்பழியற்ற |
| **2023** | 73,653,928 | 73,653,928 | 73,653,928 | முனைப்பழியற்ற |

| தொடர் இலக்கம் | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2018 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 13 நிதியங்கள் மூடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 நிதியங்கள் தொடர்பில் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2023 | திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் முறையான திட்டங்களை தயாரித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தேசிய தாவரவியல் பூங்கா நிதியம், சுயாதீன நிறுவனம் ஒன்றாக மீண்டும் ஸ்தாபிப்பதற்கான கோரிக்கைக் கடிதம் அவ்வப்போது சமர்ப்பிக்கப்பட்ட போதும் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தமையை அறிவித்தமை, வாகன புகை பரிசோதனை, நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றை தொடர்ச்சியாக பேணி நடாத்திச் செல்வதற்கான தகுதியான பரிந்துரைகளை சமர்ப்பித்தல், மீண்டும் சுயதொழில் | தேசிய தாவரவியல் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் வாகனப் புகைப் பரிசோதனை நம்பிக்கை நிதியம் தொடர்பான நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வாய்ப்பு சுழற்சி நிதியத்தை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| 02 | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 80 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் சிரேஷ்ட மட்டத்திலான 11 பதவிகளும் இரண்டாம் நிலை மட்டத்திலான 06 பதவிகளும் ஆரம்ப நிலை மட்டத்திலான 02 பதவிகளும் உள்ளடங்களாக 19 பதவி வெற்றிடங்கள் நிலவின. | 2023 | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் சரியானதாகும். | சிரேஸ்ட நிலையில் 11 பதவிகளும், இரண்டாம் நிலையில் 18 பதவிகளும், ஆரம்ப நிலையில் 05 வெற்றிடங்களும் ஆக 2024 திசெம்பர் 05 ஆந் திகதி வரையிலும் வெற்றிடங்கள் காணப்பட்டது. |

**தலைப்பு - 246 உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 7,121,320,771 | 1,102,695,443 | (754,787,833) | முனைப்பழியுள்ள |
| **2022** | 11,685,087,396 | 903,019,202 | (570,821,878) | முனைப்பழியுள்ள |
| **2023** | 14,819,001,594 | 705,375,369 | (402,468,526) | முனைப்பழியுள்ள |

| தொடர் இலக்கம் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | RAMIS முறைமையில் செயற்படுத்தப்படும் Appeal மற்றும் Objection ஆகிய மொடியுள்களில் காணப்படுகின்ற View Appeal மற்றும் View Objection Record ஆகிய உப மொடியுள்களில் நுழைவதற்காக கணக்காய்வு பதவியணியினருக்கு நுழைவு அங்கீகாரம் வழங்கியிருக்காமையால் மற்றும் RAMIS முறைமையில் Report மொடியுள்கள் மூலம் உருவாக்கப்படும் Appeal Registration, Time Bar Report, Settled Appeal Report, Objection Registration, Settled Objection Report மற்றும் Unsettled Objection Report ஆகிய அறிக்கைகளுக்குரிய நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல் | 2023 | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 42 இற்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு வேண்டப்படுகின்ற ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் உரிய காலத்தினுள் சமர்ப்பிக்கப்படாமை குற்றம் ஒன்றென குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கலில் புறக்கணிப்பொன்று மேற்கொண்டிருக்காததுடன், தேவையான உதவிகள் வழங்குவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறைமையினூடாக பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தினை இழந்திருந்தது. | | | | |
| 02. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சிங்கப்பூர் நிறுவனத்துடன் அணுகியிருந்த உடன்படிக்கைகளில் ஏனைய மூன்றாம் தரப்பினர்களுக்கு உடன்படிக்கையை வழங்க முடியாதென்ற நிபந்தனை உட்படுத்தப்பட்டிருந்தமையால் அந்த உடன்படிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. RAMIS முறைமைக்கு உரிய 2014 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ரூபா 14,429,237,244 இற்கான பணக் கொடுப்பனவு மற்றும் அதன் முன்னேற்றம் குறிப்பிட்ட உடன்படிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | 2023 | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 42 இற்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு வேண்டப்படுகின்ற ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் உரிய காலத்தினுள் சமர்ப்பிக்கப்படாமை குற்றம் ஒன்றென குறிப்பிடப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி ஏனைய மூன்றாம் தரப்பினருடன் RAMIS முறைமைக்குரிய ஆவணங்கள் அல்லது தகவல்கள் பரிமாறுவதற்காக சிங்கப்பூர் கம்பனியிடம் எழுத்துமூல அங்கீகாரம் கிடைத்திருக்காமையால், அவ்வாறு வழங்குவது உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறுவதொன்றாக இருப்பதனால், தேறிய கணக்காய்வு அலுவலகத்திற்கு குறிப்பிட்ட தகவல்கள் வழங்குவதற்குரிய இயலுமை தொடர்பாக சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை வினவுவதற்கு மீண்டும் 2024 ஆகஸ்ட் 27 திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 03. | RAMIS கணினி முறைமைக்கு உரிய 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி பெறுமதி ஆகிய | 2023 | குறிப்பிட்ட வரிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து அறவீட்டு செயற்பாடுகளையும் செயற்படுத்தி | நிலுவை வரி அறவீடு செய்தல், இடை நிறுத்துவதற்கு இனங்காணப்பட்ட செல்லுபடியாகும் காரணத்தின் மீது மேற்கொள்ளப்படு | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 856,852,673,726 தொகையில் 84 சதவீதம் அதாவது ரூபா 718,383,567,358 தொகை அறவீடு செய்தல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட வரித் தண்டம் மற்றும் வட்டி எனவும், ரூபா 138,469,106,368 தொகை அதாவது 16 சதவீதம் அறவீடு செய்யக்கூடிய நிலுவை வரி மற்றும் தண்டம் எனவும் இனங்காணப்பட்டிருந்தது. | | அனைத்து நிலுவை வரிகள் மற்றும் தண்ட மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வதுடன், அந்த இடைநிறுத்துவதற்கான காரணத்தின் விடயங்களை தீர்த்துக்கொண்ட பின்னர் நிலுவை வரியை அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| 04. | Legacy கணினி முறைமையின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி பெறுமதி ஆகிய ரூபா 209,936,351,219 தொகையில் ரூபா 159,645,625,333 தொகை அதாவது 76 சதவீதம் அறவீடு செய்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வரி, தண்டம் மற்றும் வட்டி என இனங்காணப்பட்டிருந்தது. | 2023 | குறிப்பிட்ட வரிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து அறவீட்டு செயற்பாடுகளை செயற்படுத்தி அனைத்து நிலுவை வரிகள் மற்றும் தண்ட மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வரி அறவீடு செய்தல், இடை நிறுத்துவதற்கு இனங்காணப்பட்ட செல்லுபடியாகும் காரணத்தின் மீது மேற்கொள்ளப்படுவதுடன், அந்த இடைநிறுத்துவதற்கான காரணத்தின் விடயங்களை தீர்த்துக்கொண்ட பின்னர் நிலுவை வரியை அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 05. | 2014 இன் 14 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2010 இன் 16 ஆம் இலக்கம் கொண்ட புறக்கணிக்கப்பட்ட வரிகளை அறவீடு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2009 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட வரிகளை அறவீடு செய்வதற்காக | 2023 | குறிப்பிட்ட வரிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து அறவீட்டு செயற்பாடுகளை செயற்படுத்தி அனைத்து நிலுவை வரிகள் மற்றும் தண்ட மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை | 2023 ஆண்டில் DTRU பிரிவில் நிலுவை வரி கழித்தல் பணமாக மற்றும் ஏனைய முறைகள் தொடர்பாக பொழிப்பொன்றின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்விற்கு விடயங்கள் அறிவிக்கப்பட்டது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிறுவப்பட்டிருந்த DTRU பிரிவிற்கு 2015 திசெம்பர் 31 திகதி ரூபா 48,812,991,690 தொகை நிலுவை வரி மற்றும் தண்டம் என மாற்றப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 22,072,303,229 தொகை வரை அதாவது, ரூபா 26,740,688,461 இற்கான நிலுவை வரி மற்றும் தண்டத் தொகை மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், நிலுவை வரி அறவீடுகளில் உண்மையாகவே பணமாக அறவீடு செய்யப்பட்ட அளவு 18 சதவீதமாக காணப்பட்டதுடன், சரி செய்தல் மற்றும் நிதி அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவழித்தல் 82 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. | | எடுக்க வேண்டும். | | |
| 06. | 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றின் படி பொருளாதார சேவைக் கட்டணம், தேறிய பாதுகாப்பு வரி சேவை, புரழ்வு வரி, கடனைத் திருப்பிச் செலுத்தல் வரி மற்றும் சுயவிருப்புடன் வெளிப்படுத்தல் மீதான வரி தொடர்பான வருமானம் சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக கூற்றின் படி அறவீடு செய்யப்பட்ட நிலுவை வருமானம் சமமாக இருக்க வேண்டிய போதிலும், | 2023 | குறிப்பிட்ட வரிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து அறவீட்டு செயற்பாடுகளை செயற்படுத்தி அனைத்து நிலுவை வரிகள் மற்றும் தண்ட மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் என. | ஒவ்வொரு பிரிவுகளிடையே கோப்புக்கள் மாற்றப்படுவதனால் இது தொடர்பான விரிவான விபரங்கள் பெற்றுக்கொள்வதற்கு இயலாமல் இருந்ததுடன், எதிர் காலத்தில் அவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவற்றிற்கிடையே ரூபா 2,454,770,780 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | | | | |
| 07. | 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானக் கூற்றின் படி எதுவித அறவீடுகளும் இன்றி 10.02.07.00 முத்திரை வரி வருமானத் தலைப்பின் கீழ் ரூபா 14,599,086 தொகை மற்றும் 10.02.08.00 பற்று வரி வருமானத் தலைப்பின் கீழ் ரூபா 2,215,581,368 இற்கான மீதியொன்றும் 2019 ஆண்டு முதல் காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | 2023 | குறிப்பிட்ட வரிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளின் கீழ் நிலுவை வரிகள் மற்றும் தண்ட மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவை வருமான வரி தொடர்பாக தற்போது வழக்குகள் நடைபெற்று வருகின்றன என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 08. | 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிலுவை வருமானக் கூற்றின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடனை திருப்பிச் செலுத்தும் வரி ரூபா 1,692,235,124 மற்றும் வட்டி வருமானத்தில் நிலுவை வரி மீதிகள் ஆகிய ரூபா 6,016,947,091 முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்திருந்ததுடன், ஆண்டின் போது எதுவித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அவற்றில் வட்டி வருமானத் தலைப்பின் கீழும், முன்னைய ஆண்டின் போதும் எதுவித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும், பாரிய | 2023 | குறிப்பிட்ட வரிச் சட்டங்களில் காட்டப்பட்டுள்ள அனைத்து அறவீட்டு செயற்பாடுகளை செயற்படுத்தி அனைத்து நிலுவை வரிகள் மற்றும் தண்ட மீதிகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதன்படி, நிலுவை வரியின் அதிகரிப்பொன்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது ரூபா 530,235,731.82 இற்கான பெறுமதியினால் மதிப்பீடுகள் கொண்ட வழங்கப்பட்டுள்ள மையினாலே ஆகும் என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கையான (சுமார் 37%) நிலுவை வரி பதிவழித்தலொன்று 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | | | |
| 09. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக செயலாற்றுகை அளவீடு செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற பிரதான அளவீட்டு அலகு ஒன்று ஆகிய வருமான இலக்கை நெருங்கும் செயலாற்றுகை அளவுகோல், இவ்வாறு வருடம் முடிவடைவதற்கு 13 நாட்கள் இருக்கும் போது வருமான மதிப்பீடு 15.7 சதவீதத்தினால் குறைத்தல் மற்றும் அவ்வாறு குறைக்கப்பட்ட திருத்திய வருமான மதிப்பீடு மற்றும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற உள்ளவாறான வருமானத்துடன் இணக்கஞ் செய்து வருமான இலக்கினை நிறைவேற்றிக் கொள்ளல் 100 சதவீத்தை மிகைத்து நெருங்கியுள்ளதென காட்டியிருப்பதன் மூலம இந்த மதிப்பீடு தயாரிப்பதற்கான தகவல்கள் வழங்குதல் முதல் மதிப்பீட்டு இலக்குகளை நெருங்குதல் வரை நிறுவப்பட்டுள்ள செய்முறைகள் தொடர்பாக கணக்காய்வின் போது | 2023 வருடாந்த வருமான இலக்குகளை சரியாக நிறுவுதல் மற்றும் அவற்றை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2023 ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடொன்று அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு அந்தத் திருத்தங்கள் நிதியமைச்சின் மூலம் 2023 திசெம்பர் 14 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப மதிப்பீடு தயாரித்தல் மற்றும் திருத்திய மதிப்பீடு தயாரித்தல் நிதியமைச்சினால் மேற்கொள்ளப்பட்டாததுடன் அதன்படி, வருமானம் சேகரிக்கும் கருமம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன், திருத்திய மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்யும் போது திணைக்களம் 104% சதவீதத்தினால் வருமான இலக்கினை நெருங்கியிருந்ததெதன. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திருப்தியடைய முடியாது என அவதானிக்கப்பட்டது. | | | | |
| 10. | ஆரம்ப வருமான மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்த்த நேர் வரி வருமானம் 44 சதவீதம் மற்றும் நேரில் வரி வருமானம் 56 சதவீதமும், திருத்திய மதிப்பீட்டின் மூலம் அந்தப் பெறுமதிகள் முறையே 49 சதவீதம் மற்றும் 51 சதவீத தொகையும் உள்ளவாறான வருமானம் சேகரித்தலின் படி அந்தப் பெறுமதிகள் 50:50 வீதமாக காணப்பட்டதுடன், அரச வரி கணித்தல் மிகவும் நியாயமான மற்றும் மெய்ப்பிக்கத்தக்கதாக காணப்பட வேண்டின், நேர் மற்றும் நேரில் வரியின் அமைப்பு மிகவும் பொருத்தமான கலவை என 60:40 மட்டத்தை நெருங்குவதற்காக இலங்கை கொள்கைகள் திட்டமிடலின் இலக்காக இருப்பதுடன், அரச வருமான வரி சேகரிப்பின் படி உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அந்த வரிக் கலவையை நோக்கி நெருங்குவதற்கு மேலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டது. | 2023 | இலங்கையின் கொள்கைகள் தயாரிப்பவர்களின் இலக்கை நோக்கி நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாட்டில் நிலவுகின்ற வரிக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த வருமானம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நிதியமைச்சினாலே அனுப்பப்படுகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 11. | திணைக்களத்தினால் 2016 ஜனவரி முதல் 2020 ஒக்தோபர் வரை 04 வருடங்களுக்கான முறைமை பராமரிப்பு சேவை | 2023 | RAMIS முறைமையின் பராமரிப்பு அலுவல்கள் திணைக்களத்திற்கு | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமையை பராமரிப்பு ஒப்பந்த | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அலுவல்களுக்காக 5,880,313 சிங்கப்பூர் டொலர்கள் (ரூபா 725,882,619) கிரயமொன்றும் மீண்டும் 2021 ஜனவரி 31 வரை 03 மாதங்களினால் ஒப்பந்த உடன்படிக்கையை நீடிப்பதற்காக 309,824 சிங்கப்பூர் டொலர்கள் (ரூபா 46,826,053) செலவிடப்பட்டிருந்ததுடன், 2021 பெப்ரவரி 01 திகதி முதல் 2024 ஜனவரி 31 திகதி வரை 03 வருடங்களுக்காக 21,053,371 சிங்கப்பூர் டொலர்கள் (சுமார் ரூபா 3.1 பில்லியன்) பராமரிப்புச் சேவை ஒப்பந்த வேலை சிங்கப்பூர் ஒத்துழைப்பு நிறுவனத்தின் உப ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. 2024 ஜனவரி அளவில் முறைமையை ஏற்றுக்கொள்வதற்காக பதவியணியினர் ஆட்சேர்ப்பு தாமதமடைந்த காரணத்தினால் மேலும், 03 வருட காலத்திற்காக உடன்படிக்கை நீடிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் 2024 ஏப்ரல் 29 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 7 பில்லியன் செலவொன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | | ஏற்றுக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | வேலை 2024 பெப்ரவரி முதல் 2027 ஜனவரி வரை 03 வருடங்களுக்காக நீடிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் 2024 ஏப்ரல் 29 திகதி வழங்கப்பட்டிருந்தது என. | |
| 12. | RAMIS முறைமை செயற்படும் போது ஏற்படுகின்ற சிக்கல்களுக்காக | 2023 | அரசுக்கு குறைந்த கிரயமொன்று ஏற்படக்கூடியவாறு மிகவும் | RAMIS முறைமை தொடர்பாக மொடியூல் வரிக் கொள்கைகளில் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | RAMIS முறைமையின் சில சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்காக சிங்கப்பூர் நிறுவனத்திற்கு அந்த மாற்றங்களை செய்வதற்காக எடுக்கப்படும் ஒரு மனித நாளுக்காக 1,333 சிக்கப்பூர் டொலர்கள் அதாவது அண்ணளவாக ரூபா 291,000 தொகை செலவு ஏற்படுகின்றதெனவும், அந்தத் தொகை புதிய உடன்படிக்கையின் கீழ் 1,400 சிங்கப்பூர் டொலர்கள் என அண்ணளவாக ரூபா 305,200 என அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி, அந்த நிறுவனத்திற்கு மொடியூல் அபிவிருத்தி செய்வதற்காக செலுத்தப்படுகின்ற மேற்குறிப்பிட்ட கிரயத்திற்கு மேலதிகமாக, இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்காக 2022 ஆண்டில் அவ்வப்போது ரூபா 71,723,662 தொகை செலுத்தப்பட்டிருந்ததென தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | கவனத்துடன் செயற்பட வேண்டியதுடன், முறைமையின் பராமரிப்பை ஏற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். | மேற்கொள்ளப்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப நாளதுவரை ஆக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருத்தல் வழமையாக உள்ளதுடன், இந்த வரிக் கொள்கை மாற்றமடைத்தல் தொடர்பாக முன்தேவைப்பாடு ஒன்று பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதனால் முறைமையை அபிவிருத்தி செய்யும் சந்தர்ப்பங்களில் அதற்காக வசதிகள் வழங்குதல் மேற்கொள்வதற்கு முடியாது என. | |
| 13. | RAMIS 2.0 இன் கீழ் மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கும் மொடியூல் அபிவிருத்தி அடையாமையால் 2022 மே 31 திகதியில் உள்ளவாறு கால எல்லைகளின் கீழான 2018/2019 மதிப்பீட்டாண்டிற்குரிய | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | மாற்று முறைமைகளின் மூலம் தற்போது வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கைகள் RAMIS முறைமையுடன் நாளதுவரை ஆக்கல் மேற்கொள்ளப்பட் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

மேலதிக வருமானம் வரி மதிப்பீட்டு அறிக்கைகள் RAMIS முறைமைக்கு உள்ளீடு செய்வதற்கான வழிகாட்டல் 2024 ஏப்ரல் 10 திகதி வெளியிடப்பட்டிருந்தது டன், அதன்படி, 2018/2019 ஆண்டிற்கான RAMIS முறைமையில் உள்ளீடு செய்ய வேண்டிய மதிப்பீட்டு அறிக்கை எண்ணிக்கை 2,979 தொகை என வழங்கப்பட்டுள்ள தகவல்களின் படி சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும், முறைமையின் அந்த ஆண்டில் மொடியூல் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் 2019/2020 ஆண்டு முதல் 2021/2022 ஆண்டு வரை முறையே 4,489 தொகை, 3,460 தொகை மற்றும் 758 தொகை அறிக்கைகள் முறைமையினுள் உள்ளீடு செய்வதற்காக அந்த ஒவ்வொரு மதிப்பீட்டு ஆண்டிற்குரிய மதிப்பீட்டு மொடியூல்கள் அபிவிருத்தி செய்யப்படாமையால் RAMIS முறைமைக்கு புறம்பான தற்காலிக முறையொன்றில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக முறைமையின் ஊடாக உத்தியோகத்தர்களுக்கு வேலை விடயங்கள் சாட்டுதல் செய்வதற்கு முடியாமல் இருந்தது

டு வருகின்றது என.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எனவும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 14. | 28 நிறுவனங்களை RAMIS முறைமையுடன் இணைத்தல் 04 கட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்கும் அங்கு, தற்போது இலங்கை சுங்கம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, நிதியமைச்சு, கம்பனிப் பதிவாளர் திணைக்களம், லங்கா கிலியர் தனியார் கம்பனி ஆகிய 06 நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டிருந்த போதிலும், மீதியான நிறுவனங்கள் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றமையால், இதுவரை இணைப்பு ஏற்படுத்த முடியாமல் இருந்ததென அவதானிக்கப்பட்டது. | 2023 | நிழவுகின்ற சிக்கல்களை தீர்த்துக்கொண்டு இணைக்கப்பட்டிருக்காத நிறுவங்களை விரைவாக RAMIS முறைமையுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். | தற்போது தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்துள்ள மக்கள் வங்கி, இலங்கை வங்கி, கம்பனிப் பதிவாளர் திணைக்களம், நிதியமைச்சு, சுங்கத் திணைக்களம், இலங்கை கிலியர் தனியார் கம்பனி RAMIS முறைமைக்கு தற்போது இணைக்கப்பட்டுள்ளதுஎனவும், ஏனைய நிறுவனங்களை RAMIS முறைமைக்கு இணைப்பதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை பூர்த்தி செய்திருக்காததுடன், அது தொடர்பாக உரிய நிறுவனங்களை அறிவுருத்தியிருந்ததுடன், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு புறம்பான காரணிகள் இதற்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 15. | RAMIS முறைமை தொடர்பாக மேலதிக கலந்துரையாடல் ஒன்றிற்காக 2024 ஜனவரி 24 திகதி பாராளுமன்றத்தில் | 2023 | RAMIS முறைமையில் பராமரிப்பு அலுவல்களை ஏற்றுக்கொள்வதற்கு | RAMIS முறைமையை பேணிச் செல்வதற்காக தேவைப்படுகின்ற ஊழியர்களின் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடைபெற்ற மற்றும் வழி வகைகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகளில் அடங்கியுள்ளவாறு தனிப்பட்ட சேவையொன்றின் கீழ் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆட்சேர்க்கப்பட்டு RAMIS முறைமையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்காததுடன், RAMIS முறைமையை ஏற்றுக்கொள்ளும் போது குறைந்த அளவில் 50 கணினி தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தொகுதி ஒன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இருக்க வேண்டும் என மதிப்பிடப்படுவதுடன், இந்த எண்ணிக்கை உடன்படிக்கையின் படி மாற்றமடையக்கூடும் எனவும், மேலும், தகவல்கள் பூர்த்தியற்ற முறையில் கிடைத்திருப்பதனால் கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது. | | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எண்ணிக்கையும், அவர்களின் தகைமையும் மற்றும் தேவைப்படும் அனுபவத்துடன், விரிவான ஆவணமொன்று தற்போது NCS நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக தேவைப்படுகின்ற ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வன்பொருள் தேவைப்பாட்டை உட்படுத்தி RAMIS முறைமையை ஏற்றுக்கொள்ளும் எமது விரிவான திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், குறிப்பிட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அதற்குரிய அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | |
| 16. | RAMIS செயற்திட்டத்தின் விடயப் பரப்புக்குரிய கருமங்கள் அணவல் செய்வதற்காக | 2023 | RAMIS முறைமையின் பராமரிப்பு அலுவல்களை ஏற்றுக்கொள்வத | 77 செயற்திட்டப் பதவியணியினர் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் கடமையாற்றியது | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருந்து 77 பேர் 2023 திசெம்பர் 31 திகதி வரை தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த போதிலும், 2024 பெப்ரவரி 16 திகதிய MFI/02/17/IRD/33 கொண்ட நிதி பொருளாதார உறுதிப்படுத்தல்கள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த கடிதத்தின் படி 2024 திசெம்பர் 31 திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 60 வரை குறைக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | | ற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | டன், நிதியமைச்சுச் செயலாளரின் 2024 மார்ச் 04 திகதிய MF/02/17/IRD/33 கொண்ட கடிதத்தின் மூலம் இந்தப் பதவியணியை 60 ஆக வரையறுக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது எனவும், அந்தப் பதவியணியை கொண்டு கருமங்களை நடாத்துவதற்கு போதியளவாக காணப்படவில்லை என. | |
| 17. | RAMIS செயற்திட்டத்தின் கீழ் சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த அழைப்பு நிலையச் சேவை (Call Center) உள்நாட்டு இறைவரித் திணக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டு ஆண்டிற்கு ரூபா 33,844,000 இற்கான பெறுமதி கூட்டிய வரி இன்றிய தொகையொன்றுக்கு 2021 ஏப்ரல் 01 திகதி முதல் 2023 மே 31 திகதி வரையான 02 வருட காலப் பகுதிக்காக தானியார் நிறுவனம் ஒன்றின் கீழ் நடாத்திச் செல்லப்பட்டதுடன், மீண்டும் 2023 ஜூன் 01 திகதி முதல் 2025 மார்ச் 31 திகதி வரை | 2023 | அரசுக்கு குறைந்த கிரயமொன்று ஏற்படக்கூடியவாறு செயற்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் நடாத்தப்படுகின்ற அழைப்பு நிலையச் சேவை விஷேட சேவையொன்றாக காணப்படுவதனால் குறிப்பிட்ட கட்டணம் ஒன்றின் மீது தகைமையுடைய நிறுவனம் ஒன்றின் மூலம் இந்த கருமத்தை நிறைவேற்றல் மேற் கொள்ளப்படுகின்து என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒரு வருடத்திற்கு ரூபா 38,350,000 இற்கான பெறுமதி கூட்டிய வரி இன்றிய தொகையொன்றுக்கு குறிப்பிட்ட ஒப்பந்த வேலையினை நீடிப்பதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இந்த அழைப்பு நிலையத்தின் சேவையை பேணிச் செல்வதற்காக திணைக்களத்தின் பௌதீக மற்றும் மனித வளங்கள் காணப்படாமையினால் இந்த ஒப்பந்த வேலையை நீடிப்பதற்கு நேரிட்டிருந்ததுடன், இந்த அழைப்பு நிலையச் சேவைக்காக 2024 பெப்ரவரி 28 வரை ரூபா 96,450,500 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த சேவைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இந்த மேலதிகச் செலவு மேற்கொள்வதற்கு நேரிடுகின்றதென அவதானிக்கப்பட்டது. | | | | |
| 18. | திணைக்களத்திற்கு சொந்தமான கணக்கீட்டுப் பெறுமதி ரூபா 24,890,000 தொகைக்கான 07 வாகனங்கள் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகள் முதல் விளைவற்றுக் காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. அதன்படி, நிதிக்கூற்றுக்களில் | 2023 | வாகனங்கள் விளைவற்றுக் காணப்படுவதற்கான காரணத்தை கண்டறிந்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2023 வாகனங் கணிப்பீட்டு அறிக்கையின் படி 42 – 7793 மற்றும் 52 – 8295 வாகனங்கள் அப்புறப்படுத்தும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டும், ஏனைய 06 வாகனங்களும் திருத்த | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வாகனங்கள் என காட்டப்பட்டுள்ள ரூபா 320,307,150 தொகைக்கான சொத்துக்களின் பெறுமதியில் மேற்கூறிய விளைவற்றுக் காணப்படும் வாகனங்களின் பெறுமதியும் அடங்குகின்றது. | | | வேலைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், இந்த 08 வாகனங்கள் திணைக்களத்திற்கு சொந்தமான காணப்படுவதனால் அவற்றின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டது என. | |
| 19. | 05 சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த வாகனங்கள் மற்றும் உபகரண விபத்துக்கள் தொடர்பாக ரூபா 8,851,886 இற்கான தொகையொன்று நிதிப் பிரமாணம் 103(1)(ஊ) மற்றும் (ஓ) இணங்க பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்தல் அல்லது பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அறவீடு செய்தல் அல்லது பதிவழித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என. | நட்ட மீளளிப்பு அல்லது இறுதி விசாரணை சபை தீர்மானம் கிடைத்திருக்காமையால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 20. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 126 இற்கு இணங்க வரி செலுத்த வேண்டிய அனைத்து ஆட்களினாலும் ஆணையாளர் நாயகத்தினால் அறுதியாக விதிக்கப்படுகின்ற ஏதேனும் படிவத்தின் படி குறிப்பிட்ட தகவல்கள் அடங்கிய வரித் திரட்டொன்று எழுத்துமூலம் அல்லது இலத்திரனியல் ஊடகம் மூலம் குறிப்பிட்ட காலப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என | 2023 | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 126 இற்ககு இணங்க வரி திரட்டுக்களைத் தருவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 22 வரி செலுத்துவோர்களில் 15 வரி செலுத்துவோர்களினால் திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆண்டுகளுக்காக வரி திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனை ஒன்றின் போது 22 வரி செலுத்துவோருக்கு வரி திரட்டுப் படிவம் அனுப்பியிருந்த போதிலும் அவர்களினால் 2020/2021 மற்றும் 2021/2022 ஆகிய ஆண்டுகளுக்காக குறிப்பிட்ட காலப் பகுதிக்கான வரித் திரட்டுக்கள் அனுப்பியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | | | |
| 21. | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 152 இற்கு இணங்க ஆணையாளர் நாயகத்தினால் வரி அறவிடப்பட வேண்டிய மற்றும் செலுத்துவதற்கு விதிக்கப்பட்ட தினத்தில் வரி செலுத்தி இருக்காத சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு செய்யும் படி வேண்டி வரி செலுத்துபவருக்கு அறிவித்தல் ஒன்று அனுப்ப முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தெரிவுப் பரிசோதனையில் 2020/21 மற்றும் 2021/22 ஆண்டுகளுக்காக 34 நிறுவனங்களில் இருந்து ரூபா 1,357,272,031 இற்கான நிலுவை வரித் தொகையினை அறவீடு செய்வதற்காக திணைக்களத்தினால் முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை என RAMIS முறைமையின் படி | 2023 | நிலுவை வரித்தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 152 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன்வரி செலுத்துவோருக்கு குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கப்பட்டதென. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | | |
| 22. | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 157 பிரிவிற்கு இணங்க குறிப்பிட்ட தினத்தில் உரிய வரித்தொகையை செலுத்தி இருக்காவிடின், செலுத்துபவர் செலுத்துவதற்கு குறிப்பிடப்பட்ட திகதி முதல் வரி செலுத்தும் திகதி வரையான காலப் பகுதிக்காக வட்டியொன்று செலுத்துவதற்கு ஆளாகும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தெரிவுப் பரிசோதனை மேற்கொண்ட 06 நிறுவனங்களினால் ரூபா 260,994,191 இற்கான வரித் தொகையொன்று குறிப்பிட்ட தினத்திற்கு பின்னர் செலுத்தியிருந்த போதிலும், அதற்காக சட்டத்தின் பிரிவு 159 இற்கு இணங்க மாதாந்தம் கணிக்கப்படுகின்ற மாதத்திற்கு அல்லது அதன் பகுதியொன்றிற்கான 1.5 சதவீதமாக ரூபா 14,183,365 இற்கான வட்டித் தொகையொன்று அறவீடு செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2023 | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவிற்கு இணங்க வட்டித் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 157 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள துடன், வட்டித் தொகை அறவீடு செய்தல் தொடர்பாக வரிசெலுத்துவருக்கு அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதென. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 23. | வரி மேன்முறையீட்டுப் பதிவேட்டில் (Received) கீழ் அடங்கியுள்ள வரிசெலுத்துவோரினால் மேற்கொள்ளப்பட்ட கோறிக்கை, செல்லுபடியாகும் | 2023 | சட்டங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து மேன்முறையீடுகளை கால ரீதியாக தீர்ப்பதற்கு | மேன்முறையீடுகளை நடுத்தீர்ப்பு செய்முறை தொடர்பாக மேற்கூறிய தகவல் விசாரணை தொடர்பாக | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேன்முறையீடொன்றென இனங்கண்டிருக்காத 2,192 மேன்முறையீடுகள் தொடர்பாக சர்ச்சைக்குரிய தன்மையுள்ள வரித்தொகை ரூபா 7,415,062,005 தொகை 2017 ஆண்டு முதல் வரி மேன்முறையீட்டுப் பதிவேட்டில் அடங்கியிருந்ததுடன், கணக்காய்வு ஆண்டளவில் உச்ச அளவு 06 ஆண்டுகளை மிகைத்திருந்தது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | தாமதத்தின் காரணமாக பிழையான தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளதுடன், EAQ/2024/28/06-2 கீழ் 2024 ஆகஸ்ட் 28 திகதிய பதில் கடிதத்தின் படி 2024 ஜூலை 16 திகதி அளவில் Received விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மேன்முறையீடுகள் என கிடைக்கப்பெற்ற, எனினும் செல்லுபடியாகும் மேன்முறையீடுகள் என கண்டறிந்திருக்காத எண்ணிக்கை 2017 முதல் 2021 காலப்பகுதி தொடர்பாக 81 தொகையாக காணப்படுவதுடன், அதில் சர்ச்சைக்குரிய தன்மையுள்ள வரித்தொகை ரூபா 607,357,128 தொகை என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| 24. | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் மீளாய்வு (CGIR Hearing) ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆனால் கணக்காய்வுத் திகதியாகிய 2023 மே 25 திகதி அளவிலும் | 2023 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட்டு மேன்முறையீடுகளை கால ரீதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் மீளாய்வு ஆரம்பிக்கப்பட்டு ஆனால் மேன்முறையீடு தீர்த்தல் பூர்த்தி செய்திருக்காத | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேன்முறையீடு தீர்க்கம் செய்முறையின் கீழ் காணப்படுகின்ற 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை பழமையான தீர்த்தல்கள் பூர்த்தி செய்திருக்காத 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை கிடைத்திருந்த பெறமதி ரூபா 65,934,233,430 தொகையான 794 வரி மேன்முறையீடுகள், மேன்முறையீட்டு பதிவேட்டின் படி நடுத்தீர்ப்புச் செய்முறையில் காணப்படுகின்றதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | | 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை கிடைத்திருந்த வரி மேன்முறையீடுகளில் 374 தீர்க்கப்படாத மேன்முறையீடுகள் காணப்பட்டதுடன், அதில் சர்ச்சைக்குரிய தன்மையுள்ள வரித் தொகை ரூபா 77,873,323,792 தொகையென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது. | |
| 25. | திணைக்களத்திற்கு கிடைத்திருந்த நிருவாக மீளாய்வுகள், அதற்குரிய மேன்முறையீட்டுக் கால வரையினுள் தீர்ப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், மேலும், நடுத்தீர்ப்பு செயற்பாடுகளில் பல்வேறு கட்டங்களில் காணப்படுகின்ற (Pending), அறுதியான தீர்மானம் ஒன்றின்றிய 958 வரி மேன்முறையீடுகள் மற்றும் அதற்குரிய பெறுமதி ரூபா 4,990,297,715 தொகைக்கான சர்ச்சைக்குரிய தன்மையுள்ள வரித் தொகையொன்று 2017 ஆண்டு முதல் காணப்படுகின்றதெனவும், அது 02 வருடங்கள் முதல் 06 வருடங்களுக்கும் | 2023 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட்டு மேன்முறையீடுகளை கால ரீதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2024 ஜூலை 16 திகதியளவில் நடுத் தீர்ப்புச் செயற்பாடுகளில் பல்வேறு கட்டங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்ற 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியைச் சேர்ந்த தீர்க்கப்பட்டிருக்காத 124 மேன்முறையீடுகள் காணப்பட்டதுடன், அவற்றில் சர்ச்சைக்குரிய வரித்தொகை ரூபா 987,920,117 தொகை என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இடைப்பட்ட பழமையான மேன்முறையீடுகள் தொடர்ந்தும் மேன்முறையீட்டு நடுத்தீர்ப்புச் செயற்பாடுகளில் காணப்படுகின்றதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 26. | அனேகமான மேன்முறையீடுகள் ஆரம்ப மதிப்பீட்டு வேலைகள் பூர்த்தி செய்யும் போது எழுந்திருந்த சிக்கல்களாகிய, கடந்த ஆண்டின் நட்டம் உறுதிப்படுத்தப்பட்டிருக்காமையினால், முன்கொண்டு வரப்பட்டிருந்த எதிரீடு செய்யப்படாத வரி பொறுப்புக்கள், முன்னைய காலாண்டில் திருப்பிச் செலுத்துதல்கள், ஏனைய காலப் பகுதிக்குரிய வரி பொறுப்புக்கள் காணப்படல் ஆகிய பல்வேறு காரணங்களை தீர்ப்பதற்காக வெளியிடப்பட்ட மதிப்பீடின் மீது மேன்முறையீடு போலவே உத்தியோகத்தரினால் மேன்முறையீடுகள், விசாரணைகள் என இனங்காண வேண்டியிருந்த போதிலும், பிழையான முறையில் மேன்முறையீடுகள் என பதிவு செய்திருத்தல் மற்றும் மேன்முறையீடுகளை தீர்க்கும் போது முறைமையில் காணப்படும் சீக்கல்கள் மீது | 2023 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட்ட மேன்முறையீடுகளை கால ரீதியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேன்முறையீடுகள் தீர்ப்பதற்கு தாமதம் அடைவதற்கு தாக்கத்தை ஏற்படுத்திய பல்வேறு காரணங்கள் காணப்பட்டதென உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்முறை ரீதியாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுதல் மற்றும் முறைமையில் தரவுகள் நாளதுவரையாக காணப்படாமை ஆகிய பல்வேறு காரணங்களினால் மேன்முறையீட்டு நடுத்தீர்ப்பு செய்முறை தாமதம் அடைந்திருந்ததென உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் கணக்காய்விற்கு வெளியிடப்பட்டிருந்தது. | | | | |
| 27. | ஒரு தடவை மாத்திரம் அறவிடக்கூடிய வரி ஒன்றென 2022 ஆண்டு வருடாந்த பாதீட்டின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த மிகை விதிப்பு வரி 2022 இன் 14 ஆம் இலக்க மிகை விதிப்பு வரிச் சட்டத்தின் பிரிவு 2(1)(அ) இற்கு இணங்க 2020 ஏப்ரல் 01 திகதி ஆரம்பிக்கும் மதிப்பீட்டு ஆண்டிற்காக வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா இரண்டாயிரம் மில்லியன் தொகையை மிகைக்கக்கூடிய ஏதேனும் நபர் ஒருவரின், அல்லது பங்குடைமையின் அல்லது கம்பனி ஒன்றின் வரி அறவிடக்கூடிய வருமானத்தின் மீது 25 சதவீதத்தில் அறவிடப்படக்கூடியவாறு வினைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், மிகை விதிப்பு வரி தொடர்பான | 2023 | வரிக்கு உட்படுகின்ற வரி செலுத்துவோர் சரியான முறையில் இனங்காண்பதற்கு மற்றும் வரிப் பொறுப்பு உரிய முறையில் சித்தரிக்கக் கூடியவாறு முறைமை நாளதுவரையாக பேணிச் செல்லல், நிலுவை வரி அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | RAMIS முறைமையில் அடங்கியிருக்காத போதிலும், மிகை விதிப்பு வரி தொடர்பாக தகவல்கள் சரியாக இனங்கண்டிருந்ததுடன், தகவல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிலுவை வரி அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தகவல்கள் RAMIS முறைமையில் உட்படுத்தியிருக்காததுடன், அந்த வரி கோப்புக்கள் என (Manual) பேணிச் சென்றிருந்தது. | | | | |
| 28. | மிகை விதிப்பு வரிச் சட்டத்தின் பிரிவு 2(4) படி இந்தச் சட்டத்தின் கீழ் வரி செலுத்த வேண்டியவர்கள் ஆணையாளர் நாயகத்திற்கு 2022 ஏப்ரல் மாதம் இருபதாம் திகதியில் அல்லது 2022 ஜூலை மாதம் இருபதாம் திகதியில் அல்லது அத் திகதிக்கு முன்னர் சமமான இரண்டு தவணைகளாக வரி செலுத்தப்பட வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. அதன்படி, திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களை பரிசோதனை செய்த போது 08 வரி செலுத்துவோர்களினால் குறிப்பிட்ட தினத்தில் வரித் தொகையை செலுத்தாமல் தாமதித்து செலுத்தியிருந்த வரித்தொகையின் பெறுமதி ரூபா 2,692,889,914 தொகையாக இருந்தது. | 2023 | மிகை விதிப்பு வரிச் சட்டத்தின் பிரிவு 2(4) இணங்க குறிப்பிட்ட தினத்தில் வரித் தொகையை தருவித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | RAMIS முறைமையில் அடங்கியிருக்காத போதிலும், மிகை விதிப்பு வரி தொடர்பாக தகவல்கள் சரியாக இனங்கண்டிருந்ததுடன், தகவல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிலுவை வரி அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 29. | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 157 மற்றும் 159 இற்கு இணங்க குறிப்பிட்ட தினத்திற்கு பின்னர் வரித்தொகை செலுத்துவதன் காரணமாக அறவீடு | 2023 | தாமதமாக வரி செலுத்துதல் காரணமாக அறவீடு செய்யப்பட வேண்டிய தண்டம் மற்றும் வட்டித் தொகை | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட தண்டம் மற்றும் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட வேண்டிய தண்டம் மற்றும் வட்டித் தொகை செலுத்தும் படி 04 வரிதாரர்களுக்கு 2023 ஆண்டில் அவ்வப்போது அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய மொத்த வட்டித் தொகை ரூபா 71,134,984 தொகை மற்றும் தண்டத் தொகை ரூபா 82,239,024 தொகையாக காணப்பட்டது. மேலும், வேறொரு வரிதாரருக்கு குறிப்பிட்ட வட்டி மற்றும் தண்டப் பணம் செலுத்தும் படி அறிவித்தல் வழங்கப்பட்டதென கணக்காய்விற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்குரிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | வட்டித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | |
| 30. | உழைக்கும்போதே வரி (PAYE) மற்றும் தடுத்து வைத்தல் வரி (WHT) வரி வகைகள் தொடர்பாக வரி ஆண்டு 2018/2019 முதல் 2021/2022 வரை மேலதிக வரி திரட்டுக்கள் வெளியிடுதல் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல்கள் முறைமைக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையில் | 2023 | மதிப்பீட்டு திரட்டுக்கள் வழங்கப்படக் கூடியவறு RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | மேலதிக மதிப்பீடு முறைமைப் படுத்தும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வரிதாரர்களின் வரி பொறுப்பு சரியாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 31. | வரி தொடர்பான அனைத்துத் தகவல் முறைமையில் உட்படாத காரணத்தினால் நிலுவை வரி அறிக்கை மீதிகள் முறைமையின் மீதிகளுடன் ஒத்திருக்காமை மற்றும் முறைமையில் காணப்படுகின்ற பல்வேறு குறைபாடுகள் காரணமாக உத்தியோகத்தர்களுக்கு வேலை விடயங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் உள்ளதென கணக்காய்வினால் அறிவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்படல். | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | RAMIS 2.0 இன் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 32. | RAMIS செயற்படுத்தும் கட்டம் II இன் கீழ் முறைமைப்படுத்துவதற்கு எதிர் பார்க்கப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரி இதுவரை முறைமைப்படுத்தியிருக்கவில்லை. மேற்கூறிய பந்தயம் மற்றும் சூதாட்ட வரி மூலம் 2023 ஆண்டில் மதிப்பீட்டு வருமானம் ரூபா 5,500 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2023 ஆண்டில் உள்ளவாறான வருமானம் ரூபா 7,421,816,561 தொகையும் நிலுவை வரிப் பெறுமதி ரூபா 5,563,543,778 | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்ட வேண்டியதுடன், அனைத்து வரி வகைகளையும் முறைமைப்படுத்துதல் மிகவும் பொருத்தமானதாகும். | பந்தயம் மற்றும் சூதாட்ட வரியை முறைமைப்படுத்தும் தேவைப்பாட்டு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையும் காணப்பட்டது. பந்தய மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வரி செலுத்துவோரின் எண்ணிக்கை கெஸினோவிற்காக 04 தொகை மற்றும் ஏனைய பந்தயம் மற்றும் சூதாட்ட தொழில் 401 தொகையும் காணப்பட்டது. | | | | |
| 33. | 2005 இன் 05 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தி செயற்படுத்தப்பட்டிருந்த, பங்குத் தரகர்கள் அல்லது பங்கு வியாபாரிகள் அல்லது பாதுகாப்பு வங்கி ஆகிய மூன்றாம் தரப்பினரால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சேகரிக்கப்பட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்ற பங்கு கொடுக்கல் வாங்கல் வரி RAMIS முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட வரியின் மூலம் 2023 ஆண்டின் போது ரூபா 2,477,736,910 இற்கான வருமானம் ஒன்றினை உழைத்திருந்ததுடன், 2023 ஆண்டிற்கான மதிப்பீட்டு வரி வருமானம் ரூபா 1,980 மில்லியன் தொகையாக காணப்பட்டது. | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், அனைத்து வரி வகைகளையும் முறைமைப்படுத்துவதல் மிகவும் பொருத்தமானது ஆகும். | இணங்கப்படுகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 34. | 2015 இல் குடியகழ்வு வரி மற்றும் 2017 இன் அனுப்புதல் கட்டணம் அறிமுகப்படுத்தி, அந்த வரி அறிமுகப்படுத்தி இதுவரை 03 | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி | இணங்குகின்றேன் என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை மூலம் வரி நிருவாக அலுவல்கள் மேற்கொள்ளப்படாதது டன், புதிய வரிகள் அறிமுகப்படுத்துதல் அவற்றை முறைமைப்படுத்துதல் இடையே கூடிய கால தாமதம் ஒன்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | | செய்யப்பட வேண்டியதுடன், அனைத்து வரி வகைகளையும் முறைமைப்படுத் துதல் மிகவும் பொருத்தமானது ஆகும். | | |
| 35. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) அபிவிருத்தி அலுவல்களை ஆரம்பிக்க முன்னர் இனங் காணப்பட்ட சில வரி வகைகள் போலவே முறைமை அபிவிருத்தி அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னைய காலங்களில் அறிமுகப்படுத்தியிருந்த வரிகள் தொடர்பான நிருவாக அலுவல்கள் இந்த முறைமையின் மூலம் செயற்திறனுடன் மேற்கொள்ளப்படவில் லை என அவதானிக்கப்பட்டது. | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், அனைத்து வரி வகைகளையும் முறைமைப்படுத் தும் மிகவும் பொருத்தமானது ஆகும். | கடந்த ஆண்டுகளில் நிலவிய COVID தொற்றுநோய் நிலைமை, பொருளாதார வீழ்ச்சி, RAMIS செயற்திட்டத்திற்கு உரியவாறு உடன்படிக்கை மேற்கொள்ளப்படா மையினால் ஏற்பட்டிருந்த சிக்கல் தன்மைகள் காரணமாக RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் ஓரளவு தூரம் தடைப்பட்டிருந்தது டன் தற்போது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டி ருக்கவில்லை. |
| 36. | TIN இலக்கம் 11401***** இன் கூட்டிணைந்த வருமான வரி (Corporate Income Tax) செலுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விரிவான கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. | | | | |
| | மதிப்பீட்டாண்டுகள் 2019/2020, 2021/2022 மற்றும் 2022/2023 மதிப்பீட்டு ஆண்டுகளுக்காக சுயமதிப்பீடு அறிக்கைகள்/ வரி திரட்டு (TAX Return) மேற்கூறிய கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், RAMIS முறைமையினுள் குறைந்த அளவு அந்த வரித் திரட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரிப் பொறுப்புக்களையேனும் செலுத்த வேண்டிய வரி மீதிகள் என குறிப்பிடப்படாமையினால் முறையினுள் கம்பனியின் பெயரில் ஒவ்வொரு காலப் பகுதி தொடர்பான பிழையான வரி திருப்பிச் செலுத்துதல் (Refund) அறிவிக்கப்பட்டிருப்பதால் அரசுக்கு அறிவிடப்பட வேண்டிய வரி வருமானம் தொடர்பாக வழுக்கலுடனான அறிக்கையிடல் ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | 2023 | RAMIS 2.0 மொடியூலை அபிவிருத்தி செய்தல் மற்றும் வழுக்களை சரி செய்தல் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன் என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 37. | 2015/2016 மதிப்பீட்டு ஆண்டின் போது வருட இறுதியில் செலுத்த வேண்டிய மதிப்பிடப்பட்டிருந்த வருமான வரி மற்றும் தண்டப் பணம் ரூபா | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி மற்றும் வழுக்களை சரி செய்யும் அலுவல்கள் | 1516 – தடுத்து வைத்தல் வரி இடமளிக்காமை தொடர்பாக வரி செலுத்துவோரினால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிரு | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 21,624,871 தொகையாக காணப்பட்டதுடன், அந்த வரித் தொகையினை கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 03 திகதி வரை செலுத்துவதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், RAMIS முறைமையில் தொடர்ந்தும் அதற்குரிய வேலை விடயம் 08 வருடங்களை விட மிகையான காலம் முதல் திறந்து காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | | விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அனைத்து வரி வகைகளையும் முறைமைப்படுத்துதல் மிகவும் பொருத்தமானது ஆகும். | ந்ததுடன், இது தொடர்பான நடவடிக்கைகளை பூர்த்தி செய்த பின்னர் தற்போது RAMIS முறைமையில் காணப்படுகின்ற வழுக்கள் காரணமாக குறிப்பிட்ட வரி பொறுப்புக்களுக்கு இடமளிப்பதற்கு முடியாது காணப்படுகின்றது எனவும் மற்றும் இது தொடர்பாக RAMIS பிரிவுடன் கலந்துரையாடி வரி பொறுப்புகளுக்கு இடமளித்த பின்னர் வேலை விடயங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| 38. | இரண்டு வரி செலுத்துவோர் முறைமையை தற்போது பெறுமதி கூட்டிய வரி செலுத்துவதற்காக இலக்கம் 7000 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் செயற்படும் வரி செலுத்துவோராக காணப்பட்ட போதிலும், தெரிவுக் கணக்காய்வின் படி 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே CIF கூட்டிய பெறுமதியினால் ரூபா 270,297,115 இற்கான மற்றும் ரூபா 175,177,269 இற்கான சீனி இறக்குமதி செய்வதற்கான TIN இலக்கம் 2525 இன் கீழ் தற்காலிகமாக | 2023 | தற்போது பெறுமதி கூட்டி வரி செலுத்துவதற்காக இலக்கம் 7000 இன் கீழ் நிரந்தரமாக பதிவு செய்யப்பட்டிருக்கின்ற செயற்படு வரி செலுத்துவோர்களுக்காக தற்காலிக பதிவு செய்தல் இலக்கம் வழங்க முடியாதவாறு உள்ளகக் கட்டுபாட்டுச் செய்முறை ஒன்று நிறுவுதல் மற்றும் RAMIS முறைமை மூலம் | மேற்கூறிய நிறுவனங்கள் நிரந்தரமாக பெறுமதி கூட்டிய வரிக்காக பதிவு செய்து செயற்படு வரி செலுத்துவோர் ஆக மாறும் போது தற்காலிக பதிவு செய்தல் கட்டாயமாக இரத்துச் செய்யப்படுவதுடன், அதன் காரணமாக அவற்றின் பின்னர் தற்காலிக வரி சான்றிதழ் மூலம் பண்டங்கள் இறக்குமதி செய்தல் முடியாமல் போகும். அவ்வாறு | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பதிவு செய்தல் இலக்கம் வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் செயற்படு VAT வரி முறையின் கீழ் பதிவு செய்திருக்கும் வரி செலுத்துவோருக்கு தற்காலிக பதிவு செய்தல் TIN இலக்கம் வழங்குவதன் மூலம் அது தொடர்பாக திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறை உரிய முறையில் செயற்படவில்லை எனவும் மற்றும் RAMIS முறைமை மூலம் இவ்வாறான தொழிற்பாடுகள் தன்னியக்கமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | அவ்வாறான தொழிற்பாடுகள் தன்னியக்கமாக கண்டறியக்கூடியவாறு முறைமையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இறக்குமதி செய்திருந்தால் அது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு புறம்பான சந்தர்ப்பம் ஒன்றென. | |
| 39. | தற்காலிக VAT முறைமையின் கீழ் இறக்குமதி மேற்கொண்டிருந்த சீனி இறக்குமதியாளர்களில் தெரிவுக் கணக்காய்வின் படி 14 இறக்குமதியாளர்கள் வருமான வரிக்காக பதிவு செய்திருந்த போதிலும், 2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்கான 2023 நவம்பர் 30 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருமான வரி திரட்டு கணக்காய்வுத் திகதியாகிய 2024 ஜனவரி 30 திகதி வரை சமர்ப்பித்திருக்காததுடன், அவர்கள் அனைவர்களினாலும் | 2023 | பெறுமதி கூட்டிய வரிக்காக தற்காலிக பதிவு வரி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யும் போது குறிப்பிட்ட செலுத்த வேண்டிய வரித் தொகை செலுத்தப்பட்டதற்கு உரிய வரி திரட்டு வழங்கப்பட்டுள்ளது என சான்று படுத்திய பின்னர் தற்காலிக பதிவு இலக்கங்கள் வழங்குதல். | 14 இறக்குமதியாளர்களினால் வருமான வரித் திரட்டு சமர்ப்பித்தலின் முன்னேற்றம் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் முறையே 2525 இன் கீழ் இறக்குமதி செய்திருந்த சீனி இறக்குமதிகளில் மொத்த CIF பெறுமதி ரூபா 3,580,948,952 தொகை ரூபா 8,661,150,315 தொகையாக காணப்பட்டது. | | | | |
| 40. | 2024 ஆண்டில் வருடாந்த மதுவரி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கும் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளளை காட்டாயமாக்கியிருந்த நிபந்தனை மதுவரித் திணைக்களத்தினால் அகற்றியிருந்தமையால் 2024 ஆண்டிற்காக 443 அனுமதிப்பத்திரக்காரர்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து இசைவுச் சான்றிதழ் விண்ணப்பித்திருந்த போதிலும் அவற்றில் 241 அனுமதிப்பத்திரதாரர்கள் இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு முன்வந்திருக்கவில்லை. அவ்வாறு இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள முன்வந்திருக்காத 40 வரி செலுத்துவோர் மாதிரி பரிசோதனையின் போது 21 வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 187,644,815 இற்கான நிலுவை வரி | 2023 | மதுபான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக வரி இசைவுச் சான்றிதழ் வழங்கும் போது குறிப்பிட்ட செலுத்த வேண்டிய வரித் தொகையை செலுத்தியுள்ள படியும் / குறிப்பிட்ட வரித் திரட்டு வழங்கப்பட்டுள்ளதென திருப்திகரமாக சான்றுபடுத்திய பின்னர் மதுபான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக வரி இசைவுச் சான்றிதழ் வழங்கப்படல் வேண்டும். | இந்த இசைவுச் சான்றிதழ் 2023 நவம்பர் 20 திகதிய அறிவுரை தொகுப்பு இலக்கம் 1, 2 மற்றும் 4 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளை கடைபிடித்து வழங்கப்பட்டது என மற்றும் அந்த அறிவுரை தொகுப்பின் பிரதியொன்று மற்றும் உரிய தகவல்கள் 2024 ஏப்ரல் 25 திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீதியொன்று காணப்பட்டதென 2023 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு நிலுவை வரிப் பதிவேட்டின் படி அவதானிக்கப்பட்டது. | | | | |
| 41. | 1988 இன் 40 ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தின் பிரிவு 2 மற்றும் 2015 இன் 14 ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூசாட்ட வரி (திருத்திய) சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்களின் படி நேரடி ஒலிபரப்பு வசதிகளுடனான பந்தய நிலையங்களினால் மதிப்பீட்டு ஆண்டுகள் 2014/2015 (2015 மார்ச் 31 திகதி) வரை செலுத்த வேண்டிய வருடாந்த வரி ரூபா 300,000 தொகை மற்றும் மதிப்பீட்டு ஆண்டு 2015/2016 (2015 ஏப்ரல் 01 திகதி) முதல் செலுத்த வேண்டிய வருடாந்த வரி ரூபா 600,000 தொகையாக காணப்பட்டதுடன், 2023 ஏப்ரல் 01 திகதி முதல் அதனை ரூபா 1,000,000 வரை அதிகரித்திருந்ததுடன், அந்த வரியினை மதிப்பீட்டு ஆண்டினுள் சமமான 04 தவணைகளில் மற்றும் குறிப்பிட்ட தவணை காலண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்ததுடன், 2023 மதிப்பீட்டு ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்டிருந்த வரி செலுத்துவோரினால் | 2023 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய வரியினை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட நிலுவை வரியில் ஒரு வரி செலுத்துவரினால் நிலுவைத் தொகை மற்றும் 50% தண்டப் பணமுமாக ரூபா 525,000 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதியான வரியை அறவீடு செய்வதற்காக சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 103,450,000 தொகை பெறுமதியான வருடாந்த வரித்தொகை மாத்திரம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | | | |
| 42. | 1988 இன் 40 ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தின் பிரிவு 2(1) மற்றும் 2001 இன் 07 இலக்க பந்தய மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தின் திருத்தங்களின் படி நேரடி ஒலிபரப்பு வசதிகளுடனான பந்தய நிலையங்களினால் வருடாந்த வரிக்குரிய தவணை காலாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், தற்போது செலுத்தி முடிந்துள்ள வருடாந்த வரி உரிய முறையில் குறிப்பிட்ட தினங்களில் செலுத்திருக்காததுடன், தாமதமாக கொடுப்பனவு காணப்படுகின்றதெனவும், அந்த தாமதமான வருடாந்த வரி கொடுப்பனவு தொடர்பாக விதிக்கக்கூடிய தண்டத் தொகை கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 31 வரை அண்ணளவாக ரூபா 103,100,000 தொகை என கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் படி அவதானிக்கப்பட்டது. | 2023 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவைவரி மற்றும் தண்டம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சட்டத்தின் படி செயற்பட்டு வரி செலுத்துவோரிடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 43. | நேரடி ஒலிபரப்பு வசதிகள் காணப்படுகின்ற | 2023 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட | சட்டத்தின் படி செயற்பட்டு வரி செலுத்துவோரிடன் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பந்தய நிலையங்கள் தொடர்பாக 2014 ஆண்டு முதல் செலுத்தப்பட்டிருக்காத வருடாந்த வரி மற்றும் தாமதமாக செலுத்தியிருந்த கொடுப்பனவு தொடர்பாக வழங்கப்பட்டிருந்த மதிப்பீடு தொடர்பான பரிசோதனையின் போது இது வரை அறவிடப்படாமல் காணப்படுகின்ற வரி மற்றும் தண்டப்பணம் ரூபா 206,200,000 தொகை என அவதானிக்கப்பட்டது. | | வேண்டியதுடன், வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய வரியினை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | |
| 44. | 2014/2015 ஆண்டுகள் முதல் 2022/2023 ஆண்டுகள் வரை 03 தொழில் முயற்சிகளில் சில காலப் பகுதிகளுக்காக மாதாந்த மொத்த கூட்டுத்தொகை மீது செலுத்த வேண்டிய வரி உரிய முறையில் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் செலுத்தியிருக்காததுடன், அதன்படி ஒவ்வொரு ஆண்டிற்குமாக நேரடி ஒளிபரப்பு வசதிகளுடனான பந்தய நிலையங்களில் தாமதமாக மொத்த கூட்டுத்தொகை மீது வரி செலுத்தல் தொடர்பாக மேலும் அறவீடு செய்ய வேண்டிக் காணப்படுகின்ற தண்டத் தொகை அண்ணளவாக ரூபா 1,679,339,966 தொகை என அவதானிக்கப்பட்டது. | 2023 | வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய மீதியான நிலுவை வரி மற்றும் தண்டப் பணம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2014/2015, 2015/2016 மதிப்பீட்டு ஆண்டுகளுக்குரிய நிலுவை வரி தொடர்பாக வரி செலுத்துவோரினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 45. | 2014 ஆண்டு முதல் | 2023 | சட்டங்களுக்கு | இந்த நிலுவை | பரிந்துரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நேரடி ஒளிபரப்பு வசதிகளுடனான பந்தய நிலையங்களினால் செலுத்தப்படாத மாதாந்த மொத்தக் கூட்டுத்தொகை மீது செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் தாமதமாக மேற்கொண்டிருந்த கொடுப்பனவு தொடர்பாக இதுவரை வழங்கப்பட்டிருந்த மதிப்பீடுகள் தொடர்பாக அறவீடுகள் செய்யப்படாமல் காணப்படுகின்ற மாதாந்த மொத்த கூட்டுத்தொகை மீதான வரி மற்றும் தண்டப் பணம் ரூபா 2,621,108,150 தொகையாகும். | | இணங்க செயற்பட வேண்டியதுடன், வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய வரியினை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரித் தொகைக்காக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று சமர்பிக்கப்பட்டுள்ளது என. | செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 46. | வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையினுள் பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரி தொடர்பான மொடியூல்கள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்காமையால் மேற்கூறிய வரி செலுத்துவோரின் வருமான திரட்டுக்கள், வரி கொடுப்பனவுகள், மதிப்பீடு வழங்குதல், முன்னேற்றம் மற்றும் அனைத்து நிருவாக அலுவல்கள் கோப்புகள் மெனுவல் முறையில் பேணிச் செல்லல் மேற்கொள்ளப்படுவதனால் தவவல்களின் உண்மைத் தன்மை கோப்புக்களின் மூலம் வழங்கியிருந்த தகவல்கள் அடிப்படையில் கணக்காய்வு அலுவல்களை | 2023 | RAMIS 2.0 மொடியூல் அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன், அனைத்து வகையான வரிகளும் முறைமையாக்கப்படுதல் மிகவும் பொருத்தமானது. | பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரி வகைகள் RAMIS முறைமைக்கு உட்படுத்துவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உறுதிப்படுத்துவதற்கு நேரிட்டிருந்ததுடன், வரி உத்தியோகத்தர்களின் நிருவாக வேலைகளை குறைப்பதற்காக மற்றும் வரி இணக்கப்பாட்டின் ஆக்கபூர்வமாக மேற்கொள்ளல் மற்றும் தகவல்களின் சரியான தன்மை மற்றும் நாளதுவரை ஆக பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 47. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் 289 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்தில் 28 வெற்றிடங்களும், இரண்டாம் மட்டத்தில் 84 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டத்தில் 105 வெற்றிடங்களுமாக 506 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதற்கு ஒத்ததாக 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 320, 387 மற்றும் 437 தொகைகள் காணப்பட்டன. இதன்படி, திணைக்களத்தின் ஊழியர் வெற்றிட எண்ணிக்கை பல வருட காலமாக முறைப் பிரகாரம் அதிகரிப்பொன்று காட்டப்படுவதுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட | 2023 | திணைக்கள வெற்றிடப் பதவிகளுக்காக அத்தியவசியமான பதவியணியினைர ஆட்சேர்ப்பதற்கு மற்றும் அத்தியவசியமான வெற்றிடப் பதவிகளை குறித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணங்குகின்றேன். | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பதவியணி எண்ணிக்கையில் 17.6 சதவீதத்தை கொண்டிருந்தது. | | | | |
| 48 | RAMIS முறைமையின் கட்டம் 2.0 இற்கு உரிய ஆரம்ப இனங்காண்பதற்கு புறம்பாக நிறைவேற்றப்பட வேண்டிய மேலதிக தேவைப்பாடுகள் அடங்கிய ஆவணத்தின் பிரதியொன்று மற்றும் அந்தத் தேவைப்பாட்டின் முன்னேற்றம் கணக்காய்விற்கு அறிவிக்கப்படாமையினால் அந்தக் கட்டங்களின் ஆரம்ப இனங்காணலுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் சரியான தன்மை கணக்காய்விற்கு பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | 2022 | தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 42 இற்கு இணங்க கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவர் வேண்டியிருந்த போது ஆவணங்கள் அல்லது அறிக்கைகள் குறிப்பிட்ட காலப் பகுதியில் சமர்ப்பிக்காமல் இருத்தல் குற்றமொன்றென காட்டப்பட்டுள்ளது. | பதிலளிக்கப்படவில்லை. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 49 | RAMIS செயற்திட்டம் நிறுவுவதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவியணியினரின் செலவு<br><br>RAMIS செயற்திட்டம் நிறுவுவதற்காக பேணிச் செல்லப்படுகின்ற செயற்திட்ட அலுவலகத்தின் 2021 கொடுப்பனவுகள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் படி 71 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் மொத்தமான ரூபா 2,557,512 வீதம் | 2022 | மேலதிக ஊதியமொன்று செலுத்தும் போது வழமையான கடமைக்கு புறம்பாக சேவை வழங்கப்படுகின்றதென உறுதிப்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும் என. | பதிலளிக்கப்படவில்லை. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், 2020 ஆண்டு ஒக்தோபர் முதல் 2021 ஆண்டின் ஒக்தோபர் வரையான காலப் பகுதிக்கு உரிய RAMIS செயற்திட்ட பதவியணியினருக்காக ரூபா 44,114,059 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த செயற்திட்ட பதவியணியினர் உள்நாட்டு இறைவரித் திணைக்கள கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும் போதே இந்தச் செயற்திட்டத்தின் அலுவல்களுக்காக தமது சேவைப் பங்களிப்பினை வழங்குதல் மேற்கொள்ளப்படுவதனால் 2014 முதல் 2022 ஆண்டு வரை அண்ணளவாக 10 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் நிரந்தர கடமை அலுவல்களுக்கு பதிப்பொன்றை ஏற்படுத்தக்கூடும் எனவும், செயற்திட்டத்தை தாமதம் இன்றி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளாமை திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயற்திறனுக்கு பிரதிகூலமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | | | | |
| 50 | 1988 இன் 40 ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தின் பிரிவு 2 மற்றும் 2015 இன் 14 | 2022 | குறிப்பிட்ட வரி செலுத்துவோர்களிடம் அறவிடப்பட வேண்டிய வரித் | ஒரு நிறுவனம் குறிப்பிட்ட காலப் பகுதியில் தொழில் முயற்சிகள் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரி(திருத்திய) சட்டத்தின் படி கெஸினோ தொழில் நடாத்திச் செல்பவர்களினால் ரூபா 200 மில்லியன் தொகை வருடாந்த வரியொன்று செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இரண்டு கெஸினோ தொழில் நிறுவனங்களினால் ரூபா 300,000,000 தொகை பெறுமதியான வருடாந்த வரி செலுத்தியிருக்கவில்லை. | | தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்கொண்டிருக்காததுடன், இரண்டாவது நிறுவனத்தினால் மேலும் ரூபா 300 மில்லியன் தொகை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | |
| 51 | உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரி தொழில் முயற்சிகள் தொடர்பாக திணைக்களப் படிவத்தின் படி குறிப்பிட்ட காலாண்டில் மொத்த பெறுவனவு அறிக்கை மாத்திரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த பெறுவனவுகளின் சரியான தன்மையினை பரிசோதனை செய்வதற்கு முடியுமானவாறு தகைமையுடைய வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறைகள் நிறுவியிருக்காமையால் கெஸினோ தொழில் முயற்சிகள் மீது அறவிடப்பட வேண்டிய மொத்த சேகரிப்புக்கள் மீதான வரி சரியாக அறவீடு செய்யப்படுகின்றது என கணக்காய்வின் போது | 2022 | வரி செலுத்துவோரினால் அறிவிக்கப்படுகின்ற மொத்தப் பெறுவனவுகள் அல்லது புரழ்வுகள் வேறாக இனங்காணக்கூடியவாறு பொருத்தமான வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறையொன்று நிறுவப்பட வேண்டும். | புதிய படிவத்தின் கீழ் மொத்த சேகரிப்பு மீது திரட்டுக்கள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்படவில்லை. | | | | |
| 52 | 2013 இன் 19 ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரி (திருத்திய) சட்டம் மற்றும் அதற்குரிய திருத்தங்களின் படி மொத்த சேகரிப்பு தொடர்பான அறிக்கை காலாண்டு இறுதியை தொடர்ந்த மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டு தொடர்ந்து வரும் மாதத்தின் முதலாம் வாரத்தில் செலுத்தப்பட வேண்டும். திரட்டு ஒப்படைக்க முடியாமல் போனால் ரூபா 50,000 இற்கான உச்சமட்ட தண்டப் பணமொன்றும் குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் மேற்கூறிய சட்டம் மற்றும் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு இணங்க தண்டமும் விதிக்கப்பட வேண்டும். மதிப்பீட்டு ஆண்டுகள் 2014/2015 ஆண்டுகள் முதல் 2022/2023 ஆண்டுகள் வரை மொத்த சேகரிப்பு தொடர்பான அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு குறிப்பிட்ட திகதியில் ஒப்படைத்திருக்காத சந்தர்ப்பங்களில் மற்றும் செலுத்த வேண்டிய வரியினை குறிப்பிட்ட திகதியில் செலுத்தப்படாமை மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 342,281,284 தொகைக்கான | 2022 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய தொகைகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 முதல் 2021 ஆண்டு வரை தொற்றுநோய் காரணமாக மொத்த அறிக்கைகள் கிடைக்கப்படாததுடன், அதற்காக தண்டம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிலுவைத் தண்டம் மற்றும் அதற்குரிய வட்டியை அறவீடு செய்வதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 53 | 2015 இன் 14 ஆம் இலக்க பந்தயங்கள் மற்றும் சூதாட்ட வரி (திருத்திய) சட்டத்தின் பிரிவு 2 இற்கு இணங்க 2015 ஜனவரி 01 திகதி அல்லது அதன் பின்னர் இலங்கையில் சூதாட்ட வியாபாரங்கள் நடாத்திச் செல்லபப்படுகின்ற அனைத்து நபர்களினாலும் அந்த சூதாட்ட வியாபாரம் நடாத்திச் செல்லும் இடத்திற்கு வரக்கூடிய அனைத்து நபர்களிடமும் 100 அமெரிக்கா டொலர்கள் அல்லது மாற்றக்கூடிய அதற்கு சமமான ஏனைய பிரயோக பணம் அல்லது அதற்கு சமமான இலங்கை ரூபாக்களினால் கெஸினோ பிரவேச வரி அறவீடு செய்யப்பட வேண்டும். இந்த வரி அறவீடு 2016 – 2019 ஆண்டு வரை இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், மீண்டும் 2019 ஆண்டு முதல் கெஸினோ தொழில் நிலையங்களிற்கு நுழையும் இலங்கையில் வதியும் நபர்களுக்கு அல்லது பிரஜைகளுக்கு 50 அமெரிக்கா டொலர்களுக்கான தொகையொன்று அறவீடு செய்வதற்கு முன்மொழியப்பட்ட | 2022 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய தொகைகளை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2023 பெப்ரவரி முதல் நுழைவு வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதிலும், திணைக்களத்தினால் இந்த வரியை அறவீடு செய்தல் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | | | | |
| 54 | 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினால் விதிக்கப்பட்டிருந்த கெஸினோ தொழில் முயற்சிகளில் இருந்து வருமானம் மீதான வரி தொழில் முயற்சியாளர்களினால் தவணைகளாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், இரண்டு கெஸினோ தொழில் முயற்சிகளினால் மேலும், மேற்கூறிய வரி தொடர்பாக ரூபா 2,380,000,000 தொகை பெறுமதியான நிலுவை வரி அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | 2022 | சட்டங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், வரி செலுத்துவோரிடம் அறவிடப்பட வேண்டிய தொகைகளை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். | நிலுவை வரி அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 55 | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 24 கடமை இல்ல அலுவலகங்களில் மற்றும் 25 மாடிகளுக்காக ரூபா 2,851,725 (வரி இன்றிய) இற்கான பெறுமதியையுடைய PABX முறைமையொன்று நிறுவப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த உடன்படிக்கையின் தொழில்நுட்ப விவரக் குறிப்பொன்றான கிளைகளுக்கு இடையான தொடர்பு 2021 செப்தம்பர் 30 திகதி அளவிலும் வழங்குவதற்கு முடியாதிருந்தது. | 2021 | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். | தலைமை அலுவலத்திற்கு இந்த முறைமையை வழங்கிய ஒப்பந்தக்காரர்களிடம் கொள்வனவு செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்டது தொழில்நுட்ப விடயங்களை கவனத்தில் எடுக்கப்பட்டே ஆகும் எனவும், இடைத் தொடர்புச் சிக்கல் காணப்படுவது முறைமையில் அன்றி என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 56 | கட்டிட நவீனமயப்படுத்தலில் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த 02 டிரான்போமர் இயந்திரங்களை பிரதான மின்சார முறைமையுடன் தொடர்புபடுத்தியிருக்க ாமையால் அந்த இயந்திரங்கள் 2010 ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. ரூபா 7,985,992 இற்கான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு திணைக்களத்தின் பிரதான கட்டிடத்தில் பொறுத்தப்பட்டிருந்த CCTV கமரா முறைமைக்கு உரிய 70 கமராக்கள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் திணைக்களத்திற்கு ஒப்படைத்திருக்காமை யால் 01 வருட உத்தரவாத காலத்தை மிகைத்து 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் விளைவற்றுக் காணப்பட்டது. இதன் காரணமாக CCTV கமரா முறைமையொன்று பொருத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. | 2021 | திணைக்களத்தி ன் குறிக்கோள் மற்றும் கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளக் கூடியவாறு சொத்துக்கள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். | மீண்டும் இந்த முறைமையை செயற் நிலைமை ஏற்படுத்துவற்கு முறைமையினால் தற்போது பயன்படுத்தக்கூடிய துணைக் கருவிகளை பயன்படுத்தி எதிர் காலத்தில் CCTV முறைமையினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 57 | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் படி மேலதிக மதுபான அனுமதிப்பத்திரம் மற்றும் போத்தல் சாராய விற்பனை அனுமதிப்பத்திரம் மீது முத்திரை வரி | 2021 | நியதிச் சட்ட சட்டங்கள் மற்றும் விதிகளின் படி விதிக்கப்பட்டுள்ள வரிகளை அறவீடு செய்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்ப | இது தொடர்பாக 02 சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் தீர்மானத்தின் படி அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 2008 – 2020 காலப் பகுதியில் பிரதேச செயலகங்களினால் அந்த சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் படி நாட்டின் 07 மாவட்டங்களைச் சேர்ந்த 66 பிரதேச செயலகங்களில் இருந்து கூட்டுப் பெறுமதி ரூபா 67,917,000 தொகைக்கான நிலுவை முத்திரைக் கட்டணம் மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | ட வேண்டும். | | |
| 58 | வரிக் கோப்பு இலக்கம் 1240***** கொண்ட கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுமதி கூட்டிய வரி திரட்டுக்களின் படி செலுத்த வேண்டிய திகதியில் செலுத்தப்பட்டிருக்காத பெறுமதி கூட்டிய வரி எண்ணிக்கை ரூபா 2,843,923,139 தொகையாக காணப்பட்டதுடன், 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் 28(1)(ஆ) பிரிவின் படி மதிப்பீட்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டு அறவீடு செய்வதில் 02 வருட காலத்தை விட கூடிய தாமதம் காணப்பட்டது. மேலும், 2016 நான்காவது காலாண்டின் முதலாவது | 2021 | சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அறவிடப்பட வேண்டிய வரிகளை விரைவாக அறவிடப்பட வேண்டும். | பெறுமதி கூட்டிய வரி கொடுப்பனவை புறக்கணித்துள்ள வரியினை அறவீடு செய்வதற்கு சட்டச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாதத்திற்குரிய செலுத்த வேண்டிய பெறுமதி கூட்டிய வரி தொகையினை குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 ஆண்டிற்காக வரி இசைவுச் சான்றிதழ் ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | | |
| 59 | வரிக் கோவை இலக்கம் 7704***** தொடர்பாக 2016 ஜனவரி முதல் 2018 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்குரிய பெறுமதி கூட்டிய வரி தொடர்பாக இரண்டாவது வரி மதிப்பீடு ரூபா 314,278,994 தொகை என மதிப்பீடு செய்யப்பட்டு அது தொடர்பாக 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் 29 ஆவது பிரிவிற்கு இணங்க 2020 மே 18 திகதி வரி செலுத்துவோருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் வழங்கியிருக்கவில்லை. | 2021 | மேலதிக வரி மதிப்பீடு வழங்குதல் மற்றும் மேன்முறையீடுகளை தீர்த்தல் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி மேற்கொள்ள வேண்டும். | வரி செலுத்துவோர் வரி தொடர்பாக இணங்காமையால் எனின் மீண்டும் கலந்துரையாடல் ஒன்றிற்காக அழைத்தல் மற்றும் கிடைத்துள்ள சரியான தகவல்களின் அடிப்படையில் சரியான வரிப் பொறுப்பு கணிக்கப்பட்டது என. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 60 | TIN இலக்கம் 1141***** வரிக் கோவை தொடர்பாக மதிப்பீட்டு ஆண்டுகள் 2014/15 முதல் 2018/19 வரை வழங்கப்பட்டிருக்காத மதிப்பீட்டு அறிக்கைகளின் படி வருமான வரி, பெறுமதி கூட்டிய வரி | 2021 | உரிய காலத்தில் மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மற்றும் அதனை அறவீடு செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் | RAMIS முறைமையில் வேலை விடயங்கள் நிர்மாணித்திருக்கமை, பதவியணியினர் குறைவாக இருத்தல் ஆகிய விடயங்களின் மீது தாமதம் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் பொருளாதார சேவைக் கட்டண வருமானம் ரூபா 25,179,056 தொகையாக காணப்பட்டதுடன், அது தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்குதல் 2021 மார்ச் 23 திகதி அளவிலும் மேற்கொண்டிருக்காத துடன், அந்த காலப் பகுதிக்குரிய மதிப்பீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2021 ஜனவரி 31 திகதியில் உள்ளவாறு சேகரிக்கப்பட்டிருக்காத வருமான வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் பொருளாத சேவைக் கட்டணத்தின் பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 12,897,624 தொகையாக இருந்தது. | | எடுக்கப்பட வேண்டும். | அடைந்தது எனவும் மற்றும் கணக்காய்வு ஐயவினாவின் அடிப்படையில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| 61 | TIN இலக்கம் 1340***** வரிக் கோவைக்கு இணங்க, தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்கு, உழைக்கும் போதே செலுத்தும் வரி / முற்பண தனிப்பட்ட வருமானத்திற்குரிய செலுத்த வேண்டிய வரிகள் தொடர்பாக தகவல்கள் RAMIS முறைமையினுள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காமை யினால் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வரி செலுத்துவோரினால் செலுத்தப்பட்டிருந்த வரி முறையே ரூபா | 2021 | RAMIS முறைமையினை உரிய முறையில் நாளதுவரை ஆக்குதல் மற்றும் வரி மற்றும் தண்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | RAMIS முறைமையை நாளதுவரை ஆக்காமையின் காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய வரித்தொகை மீதிகள் காட்டப்படுவதுடன், தண்டப் பணம் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 91,247,399 தொகை மற்றும் ரூபா 57,085,410 இற்கான தொகை திருப்பிச் செலுத்த வேண்டிய வரி (Refund) தொகையொன்றென முறைமையில் காணப்பட்டதுடன், வருமான வரிக்குரிய ரூபா 57,055,732 இற்கான நிலுவை வரி மற்றும் தண்ட மீதியொன்றும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 62 | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அத்தியாயம் III பிரிவு 07 இற்கு இணங்க வரி விடுதலை நிறுவனங்கள், 2017 இன் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் காணப்படுகின்ற விடுதலைத் தொகைக்கு அடங்க 2018 ஏப்ரல் 01 திகதி முதல் வரி செலுத்துவதற்கு கடப்பாடுடைய நிறுவனங்கள் வரி முறைமைக்கு பதிவு செய்திருக்கிறார்களா என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமையின் தகவல்களின் படி பரிசோதனை மேற்கொண்ட போது 17 நிறுவனங்களுக்காக உள்நாட்டு இறைவரிக்காக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2021 | 2021 | குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்குமாக சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வருமான வரிக்காக கோப்புக்கள் திறக்காததற்கும், வரிப் திரட்டுக்கள் பெற்றுக்கொள்வதற்கும் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அவற்றில் 21 நிறுவனங்கள் வரிக் கோவைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மீதியான 15 நிறுவனங்களினால் விசாரணை மேற்கொண்டிருந்த போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

திசெம்பர் 31 திகதி வரை எதுவித வருமான வரி திரட்டும் சமர்ப்பித்திருக்கவில்லை. அந்த அனேகமான நிறுவனங்கள் பங்கிலாபம் மூலம் அல்லது வட்டி மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்தின் மீது பத்து வருடங்களை விட மிகையான காலம் முதல் எதுவித வருமான வரியும் செலுத்தியிருக்காததுடன், மேலும், 19 நிறுவனங்கள் 2018 ஏப்ரல் 01 திகதி முதல் வருமான வரி செலுத்துவதற்கு கடப்பாடு காணப்பட்ட போதிலும் வருமான வரிக்காக கணக்காய்வுத் திகதியாகிய 2021 திசெம்பர் 31 திகதி வரை பதிவு செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

தலைப்பு - 247 இலங்கை சுங்கம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 14,472,485,013 | 25,943,363,967 | (11,470,878,954) | முனைப்பழியுள்ள |
| **2022** | 15,881,304,308 | 25,657,797,650 | (9,776,493,342) | முனைப்பழியுள்ள |
| **2023** | 16,072,269,511 | 32,648,073,740 | (16,575,804,229) | முனைப்பழியுள்ள |

| தொடர் இலக்கம் | கணக்காய்வு அவதானிப்புகள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் உள்ளபடியாக பரிந்துரையின் செயற்பாடு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 2021 ஆம் ஆண்டின் போது இலங்கை சுங்கத்தின் 2342 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம், கூலி, மேலதிக நேர படி, விடுமுறை தினச் சம்பளம், ஊக்குவிப்புப் படி என்பனவாக அரசாங்கத்தின் திரண்ட நிதியிலிருந்து ரூபா 1,839,078,959 தொகையும் சுங்க மேலதிக நேர பரீட்சித்தல் கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் நிதியத்தின் மூலம் ரூபா 1,086,992,639 தொகையுமாக ரூபா 2,926,071,598 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவுகள் சம்பந்தமாக உறுதிப்படுத்தும் சான்றுகளான சேவைக்கு சமூகமளித்தமையினை | 2021 | (i) அரசாங்கத்தின் பொது பணிப்புரை மற்றும் அரசாங்க கணக்குகள் குழுவின் பணிப்புரையை பின்பற்றுதல் அதிக அளவில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.<br>(ii) நிதி ஒருங்கீனங்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் நிதிப்பிரமாணங்களிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>(iii) ஊழியர் முகாமைத்துவம் | சுங்க திணைக்களத்தின் ஊழியர் வருகை பதிவு செய்யப்படுவது 18 ஆம் பொதுப்படிவத்தின் மூலமாக இருப்பதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர வேலைப்படிகள் கணிப்பீடு செய்யப்படுகின்றது. மேலும், மேலதிக நேர கொடுப்பனவு சம்பந்தமான சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்காக சுங்கத்தின் அனைத்து உத்தியோகத்தர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு குழு தயார்படுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட மேலதிக நேர வேலை கொடுப்பனவு சம்பந்தமாக முறையான ஒரு நடைமுறையினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுங்க உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க எதிர்ப்பின் காரணமாக 2024 யூலை 22 ஆம் திகதி வரையிலும் கைரேகை இயந்திரங்கள் பயன்படுத்தப்படவில்லை என சுங்கப் பணிப்பாளர் நாயகம் கணக்காய்வுக்கு தெரிவித்திருந்ததோடு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் செயலாளருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுங்க உத்தியோகத்தர்களின் கைரேகை பதிவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாக கூறப்பட்டாலும், அந்த உத்தியோகத்தர்க |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உறுதிப்படுத்தும் விரல் அமையாளமிடும் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | | சம்பந்தமாகக் காணப்படுகின்ற திருப்தியற்ற உள்ளகக்கட்டுப்பாட்டினை முறைமைப்படுத்துதல். | | ளின் பெயர், பதவி, திகதி, வருகை தந்த நேரம்/ வெளிச்செல்லல் நேரம் போன்ற பல விவரங்கள் “சுங்கப் படிவம் 221” ல் நாளாந்தம் பதிவு செய்யப்படுவதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. |
| 2 | நிலுவை வரி வருமானம் வருடாந்தம் ஒன்று சேர்ந்து வருவதுடன் 2021 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22,933,854,690 ஆக காணப்பட்ட நிலுவை வரி வருமானமானது 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 60,884,927,433 வரை அதாவது 165 சதவீத அளவினால் அதிகரித்திருந்தது. 2016 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க நிறுவனங்களுக்கு பின்னர் வரியை அறவீடு செய்யும் அடிப்படையில் இறக்குமதியை விடுவித்தல் நிறுத்தப்பட்டிருந்தும் அதற்கு முரணாக இலங்கை பொற்றோலியக் கூட்டுதாபனத்திற்கு 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதியை விடுவித்தலானது எண்ணை சுத்திகரிப்பின் | 2021 | நிதிப்பிரமாணம் 128 மற்றும் 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | அறிக்கையிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை மீட்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. திணைக்களத்தின் பழைய வரி வருமானம் தொடர்பான தகவல்களைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இருப்பதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தார். இருப்பினும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 58,478,974,134 ஆக இருந்த மொத்த வரி வருவாயில் ரூபா 57,709,049,189 அல்லது 99 சதவீதம் 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் முன்கொண்டுவரப்படும் நிலுவை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடிப்படையில் அறவிடப்படுகின்ற உற்பத்தி வரி மற்றும் ஏனைய உற்பத்தி வரிகள் நிலுவையாகக் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது. நிலுவை வரி வருமானமானது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்திலிருந்து 165 சதவீதம் வரை பாதகமான அதிகரிப்பாகக் காணப்பட்டது. | | | | வரி வருமானம் ஆகும். |
| 3 | 1968 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(2) (ஆ) பிரிவின் பிரகாரம் வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதியாக பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் சுங்க வெகுமதிப்பணத்தை பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட 1988 சனவரி 28 ஆந் திகதிய பீஎல் 118 ஆம் இலக்க திணைக்கள கட்டளைக்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை | 2021 | அமைச்சரின் அங்கீகாரத்தினைக் காட்டும் நடைமுறை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். | இந்த திட்டத்திற்கு மாண்புமிகு நிதியமைச்சர் கண்டிப்பாக ஒப்புதல் அளித்திருக்க வேண்டும், ஆனால் தற்போது ஒப்புதல் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. | இந்த அறிக்கை வெளியிடப்பட்ட நாள் வரை, சம்பந்தப்பட்ட துறை ரீதியான உத்தரவுக்கு நிதி அமைச்சரின் ஒப்புதலைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. |

உறுதிப்படுத்திக் கொள்ளாது 1999 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான 23 ஆண்டுகளில் வெகுமதி நிதியாக ரூபா 21,046,904,408 செலுத்தப்பட்டிருந்தது.

4 கிழக்கு மாகாண நீர் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த உதவியின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் பொதுத் திறைசேரியினால் அச்செயற்திட்டத்திற்கு தேவையான D1 குழாய்கள் மற்றும் துணைக் கருவிகளை பெற்றுக்கொள்ளும் செயற்பாடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அதற்குத் தேவையான D1 குழாய் களையும் துணைக்கருவிகளையும் பெற்றுக்கொள்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக செலவு செய்யப்படும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் 6,659,685 பணம் JICA நிறுவனத்திலிருந்து கிடைக்கும் உதவியிலிருந்தும் போக்குவரத்து செலவுகளும் வரிப்பணமும் இலங்கை அரசாங்கத்தினாலும் செலவு செய்யப்படும். இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | | | |
| (i) | சுங்க கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவின் பிரகாரம் முதலாவது சந்தர்ப்பத்தில் வரி செலுத்தாத பொருட்களை பண்டகசாலையில் வைப்பதற்காக இலங்கை சுங்கத்தினால் ஒரு தனியார் நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 08 குறிப்பிதழ்கள் (Cusdec) வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க அமெரிக்க டொலர் 5,139,621 தொகையான பொருட்கள் பண்டகசாலையில் (To Bond) வைக்கப்பட்டிருந்தன. சுங்க கட்டளைச் சட்டத்தின் 86 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்களை பண்டகசாலையிலிருந்து விடுவிக்கும் போது ஏற்கனவே வெளியிடப்பட்ட | 2021 | சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகையாக பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையை அறவீடு செய்வதற்கு மற்றும் போலியான ஆவணங்களை தயாரித்தமைக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பது. | தொடக்க புலனாய்வு இடம் பெற்று வருகின்றது. தொடக்க புலனாய்வின் சிபாரிசின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | 2021 ஜூலை 24 ஆந் திகதி சுங்கப் பணிப்பாளர் நாயகத்தால் ஒரு குழு நியமிக்கப்பட்டது, மேலும் குழுவின் பரிந்துரை சுமார் 2 ஆண்டுகளுக்குப் பிறகு 2023 ஜூன் 01 ஆந் திகதி வழங்கப்பட்டது. குழுவின் பரிந்துரைகள் பின்வருமாறு, சம்பவத்தில் தொடர்புடைய எந்த உத்தியோகத்தருக்கும் எந்த தண்டனையும் பரிந்துரைக்கப்படவில்லை.<br><br>• நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள தவறான நடைமுறைகளுக்காக ஒரே ஒரு உத்தியோகத்தர் குழுவுக்காக |

பெருள் இருப்பின் இன்வொயிஸ் பெறுமதியையே வெளியிடுதல் வேண்டும். எனினும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உறுதிச்சீட்டினை பயன்படுத்தி உரிய பெறுமதியை அமெரிக்க டொலர் 6,350,364 ஆக போலியான தகவல்களுடன் இறக்குமதி குறிப்பிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் அமெரிக்க டொலர் 1,210,743 பெறுமதியினை உரிய நிறுவனத்தினால் மிகையாக பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

எதிராக மாத்திரம் ஒழுக்காற்று நடவடிக்கை என்பது சமமானவர்களை சமமற்ற முறையில் நடாத்துவதாகும்.

- சம்பவத்தில் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்று விட்டதால், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது.

- சரக்குகளை கிடங்கு/களஞ்சியத்திலிருந்து அகற்றுதல் தொடர்பான அறிவுறுத்தல்களுடன் திணைக்களம் சார்ந்த கட்டளைகளை பிறப்பித்தல்.

- சுங்க உத்தியோகத்தர்களுக்கு சேமிப்பு கிடங்கு குறித்த சிறப்பு பயிற்சி அளித்தல்.

- செயற்திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதா என்பதை ஆராய நீர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் அதன் வரிசை அமைச்சுக்கு அறிவித்தல். |
| (ii) | போலியான உறுதிச்சீட்டு தயாரித்தல், போலியான தகவல்களைச் சமர்ப்பித்து வெளிநாட்டினைப் போல உள்நாட்டிலும் பணத்தை பெற்றுக்கொண்டிருந்தும் இது சம்பந்தமாக புலனாய்வினை மேற்கொண்ட இலங்கை சுங்கத்தினால் உரிய நிறுவனம் பிழை செய்திருக்கவில்லை எனக் கருதி புலனாய்வினை முடிவுறுத்தியிருந்ததுடன் அவ்வாறு புலனாய்வு தீர்ப்பினை பிழையாக வழங்கிய உத்தியோகத்தர் சம்பந்தமாக நடவடிக்கையும் எடுக்காமை கணக்காய்வில் பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகும். | 2021 | சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் புலனாய்வுத் தீர்ப்பினை பிழையாக வழங்கிய தரப்பினர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி<br>- |
| 5 | 2016 ஆம் ஆண்டின் போது நிறுவுதல், உரித்து மற்றும் செற்படுத்தல் (Build Own & Operate-BOO) எனும் பெறுகை முறைமையின் கீழ் | **2021** | அந்நிய செலாவணி சிக்கல்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது அது பற்றி கவனம் | நிறுவுதல், உரித்து மற்றும் செற்படுத்தல் (BOO) எனும் பெறுகை முறைமையின் கீழ் தெரிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ள கொள்கலன் ஸ்கேனிங் | விடுவிக்கப்படும் அனைத்து கொள்கலன்களும் ஸ்கேன் செய்யப்படுவதில்லை என்பதுடன், ஸ்கேன் கட்டமைப்பிற்கு செயற்கை நுண்ணறிவினை |

ரெபிஸ் ஸ்கேன் சிஸ்டம் பிரைவட் லிமிடட் எனும் பெயருடைய கம்பனியிலிருந்து சுங்கம் தனது கொள்கலன்களை ஸ்கேன் செய்யும் பணிகளை மேற்கொண்டிருந்தது டன், 2021 ஆம் ஆண்டின் போது அந்த கம்பனிக்கு ஐ.அ.டொ. 21,590,008 தொகையை செலுத்தி கட்டமைப்பின் முழுமையான உரித்தினை சுங்கத்திற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தது. அவ்வாறு பாரிய தொகையொன்றை செலுத்தும் போது அந்நிய செலாவணி சிக்கல்கள் கருத்திற்கொள்ளப்ப டாது குறித்த வெளிநாட்டு கம்பனி குறித்த கட்டமைப்பை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த காரணத்தால் பெறுகையின் மூலம் திறந்த சந்நையில் போட்டித் தன்மைக்கு இடமளித்து தொழில்நுட்ப மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு, ஆகக் குறைந்த கிரயத்தில் ஸ்கேன் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

செலுத்துதல் வேண்டும் என்பது, கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் போது வெளிப்படைத் தன்மை உருவாகும் வகையில் இடம்பெறுதல் வேண்டும் என்பது மற்றும் செலவு செய்யும் போது ஆழ்ந்த அறிவோடு நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சிக்கனமாக நலனளிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பது.

கட்டமைப்பு 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது நிதி அமைச்சினாலேயே என கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டிருந்த து.மேலும், ரெபிஸ்கேன் நிறுவனத்திற்கு இடர் முகாமைத்துவ பிரிவினால் இனங்காணப்பட்ட கொள்கலன்களே அனுப்பப்படுகின்றன என்பதும், அவ்வாறு அனுப்பப்படும் அனைத்து கொள்கலன்களும் ஸ்கேன் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்த து.

(Artificial Intelligence) தொடர்புபடுத்துமா று கணக்காய்வினால் அவ்வப்போது சுட்டிக் காண்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை .

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேலும், சுங்க விடுவித்தல் நடைமுறைக்கு முழுமையான எக்ஸ்ரே ஸ்கேன் இயந்திரமொன்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அது நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தால் வெளியிடப்பட்ட பொருள் உருப்படிகளிடையே ஒழிக்கப்பட்டுள்ள உருப்படிகளை கண்டறிதல், போலியான பொருட்களை வெளியிடுதல், எண்ணிக்கையை குறைத்தல், தடைசெய்யப்பட்ட மற்றும் சட்டவிரோதமான பொருட்களின் இறக்குமதியை குறைக்க எதிர்பார்த்த திட்டங்கள் நிறைவேறவில்லை. மேலும், 2019 நவம்பர் முதல் 2021 செப்டம்பர் 30 வரை மட்டுமே விடுவிக்கப்பட்ட மொத்த கொள்கலன்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது ஸ்கேன் செய்யப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை சுமார் 08 சதவீதம் குறைவாகும். | | | | |
| 6 (i) | புலனாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாது நிறுத்திவைக்கப்பட்டுள ்ள **336** வாகனங்களுக்காக | **2021** | உரிய புலனாய்வுகளை முறைப்படியாக விரைவாக முடிவுறுத்துவதற்கு தேவையான | தரிப்பிடத்தில் போதிய இடவசதி இல்லாதிருந்தமையால், 39 வாகனங்களின் ஆய்வு அறிக்கைகளை | தற்போது ஒரு தனியார் கம்பனிக்கு மாத வாடகையாக ரூபா 4,650,000 செலுத்தயவாறு உள்ளதுடன், 2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2021 திசெம்பர் **07** ஆந் திகதி வரை ரூபா 138,513,782 தொகை இலங்கை சுங்கத்தினால் SALT நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்ததுடன் வாகன புலனாய்வு நடவடிக்கையை முடிவுறுத்தும் செயல்முன்னேற்றத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டியிருந்த இப்பணம் எதிர்காலத்தில் இன்னும் அதிகரிக்க கூடியதாக இருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்பட்டது. எவ்வாறான போதிலும், தற்போது ஆய்வறிக்கைகளை பெற்றுள்ள வாகனங்களிலிருந்து சட்டவிரோதமான முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட செஸி அல்லது சட்ட விரோதமான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள 34 வாகனங்கள் கோப் குழுவின் பரிந்துரைக்கமைய தொழில்நுட்ப கற்கைகள் விடயத்திற்காக இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களுக்கு வழங்குவதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தது. | திசெம்பர் 31 வரை, பறிமுதல் செய்யப்பட்ட 435 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 152 வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு முன்பு பறிமுதல் செய்யப்பட்டன. நாட்டிலிருந்து இந்த வாகனங்கள் தொடர்பான அந்நிய செலாவணி செலவிடப்பட்டுள்ள போது நீண்ட நேரம் நிறுத்துவதால், வாகனங்கள் தேய்ந்து, ஓட்டுவதற்கு தகுதியற்றதாக மாறுதல் மற்றும் ஏலத்தில் நியாயமான தொகையை பெற முடியாத நிலை ஏற்பட்டது. |
| (ii) | சுங்கத்திடம் கோவைகள் அல்லது அறிக்கைகள் இல்லாத 51 வாகனங்கள் கூரையினால் மறைக்கப்பட்டுள்ள மற்றும் அதற்கு வெளியே வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன | 2021 | இது சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கோவைகளற்ற வாகனங்கள் தொடர்பில் கண்டறியப்படும் தகவல்கள் தொடர்பான கோப்புகளை மீள உருவாக்கவும், இந்த வாகனங்களின் முறைகேடுகளை கையாள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. | 2024 செப்டம்பர் 06 ஆந் திகதியில் உள்ளபடியாக கோவைகளற்ற அல்லது பதிவுகள் இல்லா 136 வாகனங்கள் உள்ளன என அடையாளம் காணப்பட்டன. |
| 7 | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 84(அ)(3) பிரிவின் பிரகாரம், சுங்கத் தீர்வை செலுத்தப்படாத பண்டகசாலை (Manufacture in Bond – MIB) | 2022 | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். | இந்த விடயம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் அறிவுரை கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது இரண்டு கம்பனிகளால் 326 வாகனங்கள் களஞ்சியத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு உள்நாட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வசதிகள் பெற்றுக் கொண்டுள்ள ஏதேனும் கைத்தொழில் ஒன்று தொடர்பாக பண்டங்களை உள்நாட்டு சந்தைக்கு வழங்கும் போது இறக்குமதி என கணித்து சுங்கத் தீர்வை கணிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான 02 கம்பனிகள் இலக்கம் 1448/1 மற்றும் 2006 ஜூன் 05 திகதிய கைத்தொழில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் வழங்கப்பட்டிருந்த ‘‘உள்நாட்டில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதியை உடைய துணைக் கருவிகளை பயன்படுத்தி இணைக்கும் வாகனங்களுக்காக வழங்கப்படும் 70 சதவீத வரிச் சலுகை’’ பெற்றுக் கொண்டு 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான ரூபா 7,191,949,084 இற்கான உற்பத்தி வரி செலுத்துவதை புறக்கணித்து இருந்தது. | | | | சந்தைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், ஒருங்கிணைக்கப்பட்ட வாகனங்கள் களஞ்சியத்திலிருந்து விடுவிக்கப்படும் போது அறவிடப்பட வேண்டிய உற்பத்தி வரி ரூபா 350,432,000 ஆன போதிலும், ரூபா 246,628,800 மாத்திரம் அறவிடப்பட்டிருந்த காரணத்தால் அரச வருமானம் ரூபா 103,803,200 இனால் குறைவடைந்திருந்தது. இந்த அறிக்கையின் திகதி வரையிலும் சட்டமா அதிபரின் அறிவுரை கிடைத்திருக்கவில்லை. |
| 8 | பின்வரும் அவதானிப்புகளுக்கு உரியதாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் | 2022 | நிதிப் பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளுக்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். | ஆரம்ப விசாரணைக்காக 2023.10.07 அன்று மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப விசாரணைக் குழுவின் தலைவரால் ஆரம்ப விசாரணையின் தற்போதைய |

நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 102 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்றினால் கப்பல் ஒன்றில் இருந்து வேறொரு கப்பலுக்கு மாற்றும் முறைமை ஒன்றின் கீழ் (Transshipment) சிங்கப்பூரில் இருந்து கப்பலில் ஏற்றப்பட்ட சிகரட் தொகையொன்று இலங்கை சுங்கத்தினால் கைப்பற்றப்பட்டு விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அந்த தீர்ப்பின் படி சிகரட் இருப்பு மீள் கப்பலில் ஏற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது சுங்கத்தினால் கருத்து வேறுபாடுடன் இந்த சிகரட் இருப்பை ஏல விற்பனையில் விற்பனை செய்து ரூபா 5,901,750 இற்கான தொகையொன்று உழைத்திருந்தது. எவ்வாறாயினும் இந்த விற்பனைக்கு எதிராக குறிப்பிட்ட வெளிநாட்டு நிறுவனம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருந்ததுடன், மாவட்ட நீதிமன்றில்

நிலை குறித்து இடைக்கால அறிக்கையை 2024.03.19 ஆந் திகதி சமர்ப்பித்துள்ளார். இது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகள் பதிவாகியவுடன் விசாரணைகளை முடித்து இறுதி அறிக்கை வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சுங்கம் குற்றவாளி என தீர்க்கப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்துக்கு எதிராக சுங்கத்தினால் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மற்றும் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் இறக்குமதியாளர்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டத்துக்காக ரூபா 37,529,749 தொகையும், சட்டரீதியான வட்டியாக ரூபா 63,464,121 தொகையும், வழக்குக் கட்டணமாக ரூபா 190,000 தொகையும் செலுத்துவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. சட்டரீதியான கட்டணம் ரூபா 31,732,060 தொகை வரை குறைப்பதற்கு இறக்குமதியாளர் எனப்படும் முறைப்பாட்டாளர் தரப்பினர் இணங்கியிருந்ததுடன் அதன் படி சுங்கத்திற்கு இந்த பிழையான தீர்ப்பின் மூலம் செலுத்த நேரிட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 69,451,809 தொகையாக இருந்தது. இந்த விசாரணைகள் தொடர்பான கோவை காணாமல் போயிருந்தது என கணக்காய்விற்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2022 செப்தெம்பர் 22 திகதி சுங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் மேற்கூறிய பிழையான தீர்மானத்திற்கு பொறுப்பு சொல்ல வேண்டியடி உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | | | | |
| 9 | இல.40 மோஹன் வீதி, கொம்பனித்தெரு, கொழும்பு 02 என்ற இடத்தில் சுங்கத்துக்கு சொந்தமான தரைப்பகுதி ஒன்றில் அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 15 வீடுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 | அங்காரமின்றிய நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் தொடர்பான தீர்மானம் எடுத்தல் பல வருடங்களாக மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் கொழும்பு பிரதேச செயலாளருக்கு கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தப்பட்டு வந்தது. | இந்த அறிக்கையின் திகதி வரை, சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்படவில்லை. |
| 10 | 2015 ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை திணைக்களத்தின் 40 பிரிவுகள் (Directorate) தொடர்பாக 9754 சுங்க விசாரணைகள் காணப்பட்டதுடன், அவற்றில் வருமான மேற்பார்வை அலகு (RTF) தொடர்பாக 3199 தொகையும், தடைசெய்யும் பிரிவு (Preventive) | 2022 | விசாரணைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரையில் நிறைவு செய்யப்படாத சுங்க விசாரணைகளை துரிதமாக நிறைவ செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சுங்கத்தின் பல்வேறு பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் 8450 சுங்க விசாரணைகள் நிலவின. இவற்றில் 3080 விசாரணைகள் 05 வருடங்களுக்கு மேலாகவும், 4348 விசாரணைகள் 02 முதல் 04 வருடங்களாகவும், 1022 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்பாக 1593 விசாரணைகளும், மத்திய விசாரணை பிரிவு தொடர்பாக 738 விசாரணைகளும் ஏனைய 37 பிரிவுகள் தொடர்பாக 4224 விசாரணைகளும் காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டின் இறுதித் திகதியளவில் ஒட்டுமொத்த விசாரணைகளின் எண்ணிக்கையில் 5 வருடங்களை விட பழமையான 3582 தொகையும் 1 மற்றும் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட 4720 தொகையும், ஒரு வருடத்திற்கு உட்பட் 1452 விசாரணைகளும் காணப்பட்டன. | | | . | விசாரணைகள் ஒரு வருடத்திற்குள் தீர்க்கப்படாமலும் உள்ளன. விசாரணையில் தாமதம் ஏற்பட்டதால், கைப்பற்றப்பட்ட பொருட்கள் சேதமடைதல், பழுதடைதல், அடுத்தடுத்த விற்பனையில் உரிய பெறுமதி கிடைக்காமை, உளவாளிகளும், உத்தியோகத்தர்களும் தைரியமற்றிருத்தல் போன்ற பாதகமான நிலைமை ஏற்பட்டிருந்தது. |
| 11 | டன்சானியாவின் Zanzibar துறை முகத்தில் இருந்து இலங்கை துறைமுகத்தின் ஊடாக ஹொங்கொங் இற்கு மீள் ஏற்றுமதி செய்வதற்காக ஆபிரிக்க திண்ம பலகை (African Hard Wood) என குறிப்பிட்டு அழிவிற்கு நேரிட்டுள்ள மற்றும் சர்வதேச வர்தகத்தின் வரையறுக்கப்பட்டுள்ள ரோஸ் வுட் (Rose Wood) 420 மெட்ரிக் தொன் மரக் கட்டைகள் 3669 இருப்பொன்று சுங்கத்தினால் | 2022 | விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள பரிமுதல் செய்யப்பட்ட பண்டங்களை தாமதம் இன்றி விற்பனை செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015.08.22 ஆந் திகதி முதல் இது வரை சுமார் அறுபத்தைந்து (65) தடவைகள் இந்த ரோஸ் வூட (**Rose Wood**) மரங்களின் இருப்பு விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், 04 சந்தர்ப்பங்களில் மட்டுமே, ஆகக் கூடிய விண்ணப்பதாரர்களுக்கு மர இருப்பு வழங்கப்பட்டுள்ளது மற்றும் அவர்கள் CITES அனுமதிப்பத்திரம் பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக மர இருப்பினை விடுவிப்பதில் | இது தொடர்பாக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்படுவதுடன், அதன் தீர்ப்பின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தங்கியுள்ளன. |

| | | |
|---|---|---|
| | பரிமுதல் செய்து விற்பனை செய்வதற்கு பல சந்தர்ப்பங்களில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் வழங்கப்பட வேண்டிய CITES அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள முடியாமையினால் 2014 முதல் 2023 ஏப்ரல் 30 திகதி வரை அப்புறப்படுத்தப்படாமல் சுங்க முற்றத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தது. பதப்படுத்தப்படாத குற்றிகளாக காணப்பட்டமையால் இந்த மர இருப்புக்கு தற்போது கிருமிகளினால் சேதம் விளைவிக்கப்பட்டிருந்ததுடன் 2014 முதல் 2022 சனவரி வரை இந்த மர இருப்பினை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதற்காக க்ரே லயின் கென்டேனர் முற்றத்தினால் சுங்கத்திற்கு ரூபா 81,621,820 இற்கான மதிப்பீட்டு செலவொன்று தொடர்பாக அறிவித்திருந்தது. | சிக்கல்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. |
| 12 | சீ ஸெல்ஸில் இருந்து தாய்லாந்து வரை பயணம் செய்த மீன்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட கொள்கலன்களை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தாங்கிய கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு அண்மித்த கடல் பகுதியில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்ட காரணத்தினால் மின்சார வழங்கல் நிறுத்தப்பட்டு இருந்த காரணத்தால் இலங்கை துறைமுகத்தை அண்மித்திருந்ததுடன், அதன் 98 கொள்கலன்களிலுள்ள மீன்களும் பழுதடைந்திருந்ததெனவும், அதனை வெளிநாட்டு கப்பலின் உள்நாட்டு முகவரின் ஊடாக கண்டுபிடிக்கப்பட்ட உள்நாட்டு தனியார் நிறுவனமொன்றுக்குச் சேதனப் பசளை தயாரிப்பதற்கு 2022 மார்ச் 09 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | | | |
| (i) | இந்த மீன் இருப்பு அடங்கிய கப்பலின் தன்மை Transshipment Status எனினும் Import cargo status என மாற்றம் செய்து சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக HS Code வகைப்படுத்தல் | 2022 | மீன் இருப்பு பழுதடைந்த நிலைமை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றாக காணப்பட்டமையால் வகைப்படுத்தல் தொடர்பாக தெளிவற்ற தன்மையொன்று ஏற்பட்டிருந்ததுடன், அச் சந்தர்ப்பத்தில் “வகைப்படுத்தல் | இந்த பொருள் வகைப்படுத்தல் இலக்கம் 0511.91.10 இன் கீழ் மீன் கழிவு (Fish Waste) என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வகைப்படுத்தல் சரியானது என்பதாலும், வகைப்பாடு குறித்து தெளிவின்மை இருந்தால் மட்டுமே “வகைப்படுத்தல் குழுவிற்கு” பரிந்துரைக்கப்படும் | இது தொடர்பில் நிதி அமைச்சினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்வதற்கு திகதி மற்றும் நேரத்தை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. |

| | | | | | | | |
| | மற்றும் ஸ்டிகர் முகாமையொன்று நிறுவுதல், உரிமை மற்றும் செயற்படுத்தும் அடிப்படையில் ஸ்டிகர் மற்றும் சேவை வழங்குவதற்கான ஒப்பந்த வேலை வெளிநாட்டு தனியார் கம்பனியொன்றிற்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. கொடுப்பனவு அங்கீகரிக்கும் போது மற்றும் சான்றுபடுத்தும் போது குறிப்பிட்ட உடன்படிக்கைக்கு இணங்க இனங்கியிருந்த அனைத்து கருமங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | | விடயப் பரப்பின் கீழ் அனைத்து கருமங்களில் ஒவ்வொரு கருமங்கள் தொடர்பாக கருமத்தின் பகுதி பூர்த்தி செய்யப்பட்டதென எழுத்துமூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். | அமெரிக்க டொலர்கள் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் தற்போது 2,118,374 அமெ.டொ. தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 879,621 அமெ.டொ. களுக்குரிய பில் பத்திரங்கள் தீர்க்கப்பட வேண்டிக் காணப்பட்டது. டிஜிடல் அடையாளம் 500,500,000 தொகைக்காக ஒப்பந்த கம்பனிக்கு 2,997,995 அமெ.டொ. தொகையில் தற்போது இதுவரை 2,118,374 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 879,621 அமெ.டொ. களுக்கான பில் பத்திரங்கள் தீர்க்கப்பட வேண்டிக் காணப்பட்டது. | முறைமையின் கீழ் உடன்படிக்கைக்கு இணங்க ஒப்பந்தக்காரர் இணங்கியிருந்த விடயப் பரப்பின் கீழ் காணப்படுகின்ற அனைத்துக் கருமங்களில் ஒவ்வொரு கருமத்திற்குரிய கருமத்தின் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டதென எழுத்துமூலம் உறுதிப்படுத்துவதற்காக சாட்சிகள் காணப்படவில்லை. |
| 39. | பயன்படுத்தப்பட்ட ஸ்டிகர்கள் தொடர்பாக புதிய ஆக்கத் திட்டமொன்று நிர்மாணிப்பது தொடர்பாக தொடர் நடவடிக்கை அறிவிக்கப்படாமை, ஒப்பந்த கம்பனியுடன் காணப்படுகின்ற உடன்படிக்கை 2023 செப்தெம்பர் மாதம் முடிவடைவதனால் செயற்திட்டத்தை | 2022 | புதிய திட்டமொன்று ஆக்கப்பட்டு செயற்படுத்தப்படல் | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்குரிய ஸ்டிகர்களுக்காக புதிய ஆக்கத் திட்டமொன்று நிர்மாணிப்பதற்காக தற்போது குறிப்பிட்ட ஒப்பந்த கம்பனியுடன் கலந்துரையாடப்பட்டதுடன் மேலும் இந்த புதிய ஆக்கத் | புதிய ஸ்டிகர் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்ந்தும் எடுத்துச் செல்லல் தொடர்பாக தொழிநுட்ப மற்றும் பொறிமுறை வழுக்களை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரி செயலாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் மாத்திரம் அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | திட்டம் தொடர்பாக பிரேரணைகள் ஸ்டிகர் முகாமைத்துவக் குழுவிற்கும் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| 40. | மதுபாபனங்கள், போலியான மதுபானங்கள் அல்லது போலியற்ற மதுபான போத்தல்கள் என பொது மக்களுக்கு இனங்காணக் கூடியவாறு மென்பொருள் ஒன்று அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அறிக்கையிடும் மொடியூலரில் சிக்கல் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. திருத்திய மின்பொருள் தொடர்பாக முறையான பயிற்சியொன்று வழங்குவதில் தாமதத்தின் காரணமாக பயன்படுத்துவோரின் அறிவு இன்மையினால் செயற்பாடுகளிலும் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தது. செயற்திட்ட முகாமையாளர் ஒருவர், மென்பொருள் பகுப்பாய்வாளர் ஒருவர் | 2022 | அந்த மென்பொருளில் அறிக்கையிடல் மொடியூலர் தொடர்பாக சிக்கல்களை தீர்த்தல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதுவரித் திணைக்களத்தினால் போலியான மதுபானங்கள் அல்லது போலியற்ற மதுபான போத்தல்கள் எண் என பொதுமக்களுக்கு இனங்காண்பதற்கான மென்பொருளொன்று அறிமுகப்படுத்தியிருந்தது. ஆரம்ப காலத்தில் அதன் மற்றும் அதன் அறிக்கையிடல் மொடியூலர் சிக்கல் காணப்பட்ட போதிலும் தற்போது அந்த அனைத்து சிக்கல்களும் தீர்க்கப்பட்டுள்ளது. | காணப்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளது என வெளியிபிட்ட போதிலும் ஒப்பந்த உடன்படிக்கையின் ஒவ்வொரு கருமங்களும் நிறைவேற்றப்பட்டதற்கான முன்னேற்ற அறிக்கை காணப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இணைத்திருக்காமை மற்றும் அறிக்கையிடும் மொடியூலர் அபிவிருத்தி செய்தலை மேற்கொண்டிருக்காமை தேவையான சந்தர்ப்பத்தில் செயற்பாடுகள் தொடர்பாக முழுமையான விபரமொன்று பெற்றுக் கொள்ள முடியாமை, ஒப்பந்த கம்பனி மதுவரித் திணைக்களத்தின் அல்லது உற்பத்தியாளர்களின் பௌதீக இருப்பு மெய்மையாய்தலுடன் ஒப்பீடு செய்வதற்கு தேவையான வசதிகள் மென்பொருளின் ஊடாக வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 41. | மாதாந்தம் பாதியளவில் அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாதவை தொடர்பான அறிக்கையொன்று மொடியூலர் மூலம் பெற்றுக் கொள்வதற்கான வசதி ஏற்படுத்தியிருக்காமை, தேவையான துண்டிப்புக்கள் ஏற்பட்ட நாட்களில் அச்சிடப்பட்ட டிஜிடல் அடையாள எண்ணிக்கை சான்றுறுதி செய்வதற்காக அறிக்கையிடல் மொடியூலர் மூலம் தொடர்ச்சியாக தொழிநுட்ப சிக்கல்கள் ஏற்படுதல், விரிவான டேஷ் பலகை | 2022 | மேற்படி | மாதாந்தம் பாதியளவு அச்சிடுதல் மற்றும் அச்சியடப்படாமை தொடர்பான அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்காக துண்டிப்புக்கள் தொடர்பாக ஒரு நாளைக்கு அச்சிடப்பட்ட டிஜிடல் அடையாள எண்ணிக்கையை சான்றுறுதி செய்வதற்குரிய விரிவான டேஷ் பலகையொன்று வழங்குவதற்காக நிறுவனத்திற்கு அறிவுருத்தப்பட்டது. இந்த டேஷ் பலகை மற்றும் குறிப்பிட்ட | மாதாந்த பாதியளவு அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாவைகள் தொடர்பான அறிக்கை மொடியூலர் மூலம் பெற்றுக் கொள்ள முடியாது. மொடியூலரை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வழங்குதல் போன்ற தேவையான வசதிகள் காணப்படாமை, மதுவரித் திணைக்களத்திற்காக உள்ளவாறான காலரீதியாக, நாளாந்தம் மற்றும் நெடுங்கால செயற்பாட்டு அவதானித்தல் மற்றும் அச்சிடும் போது நிராகரிக்கப்படுவதை இனங்காண்பதற்கான துணைக் கருவியொன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. | | | அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்காக ஒப்பந்த நிறுவனத்தினால் கற்கை மற்றும் ஆய்வுப் பிரிவொன்று நிறுவுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தேவையான அறிக்கைகள் பெற்றுக் கொள்ளல் நாளாந்த செயற்பாட்டு அவதானிப்புக்களுக்கு தேவையான டேஷ் பலகை நிறுவுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் தற்போது தேவையான துணைக் கருவிகள் அனைத்து மதுவரி உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த மென்பொருள்கள் உரிய முறையில் செயற்படுகின்றது. | |
| 42. | கட்டளை இலக்கம் 7/2021 மதுவரி அறிவித்தலின் விதி 5(2) இன் படி விமானத்தளங்கள் மற்றும் துறைமுகங்கள் உட்பட ஏனைய இடங்களில் செயற்படுத்தப்படுகின்ற சுங்க வரியின்றிய கடைகளுக்கு | 2022 | தொடர்ச்சியான நுண் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு செயற்படுத்துவதன் மூலம் சுங்க வரியின்றிய கடைகளுக்கு வழங்கப்படுகின்ற மதுவரியின் | விமானத்தளங்கள் மற்றும் துறைமுகங்கள் உட்பட ஏனைய இடங்களில் செயற்படுத்தப்படுகின்ற சுங்க வரியின்றிய கடைகளுக்கு வழங்கப்படுகின்ற மதுவரியின் கீழ் அடங்குகின்ற | விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற சுங்கத் தீர்வை இன்றிய கடைகளில் ஸ்டிகர் செயற்படுத்துதல் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| வழங்கப்படுகின்ற மதுவரி அடங்குகின்ற பண்டங்கள் மீது சுங்கத் தீர்வை செலுத்தாத பொருட் குதங்களில், பாதுகாப்பு அடையாளம் ஒட்டும் செய்முறை உரிய முறையில் நிறைவேற்றப்படுகின்றது என கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. மற்றும் தூதுவர் சேவைகள், ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் மற்றும் ஸ்ரீலங்கா கேடரின் ஆகிய நிறுவனங்கள் சுங்க வரியின்றிய நிறுவனங்களாக காணப்படாத போதிலும் ஸ்டிகர் குழுவின் பரிந்துரையின் படி ஸ்டிகர் பயன்படுத்துதல் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கீழ் காணப்படும் பண்டங்கள் மீது சுங்கத் தீர்வை செலுத்தப்படாத பொருட் குதங்களில் பாதுகாப்பு அடையாளர் ஒட்டும் செய்முறை உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றது என முகாமைத்துவத்தினால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். | பண்டங்கள் மீது சுங்கத் தீர்வை செலுத்தாத பொருட் குதங்களில் பாதுகாப்பு அடையாளம் ஒட்டும் செய்முறை இலங்கை சுங்கத்தின் பொறுப்பாக காணப்படுகின்றது. மதுவரி உத்தியோகத்தர்களுக்கு சுங்கத் தீர்வை செலுத்தாத பொருட்குதங்களை பரிசோதனை செய்யும் அங்கீகாரம் காணப்படாததுடன் ஸ்டிகர் ஒட்டிய பின்னர் சுங்கத் தீர்வை இன்றிய கடைகளில் காணப்படுகின்ற மதுபான போத்தல்களை பரிசோதிப்பதற்காக மதுவரி உத்தியோகத்தருக்கு அங்கீகாரம் காணப்பட்டதுடன் இதுவரை மதுவரி உத்தியோகத்தர்களினால் அந்த சுங்கத் தீர்வை இன்றிய கடைகளை பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் மதுவரித் திணைக்களத்தின் வழங்கள் செயல்முறை ஒழுங்குறுத்தும் பிரிவினால் தூதுவர் சேவை, ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ், | பொறுப்புச் சொல்ல வேண்டிய நிறுவனங்களில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் காணப்படவில்லை. |

ஸ்ரீ லங்கா கேடரின் ஆகிய நிறுவனங்களுக்கு தேவையான மதுபானங்களுக்காக ஸ்டிகர்கள் குறிப்பிட்ட சுங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுவதுடன் அவரினால் அந்த ஸ்டிகர் பெற்றுக் கொள்ளப்பட்டது என சான்றுபடுத்தி கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் வழங்கல்கள் செயல்முறை ஒழுங்குறுத்தும் பிரிவினால் கோவை இடப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது.

43. மதுவரி அறிவித்தல் 7/2021 இன் படி நுகர்வோரை அடைவதற்கு முன்னர், அனைத்து போத்தல்களிலும் மற்றும் கேன்களிலும் அங்கீகரிக்கப்பட்ட டிஜிடல் அடையாளம் பதியப்படல் ஆகிய கட்டளை தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை என கீழே தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 44. | டிஜிடல் அடையாள முறைமையின் கீழ் ஸ்டிகர் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் பிரதான கம்பனியொன்றின் ஒரு உற்பத்தி ஆலையில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது ஒப்பந்தக் கம்பனியின் மேற்பார்வையின் கீழ் அடையாள இயந்திரம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களின் பரிசோதனை குறிப்பு அறிக்கையின் படி இயந்திரம் பொறுத்தப்பட்ட 2022 ஜனவரி 11 திகதி முதல் 2023 ஜனவரி 31 திகதி வரையான காலப் பகுதியில் அதாவது அண்மித்த 13 மாதங்களுக்குள் 813 சந்தர்ப்பங்களில் அச்சு இயந்திரம் செயற்படாமல் காணப்பட்டது. மதுவரிக் கட்டளை இலக்கம் 07/2021 கட்டளைக்கு இணங்க இணக்கமின்றிய வகையில் 2022 ஜனவரி 11 முதல் 2023 ஜனவரி 31 திகதி வரையான காலப்பகுதியில் 4,904,369 மதுபான போத்தல்கள் ஸ்டிகர் பதியப்படாமல் சந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது. | 2022 | இயந்திரங்களின் செய்முறைசார் சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த உற்பத்தியாலையில் இந்த செயற்திட்டம் ஆரம்பித்த போது இயந்திரங்களில் காணப்பட்ட செய்முறைசார் சிக்கல்களின் காரணமாக டிஜிடல் அடையாளமிடல் தாமதமடைந்திருந்தது. தற்போது அந்த இயந்திரங்களில் செய்முறைசார் சிக்கல்களை தவிர்த்துக் கொண்டு தொரடர்ச்சியாக டிஜிடல் அடையாளமிடல் மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இயந்திரங்களில் செய்முறைசார் சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்காக புதிய இயந்திரப் பொறிகள் அதற்காக பெற்றுக் கொள்வதற்கு ஒப்பந்த கம்பனியை அறிவுருத்தப்பட்டுள்ளது. | புதிய இயந்திரம் பொறுத்துதல் மற்றும் காணப்படுகின்ற இயந்திரங்களின் வழுக்களை சரிசெய்யப்பட்டதற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 45. | தீவிர மதுபான உற்பத்தி செய்யும் பிரதான | 2023 | மதுவரி அறிவித்தலுக்கு இணங்க | டிஜிடல் அடையாளமிடல் தன்னிச்சையாக | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கம்பனியொன்றின் உற்பத்தியாலை ஒன்றில் மதுவரி திணைக்கள உத்தியோகத்தர்களின் பரிசோதனை குறிப்பு அறிக்கையின் படி இயந்திரம் பொறுத்தப்பட்ட 2022 ஜனவரி 13 திகதி முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் அச்சு இயந்திரம் செயற்படாமல் காணப்பட்ட காரணத்தினால் மி.லீ. 180 அளவான 3,601,735 மதுபான போத்தல்கள் மற்றும் 2023 ஜனவரி முதல் பெப்ரவரி 14 வரையான காலப்பகுதியில் மி.லீ. 180 அளவான 66,335 மதுபான போத்தல்கள் டிஜிடல் அடையாளம் இடப்பட்டிருக்காமை அறிவிக்கப்பட்டிருந்தது. | | செயற்பட வேண்டும். | மேற்கொள்ளப்படுவதனால் டிஜிடல் அடையாளம் அச்சிடப்படாமை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்காக தனியாக ஆட்கள் ஈடுபடுத்தி அவ்வாறான அச்சிடப்படாத போத்தல்களை இனங்கண்டு அந்த போத்தல்களின் மீது அடையாளமிடும் செய்முறையொன்று தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது. | |
| 46. | தானிய மதுபான உற்பத்தி செய்யும் பிரதான கம்பனி ஒன்றில் 2023 ஜனவரி 12 திகதி முதல் 2023 செப்தெம்பர் 19 திகதி வரையான காலப் பகுதியில் 54 சந்தர்ப்பங்களில் அச்சு இயந்திரம் செயற்படாமல் காணப்பட்டதால் டிஜிடல் அடையாளமிடப்படாத 1,335,591 எண்ணிக்கையான பியர் போத்தல்கள் மற்றும் 3,362,568 எண்ணிக்கையான | 2023 | மேற்படி | அந்த டிஜிடல் அடையாளத்தை இயற்கை கண்களுக்கு புலப்படக் கூடியவாறு அச்சிடுவதற்காக ஒப்பந்த நிறுவனம் இணங்கியுள்ளது. மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு டிஜிடல் அடையாளம் பரிசோதனை செய்வதற்காக UV lights வழங்கப்பட்டிருந்தது. | உபகரணங்கள் உரிய முறையில் செயற்படுத்தப்படுகின்றது என்பதற்கான சான்றுகள் கோப்புக்களில் காணப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பியர் கேன்கள் இனங்காணப்பட்டிருந்தது. அந்த போத்தல்கள் மற்றும் கேன்களை இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டிருந்த மற்றும் ஏற்றுமதிக்காக மதுவரித் திணைக்களத்தினால் எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 47. | செலாவணி விகிதாசாரம் அதிகரித்தல், வங்கி கமிஷன் மற்றும் சேவைக் கட்டணம் செலுத்துவதற்காக அச்சிடப்பட்ட ஸ்டிகர்கள் மற்றும் டிஜிடல் அடையாளத்திற்கான கிரயம் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. உள்நாட்டில் அச்சிடப்பட்ட ஸ்டிகர்கள் மற்றும் டிஜிடல் ஸ்டிகர்களுக்காக மதுபான உற்பத்தி கம்பனிகளில் இருந்து ஸ்டிகர்களுக்காக அறவிடப்படுகின்ற ரூபா 2 ஆகு இருப்பதனால் மேற்கூறிய கிரயம் அதிகரித்தல் மீது நிதி நட்டத்தை அணவல் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 | ஸ்டிகர் முகாமைத்துவ செயற்திட்டத்தை மீளாய்வு செய்து அரசிற்கு செலவுப் பொறுப்பொன்று ஏற்படாதவாறு செயற்படுத்த வேண்டும். | டொலரின் பெறுமதி விரைவாக அதிகரித்தல் காரணத்தினால் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டி நேரிட்டுள்ள தொகை ரூபா 2/= இனை விட மிகையாக இருப்பதன் காரணத்தினால் ஸ்டிகரின் விலையை திருத்துவதற்காக அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | விலைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 48. | விற்பனைக்காக வினியோகிக்கும் போத்தல்களில் போலியான ஸ்டிகர் | 2023 | மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் படி செயற்பட | விசாரணை அலுவல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட் | விசாரணைகள் முடிவடைந்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| ஒட்டப்பட்டிருந்த 78 அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த நிறுவனங்கள் தொடர்பாக மதுவரி அறிவித்தல் இலக்கம் 7/2021 இன் பிரிவு 25 மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 27, 47 மற்றும் 56 பிரிவுகளின் ஏற்பாடுகளின் படி 3 உற்பத்தியாலைகள் மற்றும் 78 அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்களுக்காக அந்த 03 உற்பத்தியாலைகளினால் பொறுப்பேற்றுக் கொண்டு 2023 செப்தெம்பர் மாதத்தில் இணங்கப்பட்டிருந்து. உச்சமட்ட இணக்கக் கட்டணமாக ரூபா 500,000 வீதம் ரூபா 40.5 மில்லியன் தொகை மற்றும் மதுவரித் தொகை மற்றும் 3 சதவீத தாமதக் கட்டணமாக ரூபா 17.938 மில்லியன் தொகை விசாரணைக்கு ஆளாக்கப்பட்டிருந்த 3 உற்பத்தி நிறுவனங்களில் இருந்து அறவீடு செய்யப்பட்டிருந்தது எனவும் 180 ml அளவான 55,940 மதுபான போத்தல்கள் அரச மயமாக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட விசாரணை | வேண்டும். | டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிக்கைகள் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 49. | நிதியமைச்சு மற்றும் மதுவரித் திணைக்களம் இணைந்த குழுவொன்றின் மூலம் 2023 ஒக்தோபர் 16 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த குழு அறிக்கையின் படி டிஜிடல் குறியீடு தொடர்ச்சியாக செயற்படுத்தப்படாமைம, உற்பத்தி செய்முறையின் வேகத்திற்கு டிஜிடல் குறியீடு பயன்படுத்தும் இயந்திரங்களின் வேகம் ஒத்திருக்காமையினால் டிஜிடல் குறியீடு அடங்கியிருக்காக உற்பத்திகள் சந்தைகக்கு வழங்கப்படல், அனைத்து அறிக்கைகளும் பெற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் மொடியூலர் அபிவிருத்தி அடைந்திருக்காமை, டிஜிடல் அச்சிடக் கூடிய அச்சிடும் போது குறைபாடுகள் ஏற்படக் கூடிய டிஜிடல் அச்சீடுகளை இனங்காணும் செய்முறையொன்று முறைமையில் காணப்படாமை, இயற்கை கண்களுக்கு தோற்றக் கூடியவாறு டிஜிடல் குறியீடு அச்சிடப்பட வேண்டியிருத்தல், முறைமை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கு | 2023 | நிதியமைச்சுச் செயலாளரினால் நியமனம் செய்யப்பட்ட குழு அறிக்கையின் பரிந்துரையை செயற்படுத்தப்படுதல். | உற்பத்தி செய்முறை மற்றும் தொடர்புடைய அனைத்து இடங்களும் தற்போது மதுவரி உத்தியோகத்தரினால் பரிசோதனை செய்யப்படுகின்றது. வேறு தரப்பினரின் நேரடியாக பரிசோதனை செய்தல் திடீர் கணக்காய்வுகள் மறைப்பின்றி மற்றும் வெளிப்படைத் தன்மை ஏற்படக் கூடியவாறு செய்முறையொன்று அறிமுகப்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.<br><br>மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 33, 34, 35 மற்றும் 48 பிரிவுகளின் ஏற்பாடுகள் தற்போது செயற்படுத்தப்பட்டு மதுபானக் கடைகள் மற்றும் உற்பத்தியாலைகள் தொடர்ச்சியாக சுற்று வலைப்புகள் மேற்கொள்ளப்படுவதுடன் தொடர்ந்தும் | இந்த பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

முழுமையான கணினி முறைமை மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென இனங்காணப்பட்டிருந்தது.

அந்தக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகளில் பின்வரும் பரிந்துரைகள் கணிசமான முன்னேற்றமொன்றை அடைந்திருக்கவில்லை.

- டிஜிடல் குறியீடு மற்றும் அச்சிடப்பட்ட ஸ்டிகர்களுக்காக விலை வீச்சு மீண்டும் பகுப்பாய்வு செய்தல் பொருத்தமானது என.
- மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 56 இனை அகற்றல் அல்லது இணக்கப்பாட்டுக் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என.
- 7/2021 மதுவரிக் அறிவித்தலின் பிரிவு 15 இற்கு இணங்க பாதுகாப்பு அடையாளர்களின் மாதிரிகள், தன்மைகள் திறந்த, திறக்கப்படாத மற்றும் நியாயமான அடையாள

போலியான ஸ்டிகர் பரிசோதனைக்காக மதுவரிச் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டு இந்த போலியான ஸ்டிகர்கள் அடங்கிய மதுபான போத்தல்கள் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உள்நாட்டு உற்பத்திகளுக்காக டிஜிடல் குறியீட்டு முறை பயன்படுத்தும் போது செய்முறை சார் சிக்கல்கள் ஏற்படுகின்றது. எனினும் அனைத்து உள்நாட்டு மதுபான உற்பத்திக்காக அச்சிடப்பட்ட ஸ்டிகர் (Paper Base) பயன்படுத்தப்படும் இயலுமை காணப்படுகின்றதான என ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாதிரியை மாற்றப்பட வேண்டியிருத்தல், அது தொடர்பான பொது மக்கள் மற்றும் மதுபான கடை உரிமையாளர்களை அறிவுருத்தும் செய்முறையொன்று தயாரித்தல்.<br><br>• பாதுகாப்பு ஸ்டிகர் ஒன்றிற்காக உற்பத்தியாள்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 2 விலையினை தற்போதைக்கு பொருத்தமானவாறு திருத்துதல்.<br><br>• முறையான ஆய்வொன்றின் மற்றும் கிரய பகுப்பாய்வின் மூலம் டிஜிடல் குறியீட்டு முறை அனைத்து உள்நாட்டு மதுபான உற்பத்திக்காகவும் பயன்படுத்துதல் பொருத்தமானது என. | | | | |
| 50. | திணைக்களத்தின் பெறுகைக் குழுவினால் 2022 திசெம்பர் 27 திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த நிழற்பிரதி இயந்திரம் கொள்வனவின் போது தெரிவு செய்யப்பட்ட விலைகூறல்தாரர் 11 நிழற்பிரதி இயந்திரங்கள் வழங்கும் போது 2 ட்ரே உடனான இயந்திரங்கள் வழங்குவதற்கு | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | நிழற்பிரதி இயந்திரத்திற்கு தாள் உட்படுத்தப்படும் 02 ட்ரேகள் காணப்பட வேண்டியிருந்த போதிலும், வழங்கள் கம்பனியினால் 01 ட்ரே உடனான இயந்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் திணைக்களத்தினால் | எதிர்காலத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் ஏற்படாதவாறு செயற்படுவதற்கு உத்தியோகத்தர்களை அறிவுருத்தியதற்கான தகவல்கள் காணப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இணங்கியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதி ஒரு ட்ரோ உடனான இயந்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் விலைகூறல்தாரர் விவரக் குறிப்புகளுக்கு இணக்கமின்றி பண்டங்கள் வழங்கும் போது விவரக் குறிப்புக்களின் படி சரியான பண்டங்களை பெற்றுக் கொள்ளாமல் 2022 திசெம்பர் 31 திகதி காசோலை எழுதப்பட்டிருந்தது. மேலும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(ஆ) பந்திக்கு இணங்க வழங்கள் ஒப்பந் உடன்படிக்கைக்கு அணுகுதல் மற்றும் நிழற்பிரதி இயந்திரம் பெற்றுக் கொள்ளும் போது அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.3 பந்திக்கு இணங்க நடவடிக்கை ஏற்பட்டிருக்கவில்லை. | | | வேண்டப்பட்டிருந்த 02 ட்ரே உடனான இயந்திரம் வழங்கும் படி வழங்கள் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் அந்த வழங்களை மேற்கொண்டு சரியானதென உறுதிப்படுத்திய பின்னர் அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளின் சுட்டிக் காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டது. | |
| 51. | மதுவரித் திணைக்களத்தின் பாதுகாப்புச் சேவை மற்றும் பாதுகாப்பு கமெரா முறைமை பொருத்தப்பட்டிருந்த போதிலும் மதுவரித் திணைக்களக் கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் துணைக் கருவிகள் 2023 செப்தெம்பர் 04 | 2023 | நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | மின்பிறப்பாக்கி இயந்திரம் காணாமல் போதல், களவெடுத்தல் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடைபெறுகின்றது. மேலும் நிதிப் பிரமாணம் 104(3) இற்கு இணங்க ஆரம்ப விசாரணை | குறிப்பிட்ட காணாமல் போதல் தொடர்பாக அறிவிக்கப்பட்ட ரூபா 4.13 மில்லியன் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்காணல் இது வரை நடைபெற்றிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதி காணாமல் போயிருந்த காரணத்தினால் ரூபா 4,130,300 இற்கான நட்டமொன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3) இற்கு இணங்க ஆரம்ப விசாரணை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றமும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | | ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் இறுதி விசாரணை மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிவிக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | 2024 ஆண்டில் செயற்படாத மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் திருத்துவதற்காக ரூபா 4.5 மில்லியன் தொகை புதிய பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 52. | அனுமதிப்பத்திரங்களுடைய 23 மதுபான உற்பத்தியாலைகளில் அரச வருமானத்திற்கு மிகவும் குறைந்த பங்களிப்புச் செய்யக் கூடிய 06 உற்பத்தியாலைக் கம்பனிகள் தொடர்பாக மதுவரித் திணைக்களத்தின் ஒழுங்குறுத்தலில் காணப்படும் செயற்திறமை மதிப்பாய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயலாற்றுகை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் அடங்கிய அறிக்கையின் மூலம் 19 விடயங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகளை | 2021 | பரிந்துரைகளை செயற்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளின் முன்னேற்றம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட வேண்டும். | கணக்குக் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தலின் கீழ் செயற்படுத்தப்பட்ட பரிந்துரைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுட்டிக் காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் அடங்கிய ஒன்றித்த கணினி முறைமை நிறுவுதல், வடிசாலைகளின் ஸ்பிரீட் உற்பத்தி செய்முறை கணினி மயப்படுத்துவதற்கு மதுபான அனுமதிப் பத்திரத்திற்காக வெளிப்படை தன்மையான செய்முறையொன்று செயற்படுத்துதல், உற்பத்தியாலைகளில் லேபல்கள் மற்றும் போத்தல் மூடிகள் மற்றும் தொடர்புகள் பரிசோதனை செய்தல் மற்றும் மதுவரி வருமானம் தொடர்பாக கொள்கைசார் தீர்மானம் எடுக்கும் போது மதுப்பாவணையின் கேடுகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்படுத்துவதற்காக திணைக்களத்தினால் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கை முறைகளின் முன்னேற்றம் போதிய மட்டத்தில் காணப்படவில்லை. | | | | காரணமாக மேற்கொள்ள நேரிடுகின்ற நேர் மற்றும் நேரில் கிரயம் தொடர்பாக கவனம் செலுத்துதல் ஆகிய பரிந்துரைகளுக்காக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. |
| 53. | உள்நாட்டு சந்தைக்கு இறக்குமதி செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் தொடர்பாக மதுவரி ர.பீ. 03 அனுமதிப்பத்திரங்கள் பெற்றுள்ள இடங்களிலிருந்து 2021 பெப்ரவரி 19 திகதி 04/2021 இலக்கங் கொண்ட மதுவரி சுற்றறிக்கையின் படி அரையாண்டு அடிப்படையில் மதுபான வகைகளில் மாதிரிகள் பெற்றுக்கொண்டு அரச பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டு அறிக்கைகள் போடப்பட்டு நியமங்கள் மற்றும் பண்புகளை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அவ்வாறான அறிக்கைகளுக்காக 06 இடங்களினால் 53 சந்தர்ப்பங்களில் மாத்திரம் மாதிரிகள் பெற்றுக் கொண்டிருந்தது. | 2021 | இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் தொடர்பான நியமங்கள் மற்றும் விவரக் குறிப்புக்களுக்கு இணக்கப்பாடு தொடர்பாக திணைக்களத்திற்கு சாட்டப்பட்டுள்ள பொறுப்புக்கள் நிறைவேற்றக் கூடியவாறு செயற்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மாதிரிகளை பகுப்பாய்வாளருக்கு சமர்ப்பித்தல் செய்முறை, குதங்கள் மற்றும் மதுபான உற்பத்தியாலைகள், மதுவடிசாலைகள், இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள், ஏற்றுமதிக்காக வெளிநாட்டு மதுபானங்களின் மாதிரிகள் மற்றும் போத்தல்களில் அடைக்கப்பட்ட கள்ளு, கள்ளுத் தவரணைகள், தோட்ட கள்ளு கண்டின்களில் கள்ளு மாதிரிகள் பகுப்பாய்வாளருக்கு சமர்ப்பித்தல் தொடர்பாக 4/2022 விரிவான சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்த போதிலும் அதன் படி செயற்படுத்தப்படுகின்றது என தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 54. | **குற்றப் பிடிப்புக்கள் மற்றும் பொறிமுறை குற்றப் பிடிப்பு இலக்குகள்**<br><br>2023 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி காலாண்டு ஒன்றில் 9,250 வீதம் 37,000 குற்ற பிடிப்புக்கள் இலக்கினை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது டன் 39,436 பிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது குற்றப் பிடிப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | | | | |
| 55. | 2023 ஆண்டிற்காக குற்ற பிடிப்பு இலக்கு 37,000 தொகை மற்றும் 4,000 பொறிமுறை குற்ற பிடிப்புக்கள் ஆக மொத்தம் 41,000 பிடிப்புக்கள் திட்டமிடப்பட்டு, ஆண்டின் போது 39,436 தொகை மற்றும் பொறிமுறை குற்றப் பிடிப்புக்கள் 5,499 தொகையாக மொத்தப் பிடிப்புக்கள் 44,935 தொகை 2023 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மதுவரித் திணைக்களத்தின் முக்கியமான கருமம் ஒன்றாகிய சட்டத்தை செயற்படுத்தும் கருமம் சுட்டிகள் என பயன்படுத்திக் கொள்ளும் | 2023 | பொறிமுறை குற்றங்கள் மற்றும் குற்றப் பிடிப்புக்களின் எண்ணிக்கை முடிந்த அளவு 50,000 இற்கு வரையறுத்து வைத்துக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | மீளாய்வாண்டு காலப் பகுதிக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்களில் காட்டப்பட்டுள்ள தரவுகளுடன் இணங்குகின்றது என. | 2024 ஆண்டில் ஒரு காலாண்டிற்கு 1,125 வீதம் பொறிமுறை குற்றப் பிடிப்புக்கள் 4,500 தொகை ஒரு காலாண்டிற்கு 9,750 வீதம் 39,000 குற்றப் பிடிப்புக்கள் திட்டமிடப்பட்டு 2024 ஜூன் 30 திகதியளவில் முறையே 2,592 பொறிமுறை குற்றங்கள் மற்றும் 18,930 குற்றப் பிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொறிமுறை குற்றங்கள் மற்றும் குற்றப் பிடிப்புக்கள் எண்ணிக்கை முடிந்த அளவு 50,000 இற்கான வரையறுக்கு அண்மித்து வைத்துக்கொள்ளும் தேவைப்பாடு நிதியமைச்சினால் அழுத்தப்பட்டிருந்தது. | | | | |
| 56. | குற்றப் பிடிப்புக்களின் இலக்குகளை அடைவு தொடர்பான முன்னேற்றப் பரிசோதனையின் போது 2023 ஆண்டிற்காக வழங்கப்பட்டிருந்த இலக்களை மிகைத்து பிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 25 மதுவரி நிலையங்கள் குறிப்பிட்ட இலக்கினை அடைந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன் அவற்றில் 2 மதுவரி நிலையங்களில் 75 சதவீதத்தை விட குறைவான சதவீதத்திலும் 6 மதுவரி நிலையங்களில் 90 சதவீதத்தை விட குறைவான சதவீதத்திலும் 17 மதுவரி நிலையங்கள் 90 சதவீதத்திற்கும் 100 இற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் இலக்குகளை அடைந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2023 | மேற்படி | திருத்தப்பட்ட இலக்குகளை நோக்கி நெருங்கியிருக்காத மதுவரி நிலையங்களுக்காக பதில்கள் விசாரித்தல் மற்றும் கண்டித்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | 2024 ஆண்டின் முதல் அரையாண்டு தொடர்பாக இலக்குகளை அடைதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட மதுவரி நிலையங்கள் காணப்பட்டது. |

57. **நிலைபேறான அபிவிருத்தி**

| | | | |
|---|---|---|---|
| ஐக்கிய நாடுகள் 2022 அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2030 இணங்க மதுவரித் திணைக்களம் 15 குறிக்கோள்கள் தொடர்பாக நெருங்க வேண்டிய 37 இலக்குகளில் 2022 ஆண்டிற்கான 05 குறிக்கோள்களின் கீழ் 07 இலக்குகள் இனங்கண்டிருந்ததுடன் அதில் அடங்கியுள்ள சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பிற்காக இனங்கண்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல் பாராளுமன்ற கணக்குக் குழுக் கூட்டத்திலும் கவனம் செலுத்தப்பட்டு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தது. ஆய்வுகூடமொன்று நிர்மாணித்தல் மற்றும் கழிவுப் பொருட்கள் உருவாதலை தடுப்பதற்காக உத்தேச சுற்றாடல் நேய உற்பத்தி செய்முறை நிறுவுதல் மற்றும் உருவாக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு விடுவித்தல் மற்றும் அவற்றை மீள்சுழற்சி செய்தல் ஆகிய துறைகளுக்கு முன்னேற்ற | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் கீழ் 15 குறிக்கோள்களில் இனங்கண்டிருந்த 05 குறிக்கோள்களின் கீழ் 07 இலக்குகள் நிறைவேற்றுதல் தொடர்பான வருடாந்த மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | 2022 நான்காவது காலாண்டு தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் படி மதுபானங்களுக்காக முறையான நியமங்கள் அறிமுகப்படுத்தல் 65% ஆய்வு கூடம் நிறுவுவதற்காக 40% வருடாந்தம் மதுக் கைத்தொழில் கழிவுப் பொருள் உருவாதலை தடுப்பதற்காக உத்தேச சுற்றாடல் நேய உற்பத்தி செய்முறை நிறுவுதல் மற்றும் உருவாக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு விடுவித்தல் மற்றும் அவற்றை மீள் சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் குறைத்தல் 85% இனாலும் முன்னேற்றம் ஒன்றை அடைந்திருந்தது. | கழிவுப் பொருள் உருவாவதை தடுப்பதற்காக உத்தேச சுற்றாடல் நேய உற்பத்தி செய்முறை நிறுவுதல் மற்றும் உருவாக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு விடுவித்தல் மற்றும் அவற்றை மீள்சுழற்சி செய்தல் ஆகிய துறைகளுக்கு உரிய வருடாந்த மதிப்பாய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 58. | மதுவரி தலைமை அலுவலகத்தின் 1913 சுருக்க அடையாக தொலைபேசி ஊடாக மதுவரி செயற்பாட்டு கருமபீடத்திற்கு பொதுமக்களிடம் 899 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் அவற்றில் 317 விஷேட செயற்பாட்டு அலகிற்கும், 554 பிரதேச அலுவலகங்களுக்கும் 28 போதைப் பொருள் ஒழிப்பு அலகிற்கும் அனுப்பப்பட்டிருந்ததுடன் அவற்றில் 2023 திசெம்பர் 31 உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த வெற்றிகரமான பிடிப்புக்கள் 356 எனப்படும் 39 சவீதமாகும். | 2023 | செயற்பாட்டுக் கருமபீடத்திற்கு கிடைக்கக் கூடிய முறைப்பாடுகள் விரைவாக செயற்படுதல் மற்றும் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2024 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு 365 வெற்றிகரமான பிடிப்புக்கள் எனப்படும் 41 சதவீதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆண்டிற்காக 500 முறைப்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 460 முறைப்பாடுகள் கிடைத்து மதுவரி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 59. | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்திற்குரிய 38 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஷ்ட மட்டத்திற்குரிய பதவிகளை நிரப்புவதற்காக பதில் கடமை மற்றும் கடமைகளை அணவல் செய்வதன் கீழ் உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. | 2023 | அத்தியவசியமான வெற்றிடப் பதவிகளை நிரப்புவதற்கும் தேவையற்ற பதவிகளை அடிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிரேஷ்ட மட்டத்திற்குரிய மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகப் பதவியொன்று, பிரதான நிதி உத்தியோகத்தர் பதவியொன்று, 02 மதுவரி ஆணையாளர் பதவிகள், 08 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகள், 08 உதவி மதுவரி ஆணையாளர் பதவிகள், 18 மதுவரி அத்தியட்சகர் | திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திற்குரிய மதுவரி ஆணையாளர் நாயக பதவி மற்றும் மதுவரி ஆணையாளர் வருமானம் பதவி ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது. ஏனைய பதவிகளுக்கு கடமை அணவல் மற்றும் கடமை நிறைவேற்றும் |

| | |
|---|---|
| பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றது. எனினும் பிரதான நிதி உத்தியோகத்தர் பதவி 2022.12.31 திகதி முன் திகதியிடப்பட்டு நியமனம் 2024.02.01 வழங்கப்பட்டிருந்தது. | அடிப்படையில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றது. |

தலைப்பு - 249 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 102,316,641 | 102,316,641 | (3,447,457,199) | முனைப்பழியற்ற |
| **2022** | 100,945,755 | 100,945,755 | (4,343,885,837) | முனைப்பழியற்ற |
| **2023** | 112,215,735 | 112,215,735 | (5,615,606,104) | முனைப்பழியற்ற |

| தொடர் இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டுக்காக 12 வருமான குறியீட்டு இலக்கங்களின் கீழ் ரூபா 90,070,000,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அனைத்து வருமான குறியீட்டு இலக்கங்களின் அடிப்படை வருமான மதிப்பீடுகள் திருத்தப்பட்ருந்தன. 03 வருமானக் குறியீட்டு இலக்கங்களின் மொத்த வருமான மதிப்பீடு ரூபா 23,100,000,000 இனால் குறைக்கப்பட்டிருந்தது. 09 வருமானக் குறியீட்டு இலக்கங்களின் மொத்த வருமான மதிப்பீடு ரூபா 44,980,000,000 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. 2003.05.00 திறைசேரி பிணை முறி மிகை அறவீடு மொத்த வருமான மதிப்பீட்டில் | 2023/ 2022/ 2021 | நி.பி. 85 இல் குறிப்பிட்ட ஏற்பாடுகளை கவனத்திற்கொண்டு சரியான மற்றும் நடைமுறை சாத்தியமான வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்க வேணடும். | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளைக் கவனத்தில் கொண்டு சகல விசேட செலவின அலகுகளும் நிறுவனத் தலைவர் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் வருடாந்த மதிப்பீட்டைப் பெற்று வருமான மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.<br><br><u>வருமானக் குறியீட்டு இலக்கம் 2003.05.00 இற்கு உரிய</u><br>ஆண்டின் போது உள்நாட்டுக் கடன் மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திறைசேரி பிணை முறியையும் உள்ளடக்கி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்ட | வருமான மதிப்பீடு திருத்தம் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்ட ரூபா 31,000,000,000 வருமானம் ரூபா 13,000,000,000 இனால் குறைக்கப்பட்டு வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக திணைக்களத்தினால் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை ரூபா 21,880,000,000 இனால் அதிகரித்து மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதி அளவில் 12 வருமான குறியீடுகளிலிருந்து ரூபா 391,279,705,499 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் 11 வருமான குறியீடுகளில் ஆரம்ப வருமான மதிப்பீட்டை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமான மதிப்பீடு மற்றும் அவற்றின் திருத்தம் யதார்த்தமான அடிப்படையில் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | து. ஆண்டின் போது புதிய திறைசேரிப் பிணைமுறி திட்டமிடப்பட்ட பிரகாரம் சந்தையில் விநியோகிப்பதற்கு முடியாமையின் அடிப்படையில் மற்றும் விநியோகிக்கப்பட்ட திறைசேரி பிணைமுறியும் கழிவுடன் விநியோகிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆரம்ப மதிப்பீடு ஆக ரூபா 31,000,000,000 வருமானம் ரூபா 18,000,000,000 வரை திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| 02 | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகளை, உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும் போது 7 வருமானக் குறியீட்டு இலக்களிற்குரியதாக 59 சதவீதம் முதல் | 2023/ 2022 | நி.பி. 85 இல் குறிப்பிட்ட ஏற்பாடுகளை கவனத்திற்கொண்டு சரியான மற்றும் நடைமுறை சாத்தியமான வருமான | நிதிப்பிரமாணம் 85 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு விசேட செலவின அலகுகளும் நிறுவனத் தலைவர் மற்றும் பிரதான | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இவ்வாறான முரண்கள் வெளிப்படுத்தபட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 510 சதவீதம் வரையான வீச்சினுள் வேறுபட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | | மதிப்பீடுகளைத் தயாரிக்க வேணடும். | கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் வருமான மதிப்பீட்டைப் பெற்று வருமான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டிற்கான வருமான மதிப்பீடு சுற்றறிக்கை 2024.05.22 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டுள்ளது. | |
| 03 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 வருமானக் குறியீடுகளிறகுரியதாக நிலுவை வருமானம் ரூபா 2,434,967,737 ஆனதுடன் அவற்றில் ஓராண்டை விஞ்சிய நிலுவை வருமானம் ரூபா 2,240,661,755 ஆக இருந்தது. | 2023/ 2022/ 2021 | நிலுவை வருமானத்தை அறவிட வினைத்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும | 2024.08.20 ஆந் திகதி கூட்டம் ஒன்று நடாத்தி நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கும், நிலுவை வருமானம் அறவிடப்படாமல் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இது வரை மொத்த நிலுவை பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 04 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலுவை வருமானத்திற்கு ஒப்பாக 2023 திசெம்பர் 31 திகதியளவில் மொத்த நிலுவை வருமானம் நுற்றிற்கு 100 சதவீதம் குறைவடைந்தது முதல் 91 சதவீதம் அதிகரித்துள்ளது வரையான வீச்சிளவில் | 2023/ 2022 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேறுபட்டிருந்தது. | | | |
| (i) | பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வருமானக் குறியீட்டு இலக்கம் 20.03.02.99 இன் கீழ் 2018 திசெம்பர் 31 திகதிக்கு முன் காணப்பட்ட திரண்ட நிலுவைத் மீதி ரூபா 259,079 தொகையும் 2020 ஆம் ஆண்டிற்குரியதான ரூபா 232,927 தொகையுமாக கூட்டத்தொகை ரூபா 492,006 பெறுமதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெறுமான தேய்வு அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட அலுவலக உபகரணங்களுக்காக அறவிடப்பட வேண்டிய தொகையானதுடன், இந்த நிலுவைத் தொகை குறித்த உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாததனால் மற்றும் மரணித்தன் காரணமாக அறவிட முடியாதிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட வினைத்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும | இந்த நிலவை வருமானம் தொடர்பாக அறவிடுவதற்கோ அல்லது 2024.05.29 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் பிரகாரம் கைவிடுவதற்கோ தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு 2024.08.20 ஆந் திகதி கூட்டம் ஒன்று நடாத்தி உரிய அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இது வரை நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கோ அல்லது பதிவளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | வருமானக் குறியீட்டு இலக்கம் 20.06.04.00 மூலதன வருமானம் - கடன் மீளஅறவீட்டின் கீழ் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் மற்றும் வ/ப பதுளை மாவட்ட சணச | நிலுவை வருமானத்தை அறவிட வினைத்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும | **இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்**<br><br>2024.08.26 ஆந் திகதி நிலுவைப் பணத்தை அறவிடும் செயல் முன்னேற்றம் தொடர்பான விடயங்களை | இது வரை நிலுவைப் பணத்தை முழுமையாக அறவிடுவதற்கு தவறியிருந்தது. |

சங்கத்திற்குரியதாக 2018 திசெம்பர் 31 வரை முறையே ரூபா 763,814,250 மற்றும் ரூபா 111,114,479 ஆக கூட்டுத்தொகை ரூபா 874,928,729 ஆன நிலுவை வருமான மீதியொன்றை மற்றும் வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.02.01 வட்டி - கடன் வழங்களின் கீழ் குறித்த நிறுவனங்களுக்குரியதாக முறையே ரூபா 612,893,552 மற்றும் ரூபா 2,814,035 மற்றும் சர்வோதய பொருளாதார தொழில் முயற்சி அபிவிருத்தி சேவை (உத்தரவாத) லிமிடட் இற்கான ரூபா 296,351,801 ஆக கூட்டுத்தொகை ரூபா 912,059,388 ஆன நிலுவை வட்டி வருமானமொன்றும், 2018 ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படுவதுடன், இந்த வருமானத்தை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற தன்மை நிலவியதென அவதானிக்கப்பட்டது.

விசாரணை செய்வதற்காக அமைச்சு உத்தியோகத்தர் களுடன் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளதுடன் தற்போது தேறாதிருப்பதற்கு குறித்துரைத்த சொத்துக்களை தேறிய பின்னர் கடன் தொகையை தீர்த்து வைத்தல் தொடர்பான இயலுமான அறிக்கை இடுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

**சணச சங்கம் பதுளை**

திணைக்களத்தால் 2023.12.05 ஆந் திகதிய கடிதம் மூலம் வழக்கு தொடரும் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு சட்டமாதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**சர்வோதய பொருளாதார தொழில் அபிவிருத்தி சேவை (உத்தரவாத) லிமிட்டட் நிறுவனம்**

தொடர்ந்தும் ரூபா 541,395,760 நிலுவைக் கடன் தொகை உள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | முன்னர் ரூபா 40,000,000 தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் அதில் ரூபா 4,425,000 தொகை 2024.11.12 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் மிகுதித் தொகை சர்வோதய பொருளாதார தொழில் முயற்சி அபிவிருத்தி சேவை (உத்தரவாத) லிமிட்டட் நிறுவனத்திற்கு இலாபப் பங்கு பெற்ற பின்னர் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. | |
| 05 | மீளாய்வாண்டினுள் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறாது நடாத்திச் செல்லப்படும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 228,825,376 ஆன 12 வைப்பு கணக்குகள் காணப்பட்டன. இந்த வைப்பு கணக்குகளில் 11 கணக்குகள் வெளிநாட்டு மானியம் பெறுவனவுக்குரியதானதுடன், ஒரு வைப்பு கணக்கு மூன்றாம் தரப்பினருக்கு திருப்பிச் செலுத்துவதற்காக தற்காலிகமாக வைத்திருக்கும் வைப்புகளுக்குரியதாகும். | 2023/ 2022 | மானியங்கள், அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனில் நி.பி 570 பிரகாரம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய கணக்கில் அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | 2023 ஆம் ஆண்டில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளாத வெளிநாட்டு மாநியக் கணக்கு 11 இல் ரூபா 108,111,728 தொகையில் 08 கணக்குகளில் ரூபா 72,308,808 தொகை அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டதுடன் மிகுதி 03 கணக்குகளில் இருந்தான ரூபா 35,802,919 தொகை கணக்கீடு செய்வதற்காக உரிய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 06 | வெளிநாட்டு அரச கடனை அறிக்கையிட பயன்படுத்தப்படும் கணனி தொகுதியின் CSDRMS 854-1 அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடுகையில் 2023 திசெம்பர் 31 திகதி கணக்கீடு செய்யப்படாத மொத்த வெளிநாட்டுக் கடனின் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் ஆகும். மேலும், அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகளின் கீழ் குறிப்பு இலக்கம் 24(II) மூலம் 2023 திசெம்பர் 31 திகதி கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்களின் மொத்த பெறுமதி ரூபா 17,103.2 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மீளாய்வாண்டினுள் போன்றே அதற்கு முன்னைய ஆண்டுகளிளும் மாற்றப்பட்டுள்ள போதும் கணக்கீடு செய்யப்படாத கடன் பெறுமதிகள் நிலவுகின்ற காரணத்தால் 2023 திசெம்பர் 31 திகதி நிதி நிலைமை கூற்றில் வெளிநாட்டு கடன் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் குறைத்து காண்பிக்கப்படடிருந்தது. | 2023/ 2022/ 2021 | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவை கணக்கீடு செய்தல் ஒழுங்குபடுத்து தப்பட வேண்டும். | தொடர்ந்தும் கணக்கீடு செய்வதற்குள்ள கடன் தொகை தொடர்பாக உரிய கணக்காய்வு அலுவலகத்திற்கும் பிரதியுடன் உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக 2024.10.21 ஆந் திகதி கூட்டமும் நடாத்த வேண்டியிருந்ததுடன் மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் இவ்வாறான நிலைமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கும் வகையில் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07 | 2019 சனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை வெளிநாட்டு மானியத்தை பெற்றுக்கொள்வதற்காக பொது திறைசேரினால் ஒவ்வொரு 13 வெளிநாட்டு மானிய நிறுவனங்களுடன் கூடிய கூட்டுப் பெறுமதி 700,000 ஜப்பானிய யென், 132,710,000 யூரோ, 58,417,841 அமெரிக்க டொலர்,400,000 கொரியன் வொன், சீன யுவான் 2,000,000,000 மற்றும் ரூபா 4,545,750 வெவ்வேறு நாணயங்களினால் உடன்படிக்கை கைச்சாதிடப்பட்ட போதும், 2023 திசெம்பர் 31 இல் வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டதாக கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | 2023 | உடன்படிக்கை செய்யப்பட்ட வெளிநாட்டு மானியம் உரிய காலத்தில் ஆகக்கூடிய அளவில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கைக்கு உரிய பணம் கிடைக்கப் பெற்ற பின்னர் மாத்திரம் ஒவ்வொரு செயற்திட்டங்களுக்கும் உரிய விபரங்கள் இந்த திணைக்களத்தினால் அறிக்கை இடப்படுகின்றது. | மேற்படி |
| 08 | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 190,789,890,831 ஆன உபகடன் மீதியொன்று கிடைக்க வேண்டியதாக இருந்தது. குறித்த நிறுவனம் உபகடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தாததன் காரணமாக 03 நிறுவனங்களிற்குரியதாக 05 வருடங்களுக்கும் | 2023/ 2022 | அரசாங்க உபகடன் வழங்குதல், கட்டுப்பாடு மற்றும் உபகடன் சேவை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். | 2024 இன் 33 ஆம் இலக்க அரச கடன் முகாமைத்துவச் சட்டத்தை அமுல்படுத்துதலுடன் கடன் ஆபத்தின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கடன் பெறுநர் இந்த நிதி வசதியீனத்திற்கு உட்படாமல் பரிந்துரை பெற்றுக் கொண்ட பின்னர் மாத்திரம் உபகடன் விநியோகிக்கப்படுகின்றது. | இது வரையிலும் மொத்த நிலுவை உபகடன் மீதியும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேலாக ரூபா 1,316,324,489 நிலுவை உபகடன் மீதியொன்று காண்பிக்கப்பட்டது. | | | | |
| 09 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப கடனுக்காக பெறவேண்டிய வட்டித் தொகை ரூபா 9,439,025,443 ஆனதுடன், 03 நிறுவனங்களிற்குரிய தாக ஒப்பந்தங்களின் பிரகாரம் செலுத்தாத 05 ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்தப்படாத வட்டி பெறுமதி ரூபா 912,059,388 ஆக இருந்தது. | 2023/ 2022 | மேற்படி | மேற்படி | இதுவரையிலும் உபகடனுக்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| 10 | மீளாய்வாண்டில் அரச நிதிக்கூற்றுக்களி பிரகாரம், வெளி நிறுவனங்களிற்கு 10 சந்தர்ப்பங்களில் விநியோகித்த ரூபா 115,977 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறி மற்றும் 10 சந்தர்ப்பங்களில் விநியோகித்த ரூபா 28,838 மில்லியன் பெறுமதியான நிவாரணக் கடிதங்கள் 2023 திசெம்பர் 31 திகதியளவில் காலாவதியாகி உள்ளமை அவதானிக்கப்பட்டது டன், குறித்த செல்லுபடியாகும் காலம் முடிவடைய முன்னர் முறையாக முடிவுறுத்த அல்லது செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க | 2023/ 2022 | மேற்படி | மேற்படி | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 11 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் சிரேஷ்ட மட்ட பணிப்பளர் நாயகம், பணிப்பாளர், பிரதி பணிப்பாளர்/ 03 உதவி பணிப்பாளர்களும், 15 இரண்டாம் மட்ட அலுவலர் பதவிகளும் மற்றும் 05 ஆரம்ப மட்டத்திலான பதவிக்ளும் வெற்றிடங்களாக காண்பிக்கப்பட்டிருந்தன. | 2021/ 2022/ 2023 | திணைக்களத்தின் பணிப்பொறுப்பை நிறைவேற்ற முக்கிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பவும், தேவையற்ற பதவிகள் இருப்பின் அவற்றை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2023.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழே குறிப்பிடப்படுகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. இரண்டாம் நிலையில் 15 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 05 பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை வழங்குமாறு நிதியமைச்சின் மூலம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. சிரேஸ்ட நிலையின் பதவி வெற்றிடங்கள் தொடர்பாகவும் நிதியமைச்சரின் செயலாளரின் மூலம் உரிய நியமன அதிகாரிக்கு அறிவித்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் சிரேஸ்ட நிலையினைப் போன்று இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்ட ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டு | இது வரையில் சிரேஸ்ட நிலையில் மேலதிகப் பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் பதவிகள் 03 உம், இரண்டாம் நிலையின் உத்தியோகத்தர்களில் 15 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 05 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. |

உரிய நியமன அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்தர்களை விடுவித்தலின் பிரகாரம் மிகுதி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

தலைப்பு - 250 அரச கணக்குகள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 237,099,524 | 237,099,524 | 236,590,858 | முனைப்பழியுள்ள |
| **2022** | 187,491,761 | 187,491,761 | 187,003,763 | முனைப்பழியற்ற |
| **2023** | 184,500,755 | 184,500,755 | 184,245,170 | முனைப்பழியற்ற |

| தொடர் இலக்கம் | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 5 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 4 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான ரூபா 40,032,321 ஆன நிதியேற்பாடு எஞ்சியிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவின விடயங்களினதும் தேறிய நிதியேற்பாட்டில் 20 சதவீதம் மற்றும் 100 சதவீதமான வீச்சில் காணப்பட்டது. | 2023/ 2022 | நி.பி. 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். | 2025 ஆம் ஆண்டிற்காக ஆரம்ப செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தி நிதிப்பிரமாணம் 50 ஏற்பாடுகளிக் பிரகாரம் இயலுமான வரை சரியாக மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த நிலைமை காணப்பட்டது. |
| 02 | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நானாவித முற்பணக் கணக்கின் நிலுவையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காட்டப்பட்டுள்ள ரூபா 124,317,823 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அம் மீதியின் 88 சதவீதம் | 2023 | பின் தொடர் நடவடிக்கைகள் முறைமைப்படுத்தப்பட்டு நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு போதிய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலுவை மீதியை தீர்த்து வைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு.<br>• பொலன்னறுவை மாவட்ட செயலகம் - தேசிய | நிலுவை மீதிகளை இதுவரை தீர்த்து வைப்பதற்கு தவறியிருந்தது. |

| | |
|---|---|
| பொலனறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டச் செயலகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த நிலுவை முற்பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய ரூபா 19 மில்லியன் தொகை மற்றும் கிரயத்தை விட குறைந்த விலையில் அரிசி விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டிருந்ததாக இனங்காணப்பட்ட ரூபா 2.9 மில்லியன் தொகை என்பவற்றைப் பதிவளிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பான விரிவான தகவல்கள் மற்றும் தவறு ஒன்று அல்லது மோசடியினால் இந்த நட்டம் ஏற்படாதிருந்தமை உறுதிப்படுத்துவது தொடர்பான ஆவணங்களின் மூலம் விண்ணப்பத்தை மீண்டும் |

சமர்ப்பிக்குமாறு உணவு ஆணையாளர் திணைக்களம் அறிவித்திருந்தது.

* அநுராபுரம் மாவட்ட செயலகம்

- அநுராபுர கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தால் பதிவளிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 2 மில்லியன் தொகையை பதிவளிப்பதற்கு உள்ள சட்ட ரீதியான இயலுமை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் இருந்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

- நொச்சியாகம பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சொத்துக்கள் தேறிய பின்னர் முதன்மையாக நிலுவை முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- எப்பாவல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் இணங்கப்பட்ட பிரகாரம் 2023 ஒக்தோபர் மாதம் முதல் மாதம் ஒன்றுக்கு ரூபா 30,000 வீதம் தவணையாகவும் மற்றும் வருடாந்தம் ரூபா 500,000 ஆகவும் செலுத்துதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

- கமநல சேவை நிலையங்கள் மற்றும் பல்நோக்கு சேவை கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து தீர்த்து வைக்க வேண்டிய ரூபா 18 மில்லியன் தொகை தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் முடிவடையாது இருந்ததுடன் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் மிகுதி நடவடிக்கை

களை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

* அம்பாறை மாவட்ட செயலகம்

- அம்பாறை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்குரிய ரூபா 16.7 மில்லியன் தொகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்றுப் பரிசோதனையின் செயல் முன்னேற்றம் மற்றும் ரூபா 21.4 மில்லியன் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றம் ஒவ்வொரு வழக்குத் தடவையின் இறுதியின் போதும் அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அம்பாறை மாவட்ட செயலகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் அம்பாறை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகம் என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ள்ளது. | |
| 03 | திறைசேரி செயற்பாட்டு நடவடிக்கைகள் தானியங்குவதற்காக ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு ஒன்று (ஐவுஆஐளு) அறிமுகப்படுத்தல் 2010 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஒட்டுமொத்த முதலீட்டு மதிப்பீட்டு கிரயம் ரூபா 7,920 மில்லியன் க்கு சமமான அமெரிக்கா டொலர் 60 மில்லியனாக காணப்பட்டது. 2023 டிசம்பர் 31 ஆம் திரதியாகும் போது அண்ணளவாக 13 வருட காலம் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் ரூபா 5,647 மில்லியன் ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஆரம்ப பிரதான செயற்பாடுகள் 13 துறைகள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்ற நிலைமைக்கு காணப்படாதிருந்தது. எவ்வாறான போதிலும், | 2023 | ஏற்கனவே பின்தங்கிய நிலையில் உள்ள இந்த அமைப்பை முழுமையாக உருவாக்கி விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ITMIS அறிமுகப்படுத்துதல் 2010 ஆம் ஆண்டு முதல் நிதி முகாமைத்துவ செயற்திட்டம் (FMEP) மூலம் மேற்கொள்ளப்பட்டது. அந்த முறைமையில் பிரதான செயற்பாட்டுத் துறைகளை பரவலாக்கும் நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டு முதல் பல்வேறு விடயங்களின் காரணமாக 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சரியான பிரகாரம் மேற்கொள்ள முடியாமல் இருந்தது. இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் அமைச்சரவையினால் முறைமை நடவடிக்கைகள் தொடர்பான மதிப்பீடு ஒன்று மேற்கொண்டு அதனை நடாத்திச் செல்ல வேண்டிய முறை தொடர்பாக பரிந்துரை வழங்குவதற்காக சுயாதீன விசேட நிபுனர் குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் அந்த குழுவின் பரிந்துரை கிடைத்தவுடன் முறைமையின் | இதுவரையில் ITMIS முறைமை முழுமையாக அமுல்படுத்தப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. |

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகும்போது ITMIS கட்டமைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 43,887,382 மற்றும் அமெரிக்க டொலர் 989,103 ஆன தொகை ஒன்று சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றுக்கு மேலும் செலுத்த வேண்டியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை நாளதுவரையாக மேற்கொள்ளாமைக்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறைமையில் Core modules பரவலாக்கலை பூர்த்தி செய்வதற்கு தேவையான மென்பொருள் அனுமதிப்பத்திரம். பெற்றுக் கொள்வதற்கும் முடியாதிருந்தது. மேற்கூறப்பட்ட குழுவின் மூலம் கடந்த ஆகஸ்ட் மாதம் ITMIS முறைமையின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை முதலாவது இந்த திசெம்பர் மாதம் வரையும் பின்னர் 2026 திசெம்பர் மாதம் வரையும் நீடிக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டதுடன் அடுத்து வரும் ஆண்டின் யூலை மாதம் இறுதி வரையில் முறைமையில் இனங்காணப்பட்ட வழுக்களை தீர்த்து வைக்க வேண்டியிருந்தமையும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2024 நவம்பர்

ஆரம்பத்தின் போது கிடைத்திருந்தது டன் அதன் பிரகாரம் முறைமையின் சேவை உடன்படிக்கையை திர்த்து வைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டிற்காக முறைமையின் மென்பொருள் வழங்குனருக்காக கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலுவைப் பணம் செலுத்திய பின்னர் முறைமை Core modules பரவலாக்கலை பூர்த்தி செய்வதற்கு மென்பொருள் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு முடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது அரசாங்கத்தின் செலவினத் தலைப்பு 164 இற்காக பரவலாக்கல் பூரத்தி செய்யப்பட்டு Core modules, மிகுதி செலவினம் தலைப்பு 08 இற்காகவும் பரவலாக்கலை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பிரகாரம் இந்த செயற்பாடுகள் அடுத்து வரும் ஆண்டின் மே மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| 82. | கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 08 ஆந் திகதியில் ஹிரியால பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பிரிவு உதவியாளரின் பொருள் பொழிப்பின் பிரகாரம் காணப்பட்ட நிர்மாண வேலை பொருட்களின் இருப்பு மீதிகளையும் எந்தகல நிர்மாண வேலைத்தளத்தில் | 2022 | இருப்பு பற்றாக்குறை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 101(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக தாபன விதிக் | இது தொடர்பாக பரிசீலனை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இருப்பு பற்றாக்குறை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 101(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையிலுள்ள |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் வேலைதள களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பு மீதிகளையும் ஒப்பீடு செய்த போது ரூபா 6,092,193 பற்றாக்குறையாக இருந்தது. | | கோவையிலுள்ள ஒழுக்காற்று நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். பொறியியல் உதவியாளர்களுக்கு பொருட்களை வழங்குதல், பொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும் ஆவணங்களைப் பேணுதல் சம்பந்தமாக நெருக்கமான கண்காணிப்பிற்கு உட்படுத்தும் வகையில் கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | ஒழுக்காற்று நடைமுறைகளைப் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. |
| 83. | திணைக்களத்தின் இருப்பு புத்தகங்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 5,146,400 பெறுமதியான 7,662 சீமெந்து மூடைகள் என்தகல அணைக்கட்டு III ஆம் கட்டத்திற்காக ஹிரியால பிரிவு பொறியியல் உதவியாளருக்கு வழங்கப்பட்டிருந்தது டன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவற்றில் 2,784 சீமெந்து மூடைகள் பொறியியல் உதவியாளரின் பொறுப்பில் காணப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வினால் இரண்டு | 2022 | இருப்பு பற்றாக்குறை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 101(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக பரிசீலனை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இருப்பு பற்றாக்குறை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 101(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரீட்சிப்பின் போது ரூபா 2,269,718 கிரயமான 2,796 மூடை சீமெந்து பற்றாக்குறையாகக் காணப்பட்டது. | | | | |
| 84. | ரூபா 41,643,000 மொத்த கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் 2021 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த ஹுூதலியாவ குளத்தை புனரமைப்புச் செய்வதற்காக 2022 திசெம்பர் 28 ஆந் திகதி வரை ரூபா 15,455,953 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இன்னும் செலுத்த வேண்டிய ரூபா 6,576,474 பொறுப்புக்கள் காணப்பட்டன. குளத்திலிருந்து சேற்று மண்ணை அகற்றும் நடவடிக்கைகளில் ஒரு பகுதி 2021 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்திலிருந்து 2022 பெப்ரவரி வரை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து மண்ணை வரண்டுதல், தள்ளுதல் மற்றும் ஏற்றுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற ஒரு பிரித்தெடுப்பினை மாத்திரம் கொண்ட இயந்திரம் வாடகை அடிப்படையில் | 2022 | திணைக்களத்திடம் இயந்திரங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது வாடகை அடிப்படையில் வெளி இயந்திரங்களை வழங்குதல் இடம் பெறாதிருப்பதற்கு நடைமுறைகளை நிர்ணயித்து சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் விளைவற்றுக் காணப்படும் போது வெளியிலிருந்து வாடகை அடிப்படையில் இயந்திரங்களைப் பெற்று சேவையில் ஈடுபடுத்துகின்ற உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக விசாரணைகள் நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இவ்வாறானவற்றை தடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திடம் இயந்திரங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது வாடகை அடிப்படையில் வெளி இயந்திரங்களை வழங்குதல் இடம் பெறாதிருப்பதற்கு மற்றும் அதன் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை நிர்ணயித்து சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்பாட்டினை மேற்கொள்ளகூடிய நிர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்‍மான RS - 1373 ஆம் இலக்க JCB இயந்திரத்தினை ஹுதலியாவ வேலைத்தளத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தும் அந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்திற்குச் சொந்தமான மண்ணை கிறுதல்/ வெட்டுவதற்காக பயன்படுத்தக்கூடிய வேக்ஸ் மோட்டார் கிரேடர் இயந்திரம் அனுராதபுரம் நீர்ப்பாசன அலுவலகத்திலிருந்து எடுத்து வரப்பட்டிருந்த 02 டோசர் இயந்திரம் மற்றும் நிகவெரடிய நீர்ப்பாசன அலுவலகத்திற்குச் சொந்தமான லோடர் இயந்திரமும் வேலைத்தளத்திற்கு அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரங்களும் குத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வகையில் திணைக்களத்திடம் போதியளவு இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தும் சாரதிகளுக்கு மற்றும் அந்த

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உதவியாளர்களுக்கு விளைவற்று சம்பளங்களை செலுத்திக்கொண்டு வாடகை அடிப்படையில் மண் வெட்டும் நடவடிக்கைகளுக்காக தனியார் தரப்பினர்களிடமிருந்து வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | | | | |
| 85. | நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான 16 செயற்திட்டங்களுக்கு ரூபா 80,148 மில்லியன் தொகையும் ஏனைய 3 செயற்திட்டங்களுக்கு ரூபா 75,330 மில்லியன் தொகையும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டங்களுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 64,369 மில்லியன் மற்றும் ரூபா 1,817 மில்லின் செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றிற்கு மத்தியில் 17 செயற்திட்டங்களுக்காக கணக்காளர்கள்/ நிதி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தபோதிலும் மேற்கூறிய செயற்திட்டங்களுக்காக நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 2023 | திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற அனைத்து பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான செயற்திட்டங்கள் சம்பந்தமாக வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற அனைத்து பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான செயற்திட்டங்கள் சம்பந்தமாக வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 86. | திணைக்களத்தின் அமைப்பு வரைபடம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2022 | திணைக்கள அமைப்பு வரைபடம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைப்பு வரைபடம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் எதிர்காலத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | திணைக்கள அமைப்பு வரைபடம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| 87. | திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டதிலிருந்து வேலையில் இடைநிறுத்திவைப்பதற்கு உட்படுதல், சேவையை கைவிட்டுச் செல்லுதல், மரணமடைதல் அல்லது ஓய்வுபெறுதலின் அடிப்படையில் திணைக்களத்தின் சேவையை முடிவுறுத்திய 19 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் காணாமல் போனதன் அடிப்படையில் அந்த உத்தியோகத்தர்களுக்கு மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் துணையாளர்களுக்கு ஓய்வூதிய பணிக்கொடை, விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் 14/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பள முரண்பாட்டின் அடிப்படையில் | 2023 | காணாமல் போன கோவைகளுக்கு பொறுப்பான பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை தேடிப்பார்த்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒவ்வொரு மாதமும் ஓய்வூதிய சம்பளக் கொடுப்பணவுக்குரிய முன்னேற்றத்தை உரிய விடய பொறுப்பு உத்தியோகத்தினால் பெற்றுத் தர வேண்டியது என்பதை அறிவிக்கப்பட்டுள்ளது. | காணாமல் போன கோவைகளுக்கு பொறுப்பான பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை தேடிப்பார்த்து அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியத்தினை திருத்தம் செய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | | | |
| 88. | மீளாய்வாண்டில் நீர்ப்பாசன திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 72 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றிருந்ததுடன் ஓய்வூதியத்தினை தயாரிப்பதற்காக தேவையான ஆவணங்களின் சரியான தகவல்களைச் சமர்ப்பிக்காமை மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்காமை முதலிய விடயங்களின் காரணமாக 23 உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | 2023 | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் தகவல்களை சமர்ப்பிக்காமை மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்காமை சம்பந்தமாக முறையான பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | உத்தியோகபூர்வ இல்லங்களின் பதிவேடு நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 89. | திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்றிருந்த 4 உத்தியோகத்தர்களினால் 2023 திசெம்பர் 31 அந்திகதி வரை அவர்கள் வசித்திருந்த திணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைத்திருக்கவில்லை. | 2023 | உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைத்திருக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உத்தியோகபூர்வ இல்லங்களின் பதிவேடு நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. |

**தலைப்பு - 283 வன பாதுகாப்புத் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,746,312,942 | 816,236,346 | 1,930,076,596 | முனைப்பழியுள்ள |
| **2022** | 4,424,947,972 | 832,218,235 | 3,592,729,737 | முனைப்பழியுள்ள |
| **2023** | 4,924,761,921 | 709,484,382 | 4,215,277,539 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் உள்ளபடியாக பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | நுவரெலியா சிறிய அளவிலான நீர்மின் உற்பத்திக் கூடத்தைப் பேணிச்செலவ்தற்காக தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட காணியின் அளவைச் சுற்றி காணியின் அளவை விட 72 பேர்ச் அதிகமாக 2016 ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டிருந்த துடன் அந்தக் கம்பனியால் 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது. தவறியதன் காரணமாக 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 72 பேர்ச் இற்காகவும், 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 174 பேர்ச் இற்காகவும் அறவிட வேண்டிய ரூபா 5,435,860 தொகை (வற் வரியுடன்) அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | 2023 | செயற்திட்டத்தின் செயற்படு நிலையினை பரீட்சிப்பதற்கும் உரிய கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதுவரை நிலுவைக் கட்டணங்கள் செலுத்தப்படாமையால், சட்ட நடவடிக்கை எடுக்க மாவட்ட அலுவலரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிராதது டன், தொகை வசூலிக்கப்படவில்லை மற்றும் நிலுவைத் உரிய கட்டணங்களை வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 02 | பதுளை, அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் கல்குவாரி உரிமையாளர்களினால் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்ட முறையே ரூபா 5,188,707 தொகை, ரூபா 34,147,382 மற்றும் ரூபா 7,604,227 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 46,940,316 ஆன நிலுவைப்பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரதாரர்களின் அனுமதிப் பத்திரம் தற்போது செயல்நிலையில் காணப்படவில்லை. | 2023 2022 | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுத்தல் வேண்டும். | பதுளை மாவட்டத்தில் கருங்கல் வியாபாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 5,188,706.89 ஆன தொகையில் தற்போது ரூபா 1,829,712.28 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கமைய பதுளை மாவட்டத்திலிருந்து 2023.12.31 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 3,358,994.61 ஆகும். இந்த நிலுவைத் தொகையை செலுத்த வேண்டிய வியாபாரிகளிடமிருந்து நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு காணப்பட்டது. | நிலுவைப் பணத்தில் ரூபா 1,829,712 அறவிடப்பட்டுள்ளதுடன், 2024.09.30 ஆந் திகதி தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 45,110,604 ஆகும். உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 03 | வலஸ்முல்ல அடர்ந்த வன அலுவலகத்திற்குரிய நாற்று மேடைகளில் 2021 முதல் நாளாந்த கொடுப்பனவின் அடிப்படையில் செக்ரோல் ஊழியர்கள் 1059 பேர் பதிவுசெய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 2021 சனவரி முதல் 2023 ஒக்தோபர் வரையான காலத்திற்காக ரூபா 1,825,165 சம்பளம் செலுத்தப்பட்ட 200 தொழிலாளர்களினது பெயர் தேசிய அடையாள அட்டை இலக்கம் தேர்தல்கள் | 2023 | நாளாந்த ஊழியர்களை நியமித்தல் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் சம்பளம் செலுத்துவதற்காக முறையான உள்ளளக்கட்டுப்பாடு ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் ஈடுபடுத்தப்பட்ட அந்த தொழிலாளர்கள் உள்ளபடியாக வேலைத்தளத்தில் ஈடுபடுத்தப்பட்டமையை கணக்காய்வுக்கு உறுதிப்படுத்துவதற்கும் | சம்பளப் பட்டியல் பணிகளுக்காக பல்வேறு நபர்கள் வருகை தருவதுடன், அவர்கள் அனைவரினதும் தகவல்கள் அவர்கள் குறிப்பிடும் விதத்தில் தொழிலாளர் பதிவேட்டில் பதிவு செய்யப்படும். அந்த பெயர்கள் அனைத்தும் அந்த தேர்தல் பிரதேசத்திற்குரிய தேர்தல் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியாது. அதற்கமைய தொழிலாளர் பெயர் பட்டியலில் தேர்தல் அலுவலகத்துடன் பரிசோதித்து | ஈடுபடுத்தப்பட்ட அந்த ஊழியர்கள் உண்மையாக பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதாக கணக்காய்வுக்கு உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அலுவலக வாக்காளர் இடாப்புடன் பரீட்சிக்கும் போது பிழையாக இருந்தமையால் உள்ளபடியாக அந்த தொழிலாளர்கள் நாற்றுமேடைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமயை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உறுதிப்படுத்த முடியாது.<br><br>கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு குறைபாடுகளுடனான தொழிலாளர் பெயர்களின் தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகள் முறையே தேசிய அடையாள அட்டையின் பிரகாரம் நபர்களை இனங்காண முடியாத தொழிலாளர்கள், தேசிய அடையாள அட்டையின் இலக்கத்துடன் பெயர்களில் வேறுபாடுகள் காணப்படும் தொழிலாளர்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பெயர்கள் மற்றும் இலக்கங்களை கணினியில் பதிவு செய்யும் போது ஏற்பட்ட அச்சீட்டு பிழைகள், தொழிலாளர் பதிவேடுகளில் பதிவு செய்யும் போது ஏற்பட்ட குறைபாடுகளும் இந்த ஏனைய வேறுபாடுகளுக்கு தாக்கம் செலுத்தியுள்ளது. அதனால் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் மோசடியொன்றை மேற்கொண்டு பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| 04 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற கணிசமான வனாந்திரங்களின் அளவு ஒதுக்க | 2023<br>2022 | ஒதுக்கப் பிரதேசங்களை அளவிடல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் மூலம் உரித்தை | திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் காணப்படும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள், பாதுகாக்கப்பட்ட வனங்கள் மற்றும் | பாதுகாக்கப்பட்ட காடுகளை வர்த்தமானியில் வெளியிடுவதில் தாமதம் நிலவுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வனாந்தரமாக வர்த்தமானியில் பகிரங்கப்படுத்துவதற்கு தாமதிக்கப்பட்டதன் காரணமாக ஒதுக்க வனாந்தரங்கள் சார்ந்ததாக அனுமதியற்ற காணி பிடித்தல்கள் அநேகமாக இடம்பெற்றிருந்ததுடன் அவை ஒதுக்கப் பிரதேசத்தில் இருந்து விடுவிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டமையால் காணப்படுகின்ற இயற்கை வனங்களின் சதவீதம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து செல்வதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பில் பாதகமாக தாக்கம் ஏற்படக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை விரைவுபடுத்தி வன அழிவினைத் தடுத்தல் வேண்டும். | ஏனைய வனப் பிரதேசங்களின் மொத்த காணியின் பரப்பளவு 6,561,000 ஹெக்டேயர்கள் ஆகும். அவற்றுள் 1,499,130 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணியை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>காடுகளை வர்த்தமானியில் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டமைக்கு பதவியணியில் அல்லது அது தொடர்பான தொழில்நுட்ப அறிவுடையவர்களின் பற்றாக்குறை காரணமாக இருக்கவில்லை என்பதுடன், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக இல்லாதிருந்தமையே காரணம் ஆகும். தேவைவான நிதியேற்பாடு உரிய நேரத்தில் கிடைத்த பின்னர் இந்த பணிகளை துரிதமாக மேற்கொள்ள முடியும் என தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| 05 | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நட்டப்பட்ட நாற்றுக்களை பகிர்தளிக்கும் பணிகளுக்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று காணப்படாமையின் காரணமாக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கடந்த சில ஆண்டுகளில் பிரதான நாற்றுமேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட | 2023<br>2021 | தேவைகளின் பிரகாரம் கன்றுகளை நடுவதற்கும் உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளை செயற்திறனாக நட்டுவதற்கும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதிலும், COVID தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் நிலவிய ஏனைய நெருக்கடிகளின் காரணமாக அங்கு உற்பத்தி செய்யப்படும் அனைத்து கன்றுகளையும் பயிரிடுவதற்கு நிதியேற்பாடு போதுமானதாக | உற்பத்தி செய்யப்பட்ட கன்றுகளை பகிர்ந்தளிப்பதற்காக இதுவரையிலும் உரிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பல்வேறு வகையான 861,921 கன்றுகள் அளவும், தியத்தலாவ இராணுவ முகாம் மற்றும் தொடர்புடையதாக 42 ஹெக்ரேயரில் நரியா கந்த பய்னஸ் வன பயிர்ச்செய்கை நிலத்தில் மீண்டும் நட்டுவதற்காக 2021 ஆம் ஆண்டில் நட்டப்பட்ட கன்றுகள் 160,000 இல் அதிகமானவை வலஸ்முல்ல வன அலுவலகத்துக்குரிய 04 நாற்றுமேடைகளில் நட்டப்பட்ட 325,500 கன்றுகளில் 65 சதவீதமான 210,759 வன கன்றுகளும் பாதிப்பிற்குட்பட்டமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 10,145,508 தொகையும் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. நாற்று மேடைகளின் கன்றுகளை பகிர்ந்தளித்தல் தொடர்பான செயன்முன்னேற்றமும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | | இல்லாதிருந்தது. எவ்வாறான போதிலும், கிடைத்த நிதியேற்பாட்டின் அடிப்படையில் அந்த கன்றுகள் நடப்பட்டதுடன், தற்போது அந்த கன்றுகள் பல்வேறு வன விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போது கல்கமுவ நாற்று மேடையில் சுமார் 20138 எண்ணிக்கையான கன்றுகள் எஞ்சியுள்ளன. | |
| 06 | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப்பணியத்தால் ஒவ்வொரு 06 மாதங்களுக்கும் ஒரு தடவை அகழ்வு நிலங்கள் சார்ந்ததாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் அளவு, விளிம்புவரி வரைபடங்களின் மூலம் வரைபடங்களின் பிரகாரம் | 2023 | காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக பொருத்தமான முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும். | குறித்த அறிக்கைகள் 06 மாதத்திற்கு ஒரு தடைவ புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகத்தினால் காணிகளின் முகாமைத்துவ உரித்துடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த பணியகங்களால் அறிக்கைகளை உரிய எல்லா சந்தர்ப்பங்களிலும் உரிய நேரத்தில் | போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறை செயற்படுத்தப்படாமையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கமைய நிலுவை வருமானத்தை உரிய கால அடிப்படையிலும் உரிய முறையில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணிப்பிடப்பட்ட உரிய அரசாங்கத்தின் காணி முகாமைத்துவ உரித்து நிறுவனம், வெடி பொருட்களை கட்டுப்படுத்தும் அதிகார சபை, அகழ்வாளருக்கு அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் அந்த அறிக்கை குறித்துரைத்த காலப்பகுதியில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கல்குவாரி உரிமையாளர்களால் எல்லையினை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட அகழ்விற்காக நிலுவைக் கட்டணம் காலரீதியிலும் உரிய வகையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | | | வழங்கப்படுவதில்லை. எவ்வாறான போதிலும், உரிய அறிக்கைகள் கிடைத்த பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அளவினை விஞ்சி அகற்றப்பட்டுள்ள கருங்கற்கள் தொடர்பில் நிலுவைக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கிடப்பட்டு அறவிடப்படுவதில்லை. |
| 07 | முழுமையாக வெட்டுவதற்காக மொனராகலை மாவட்ட வன அலுவலகத்தால் 2021 ஆம் ஆண்டில் அரச மரக்கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட 05 வன பயிர்ச்செய்கைகள் குறித்துரைத்த காலத்தில் வெட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தால் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீண்டும் வன பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. இதனால் நாற்றுமேடைகளில் நடப்பட்டிருந்த | 2023 | இரண்டு நிறுவனங்களுக்கிடையே சரியான தொடர்பினை பேணிச் சென்று வெட்டும் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2021 ஆம் ஆண்டின் போது மொணராகலை மாவட்ட வன அலுவலகத்தின் மூலம் 5 சேனைப் பயிர்ச்செய்கைகளை அழிப்பதற்காக 72 ஹெக்டேயர்கள் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. அவற்றுள் 2022 ஆம் ஆண்டினுள் 35 ஹெக்டேயர்களும், 2023 ஆம் ஆண்டினுள் 20 ஹெக்டேயர்களும் என 55 ஹெக்டேயர்கள் அழிக்கப்பட்டுள்ளன.<br><br>எஞ்சிய 17 ஹெக்டேயர்களிக் சேனைப் பயிர்ச்செய்கையை இந்த வருடத்தில் அழித்து மீள காடுகளை வளர்ப்பதற்கு இயலுமானவாறு இந்த திணைக்களத்திற்கு | சுத்தப்படுத்தல் பணிகளின் தாமதங்கள் தொடர்ந்து நிலவுகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கன்றுகள் பாதிப்புக்கு உட்பட்டிருந்தமை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக அதிக கிரயம் ஒன்றை செலவிட வேண்டிய ஏற்பட்டமையால் வன நட்டங்களை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |
| 08 | கடல் மட்டத்திலிருந்து 5,000 அடிக்கு மேல் உயரத்தை உடைய நீர்த்தேக்கப் பிரதேசங்கள் ஆன ஹல்கிரன்ஓய ஒதுக்கப்பிரதேசத்தில் குநற்துஓயா ஒதுக்கத்தில் 1971 ஆம் ஆண்டின் போது 72 நபர்களுக்கு அப்பிள் பயிர்ச் செய்கைக்காக 240 ஏக்கர் வழங்கப்பட்டிருந்த போதும் அப்பிள் பயிர்ச்செய்கை ஸ்தாபிக்கப்படாமை மற்றும் 1977 ஆம் ஆண்டு முதல் குறித்துரைத்த வாடகைப்பணம் செலுத்தாமையின் காரணமாக அந்த அனுமதிப்பத்திரம் 1978 ஆம் ஆண்டின் போது இரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும் அனுமதிப்பத்திர நலனாளிகள் அந்தக் காணியை கைவிடாமல் விவசாய நடவடிக்கைகளைச் செய்து 1990 ஆம் ஆண்டு வரையில் 1,000 ஏக்கர் அளவான பிரதேசம் அனுமதியற்ற வகையில் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. | 2023 | ஒதுக்க வனாந்திர பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக வலுவான வேலைத்திட்டம் ஒன்று வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். | இந்த பிரதேசம் நீரின் செறிவுமிக்க பிரதேசமாவதுடன், இந்த காணிகளை விவசாயிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய காட்டின் தன்மை தொடர்பில் பதிவுகள் இல்லாதிருந்ததுடன், தற்போது நிலவும் இயற்கையான காடுகள் அல்லது காடாக்கத்திற்கு அழிவு ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | திட்டமிடப்பட்டவாறு பாதுகாக்கப்பட்ட காடுகளை வர்த்தமானியில் வெளியிட்டிராததுடன் இந்த காணிகள் தொடர்ந்தும் நிரந்தர மற்றும் தற்காலிக மக்கள் குடியிருப்புகளாக காணப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தற்போது வரையிலும் அநேகமான தரப்பினர் நிரந்தரக் குடியிருப்புக்கள் மற்றும் தற்காலிக குடியிருப்புக்களை நிர்மாணித்து வாழ்ந்து வருகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 09 | நீண்டகாலம் முதல் அனுமதியற்ற பயிர்செய்கையுடன் கெபலித்த ஒதுக்கப் பிரதேசத்தில் 25,000 ஏக்கருக்கு அண்ணளவான அளவொன்று திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந் தது. ஒதுக்கப் பிரதேசங்களை அளவிடல் மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான வனப் பிரதேசத்தினை ஒதுக்காமை, உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, உத்தியோகத்தர்களுக் கான உட்கட்டமைப்பு வசதிகள் குறைவடைந்தமை போன்ற விடயங்களின் காரணமாக கெபலியத்த பாதுகாக்கப்பட்ட வனத்தினை பாதுகாத்தல் திணைக்களத்தில் சவாலானதாக அமைந்திருந்ததுடன், சேனைப் பயிர்ச்செய்கைக்காக காணிகளை கோருதல் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2023 | ஒதுக்கப் பிரதேசங்களை அளவிடல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் மூலம் உரித்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை விரைவுபடுத்தி வன அழிவினைத் தடுத்தல் வேண்டும். | பாதுகாக்கப்பட்ட வனங்களை அளவீடு செய்தல் மற்றும் எல்லை கற்களை நடுவதற்காக பாரிய தொகை செலவிடப்படுவதுடன், உத்தியோகத்தர்கள் உரிய நேரத்திற்கு ஒதுக்கப்பட்டால் பாதுகாக்கப்பட்ட வனத்தை அளந்து வர்த்தமானியில் வெளியிடும் நடைமுறையை துரிதப்படுத்தி சேதத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | பாதுகாக்கப்பட்ட வனங்களை அளவீடு செய்தல் மற்றும் வர்த்தமானியில் வெளியிடல் மந்த கதியில் இடம்பெறுகின்றது. |
| 10 | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற | 2022 | தொடர்ந்தும் வைப்பாக பேணிச் செல்வதற்கான | திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் 02 வருட காலத்தினை விஞ்சிய வைப்புகளாக | 2024 செப்தம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக 02 வருடங்களைவ ிசிய |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தாக்கங்களை புனரமைப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் செலவிடப்படாத ரூபா 1,106,846 தொகை 16 வருட காலமாகவும், சுற்றாடல் மதிப்பீட்டு ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் 15 இற்கான நிர்வாக செலவினத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 1,152,314 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகும், ரூபா 380,273,079 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகும். நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 04 வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | தேவை இல்லாத வைப்புக்களை இனங்கண்டு அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணப்படும் செயற்திட்டங்கள் மற்றும் காணிகளுக்காக வைப்புச் செய்யப்பட்டுள்ள பணம் ஆகும். 2023.12.31 ஆந் திகதியிளவில் அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 271,307,862 ஆகும். இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிராகரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ரூபா 168,595,478 ஆன பாதுகாப்பு வைப்புத் தொகையொன்ற காணப்படுகின்றது. |
| 11 | திணைக்களதிற்கு சொந்தமாக 400 மோட்டார் சைக்கிள்களுக்கு மேற்பட்ட அளவு காணப்பட்ட போதும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 37,500 பெறுமதியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த து. | 2022 | வாகனங்களின் மதிப்பீட்டு பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட ல் வேண்டும். | 2024 ஆம் ஆண்டில் திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகளை சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டதுடன், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு காணப்படுகின்றது. அதன் பின்னர் இந்த வழு திருத்தப்படும். | வாகனங்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |
| 12 | திணைக்களத்தின் பிரதான வருமான மூலமான காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் தனியார் மர | 2022 | காணப்படுகின்ற சட்டங்கள், விதிகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை | 2024.01.01 ஆந் திகதியில் உள்ளபடியாக வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு செலத்த வேண்டிய மூலதனம் மற்றும் | வருமான நிர்வாகம் மற்றும் கணக்கு வைத்தல் தொடர்பில் ஆக்கபூர்வமான உள்ளகக் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போக்குவரத்தில் இருந்து கிடைக்கின்ற வருமானம், சரியான மதிப்பீடு தயாரித்தல் நிலுவை வருமானம் கணிப்பிடல் மற்றும் அறவிடுவதற்கான ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படாமையால் உரிய தரப்பினரிடம் இருந்து அரசாங்க வருமானத்திற்கு பணத்தை செலவு வைத்தல் புறக்கணிக்கின்றமை அவதானிக்கப்பட்டதுடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,491,611,273 ஆன நிலுவை வருமானம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,885,180,372 வரை உயர்வடைந்திருந்தது. | | கால ரீதியில் அறவிடுவதற்கும் வருமானங்களை சரியாக மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் வருமான முகாமைத்துவத்திற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதற்குரிய அனைத்து நிலுவைக் கட்டணங்களின் அறவீடும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. திரைணக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய ஏனைய நிலுவைப் பணங்களையும் துரிதமாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அறவிட முடியாத நிலுவை வருமானம் தொடர்பில் அறிவுரை கோரப்படவுள்ளது. | கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| 13 | சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (ESCAMP) நிதி ஏற்பாட்டின் கீழ் கண்ணெழிய ஒதுக்கப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாண ஒப்பந்த உடன்படிக்கை காலத்தையும் விஞ்சி இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக செலுத்தப்பட்ட ரூபா 4,750,000 வேலை ஆரம்பிக்கும் முற்பண தொகையில் ரூபா 3,723,637 தொகை நிறைவேற்றப்பட்ட வேலைக்கான பகுதி பணத்தை செலுத்தும் போது அறவிடுவதற்கும் அதற்குரிய பிணையின் | 2022 | ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பண பணம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அறவிட வேண்டிய பணத்தை பொருத்தமான பிரகாரம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அது குறித்து ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தின் உடன்படிக்கையை மீறியுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்த நட்டத்தை மீட்பதற்கான சாத்தியக்கூறுகளை ஒப்பந்ததாரரிடம் ஆராய்ந்துள்ளதுடன், பணத்தை மீளப்பெறுவது தொடர்பான விடயங்களை சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளார். சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | இதுவரை அறவிடப்பட வேண்டிய தொகை வசூலிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காலப் பகுதியினை நீடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 14 | குருநாகல் மாவட்ட வன அலுவலகத்தில் கட்டுப்பாட்டின் கீழ் நடாத்திச் செல்லப்படுகின்ற 370 மர வியாபாரங்கள் 2023 ஆம் ஆண்டிற்காக அனுமதிப் பத்திரம் புதுப்பிக்காதிருந்ததுடன், அதன் மூலம் 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாத இறுதி வரையில் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு இழக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 3,058,907 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022 | மர வியாபாரங்களை நடாத்திச் செல்லுதல் தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை செய்து குறித்துரைத்த திகதியில் வருடாந்த பதிவினை புதுப்பிப்பதற்குரிய கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2014.12.03 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1891/26 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் மர வியாபாரத்தின் காலத்தை நீடிப்பு செய்வதற்காக 06 மாத நிவாரணக் காலமொன்று வியாபாரத்தின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையால் அந்த காலப்பகுதியின் இறுதியில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | மர வியாபாரத்தின் பதிவு தொடர்பில் பின்தொடர்தல் மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 15 | 2017 மதல் 2022 காலப் பகுதியில் முல்லைத் தீவு மாவட்ட வன அலுவலகம் மற்றும் ஒலுமடு வன அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஒதுக்க வன பிரதேசங்களில் அனுமதியற்ற துப்பரவாக்கல், மரம் வெட்டுதல், மரப் போக்குவரத்து செய்தல் போன்ற 1,420 குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குருநாகல் மாவட்ட அலுவலகத்திற்குரிய 05 வனங்களின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற ஒதுக்க வனங்கள் 253.053 ஹெக்டேயருக்கு இழப்பு | 2022 | வன குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன். உரிய நீதிமன்றத்துடன், நேரடியாக தொடர்புபட்டு உரிய வழக்கிற்காக தீர்ப்பினை செயற்திறனாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தாமதமின்றி வழக்கைத் தொடர முயற்சி செய்தாலும், வழக்குகளில் தாமதம் ஏற்படுவது நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. எனினும், உரிய பணிகளை விரைந்து முடிக்க மாவட்ட வன உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | வனக் குற்றங்கள் குறையவில்லை. வழக்குகளைத் தீர்ப்பதில் தலைமை அலுவலகத்தின் தலையீடு திருப்திகரமாக இல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்பட்டிருந்தமையும் அதற்குரிய வழக்கு நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக மேற்கொள்ளப்படுகின்றமையும் வன குற்ற மரங்கள் கணிசமாக குவித்து வைக்கப்பட்டு இறந்து செல்லுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 16 | சிறிய அளவிலான மின்சார வலுக்கூடமொன்றை நடாத்திச் செல்வதற்காக வலு சக்தி தனியார் கம்பனிக்கு 2015 பெப்ரவரி மாதம் முதல் 200 பேர்ச் வாடகைக்கு வழங்கப்பட்ட போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் பேர்ச் ஒன்றிக்காக ஆண்டொன்றுக்கு ரூபா 5,000 வீதம் முதலாவது ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 1,000,000 வரி தொகை பெறப்பட்டு அதன் பின்னர் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த கம்பனியால் உடன்படிக்கை செய்யப்பட்ட 200 பேர்ச் இற்கு மேலதிகமாக மேலும் 523.78 பேர்ச் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் 2023 பெப்ரவரி 18 ஆம் திகதி வரையில் 723.78 பேர்ச்களுக்காக 08 | 2022 | வன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளித்தரப்பினரால் காட்டில் இருந்து பெறப்படுகின்ற நிதி ரீதியான அல்லது மதிப்பிட முடியாத நலன்களின் பெறுமதிக்கு ஈடாகும் வகையில் கட்டணம் அறவிட வேண்டியிருந்தமையால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கூடுதலாக பயன்படுத்தப்பட்டுள்ள நிலப்பிரதேசத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணமான ரூபா 17,364,944 ஆன தொகையில் ரூபா 3,255,927 ஆன தொகை 2024.03.26 ஆந் திகதி செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை 04 தவணைகளில் செலுத்தி தீர்ப்பதற்க உரிய நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2024 ஏப்ரல் மாதம் முதல் 04 சமனான மாதாந்த தவணைகளில் செலுத்துமாறு குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த தவணைகள் எதுவும் செலுத்தப்பட்டிராத காரணத்தால் 2024 செப்தம்பர் 30 ஆந் திகதியில் உள்ளபடியாக தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரொதகை ரூபா 14,109,017 ஆகும். இந்த பணத்தை அறவீடு செய்ய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடங்களுக்காக அந்த கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 40,349,839 ஆகும். | | | | |
| 17 | 2021 ஆண்டிறுதியில் வவுனியா மாவட்ட அலுவலகத்திற்கு உரியதாக தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து ரூபா 166,426,259 ஆன நிலுவை கட்டணமொன்று அறவிட வேண்டியதாக காணப்பட்டது. எனினும் அத்தொகையிலிருந்து 75 சதவீத அளவு குறைத்து 25 சதவீத அளவை அதாவது ரூபா 41,606,565 மாத்திரம் அறவிடுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதனால் வவுனியா மாவட்ட அலுவலகத்திற்கு மாத்திரம் ரூபா 124,819,694 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2021 | இத் தீர்மானம் காரணமாக அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடரந்தும் ஏற்படுவதை தவிர்க்க தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிரானைட் கைத்தொழில் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்களை ஆராய்ந்து அதற்கான நடைமுறைத் தீர்வுகளை முன்வைப்பதற்கு நியமிக்கப்பட்ட குழு, வனவளத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2009.06.06 ஆந் திகதிய 1600/18 இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட கட்டண முறையைத் திருத்துவதற்கு முன்மொழிந்துள்ளது. அதன்படி, கருங்கல் குவாரிக்கான கட்டணம் 50% குறைக்கப்பட்டுள்ளது.மே லும் நிலுவைக் கட்டணத்தை கணிப்பீடு செய்யும் போது நிலுவைத் தொகையில் 25% வசூலிக்கவும், குறித்த நிலுவைத் தொகையை 36 மாத தவணைகளில் 03 ஆண்டுகளுக்குள் செலுத்தவும் முன்மொழியப்பட்டது. | நிலுவையில் உள்ள கட்டணங்களில் இருந்து ரூபா 719,042 அறவிடப்பட வேண்டியதாக உள்ளது. |
| 18 | வவுனியா மாவட்ட வன அலுவலக நிர்வகத்தின் கீழ் காணப்படும் அரச காணிகளில் தொலை தொடர் கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு குத்தகை வழங்குவதற்காக 02 தனியார் | 2021 | தொலை தொடர் கோபுரங்களை நடாத்தி செல்வது தொடர்பாக பின்னூட்டல் செய்து குறித்த வருமானத்தை கணக்ககளுடன் அறிக்கையிட நடவடிக்கை | இராணுவ முகாமில் அமைந்துள்ள மொபிடெல் கம்பனிக்கு சொந்தமான டயலொக் கம்பனியுடன் பொதுவாகப் பயன்படுத்தப்படும் தொலைதொடர்பு கோபுரம் தொடர்பான கட்டணங்கள் 2022 யூன் வரையிலும் பாதுகாப்பு அமைச்சின் அபி | அமுலில் உள்ள சட்டங்களின் படி அறவிடப்பட வேண்டிய வருமானம் உரிய கணக்கில் சேகரிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களிலிருந்து 2021 திசெம்பர் 31 திகதியன்று திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 28,501,491 ஆன வருமானம் நிலுவையாக காணப்பட்ட போதும் இறுதி கணக்குகளில் காட்டிருக்கவில்லை. | எடுக்க வேண்டும். | வெனுவென் அபி கணக்கில் செலவு வைக்கப்படும் என 2024.06.20 ஆந் திகதி மொபிடெல் கம்பனியால் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது. அதை உறுதிப்படுத்த, பாதுகாப்பு அமைச்சகத்திடம் கோரப்பட்டுள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களும் அரச நிறுவனங்கள் என்பதனால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் செயற்பட்டு வருவதுடன், இது தொடர்பில் சட்டமா அதிபரிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

தலைப்பு - 284 வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 32,566,974,159 | 6,609,372,304 | 25,957,601,855 | முனைப்பழியுள்ள |
| **2022** | 32,615,018,738 | 6,867,124,490 | 25,747,894,248 | முனைப்பழியுள்ள |
| **2023** | 32,693,630,538 | 9,151,120,002 | 23,542,510,536 | முனைப்பழியுள்ள |

| தொடர் இல. | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01. | மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட 38 உத்தியோகத்தரிமிருந்து அறவிடவேண்டிய 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,580,671 கடன் மீதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | 2021, 2022, 2023 | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடன் அறவிடும் பொறிமுறைக்குரிய நடவக்கைகளை முறைமைப்படுத்தி வேண்டியளள்ளதுடன் உரிய பிரிவுகளுக்கிடையே தொடர்புகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. | 28 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 700,592 மீதியைப் பதிவழிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் 07 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 578,449 மீதியை பதிவழிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு உத்தியோகத்தர்களி டமிருந்து அறவிட வேண்டிய ரூபா 127,221 மீதி தீர்த்துவைக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 85,300 மீதியுடன் ஒரு உத்தியோகத்தர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார். |
| 02. | பெறுகை வழிகாட்டல் கோவை 2.14.1 (மேலதிக 35) இன் பிரகாரம் ரூபா 500 மில்லியன் மேல் பெறுமதிவாய்ந்த | 2021 | அரச பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | எதிர்காலத்தில் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மின்சார வேலி நிர்மாணிப்பதை | எதிர்காலத்தில் பெறுகைள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருட்கள் மற்றும் சேவைகளினை கொள்வனவு செய்யும் போது அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 631,067,014 பெறுமதி வாய்ந்த யானை வேலிக்கான 30 உருப்படிகள் உள்ளிட்ட உபகரணங்களினை கொள்வனவு செய்யும் போது அவற்றினை 07 ஒப்பந்தங்களாக பிரிக்கப்பட்டு 07 சந்தர்ப்பங்களில் 07 முறை விலைமனுக்கள் கோரப்பட்டு திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதன் காரணமாக விலைமனு கோருவதற்கு புதினப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்கு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு 07 சந்தர்ப்பங்களின் போது பணம் செலுத்த நேரிட்டமையினால் ரூபா 557,320 மேலதிக செலவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | | வேண்டும். | இலக்கிடப்பட்ட பெறுமதி குறைந்த அளவு காணப்படுகின்றமையால் மின்சார வேலி பராமரிப்பு மற்றும் நிர்மாணத்திற்காக ஒதுக்குவத்கு குறித்துரைத்த நிதி ஏற்பாடு வரையறையாக இருந்ததுடன் எதிர் காலத்தில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அறிவிக்கப்பட்ட போதும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிடுகளில் யானை பட்டாசு கொள்வனவு செய்யும் பெறுகைகள் அமைச்சு பெறுகைக் குழுவின் ஊடாக மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மொத்த பெறுமதி ஒப்பந்தம் சிலவற்றிற்கு பிரிக்கப்பட்டு திணைக்கப் பெறுகைக் குழு ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| 03. | 2023 ஆம் ஆண்டின் போது மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக | 2021, 2022, 2023 | யானை மனித பிரச்சனைகளை குறைப்பதற்காக பொருத்தமான | மின்சார வேலி முகாமைத்துவ நடைமுறைகள் திணைக்கள | காட்டு யானை மனித பிரச்சினைகளை தடுப்பதற்காக வன |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 58,640,147 மற்றும் அதன் பராமரிப்புக்காக ரூபா 14,433,552 தொகையும் உள்ளடக்கி 2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மாத்திரம் மின்சார வேலிக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 2,355,882,248 ஆக இருந்ததுடன் 2023 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரை மின்சார வேலியின் மொத்த நீள அளவு கிலோமீற்றர் 5,389.97 ஆகும். எனினும் கடந்த 05 வருடகாலத்தில் இடம்பெற்ற யானை மரணம், மனித இறப்புக்கள் மற்றும் ஆதனங்களுக்கான சேதங்களை கவணத்தில் கொள்ளும் போது மின்சார வேலி நிர்மாணிக்கப்பட்ட போதும் அது யானை மனித பிரச்சனைகளை குறைக்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | | உபாய வழிகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுற்றறிக்கையாக விநியோகிப்பதன் மூலம் மின்சார வேலி பராமரித்தலை முறைப்படுத்துதல், காட்டு யானை மனித பிரச்சினைகளுக்கு கிராமிய மக்களுக்கு அறிவுறுத்தும் புதிய பிரவேசமொன்றை அறிமுகப்படுத்துதல், காட்டு யானைகளின் பாதிப்பிற்காக இழப்பீடு செலுத்தும் பொறிமுறையொன்றை மிகவும் துரிதப்படுத்துதல், காட்டு யானைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர் பொறிமுறையொன்றை முறைமையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மின்சார வேலி முகாமைத்துவ திட்டமொன்றை விசேஷடமாக மாறறப்பட்டிருந்தது. மேலும் பொது மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக அதிக கவனம் செலுத்தபட்டுள்ளது. இதன் விளைவாக 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளை விட குறிப்பாக காணப்படுகின்ற பாதிப்பிற்கு உட்பட்ட காட்டு யானைகள் மனிதப் பிரச்சினைகள் மேலும் குறைத்துக் கொள்வதற்கு தற்போது முடியுமாக உள்ளது. |
| 04. | 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டுள்ள தென் வலய அலுவலகத்திற்கு உரித்தான 05 மோட்டார் சைக்கிள்களும், யானை வண்டியும் 2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதிய 05/2020 ஆம் | 2022 | ஓட்ட நிலையில் இல்லாத மற்றும் திருத்தங்கள் வினைத்திறனற்ற வாகனங்கள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்பிற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் வஜீ/1/7/பொது/06-/தொகுதி II மற்றும் 2023.06.23 ஆம் திகதிய கடிதத்தின் படி விற்றுத் தீர்ப்பதற்கு பொருத்தமான வாகனங்களை இனங்காண்பதற்காக | 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையில் விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(அ) பந்தியின் பிரகாரம் கைதவிர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | நியமிக்கப்பட்ட விஷேட ஆய்வு சபையினால் தென் மாகாணத்தை உள்ளடக்கிய 11 வலயங்களில் விற்றுத்தீர்க்கப்பட வேண்டிய வாகனங்களை இனங்காணும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் வாகனங்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| 05. | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 30 உத்தியோகத்தர்களுக்காக பொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இலங்கை இயலுமை வழிகாட்டி (SLQF) 3 ஆம் கட்டத்திற்கு உரித்தான வனசீவராசிகள் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியின் 2017/2018 ஆம் குழுக்களுக்காக அறவிடப்பட்ட பாடநெறிக் கட்டணத்தொகையான ரூபா 3,300,000 இல் 2019/2020 ஆம் குழுவிற்காக இதனைப் பார்க்கிலும் ரூபா 11,700,000 அதிகளவில் ரூபா 15,000,000 தொகையான ஓர் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் இப் | 2022 | வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் இத்தகைய செயற்பாடுகள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கத்தால் எதிர்காலத்தில் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக அமைச்சு செயலாளரின் மூலமும் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அறிவிக்கப்பட்டு செலவின அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாடநெறிக்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 38,819,579 ஆகக் காணப்பட்டமையால் ஒரு உத்தியோகத்தருக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 1,293,333 ஆகக் காணப்பட்டது. இப் பல்கலைக்கழகத்தினுடாக நடாத்தப்படும் SLQF 8 ஆம் கட்டத்தின் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவின் ஒரு மாணவனின் கட்டணம் ரூபா 250,000 ஆகக் காணப்பட்டமையும், கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தேர்ந்தெடுக்கையில் உலக வங்கியில் செயற்பாட்டு வழிகாட்டல் பின்பற்றப்பட்டிராமையும் பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 21,590,108 இற்கு உரித்தான பட்டியல்களின் மூலப் பரிரதியும் ரூபா 12,785,500 தொகையான முற்பணத்தொகையும் தீர்க்கப்படுவதற்கு உரித்தான உறுதிச்சீட்டுக்களின் மூலப் பிரதிகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை போன்ற விடயங்களின் படியும் இச் சிக்கனமான கொடுக்கல்வாங்கலாக அவதானிக்க முடியாதிருந்தது. | | | | |
| 06. | தென் மாகாண வலய | 2022 | பெறுகை வழிகாட்டல்களி | பெறுகைப் பணிகள் | உடன்படிக்கையின் பிரகாரம் அந்த |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அலுவலகத்தால் 2022 ஆம் ஆண்டின் போது வீதியின் இரு மருங்கிலும் கீழ்வனப்பகுதியை அகற்றுவதற்காக ரூபா 5,337,814 தொகையான 04 பெறுகை நடவடிக்கைகள் 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமைகளைப் பரிசோதிக்காது சமூக சார்பான 03 அமைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு உரித்தான உடன்படிக்கைகளுக்கும் திணைக்களத்தால் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | | ன் படி, ஏற்ற ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டு எழுத்து மூல உடன்படிக்கையின் அடிப்படையில் பணிகளை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி வலய அலுவலகங்களில் பெறுகை கடமைகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தாமத குறைபாடுகள் ஏற்படாதிருப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| 07. | 2009 இன் 22 ஆம் இலக்க கால்நடை மற்றும் தாவர பாதுகாப்பு (திருத்த) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு இயற்கை ஒதுக்கம் மற்றும் புனித பூமிகளுக்காக செயற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரித்து ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒருதடவை அதனை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் மிரிஸ்ஸ, கற்பிட்டி, ஹிக்கடுவ என்ற கடல்சார் ஒதுக்கப் பிரதேசம் மற்றும் மாந்துகங்க புனித பூமிகளுக்காக | 2023 | சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு இயற்கை ஒதுக்கப் பிரதேசம் மற்றும் புனித பூமிகளுக்காக செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | பாரம்பரிய திட்டங்களை தயாரிக்கும் செயற்பாடுகள் மிகவும் நீண்டதாக இருந்தமையால் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கத்தால் புதிய படிவத்தின் கீழ் இந்த செயற்பாடுகளை அமுல்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | மிரிஸ்ஸ, கற்பிட்டி ஹிக்கடுவ போன்ற கடல்சார் ஒதுக்கப் பிரதேசம் மற்றும் மாதுகங்க புனித பூமிக்கான முகாமைத்துவ திட்டமொன்று தயாரக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவ்வாறான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | | | |
| 08. | 2009 இன் 22 ஆம் இலக்க கால்நடை மற்றும் தாவர பாதுகாப்பு (திருத்த) சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது தேசிய ஒதுக்க நிலப் பிரதேசத்தின் எல்லையிலிருந்து 01 மைல் தூரத்தில் உள்ளடங்கிய தனியார் அல்லது அரசாங்கத்தின் அல்லது ஏதாவது நபர் ஒருவருக்கு அமைப்பொன்றினால் பணிப்பாளர் நாயகத்தின் முன் எழுத்துமூல அங்கீகாரமின்றி எந்தவொரு முறையிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் அவ்வாறான எழுத்துமூல அனுமதியின்றி ஹிக்கடுவ கடல்சார் பூங்காவில் உள்நுழைவுவீதியை நெருக்கடிக்குள்ளாக் கும் வகையில் மற்றும் கடல்சார் பூங்காவிற்குரிய கரையோர வலையத்தில் அனுமதியற்ற வியாபார நிலையங்கள் மற்றும் சுற்றுலா ஓய்வு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த து. | 2023 | ஹிக்கடுவ பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது இந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக முன்மொழிவு ஒன்று பூங்கா பொறுப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட துடன் அதன் பிரகாரம் கரையோரப் பாதுகாப்புத் திணைக்கம் மற்றும் ஹிக்கடுவ நகர சபைக்கு அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள் ளது. | ஹிக்கடுவ பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் போது இந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கான முன்மொழிவொன் று பூங்கா பொறுப்பாளரினா ல் சமர்ப்பிக்கப்பட்ட துடன் அதன் பிரகாரம் கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஹிக்கடுவ நகர சபையும் அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ள து. | கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தால் அகற்றப்பட வேண்டிய அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக கரையோரப் பாதுகாப்பாளர் நாயகத்திற்கு விபரங்கள் வழங்கப்பட்டுள்ளது டன் கரையோரப் பாதுகாப்பு நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்த வுடன் கரையோர வலயத்தில் அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதாக கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் பொறியிய லாளரால் ஹிக்கடுவ அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது விடயங்கள் காண்பிக்கப்பட்டுள் ளது. |
| 09. | 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா | 2023 | தேவைகளை இனங்கண்டு சரியான | பின்தொடர் நடவடிக்கைகளின் பொறிமுறை | பின்தொடர் நடவடிக்கைகளின் பொறிமுறை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 7,094,700 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் 33 பணிகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | திட்டமிடலுடன் வேலைத்திட்டம் ஒன்றின் ஊடாக செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கும் புறக்கணிப்புக்களின் போது திட்டங்களைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | யொன்றுக்காக விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | யொன்றை அமுல்படுத்துவதற்காக சுற்றறிக்கை ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 10. | சுற்றாடல் முறைமையினைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரிட்டிகல வனசிவராசிகள் அலுவலகத்தில் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட கொட்டகை ஒன்று பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி ரூபா 2,818,200 ஆன 154 கம்பி உருளைகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத 122 nut & bolt கள்வரினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | விசாரணை நடைவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து இந்த நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணிசமான பொருள் இருப்பிற்காக இதன் பின்னர் பாதுகாப்பு சேவையின் மூலம் பாதுகாப்பை திட்டமிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இந்த முறைமைக்குரிய கஹட்டகஸ்தகெலி நீதவான் நீதிமன்றத்தின் மூலம் தற்போது வழக்கு இலக்கம் B 1654/22 இன் வழக்கு விசாரணையில் காணப்படுவதுடன் அநுராதபுரம் உதவி பணிப்பாளரின் தலைமையில் விசாரணை சபையொன்றினால் தற்போது நிதிப்பிரமாணம் 104(4) இன் விசாணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | மாது கங்கை புனித பூமியாக பகிரங்கப்படுத்துவதற்குரிய 2006 யூலை 17 ஆம் திகதி இலக்கம் 1454/7 என்ற அதிவிசேட வர்த்தமாணிப் பத்திரத்தில் அதில் காலிப் பிரதேசத்தில் காணப்படுகின்றமையான தவறை சரிசெய்து சரியான எல்லையை அடையாளம் இடுவதற்கும் புனித பூமியை சரியாக வரைபடம் இடுவதற்கும் மீளாய்வாண்டின் இறுதிரையிலும் திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மாது கங்கை பார்வையிடுவதற்காக வருகைதருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளின் நுழைவுச்சீட்டுக் கட்டணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | மாதுகங்க புனித பூமியின் எல்லையினை சரியாக வரைபடம் இடுவதற்கும், அதனை தேசிய பூங்காவாக தரம் உயர்த்தி கட்டணத்தை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எல்லை திருத்தப்பட்டு எல்லைத் தூண்கள் நடுவதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மிகுதிக் கட்டணங்களைத் திருத்தும் போது கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாதுகங்க புனித பூமியை வர்த்தமானி மூலம் வெளியிடும் போது ஏற்பட்டிருந்த தொழில் நுட்ப குறைபாடுகளை மாற்றியமைத்து புதிய எல்லையுடன் வர்த்தமானி அறிவித்தலை திருத்துதல் 2024 ஆம் ஆண்டின் போது மேற் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குத் தேவையான ஆரம்ப களப் பரிசோதனைகள் 2023 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாதுகங்க தேசிய பூங்காவாக தரமுயர்த்தப்படாமையினால் கட்டணத்தைத் தீர்மானிப்பதற்கு முடியாதிருந்தமையும் அடுத்த கட்டண திருத்தங்களின் போது சுற்றுலா சேவைகளுக்காக கட்டணத்தை அறவிடுதல் அதில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 12. | 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை தப்போக புனித பூமியில் 315 ஹெக்ரேயர் களப்பு அந்தர அகற்றப்பட்டு வாசஸ்தலம் ஒன்றை அமைப்பதற்காக ரூபா 57,401,665 | 2023 | பரவுகின்ற தாவரங்களை அகற்றுவதற்காக முறையான திட்டமுறைமையொன்றை அறிமுகப்படுத்தி அதன் பராமரிப்பு நடவடிக்கைகள் | முறையான விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றை மேற் கொள்வதற்கும் அதன் பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் | நீர் நிலைகளில் சீமைக் கருவேல தாவரங்களை அகற்றுதல் மற்றும் அகற்றப்பட்ட பிரதேசங்களைப் பராமரிக்கும் நடவடிக்கைகளுக்காக உரிய பிரதேசங்களை |

| | | | |
|---|---|---|---|
| தொகையும், அகற்றப்பட்ட பிரதேசங்களை பராமரிப்பதற்காக ரூபா 5,865,900 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணிசமான நிலப்பிரதேசத்தில் களப்பு அந்தர பரவியிருந்தது. இதன் காரணமாக யானைகளுக்கு பாதுகாப்புப் பிரதேசங்களில் இருப்பதற்கு வசதியீனமாக இருந்து அவைகள் 50 கிலோமீற்றர் அளவிலான தூரப் பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்கின்றமை அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்ளப்படல் வேண்டும். | நடவடிக்கைளை மேற்கொள்வதற்கும் நிதி ஏற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேவுகை செய்யும் வகையில் அதன் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக முறையான விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றை மேற்கொண்டு அதன் பரிந்துரையின் பிரகாரம் மிகுதி நீர் நிலைகளில் சீமைக் கருவேல தாவரங்களை அகற்றுவதற்காக 2024 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அந்த நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. |

**தலைப்பு - 285 விவசாயத் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 27,056,545,554 | 566,030,939 | 26,490,514,615 | முனைப்பழியற்ற |
| **2022** | 28,104,304,558 | 569,899,599 | 27,534,404,959 | முனைப்பழியுள்ள |
| **2023** | 29,866,254,232 | 645,998,210 | 29,220,256,022 | முனைப்பழியுள்ள |

| தொடர் இல. | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 12. | நில அளவையாளர்கள் சேவைக் குறிப்பின் பிரகாரம் திணைக்களத்திற்கு பயிலுனர் நில அளவையாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தகமைகளுடன் பட்டதாரிகள் 90 சதவீதம் திறந்த போட்டிப் பரீட்சைகளின் மூலமும் எஞ்சிய 10 சதவீதம் தொழில்நுட்ப உத்தியோத்தர்களின் திறமைகளை அடிப்படையாகக் | 2023 | வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் வகையில் கற்கை நெறிகள் திட்டமிடப்படுதல் வேண்டும். | காணப்படுகின்ற அளவையாளர்களின் சேவைக் குறிப்பின் பிரகாரம் பட்டப்படிப்பு கற்கைநெறிக்காக உள்ளீர்த்தல் செய்யப்படுவதுடன் திணைக்களத்தில் காணப்படுகின்ற நில அளவையாளர் சேவையின் வெற்றிடங்களுக்கு அமைய அரசாங்கத்தின் மூலம் காலத்திற்கு காலம் எடுக்கப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் | தற்போது பயிலுனர் நில அளவையாளர்களை உள்வாங்குவதற்கு பரீட்சை நடைபெற்றுள்ளது. அதற்காக தகுதியை பெறுவோர்க்கு பட்டப்படிப்பு கற்கைநெறி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொண்டும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பட்டதாரிகளாக சேர்த்துக் கொள்ளப்படுகின்ற 90 சதவீதத்தில் 9:1 விகிதத்திற்கு நில அளவை விஞ்ஞான பட்டதாரிகளும் ஏனைய பட்டதாரிகளும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுகின்ற ஏனைய பட்டதாரிகளும் அளவை விஞ்ஞான கல்விப் பட்டத்தினைப் பயில்வதற்கு போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களில் சிலரும் பட்டப்படிப்பு கற்கைநெறியை பயில்வதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதனால் 2022 இலிருந்து 2026 வரையான 04 ஆண்டுகள் கற்கை நெறிக்காக 22 மாணவர்கள் போன்ற மிகவும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களாக இருந்தனர். பயிலுனர் நில அளவையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் பட்டப்படிப்பு கற்கை நெறிக்காக மாணவர்கள் இல்லாத நிலைமையும் அவதானிக்கப்பட்டது. | | | அங்கீகாரம் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் இந்த பட்டப்படிப்பு கற்கைநெறிக்காக மாணவர்களை சேர்த்துக்கொள்ளல் இடம்பெறுகின்றது. | |
| 13. | 2022-2026 பட்டபபடிப்பு குழுவின் கலவையானது 08 ஏனைய பட்டதாரிகளையும் 14 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் கொண்டிருந்ததுடன் இக்கற்கை நெறிக்கது தெரிவு செய்யும் போது ஏனைய பட்டதாரிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் குறிப்பிடப்பட்ட ஒரு | 2023 | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் அளவினைத் தீர்மானிப்பதற்காக குறிப்பிடத்தக்க ஒரு வழிமுறையினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். | தொழில்நுட்ப சேவை அதிகாரிகள் நில அளவை விஞ்ஞான பட்டத்தினை கற்பது தொடர்பில் போட்டிப் பரீட்சை ஊடாக தெரிவு செய்வது தொடர்பில் சேவைக்குறிப்பு மூலம் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்கள் வழங்கப்படவில்லை. நில அளவையியல் | நில அளவையியல் மற்றும் படம் வரைதல் நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைத்தல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

வழிமுறை இருந்ததுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் போட்டிப் பரீட்சைகளின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றார்கள் என 2021 யூலை 02 ஆந் திகதிய 16/2021 ஆம் இலக்க நில அளவையாளர் பணியாளர் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு ஆட்சேர்க்கப்படுகின்ற அளவினைத் தீர்மானிப்பதற்கான ஒரு குறிப்பிடப்பட்ட வழிமுறை அல்லது எழுத்துமூல சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

மற்றும் படம் வரைதல் நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைத்தல் சபையினால் (Institute of Surveying and Mapping Advisory and Coordinating Board) இது தொடர்பான வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்ப சேவை அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய அளவுகளை தீர்மானிப்பதற்கு குறிப்பிடப்பட்ட வழிமுறை அறிமுகப்படுத்தப்பட வில்லை என ஏற்றுக்கொள்ளப்படுகிறதுடன், எவ்வாறாயினும் தற்போதுள்ள நிலஅளவை சேவைக்குறிப்பு மற்றும் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் அரசினால் அவ்வப்போது எடுக்கும் கொள்கை தீர்மானங்களின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதால் அளவியல் விஞ்ஞான பட்டப்படிப்பினை கற்பதற்கு திணைக்களத்தில் பணிபுரிகின்ற தொழில்நுட்ப அதிகாரிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்படுவதோடு, எத்தனை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்படுகிறார்கள் தொடர்பில் உறுதியாக குறிப்பிட முடியாது. | |
| 14. | நில அளவையியல் மற்றும் படம் வரைதல் நிறுவனத்தில் விரிவுரைகளை நடாத்துவதற்காக திணைக்களத்தின் 17 உத்தியோகத்தர்கள் நிரந்தர விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கான விரிவுரைப் படியானது அவர்களின் நிரந்தர பதிவிக்கான சம்பளத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவர்களில் 15 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் விரிவுரைப் படிகள் செலுத்தப்பட்டிருந்தும் அவர்களில் சிரேஷ்ட பிரதி உதவி நாயகம் (பயிற்சி) மற்றும் சிரேஷ்ட பிரதி உதவி நாயகம் (கல்வி) ஆகிய இருவரும் கற்கைநெறியை மேற்பார்வை செய்வதனை மேற்கொண்டிருந்தும் எந்த விரிவுரையும் நடாத்தப்படாதிருந்ததுடன் மூன்று விரிவுரையாளர்கள் வகுப்பிற்குப் பொறுப்பானவர்கள் எனக் குறிப்பிட்டு எந்த விரிவுரையும் நடத்தாது படிகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். 2023 ஆம் ஆண்டு இந்த மாணவர்களின் இரண்டாம் கல்வி ஆண்டாக இருந்ததுடன் அதற்காக நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை 1950 ஆக இருந்த போதிலும கணக்காய்விற்குச் | 2023 | விரிவுரைப் படியைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து நிரந்தர வரியுரையாளர்களுக்கும் வரிவுரை மணித்தியாலங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் உடன்பட முடியவில்லை. நில அளவையியல் மற்றும் படம் வரைதல் நிறுவனத்தினால் பட்டப்படிப்பு கற்கைநெறிக்கு மேலதிகமாக டிப்ளோமா கற்கைநெறிகள், தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தி கற்கைநெறிகள், NVQ கற்கைநெறிகள், பிற நிறுவனங்களில் உள்ள அலுவலர்களின் தேவைப்பாதுகளுக்கு ஏற்ப நடைபெறும் கற்கைநெறிகள், பாதுகாப்பு படைகளுக்கான பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு என்பவற்றை நடாத்துகிறது. இந்த செயற்பாடுகளுக்காக பணிக்கமர்த்தப்பட்டிருக்கும் சகல கல்விசார் அதிகாரிகளுக்கும் விரிவுரையாளர் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் | நில அளவையியல் மற்றும் படம் வரைதல் நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைத்தல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 700 மணித்தியாலங்கள் மாத்திரம் விரிவுரைகள் நடாத்தப்பட்டிருந்தன.

நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் ஆம் அ/8/5/719/272/11 மற்றும் 2007.02.13 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (BDC) அளவையியல் பட்டப்படிப்பு கற்கைநெறி என்பது கோட்பாட்டு மற்றும் நடைமுறை அறிவை வழங்குகின்ற ஒரு கற்கைநெறியாகும். அளவை பட்டப்படிப்பு கற்கைநெறிகள் மற்றும் ஏனைய அளவையியல் தொழில்முறை கற்கைநெறிகள் என்பவற்றை நடாத்தும் போது விரிவுரைகளை நடாத்துவதற்கு விரிவுரையாளர்களினதும் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக மதியுரைஞர்களினதும் உதவிகள் பெறவேண்டியுள்ளது. சகல கல்விசார் பணியாளர்களும் அவர்களின் அளவையியல் திணைக்களத்தில் இணைக்கப்பட்டுள்ள பதவிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். விரிவுரையாளர்கள் நேர அட்டவணையின் பிரகாரம் விரிவுரைகளை நடாத்துவதுடன், இணைக்கப்பட்டுள்ள மதியுரைஞர்கள் நேர அட்டவணையின் படி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | விரிவுரைகளை நடாத்துவதில்லையாயினும் பயிற்சிக் காலத்தின் போது ஆலோசனை விரிவுரைகளை வகுப்பறைகளில் நடாத்துகின்றனர். அத்துடன், துறையில் நடைமுறை அறிவையும் வழங்குகின்றனர். விரிவுரை நேரத்தின் அளவு என்பது பட்டப்படிப்பு கற்கைநெறிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விரிவுரை நேரங்களின் அளவாகும் என்பதோடு அதை அவ்வாறே பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அளவையிடல் மற்றும் படமெடுத்தல் நிறுவனத்தின் மதியுரை மற்றும் ஒருங்கிணைத்தல் சபையினால் (The institute of Surveying and Mapping Advisory and Coordinating Board) பட்டப்படிப்பு பெறுபேறுகள் வழங்கும் போது இது கண்காணிக்கப்படுகிறது. | |
| 15. | 2022 முதல் 2026 வரையான நான்கு ஆண்டு பட்டப்படிப்பு கற்கைநெறியானது 22 மாணவர்களுக்காக கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 17 குறுங்கால கற்கை நெறிகள் மற்றும் 51 ஒரு | 2023 | வளங்கள் உச்ச அளவில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | 2022 முதல் நாட்டில் உருவாகிய சிக்கலான நிலைமையின் அடிப்படையில் சேவைகளுக்காக சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் | 108 அரச நில அளவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு போட்டிப் பரீட்சையினை நடாத்த பட்டப்படிப்பு கற்கைநெறியினை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் செயலமர்வு மாத்திரம் 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. இந்த நிறுவனம் பல்வேறு கட்டிடங்களின் 121 பகுதிகளை உள்ளடக்கி 61 எக்கர் நிலத்தில் மிகவும் அதிக அளவான பௌதீக வளங்களுடன் அமைந்திருந்தும் அவற்றினை பயன்படுத்துதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | | உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்துகொள்ள மட்டுப்படுத்தியதன் காரணமாக கல்வி நடவடிக்கைகளில் சில பின்னடைவுகள் 2021 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட போதிலும் தற்போது அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் எங்களிடம் உள்ள பௌதீக மற்றும் மனித வளங்கள் உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்துவதற்கு தேவையான சூழல் தயார்செய்யப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் எங்கள் நிறுவனத்தின் பயன்பாட்டினை மிகவும் உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ன நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அரசாங்கமானது அரச நில அளவையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. |
| 16. | நில அளவை மற்றும் படம் வரைதல் நிறுவனத்தில் ஒரு பட்டப்படிப்பு மாணவனின் மாணவ அலகுக் கிரயத்திற்காக ஒரு மாதத்திற்கு செலவாகின்ற கல்வி மற்றும் நிருவாக செலவு ரூபா 25,426 தொகையும் மாணவர்களின் 2024 பெப்ரவரி மாத சராசரி மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு மாணவனின் மாதாந்த சராசரி சம்பளம் ரூபா 55,927 ஆக இருந்ததனால் ஒரு மாணவனுக்கான மாதாந்த கிரயம் ரூபா 81,353 என | 2023 | நில அளவை விஞ்ஞான பட்டதாரிகளை உருவாக்கும் பிண்ணனியில் இந்த பட்டப்படிப்பு கற்கைநெறியினை நடத்துவது தொடர்பில் மீண்டும் கருத்திற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது | நில அளவை திணைக்களத்திற்காக உள்வாங்கப்பட்ட சகல பயிலுனர் நில அளவையாளர்களும் நான்கு (04) வருட நில அளவை விஞ்ஞான பட்டத்தினை பெற வேண்டும். இது பெறப்படவேண்டியது பட்டதாரியினால் பெற்றுக்கொண்ட பட்டமானது நில அளவை கல்வியுடன் தொடர்பற்ற ஒரு பட்டமாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமாகும். நில அளவை கல்வி | எதிர்காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பினை கருத்திற்கொள்ள அளவையிடல் மற்றும் வரைபிடல் நிறுவனத்தின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு சபைக்கு இவ்விடயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க நான்கு ஆண்டு பட்டப்படிப்பிற்காக (48 மாதங்கள்) ஒரு மாணவனுக்காக செலவு ரூபா 3,904,944 ஆகும். பயிலுனர் நில அளவையாளரினைச் சேர்த்துக் கொள்ளும் போது வெற்றிடங்களை விட அதிக நபர்கள் வெளி விண்ணப்பதாரர்களாக இ ருப்பதனால் நில அளவை கல்வி பட்டதாரிகளிலும் ஏனைய பட்டதாரிகளிலும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் 90 சதவீதமானவர்கள் திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இ ந்நிறுவனம் 1990 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தின் போது நில அளவை தொடர்பாக ஏனைய பல்கலைக்கழகங்களில் பட்டம் வழங்கப்படாதிருந்தும் தற்பொழுது சப்ரகமுவ பல்கலைக்கழகம் மற்றும கொத்தலாவள பாதுகாப்பு பல்கலைக்கழகம் நில அளவை பட்டதாரிகளை உருவாக்குகின்ற பின்னணியில், இவ்வாறு அதிக அளவான தொகையை செலவு செய்து இப்பட்டக் கற்கை நெறியை நடாத்துவது தொடர்பாக மீண்டும் ஒரு தடவை கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரு விடயம் என்பது கணக்காய்வின் கருத்தாகும்.

பட்டதாரிகளை சேர்த்துக்கொள்ளும் போது நில அளவை கல்வி பட்டத்தை பயிலுகின்ற 09 நபர்களுக்கு ஏனைய பட்டத்தை பயிலும் ஒரு நபர் (9:1 விகிதம்) என்பதாகும். அதற்கிணங்க நில அளவை கல்வி பட்டத்துடன் சேர்த்துக்கொள்ளப்ப டுகின்ற சப்ரகமுவ மற்றும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உத்தியோகத்தர்களு க்கு இப்பட்டம் அத்தியவசியமற்றதுட ன் அந்த உத்தியோகத்தர்களு க்கு 06 மாத அறிமுகத்தை ஏற்படுத்தும் கற்கை நெறி நடாத்தப்படுகின்றது.ந ில அளவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நில அளவை கலவ்விப் பட்டம் இல்லாத ஒரு பட்டத்தாரிக்கு எங்கள் திணைக்களத்திற்க கட்டுப்படுவதற்கு வழங்கப்பட்டுள்ள “நில அளவை கல்வி பட்டம் இருத்தல் வேண்டும்.” என்ற தகமை காரணமாக அந்த உத்தியோகத்தர்கள் மாத்திரம் 04 ஆண்டுகள் நில அளவை கல்வி பட்டத்தினை எங்கள் நிறுவனத்தில் கற்க வேண்டும். இந்த உத்தியோகத்தர்கள் பல்வேறு

பாடங்களினூடாக தொழில்நுட்ப அறிவு பெற்ற பட்டதாரிகளாக இருப்பதனால் பயிற்சி விஞ்ஞான பட்டப்படிப்பு மூலம் நிறுவனத்தில் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய திறமையுடன் முன்னேறுவது எளிதாகும்.

தலைப்பு - 289 ஏற்றுமதி கமத்தொழித் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,237,770,609 | 2,205,522 | 1,235,565,087 | முனைப்பழியுள்ள |
| **2022** | 1,237,216,470 | 86,628,076 | 1,150,588,394 | முனைப்பழியுள்ள |
| **2023** | 1,577,452,471 | 9,855,785 | 1,567,596,686 | முனைப்பழியுள்ள |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் ஏற்றுமதி மேம்படுத்தல் உதவி அறிவிக்கப்பட்ட விவசாயப் பயிர்கள் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்ற மற்றும் தயார் செய்யப்படும் ஆட்களுக்கு சலுகைகள் மற்றும் நிதிசார் அல்லது அல்லாவிடில வேறு வகையான உதவிகள வழங்கும முன்மொழிவுகள் முறைமைக்காக அமைச்சரினால் கட்டளை வழங்கப்பட்டதன் பின்னரே வழங்கப்பட வேண்டிய போதும் அவ்வாறான கட்டளையொன்று தயாரிக்கப்படாமல் ரூபா 602,900,000 ஏற்றுமதி மேம்பாட்டு உதவிகள கொடுப்பனவு | 2021 | சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தன | | | | |
| 2. | 2016 மார்ச் 17 ஆந திகதிய 01/2016(1) ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது பணிப்பாளர் அல்லது அதற்குச் சமமான மட்ட உத்தியோகத்தர்களுக்காக பெற்றுக் கொள்ளப்படும் வாகனமொன்றின் ஆகக் கூடிய மாதாந்த குத்தகை (பெறுமதி சேர் வரியில்லாமல்) ரூபா 135,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் உட்பட 08 பணிப்பாளர்களுக்காக பெற்றுக்கொண்டு இணைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்காக மாதமொன்றுக்கு ரூபா 163,500 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | 2021 | சுற்றறிக்கை ஏற்பாடுகள பின்பற்றப்பட வேண்டும் | குழாத்திற்காகப் பெறப்பட்ட வாகனம் பின்னர் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | பரிந்துரை அமுல்படுத்தப்படாது இருந்ததுடன் 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 12,986,000 ஆகக் காணப்பட்டது. |
| 3. | ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் காண்பபடுகின்றதுடன் 07 அரச வீடுகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பாடால் காணப்பட்ட துடன் அதில் 06 வீடுகள் சிதைவடைந்த நிலைமையில் | 2021 | சொத்துக்களை உயர்ந்த வகையில் பாவனைக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல வேண்டும். | பழுது பார்ப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பயன் படுத்தப்படாமல் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்பட்ட காரணத்தினால் வருடக் கணக்காக விளைவற்று காணப்பட்டன. | | | | |
| 4. | ரூபா 3,000,000 மதிப்பீட்டுப் பெறுமதியான 3 வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டன. | 2023 | திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுக்கவோ அல்லாவிட்டால் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல வேண்டும | இந்த வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ரூபா 2,000,000 ஆன 02 வாகனங்கள் 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. |
| 5. | கண்டி மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள காணி மகாவெலி ஆற்றிற்கு எல்லையாக அமைந்துள்ளதுடன் ஆற்றங்கரை அதிகமாக அறிக்கப்படுவதால் ஆற்றுப் பக்கமாக நிர்மாணித்துள்ள கட்டு, கருத்தரங்கு மண்டபம், மதில் மற்றும் தளப்பரப்பு கற்கள் பரப்பியுள்ள வளவும் வெடித்து கோடுகள் ஏற்பட்டு மண்சரிவு ஏற்படும் உச்ச அபாயத்துடன் காணப்பட்ட போதும் உயிர்கள்மற்றும் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள போதிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை | 2022 | சொத்து மற்றும் உயிர் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். | மகாவலி கங்கையின் தெற்கு பகுதியில் மீற்றர் 115 நீளத்தில் உத்தேசிக்கப்பட்ட தடுப்பு அணை ஒன்றை நிர்மாணிப்பதற்காக உரிய களப் பரிசோதனைகள் மேற்கொண்டு நிர்மாண நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக ரூபா 138.5 மில்லியன் மொத்த மதிப்பீடொன்று தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | ஆபத்துக்கள் தொடர்ந்தும் காணப்படுவதுடன் பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 6. | ஏற்றுமதி விவசாய உற்பத்தி பண்ணை,விவசாயிகள், தயாரிப்பாளர்கள் | 2022 | கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை | 2023 ஏப்ரல் மாதம் வரையில் கறுவா விவசாயிகள் 8,000 இற்கு மேற்பட்ட அளவினரின் | 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை 31,500 விவசாயிகள் மாத்திரம் பதிவு |

| | | | |
|---|---|---|---|
| மற்றும் வியாபாரிகளை பதிவு செய்தல் மற்றும் இலங்கையில் மிளகு மற்றும் கருவாவிற்கு புவியியல் சுட்டியை (புஜ) பெற்றுக் கொள்வற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் 2020 ஆகஸ்ட் 27 திகதியளவில் ரூபா 10,647,000 செலவில் 300 டெப்லட் கணனிகளை கொள்வனவு செய்து 300 நிறுவக மற்றும் கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கி ரூபா 1,505,000 செலவில் கணனி மென்பொருலொன்றையும்டி அபிவிருத்தி செய்து அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியில் டெப்லட் கணனிகளை பெற்றுக் கொண்ட 58 நபர்கள் குறிந்த மென்பொருளை தரவிறக்கம் செய்திருக்கவில்லை. அவ்வாறே குறித்த கணனிகளை பயன்படுத்தி கடந்த 02 ஆண்டுகளினுள் மொத்த கருவா விவசாயிகள் 250,000 இல் 238 பேர்கள் (0.09 சதவீதம்) ஆன மிகக் குறைந்த அளவினரே பதிவு செய்திருந்தனர். அந்த அளவை | அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல்கள் இந்த டிஜிட்டல் முறைமையில் சேர்த்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 50,000 கறுவா விவசாயிகளின் தகவல்கள் இந்த முறைமையில் உள்ளடக்குவதற்குஇலக்கிடப்பட்டுள்ளது. | செய்யப்பட்டிருந்தனர். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பதிவு செய்தலை 29 டெப் கணனிகளினால் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு இருந்தன. அவ்வாறே குறித்த மென்பொருளை பயன்படுத்தி அக் காலத்தினுள் ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி பண்ணை தயாரிப்பாளர்கள் மற்றும் வியாபாரிகளை பதிவு செய்வது பற்றி கவனம் செலுத்தி இருக்கவில்லை. இவ்வாறே ரூபா 1,505,000 செலவில் மென்பொருளொன்றை அறிமுகஞ் செய்து அதற்காக வருடாந்தம் ரூபா 135,000 வீதம் பராமரிப்பு செலவை செலுத்த வேண்டியிருந்த போதும், கருத்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்ள மென்பொருளை பயன்படுத்தவில்லை என மேற்கொண்ட கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 12,152,000 செலவில் செயற்படுத்த திட்டமிட்டிருந்த கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 7. | ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டில் | 2023 | பின்னூட்டல் நடவடிக்கைகள் தாமதமாகி | பகிர்ந்தளிக்கப்பட்ட நாற்றுக்களின் மூலம் ஆகக் கூடிய | 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அந்த |

| | | | |
|---|---|---|---|
| நாற்று வகைகள் 12 மேம்படுத்துவதற்கு ரூபா 400,000,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 387,697,746 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்குரியதாக ஆண்டினுள் 12 நாற்று வகைகளுக்குரிய பயிர்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதில் கண்டி மாவட்டத்தினுள் 622,226 பயிர்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் அதில் கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 03 செயற்திட்ட உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 10 விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 9,580 மிளகு பயிர்களில் 4,240 பயிர்கள் அழிந்து போயிருந்தது. அவ்வாறே நுவரெலியா மாவட்டத்தின் ரிகில்லகஸ்கட செயற்திட்ட உத்தியோகத்தர் பிரிவு தொடர்பாக மிளகு மற்றும் கோபி முறையே 2,890 மற்றும் 600 பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் மிளகு மற்றும் கோபி பயிர்கள் முறையே 1,225 மற்றும் 598 அழிந்து போயிருந்தது. | மேற்கொள்ளப்படலானது குறைத்துக் கொள்வதற்காக மேற்பார்வை உத்தியோகத்தர்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. | உற்பத்தியைப் பெற்றுக் கொள்ளும் வரை பின்தொடர் நடவடிக்கைகள் முறைமைப்படுத்துதல் வேண்டும். | நிலமையில் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | ஏற்றுமதி விவசாய திணைக்களம் ஆராய்ச்சிக்காக மீளாய்வாண்டில் ரூபா 10,000,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் 6,410,734 ஆன தொகை ஆண்டினுள் செலவு செய்திருந்தது. அதில் மாத்தளை ஆராய்ச்சி மத்திய நிலையத்திற்கு ரூபா 5,703,092 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 3,607,811 செலவு செய்யப்பட்டிருந்த து. மாத்தளை ஆராய்ச்சி நிலையத்தில் கருவா தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பிரகாரம் சீனிக்கு பதிலாக கருவா பயன்படுத்தப்பட்டு பிஸ்கட் உற்பத்தி செய்ய கூடும் என முடிவு காணப்பட்டிருந்த துடன் அது தொடர்பில் உற்பத்தியாளர்கள் அறிவூட்டும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 730,000 செலவு செய்து மிளகு தொடர்பான 04 ஆராய்ச்சிகள் செயற்படுத்தப்பட்டு காய்ந்த | 2023 | சீனி அற்ற கருவா பிஸ்கட் உற்பத்தி தொடர்பாக விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஊடாக உற்பத்திாளர் களுக்கு அறிவூட்டப்படு வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கருவா அபிவிருத்தி திணைக்களத் தின் உதவி பெற்றுக் கொள்வதற்கும் பிஸ்கட் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு இந்த தொழிநுட்பத்தினை அறமுகப்படுத் துவதற்கு எதிர்பார்க்கப்ப டுகின்றது. மிளகு தொடர்பாக எதிர்காலத்தில் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இந்த ஆராய்ச்சி பெறுபேற்றை பய்னடுத்துவதற்கு எதிர்பார்க்கப்ப டுகின்றது. ஏனைய உற்பத்தி தொடர்பில் சிறிய பரிமாணத்தில் உற்பத்தி மேற்கொள்ளு | ஆராய்ச்சி விளைவுகளை தேசிய பொருளாதாரத்திற்கு பங்களித்தல் மற்றும் பிரயோக ரீதியிலான உற்பத்தி செயற்பாடுகளில் அமுல்படுத்துதல் வேண்டும். | 2024 செப்தெம்பர் 30 வரையிலும் பிரயோக ரீதியில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கருப்பு மிளகிற்கு பைபரின் பிரித்தெடுப்பதற்கான முறைமை அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கையில் பயிர்செய்யும் மிளகு பிரதேசங்களின் பிரகாரம் அதன் தரம் வேறுபடும் விதம் பகுப்பாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் பொதுமக்களுக்கும் மிளகு உற்பத்தியாளர்களுக்கும் தெரிவிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ம் உற்பத்தியாளர்கள் காணப்படுகின்றதுடன் எதிர்காலத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | | |
| 9. | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை காலப்பகுதிக்குரியதாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் ஊடாக நேரடியே செயற்படுத்தப்படுகின்ற 12 நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யக்கூடிய உயர்ந்தபட்ச திறன் 3,005,000 பயிர்களாவதுடன் உற்பத்தி இலக்கு 2,104,508 ஆக காணப்பட்ட போதிலும் பயிர் உற்பத்தி 1,829,144 ஆக காணப்பட்டது. அக் காலத்தினுள் சான்றுப்படுத்தப்பட்ட பயர்கள் 1,560,005 ஆக காணப்பட்டதுடன் | 2023 | குறித்த காலத்தினுள் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முன்னுரிமை பெற்றுக் கொடுப்பதுடன் பயிர்கள் உற்பத்தியும் உயர்பட்சமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | நாற்று மேடைகளை உச்ச இயலளவை உடையதாக அமுல்படுத்துதல் வேண்டும். | உச்ச இயலளவில் அமுல்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட பயிர்களின் எண்ணிக்கை 1,514,813 ஆகும். திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற குண்டசாலை மற்றும் நில்லம்ப நாற்று மேடைகளின் உயர்ந்தப்பட்ச ஏற்றுமதி பயிர் உற்பத்தி திறன் ஆண்டுதோறும் 250,000 பயிர்களாக காணப்பட்ட போதிலும் ஆண்டிற்கான உற்பத்தி பயிர்கள் 65,026 ஆக அதாவது 26 சதவீதம் ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் பயிர் இலக்கிற்கு இணையாக களத்திற்கு பயிர் வழங்கலானது 44 சதவீதமாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே 10 அரச நாற்று மேடைகளின் உய்பட்ச திறனிற்கு இணையாக பயிர் உற்பத்தி 61 சதவீதமாக காணப்பட்டது. | | | | |
| 10. | திணைக்களத்திற்கு சொந்தமாக 98 வாகனங்கள் காணப்படுகையில் 2022 மே மாதம் தொடக்கம் ஒரு ஆண்டு காலம் மாதமொன்றிற்கு 3,000 கிலோமீட்டர் ஓடப்படும் அடிப்படையில் மாதாந்தம் 178,000 வாடகைக்கு வாகனமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் | 2023 | கொவிட் தொற்று நிலை காரணத்தினால் உத்தியோகப் பூர்வ பயணங்கள் மட்டுப்படுத்தப் பட்டமை, அரச கொள்கை அடிப்படையில் அரச செலவீனத்தினை மட்டுப்படுத்தப் | கொவிட் தொற்று நோயின் காரணமாக கடமை பிரயாணங்கள் வரையறுக்கப்பட்டமை, அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் செலவினங்கள் வரையறுத்தலின் காரணமாக களக் கடமைகளில் ஈடுபடுதல் குறைவடைந்தமை QR குறியீட்டின் கீழ் எரிபொருள் வழங்குதல் மற்றும் ZOOM தொழில் நுட்பம் | 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையும் இந்த நிலைமை சரி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் ஆண்டினுள் 36,000 கிலோமீட்டர் ஓடப்பட வேண்டிய போதிலும் அக் காலத்தினுள் 18,020 கிலோமீட்டர் பயணித்தில் 17,980 கிலோ மீட்டர்கள் குறை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 1,066,813 ஆன கிரயம் விளைவற்றதாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | படல், காரணத்தினால் வெளிகள கடமைகளில் ஈடுபடல் குறைந்தமை, ஞசு அலகின் கீழ் எரிபொருள் பெற்றுக் கொள்ளப்படல், ணுழுழுஆ தொழிநுட்பத்தின் ஊடாக கூட்டங்கள் நடத்தப்படல் போன்ற காரணங்களினால் வாகனங்களின் பயன்பாடு மட்டுப்படுத்தப் பட்டது. | ஊடாக கூட்டங்களை நடாத்துதல் போன்ற காரணத்தின் அடிப்படையில் வாகனங்களின் பயன்பாடு வரையறுக்கப்பட்டிருந்தது. | |
| 11. | திணைக்களம் வாகனங்களுக்கு தேவையான டயர்களை உரிய வண்ணம் இனங்காணப்படாது கடந்த ஆண்டின் திசெம்பர் மாதம் கூட்டுத்தொகை ரூபா 2,416,265 ஆன 50 டயர்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் அதில் 1,812,231 ஆன 35 டயர்கள் களஞ்சியத்தில் எஞ்சி காணப்பட்டது. | 2023 | தேவைப்பாடு இனங்காணப்பட்டு கொள்வனவு செய்யப்படல் வேண்டும். | 2022 ஆம் ஆண்டில் வாகனங்கள் உரிய பிரகாரம் ஓட்டப்படாமையினால் இந்த ஆண்டில் டயர் விநியோகிக்கப்படாமை, 2023 ஆம் ஆண்டிற்காக இருப்பு மீதி பேணிச் செல்லும் நோக்கில் டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இந்த நிலைமை சரி செய்யப்பட்டிருக்க வில்லை. |

தலைப்பு - 290 கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,144,736,827 | 94,469,162 | 1,050,267,665 | முனைப்பழியுள்ள |
| **2022** | 1,540,160,077 | 103,152,800 | 1,437,007,277 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,224,108,002 | 231,263,450 | 1,992,844,552 | முனைப்பழியுள்ள |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | நன்னீர் ஊக்குவிப்பு கடன் உத்திதேசத் திட்டத்தில் அரசாங்கத்திற்காக வட்டி சலுகை செலுத்துதல் வட்டி உதவி செலுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்காக திணைக்களத்திற்க அதிகாரம் கையளிக்கப்பட்ட போதிலும் இந்தக் கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் கடன் வசதிகள் பெற்ற ஒரு மீனவர் கடன் வழங்கப்பட்ட திகதி, கடன் தவணைப் பணம் செலுத்தி பூர்த்தி செய்யும் திகதி மாதாந்தம் செலுத்த வேண்டிய வட்டி உதவி போன்ற கொடுப்பனவு விபரங்கள் தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியுமான வகையில் பதிவேடுகள் மற்றும் தரவு கோவையொன்று பேணிச்செல்வதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் 2023 ஆம் ஆண்டில் | 2023 2022 | கடன் உத்தேச திட்டம் தொடர்பாக சரியான தவல்கள் பேணிச்செல்ல வேண்டியிருந்தது டன் கோருகின்ற போது அந்தத் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | நன்னீர் ஊக்குவிப்பு கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் இருக்கின்ற சகல கடன் பெறுநர்களினதும் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று திணைக்களத்தால் பேணிச்செல்லப்படாதிருந்ததுடன் அதன் மூலம் ஏற்பட்டிருந்த பிரச்சினையுடனான நிலைமையினை தீர்த்துவைப்பதற்காக திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இனங்காணப்பட்ட கடன் உரிமையாளரின் நிலுவைத் தவணைப் பணம் மற்றும் கடன் தொகையை அறவிடுவதை துரிதப்படுத்தவதற்காக திணைக்களத்தின் மூலம் வட்டி சலுவை பணம் இலங்கை வங்கிக்கு செலுத்துதல் தற்காலிகமாக கைவிடப்பட்டமை, திணைக்களத்தின் மூலம் கடன் கொடுத்தோர்களுக்கு அறிவித்து எச்சரிக்கைக் கடிதம் அனுப்புதல், | நன்னீர் ஊக்குவிப்பு கடன் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் இருக்கின்ற சகல கடன் நலனாளிகளினதும் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று திணைக்களத்தால் பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. |

செலுத்தப்பட்ட ரூபா 11,996,398 தொகையையும் உள்ளடக்கிய 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இலங்கை வங்கிகிக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 300 மில்லியனுக்கு மேற்பட்ட வட்டி உதவியில் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் இதுவரை செலுத்தப்பட் டிருந்த வட்டி உதவித் தொகை சரியாக கணிப்பிடுவதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்விறகு சமர்ப்பிக்கப்படவில்லை . அவ்வாறே திணைக்களத்தால் கடன் கொடுத்தோர்களிடமிரு ந்து கடன் தவணைப் பணத்தை அறவிடல், தீர்க்கப்படாதுள்ள மீதிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு அல்லது தரவு முறைமை யொன்று பேணிச்செல்லாமையின ால் வட்டி உதவித் தொகையினைச் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள கடன் தொகை, செலுத்துவதற்குள்ள வட்டி மற்றும் செலுத்தி பூர்த்தி செய்த கடனாளிகள் யார் என்பது தொடர்பாக இனங்காண்பதற்கு தேவையான தவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையி னால் இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் சரியான தன்மை

சகல மாவட்ட அலுவலகங்களுக்கும் அறிவித்து கள உத்தியோகத்தர்கள் ஊடாக கடன்கொடுத்தோர்களுக் கு அறிவுறுத்துதல், இலங்கை வங்கியிலிருந்து உரிய கடன் பெறுநர்கள் தொடர்பான விரிவான தகவல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் கடன் உரிமையாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்பான விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் வங்கி ஆவணங்களின் பிரகாரம் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்ட கடன் மீதி ரூபா 776,515,188 ஆகும். | | | | |
| 02 | 2021 நவம்பர் 24 ஆம் திகதிய 2255/22 என்ற அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடும் கட்டளையின் பிரகாரம் 05 பிரதான செயற்பாடுகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கக்கூடிய 53 சந்தர்ப்பங்களுக்காக அரச வருமானத்தை சேகரிப்பதற்காக கட்டணத்தை விதிப்பதற்கு உரிய கட்டளை அமைச்சரால் விநியோகிக்கப் பட்டிருந்தது. எனினும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது முன்னைய இலக்கத்துடன் விஷேட காகிதாதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்காமையினால் அரசாங்கத்திற்கு வருமானம் ஒன்று காணப்படாத அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கான சந்தர்ப்பம் காணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சேகரிக்கப்பட்ட ரூபா 179,170,315 தொகை வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் விநியோகிக்கப்பட்டிருந்த சகல அனுமதிப்பத்திரங்களு | 2023, 2022 | அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்காக போதியளவான உள்ளகக் கட்டுப்பாடொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். | 2021 நவம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 2255/22 என்ற அதி விஷேட வர்த்தமானியின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள முறையில் 53 சந்தர்ப்பங்களின் கீழ் வருமானம் சேகரித்தல் மேற்கொள்ளப் படுகின்றது. அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற வருமானத்திற்குரிய அனுமதிப் பத்திரத்தை விநியோகித்தல் முகாமைத்துவப் பிரிவு, தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு, அபிவிருத்தி பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் எமது திணைக்கள வங்கிக் கணக்கிற்கு சேகரிக்கப்படுகின்ற தொகை, ஒவ்வொரு பிரிவிலிருந்தும் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையுடன் மாதாந்தம் ஒப்பீடு செய்யப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தின் வருமான சேகரித்தல் Online முறைமையில் மேற்கொள்ளப்படுகின்றமையால் வருமானம் வங்கிக்கு கிடைக்கின்றமையை உறுதிப்படுத்தி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுகின்றது. அதனால் விநியோகிக்கப்பட்ட | முன் இலக்கத்தடன் விஷேட தாளில் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுவதில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | க்கும் உரிய வருமானமாக இருந்ததை ஒப்பீடு செய்வதற்கு முடியாமையினால் மேற்கூறப்பட்ட வருடாந்த அனுமதிப்பத்திர கட்டண வருமானத்தில் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | | அனுமதிப்பத்திரங்களுக் குரிய சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை இலகுவாக ஒப்பீடு செய்யும் இயலுமை காணப்படுகின்றது. | |
| 03 | ஆழமான கடற்பிரதேசத்தில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவப் படகுகளை அவதானித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கான 4,200 உபகரண தொகுதிகள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் மானியமாக வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணத் தொகுதிகளில் ஒரு கப்பலில் பொருத்தும் செலவினம் அமெரிக் டொலர் 45 ஆகும். அந்த தொகை உபகரணத் தொகுதியொன்றை பொருத்தும் ஒப்பந்தத்தை வழங்கியிருந்த உள் நாட்டு கம்பனிக்கு செலுத்தவேண்டியிருந்தது. எனினும் கேள்வி நியதிகளின் பிரகாரம் கப்பல் அவதானிப்பு முறைமை 200 இற்குரிய வழங்குநர்களினால் கடந்த தினங்களில் 200 மீன்பிடி கப்பல்களில் இலவசமாக பொருத்துதல் வேண்டும். எனினும் | 2023 | VMS உபகரணம் பொருத்துவதற்காக உரிய திட்டமுறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட 2020.12.31 இன் பின்னர் பதிவு செய்யப்பட்ட 27 கப்பல்கள் திணைக்கள முகாமைத்துவத்தினாலும் இனங்காணப்பட்டதுடன் தற்போது அது தொடர்பாக உள்ளகப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. | இது தொடர்பாக நடாத்தப்பட்ட உள்ளகப் பரிசோதனை 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 திசம்பர் 31 ஆம் திகதியின் பின்னர் பதிவு செய்த / உற்பத்தி செய்யப்படுகின்ற படகுகளுக்காக VMS உபகரணங்கள் உரிய படகு உரிமையாளர்களால் பொருத்தவேண்டியிருந் தமைக்கு அரசாங்கம் தீர்மானித்திருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட திகதியின் பின்னர் பொருத்தப் பட்ட 27 படகுகளுக்காகவும் உரிய இயந்திரம் இலவசமாக பொருத்தப்பட்டிருந்ததா என்பது தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள திணைக்களத்தால் மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட்டிருக் க வில்லை. | | | | |
| 04 | குடா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடா எல்லைகளை அடையாளப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் சிலாபம் குடாவின் எல்லை இனை அடையாளப்படுத்துவத ற்காக தேவையான எல்லை தூண்களின் எண்ணிக்கை 1,784 ஆக இருந்த போதிலும் பெறுகை செயற்பாடுகளின் போது 4060 தூண்கள் எண்ணிக்கை ஆக குறிப்பிடபட்டமையினா ல் மேலதிகமாக வழங்கப்பட்ட ரூபா 3,826,639 ஆன முப்பத்தொன்பது ஆன 2276 தூண்கள் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சிலாபம் குடாவில் 13 | 2023 | மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்ட தூண்களின் செலவினம் மற்றும் மேலதிகமாக செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த போக்குவரத்து செலவினம் என்பவற்றை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந் து அறவிடல் வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த தாமத வழுவினால் மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 2276 தூண்களும் புத்தளம் குடாவிற்கு மீண்டும் போக்குவரத்துச் செய்து புத்தளம் குடாவின் எல்லை அடையாளமிடுவதற்காக பயன்படுத்தவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மேலதிகமாக கொள்வனவு செய்யப்பட்ட 2276 தூண்களும் புத்தளம் குடாவிற்கு கொண்டு செல்லப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இடங்களில் குவித்து வைக்கபட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 128(1)(ஒ) இன் பிரகாரம் பொதுமக்களின் பணத்தை செலவிடும் போது. சிக்கனமாகவும். மற்றும் செயற்திறனாகவும் முறையாகவும். உண்மையாகவும் செலவிடுதல் தொடர்பாக. கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டி இருந்தமை. குறிப்பிடப்பட்ட போதிலும் அதில் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவி ல்லை. | | | | |
| 05 | அறுகம்பை குடாவில் எல்லை அடையாளம் இடுவதற்காக 1048 அடையாளமிடும் தூண்கள் உற்பத்தி செய்யப்பட்டு இருந்த போதிலும். 420 எல்லை தூண்கள் குடாவை சுற்றி அமைக்கபட்டு இருந்ததுடன் அதில் 90 எல்லை தூண்கள் இனங்காண முடியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தமை அறிவிக்கபட்டிருந்தது. 90 எல்லை தூண்கள் நிர்மானிப்பதற்கும் மற்றும் ஸ்தாபிப்பதற்கு அண்ணளவாக ரூபா 222,300 தொகை அரசாங்கத்துக்கு அரசாங்கத்தால் செலவிடப்பட்டு இருந்ததுடன், அந்த இழப்பு மற்றும் நட்டம் தொடர்பாக நிதி பிரமாணத்தின் | 2023 | அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடவேண்டி இருந்ததுடன் மிகுதி தூண்கள் குடா எல்லையில் அடையாளம் இடுவதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். | சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் அறுகம்பே குடாவில் எல்லைத் தூண்கள் 420 நட்டப்பட்டிருந்ததுடன் இந்த எல்லைத் தூண்களுக்கிடையே 90 தூண்கள் இனந்தெரியாத நபர்களால் கழற்றி எடுத்துச்செல்லப்பட்டிருந் தது. இது தொடர்பாக பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் 2020.09.18 ஆந் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | 2024 செப்டெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறுகம்பே குடாவில் எல்லை அடையாளமிடும் தூண்கள் நட்டும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் அவ்வாறு கழற்றி அகற்றப்பட்ட எல்லை தூண்களுக்காக மீண்டும் தூண்களை அமைத்தல் மற்றும் எஞ்சியிருந்த எல்லை தூண்கள் 628 அளவன்று குடா எல்லை அளவிடும் அடையாளம் இடுவதற்காக ஸ்தாபித்தல். 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | | | |
| 06 | கடற்றொழில் மற்றும் நீரியில் வளத்திணைக்களத்தின் சிரேஷ்ட நிலையில் 10 பதவிகளுக்குரிய 19 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையில் 02 பதவிகளுக்குரிய 10 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 08 பதவிகளுக்குரிய 223 வெற்றிடங்களும், ஆரம்ப நிலையில் 02 பதவிகளுக்குரிய 05 வெற்றிடங்களும் காணப்பட்டன. அதன் பிரகாரம் சிரேஷ்ட நிலையினை உள்ளடக்கிய பதவிகளில் கணிசமான எண்ணிக்கையில் வெற்றிடம் காணப்பட்டமை திணைக்களத்தின் பிரதான பணிகளை நிறைவேற்றும் போது இடையூறாக இருந்தது. | 2023 | திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான பதவியணியினர் சேர்க்கப்படல் வேண்டும். | நியமனம் வழங்குவதற்கும், ஆட்சேர்ப்புக்களுக்காகவும் பரீட்சைகள் நடாத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய உத்தியோகத்தர்களினால் உரிய பதவிகளின் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. | ஆட்சேர்ப்பதற்காக பரீட்சை நடாத்தப்படவில்லை. |
| 07 | திணைக்களத்திற்குரிய 31 மாவட்ட மீன்பிடி அலுவலகங்கள் ஸ்தாபிக் கப்பட்டிருக்கின்ற | 2023 | திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளைக் கையேற்பதற்கு நடவடிக்கை | இதில் குறிப்பிடப்பட்ட காணி இந்த திணைக்களத்திற்கு கையேற்கப்பட்ட பின்னர் வேலி எல்லை | அந்தக் காணிகள் திணைக்களத்திற்கு கையேற்கப்படவில்லை. |

காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படாதிருந்ததுடன் அதில் 14 அலுவலகங்களின் காணிகளின் எல்லைகள் சரியாக இனங்கண்டு வேலி எல்லை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதும் ஒரு மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள காணியின் வேலி எல்லை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை.

எடுக்க வேண்டியி ருந்ததுடன் காணிகளை சரியான இனங்கண்டு வேலி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அமைக்க முடியுமாக உள்ளதுடன் அந்த அலுவலகம் அமைந்துள்ள காணிக்காக பிரதேச செயலாளரால் சட்டரீதியான உரித்துடன் கையளித்தல் சான்றிதழ் மாத்திரம் வழங்கப்பட்டமையால் அந்த காணிகளை திணைக்களத்திற்கு கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது .

தலைப்பு - 291 கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புகள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 586,242,510 | 41,572,280 | 544,670,230 | முனைப்பழியுள்ள |
| **2022** | 650,130,714 | 12,302,111 | 637,828,603 | முனைப்பழியுள்ள |
| **2023** | 721,740,698 | 10,960,744 | 710,779,954 | முனைப்பழியுள்ள் |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்புகள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்குட்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்டுள்ள தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | 2015 முதல் 2023 வரை உடைத்து அகற்றுவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ள அனுமதியற்ற நிர்மாணிப்புகளிற்காக திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,853,006 தொகையில் 85 சதவீதமான ரூபா 3,280,780 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன | பணம் செலுத்தத் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| 2. | லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்திற்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2020 செப்தெம்பர் 03 வரையான காலப்பகுதியின் போது வழங்கப்பட்டிருந்த 04 அனுமதிப்பத்திரங்களுக்கும் 2020 செப்தெம்பர் 07 ஆம் திகதி முதல் 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களுக்கும் உரித்தாக | 2022<br>2023 | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய சரியான கட்டணத்தை விரைவாக அறிவிட்டுக் கொள்தற்கு அவசியமான முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசிற்குச் செலுத்த வேண்டிய தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | அறவிடப்பட வேண்டிய தொகையில் லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்தினால் ரூபா 6,474,500.00 செலுத்தப்பட்டுள்ளது. மிகுதித் தொகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் 02.03.2023 ஆம் திகதி தொடர்புடைய நிறுவனங்களுடன் கைத்தொழில் அமைச்சின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட மண் கியூப்களின் அளவைப் பார்க்கிலும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 72,895,000 தொகையும் ரூபா 1,688,515 தொகையுமான கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும், லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனத்தினால் ரூபா 64,056,000 மாத்திரமே திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாகக் கணக்கீடு செய்யப்பட்டு அத் தொகை 5 ஆண்டுகளிற்குள் செலுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தமை கணக்காய்விற்குச் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்டது. | | | | செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது நியமிக்கப்பட்ட குழுவின் கலந்துரையாடலின் போது நியமிக்கப்பட்ட குழுவால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு லங்கா மினரல் சான்ட் லிமிடட் நிறுவனம் உடன்பாட்டைத் தெரிவித்திருந்தது. |
| 3. | 1981 இன் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 7 (உ) மற்றும் 12 ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் ஆலோசனைச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கரையோரமுகாமைத்துவ திருத்தப்பட்ட திட்டத்தின் 6.4.6 பந்தியின் படி. பொது மக்களுக்கு தேவையான பொது அபிவிருத்திப் பணி நடவடிக்கைகளிற்காக மாத்திரம் கரையோர கரைப் பகுதி (கரையோர வலயம்) விடுவிக்கப்படுவதற்கு கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர | 2023 | அதிகாரச் சட்டத்தின் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கத்தல் வேண்டும். | மாற்று வழியில்லாத சந்தர்ப்பங்களில், ஆலோசனைக் குழு நியாயமான காரணங்களை கருத்திற்கொண்டு அதன் மூலம் கடலோர வலயத்திற்கு நேரும் பாதகமான தாக்கங்களைக் குறைத்து கரையோர வலய அபிவிருத்திச் செயற்பணிகளுக்காக பரிந்துரைகளை வழங்குகிறது, | கரையோர வலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக வேறு மாற்று வழியில்லாத சந்தர்ப்பங்களில், நியாயமான காரணங்களை கருத்திற்கொண்டு அதன் மூலம் கடலோர வலயத்திற்கு நேரும் பாதகமான தாக்கங்களைக் குறைத்து ஆலோசனைக் குழு கரையோர வலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கான பரிந்துரைகளை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது . . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வள முகாமைத்துவ ஆலோசனைச் சபையின் பரிந்துரையில் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படக் கூடிய போதிலும் 2021 திசெம்பர் முதல் 2023 ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் தனிப்பட்ட 81 விண்ணப்பங்களிற்கு நிர்மாணிப்பிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் கரையோர வலயத்திற்கு நேர்ந்த பாதகமான தாக்கத்தைத் தடுக்கவோ அல்லது குறைக்கக் கூடிய நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 4. | 2012 முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது இனங்காணப்பட்ட 2,763 அனுமதியற்ற நிர்மாணிப்புகளில் 2,445 நிர்மாணிப்புகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021<br>2022<br>2023 | முறையான செயற்பாட்டில் அனுமதியற்ற நிர்மாணிப்புகளை தாமதமின்றி அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனுமதி வழங்கக்கூடிய அனுமதியற்ற கட்டுமானங்களுக்கு அனுமதி பெறவும், ஏனைய அனுமதியற்ற கட்டுமானங்களை இடிப்பதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 30.09.2024 வரை இந்த அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 5. | 2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட வெள்ள நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வாக களுகங்கை முகத்துவாரம் விரிவாக்கப்பட்டதை அடுத்து களுத்துறையைச் சூழ உள்ள கரையோர மண்ணரிப்பு பாரிய | 2023 | செலவிடப்பட்ட ரூபா 189 மில்லியன் தொகை ஆக்கபூர்வமானதாக நிலையான தீர்வைப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கை தொடர்புபட்ட | எதிர்காலத்தில் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொண்டு திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | இப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சிக்கலாகியது. அக் கடலரிப்பை தடுக்கும் தீர்வாக 2017 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை ரூபா மில்லியன் 189 செலவிடப்பட்டு 19 செயற்திட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொள்ளப்பட்டி ருக்க வில்லை. | | நிறுவனங்களுடன் தொடர்புபட்டு செயற்பட வேண்டும். | | |
| 6. | 2021 நவம்பர் 16 ஆம் திகதி கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 5,800,000 பெறுமதியான PD-1046 ஆம் இலக்க TOYOTA HILUX டபிள் கப் வாகனத்தின் உரிமையைக் கைமாற்றுவதற்கோ அல்லது அவ் வாகனத்தை திணைக்களத்திற்கு மீளக் கையளிக்கப்படுவதற்கே ா மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022<br>2023 | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், வாகனத்தின் உரிமையைக் கைமாற்றுவதற்கே ா அல்லது திணைக்களத்திற் கு மீளப் பெற்றுக் கொள்ளப்படுவதற் கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | PD – 1046 வாகனத்தின் உரிமையை மாற்றுவதற்கு தேவையான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு ள்ளன. | கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ் நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சால் PD – 1046 வாகனத்தின் உரிமையை கையகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| 7. | கரையோர வலயத்தில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகளுக்காக நிகழ்நிலை முறைமையின் மூலம் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக ரூபா 5,000,000 இற்கு ஓர் முறைமையைத் தயாரிப்பதற்காக 2016 யூன் 09 ஆம் திகதி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் | 2023 | பெறுகை மதிப்பீட்டைச் சரியாக மதிப்பிட வேண்டியதுடன் உடன்படிக்கையிட ப்பட்ட பெறுமதிக்கு சேவையை வழங்குவதற்குத் தவறியிருப்பின் குறித்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்து மீளப் | பெறுகை நடைமுறையைக் கடைபிடிக்க முடிவு செய்யப்பட்டுள்ள து. | கூடுதல் கொடுப்பனவுத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொழிநுட்பவியல் நிறுவகத்துடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், பின்னர் அந் நிறுவனத்தினால் அச் செயற்பாடு ரூபா 14,528,000 இற்கு தனியார் பகுதியினருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மையால் ரூபா 9,528,000 தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்தது. | | பெறுகையைப் பின்பற்றி ஏற்ற வழங்குனர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் வேண்டும். | | |
| 8. | கரையோரத்தில் அமைக்கப் பட்ட 38 வீடுகள் தொடர்பாக நிலவிய சிக்கலான நிலையைச் சீராக்கிக் கொள்வதற்கும் புகையிரத குறுக்குப் பாதைக்கு கொடிகாட்டுபவர்களை ஈடுபடுத்துவதற்காக புகையிரத திணைக்களத்திற்கு ரூபா 3,567,321 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் புகையிரத குறுக்குப் பாதைக்கு முறையாக கொடிகாட்டுபவர்களை ஈடுபடுத்தாமை மற்றும் பொருட்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் போன்ற காரணங்களால் 2021 நவம்பர் 11 ஆம் திகதி முடிவடைவதற்காக திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டம் அத்தினத்தில் முடிவுறுத்துவதற்கு இயலாது போனமையால் மீளாய்வாண்டின் இறுதியில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 65,919,292 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | 2023 | நிலவும் சிக்கல்கள் ஆரம்பத்தில் இருந்தே தீர்க்கப்பட்டு செயற்திட்டத்தை குறித்த காலத்திற்குள் முடிவுறுத்தி எதிர்பார்த்த நலனைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அரசாங்கத்திற்கு பாதகம் ஏற்படாத வகையில் செயற்திட்டங்களை நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளேன். | வேலைத் தளங்களில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்திருந்த போதிலும், மதிப்பீடுக் கிரயம் ரூ.65,919,292 ஆக உயர்வடைந்தமை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**தலைப்பு - 292 கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,727,243,283 | 24,487,856 | 2,702,755,427 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,226,316,069 | 16,573,964 | 3,209,742,105 | முனைப்பழியுள்ள |
| **2023** | 3,272,829,822 | 18,326,651 | 3,254,503,171 | முனைப்பழியற்ற |

| தொ. இல | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | மிகை /(பற்றாக்குறை) ரூபா. | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| 1. | லங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை -XV ஆம் அத்தியாயத்தின் 4. ஆம் பந்தியின் பிரகாரம் கல்வி பயிற்சி அல்லது கடமை நிறைவேற்றுகைக்காக வெளிநாடு சென்ற 07 உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாமை காரணமாக கட்டாயக் சேவைக்காலத்தில் சேவை செய்வதற்காக மேற்கொண்ட உடன்படிக்கை மீறலுக்காக உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,727,891 தொகை தண்டப்பணமாக அறவிடப்படவில்லை | 2021 | உடன்படிக்கை பிரகாரம் குறித்த பணத்தை அறவிடப்பட வேண்டும்.இ | மூன்று உத்தியோகத்தருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள துடன் ஏனைய 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து தண்டப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான சட்ட ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள தாக | மூன்று உத்தியோகத்தர்கள் தண்டப் பணத்தை தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்து வருவதுடன் ஏனைய நான்கு உத்தியோகத்தர் களிடமிருந்து தண்டபணத்தை 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை |
| 2. | கன்னொருவ கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் பொறுப்பாளர் (சரப்) இனால் 2018 தொடக்கம் 2023 யூலை மாதம் வரை காலத்தினுள் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் ரூபா 14,749,160 ஆன | 2023 | நிதி பிரமாணம் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நிதி மோசடிக்கு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர் தீர்மானிப்பது தொடர்பாக ஆரம்ப பரிசோதனை ஒன்று மேற் கொள்ளப்படுவதுடன் அது தொடர்பாக | ஆரம்ப பரிசோதனை அறிக்கை மற்றும் நி.பி 104(4) அறிக்கை 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை கிடைத்திருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகை பிரதான அலுவலகத்தின் பிரதான பொறுப்பாளருக்கு கையளிக்காது தனிப்பட்ட பயன்பாட்டிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டு மோசடியொன்று மேற்கொள்ளப்பட்டிருந் தது. இந்த நிதி மோசடி தொடர்பாக நிதி 104(4) முழுமையான பரிசோதனை அறிக்கை மீளாய்வாண்டு இறுதி திகதி வரையிலும் வெளியிடப்பட்டிருக்கவ ில்லை. | | | அறிக்கையொன்று விரைவில் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள் ளதாக | |
| 3. | மத்திய கோழிகள் ஆராய்ச்சி மத்திய நிலையத்தில் 5,181 கோழிகள் ஆன உயர் திறனில் நடத்திச் செல்லப்படக் கூடிய கோழிகள் வீடு மற்றும் வளங்கள் காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டினுள் 1,680 கோழிகள், அதாவது 32 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் நடத்தி சென்றதன் ஊடாக மத்திய நிலையம் 68 சதவீதம் குறைபயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2023 | கோழி ஆராய்ச்சி மத்திய நிலையம் உயர் திறனில் நடத்திச் செல்லப்படல் வேண்டும். | பண்ணையில் 5000 இற்கும் மேற்பட்ட அளவிலான கோழிகளை உற்பத்தி செய்வதற்கு கூடிய கோழி கூடுகளில் இட வசதிகள் காணப்பட்ட போதும் முட்டை காப்பகங்களின் இயல் அளவு 8400 முட்டைகளுக்கு மாத்திரம் இருப்ப தால் முட்டை காப்பகத்திற்கு தேவையான சென்டர் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | 2024 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு பராமரிக்கப்பட்ட கோழிகள் அளவு 2,482 ஆக இருந்தது. |
| 4. | ஆண்டிற்கு 50 ரீதியில் 05 ஆண்டுகளுள் 250 ஆடுகளை களமிறக்கும் நோக்கில் 2019 ஆம் | 2023 | நோய் கட்டுப்பாட்டுடன் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படு | தனிமைப்படுத்தப் பட்ட காலப் பகுதியில் B/T மற்றும் CAE எதிர்ப்பு தென்பட்டதால் | நோயுடன் கூடிய விலங்குகள விலங்குகள் அகப்பட்டதன் காரணமாக இனவிருத்தி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆண்டில் இம்புலந்தண்டை ஆடு இன விருத்தி மத்திய நிலையத்தினுள் போயர் வகை ஆடுகளின் இன விருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டு இறுதியில் ரூபா 91,970,290 ஆன செலவீனமொன்று ஏற்கப்பட்டிருந்ததுடன் அக் காலத்தினுள் ரூபா 2,362,442 ஆன வருமானமொன்று மட்டும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த காலத்தினுள் 23 ஆடுகள் மட்டும் களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தமையினால் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. | | வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இறக்குமதி செய்யப்பட்ட ஆடுகளின் தொகுதி அவ்வப் போது பரீட்சிக்கப்பட்டதுடன் நோயுடன் கூடிய விலங்குகள் தென்பட்டதுடன் அதன் பிரகாரம் வெளிக்கலத்தில் தற்போது விலங்குகளை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டுள்ள தாக | நடவடிக்கைகள் மற்றும் வெளிக்களத்திற்கு விலங்குகளை வழங்குவது 2022 மே 22 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது . |
| 5. | ரூபா 11,611,665 ஆன செலவீனமொன்று ஏற்கப்பட்டு 2021 சனவரி 04 ஆந் திகதி பணிகள் நிறைவு செய்யப்பட்ட தொடர் கல்வி நிறுவனத்தின் உணவகத்தின் மேல் மாடி மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது. | 2021<br>2022<br>2023 | எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்கு தொடர்புடையதாக கட்டிடம் பயன்படுத்தப்படல் வேண்டும். | 2024 ஆம் ஆண்டில் அலுவலக உபகரணங்கள் கொள்வனவின் கீழ் உள்ள நிதி ஏற்பாடுகளின் மூலம் இந்த தேவைப்பாடுகளில் இருந்து ஒரு பகுதி அல்லது பெற்றுக் கொள்ள முயற்சி செய்துள்ளதாக | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது |
| 6. | பொல்கொல்ல கால்நடை கட்டுப்பாட்டு கிருமிநீக்கல் ஆய்வுகூடத்தை | 2021<br>2022 | தற்போது காணப்படும் தேவைகளை இனங்கண்டு மதிப்பீடு செய்து | மிருக விஷ ஆய்வுக்கூடத்தை மேம்படுத்துவதற்கும் திருத்தம் செய்வதற்கு | ஆய்வுக்கூடத்தின் திருத்த நடவடிக்கைகள் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் |

| | | | | |
|---|---|---|---|---|
| மேம்படுத்துதல் மற்றும் திருத்த வேலைகளுகாக 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரரொருவருக்கு 2018 திசெம்பர் 29 ஆம் திகதிக்கு முன்னர் வேலையை பூர்த்தி செய்வதற்காக ரூபா 3,273,873 ஆன பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு ஒப்பந்தத்தை வழங்கி மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவா்று ரூபா 1,382,766 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்யாமல் ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை விட்டு இருக்கையில் 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆய்வுகூடத்தின் திருத்த வேலைகளை முறையாக மேற்கொள்ளாமை காரணமாக உரிய வகையில் கிருமி நீக்கம் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தமை மற்றும் ஆய்வுகூடத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகள், தடுப்பூசி திரவங்கள் உற்பத்தி 7 செயற்பாடுகள் மிகவும் சிரமத்துடன் மற்கொள்ளப்படுவது | | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பத | திருத்தம் செய்யும் செயற் திட்டத்தை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் காரணமாக உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது மீண்டும் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 7. | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தோல் மற்றும் வாய் நோய் 359,760 தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி வடிகளாக உள்நாட்டு தேவையின் 25 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் இறக்குமதி 51 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை அளவிலான 2,299,900 வடிகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 89,344,215 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்காமல் இறக்குமதியை அதிகரிக்கும் போக்கொன்று அவதானிக்கப்பட்டது | 2022 | உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியை கட்டுப்படு:த்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான இரசாயன பொருட்களின் பற்றாக்குறை காரணமாக இறக்குமதி மாதிரி அளவு அதிகரித்துள்ளதாக | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி நிறுத்தப்பட்டிருந்த போதும் திணைக்களத்தின் தடுப்பூசி உற்பத்தி அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி முறையே 249,320, 342,180 மற்றும் 162,840 ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது |
| 8. | இனவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2019 ஏப்ரல் மாதத்தின் போது அவுஸ்திரேலியாவிலிருந்து 100 ஆடுகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அந்த ஆடுகளுக்கு இடையே 05 ஆண் ஆடுகளும் 16 பெண் | 2021 | இலங்கையின் காலநிலைக்கு இனங்கும் கால்நடைகளை இறக்கமதி செய்தல் மற்றும் நட்டத்தை குறைக்கும் வகையில் செயற்பட வேண்டும | இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகள் புதிய சுற்றாடல் நிலைக்கு மாறவேண்டியுள்ளதுடன் அவ்வாறு மாற்றத்திற்கு உட்படாத கால்நடைகள் | சீராக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆடுகளுமாக 21 ஆடுகள் 2021 திசெம்பர் 31 இல் மரணித்திருந்ததுடன் மரணித்த ஆடுகளின் பெறுமதி ரூபா 8,036,275 ஆக இருந்தது. இப்பெறுமதி ஆரம்ப முதலீட்டின் 21 சதவீதமாக இருந்ததுடன் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முன்னர் இக்கால்நடைகளுக்காக இதுவரை செலவிடப்பட்ட நிறுவன மற்றும் பராமரிப்பு செலவினம் செயற்திறனாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ஆடுகள் இறக்குமதிக்காக பெறுகைக்குழு 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் போதே இறக்குமதி செய்யப்பட்டிருந்தமையால் அந்நிய செலாவணி விகித வேறுபாடு ரூபா 2,311,760 தொகை மேலதிகமாக கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்தது. | | | மரணிக்கக்கூடிய நிலைமை காணப்படுவதாக காலநடை சுகாதார சான்றிதல (Health Protocol) தொடர்பாக அவுஸ்திரேலியா தனிமைப்படுத்தல் நிறுவனம் மற்றும் இலங்கையின் தனிமைப்படுத்தல் பிரிவுகளுக்கிடையே இறுதி இணக்கப்பாட்டிற்கு வரமுடியாமையால் இறக்குமதியில் தாமதம் ஏற்பட்டது. | |
| 9. | கரந்தகொல்ல கோழி ஆராய்ச்சி நிலையத்தில் 2015 ஆம் ஆண்டிலிருந்து அப்போது காணப்பட்ட தாரா கூடு ரூபா 1,562,000 செலவிட்டு மாட்டுத் தொழுவமொன்றாக மாற்றப்பட்டிருந்த போதும் அது 112021 | 2023 | வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டும | இளம் பசுக்களைப் பயன்படுத்துவதற்கு ஈடுபடுத்துவதற்கு வேலையாட்கள் இல்லாததால் அதைச் செயற்படுத்த முடியவில்லை என்பதாக | 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டில் இல்லாமல் காணப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை | | | | |
| 10 | இம்புலந்தண்ட ஆடுகள் இனவிருத்தி நிலையம் அமைந்துள்ள 37 ஏக்கர் காணியில் 10 ஏக்கர்களும் கரந்தகொல்ல கோழி ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள 25ஏக்கர் காணியில் 06 ஏக்கரும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2021 | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக காணி பயன்படுத்தப்பட வேண்டும | இந்த 10 ஏக்கர் புல் பயிரிடப்பட்டிருந்த போதும் வரட்சி காலநிலை காணப்பட்டதால் காய்ந்து இருந்ததாகவும் கோழி ஆராய்ச்சி நிலையத்தில் 6 ஏக்கர் பயன் படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக | இரண்டு நிலையங்களிலும் 16 ஏக்கர் அளவிலான காணி பயன்பாடு இன்றி 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை காணப்பட்டது. |

**தலைப்பு - 293 இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 871,194,711 | 5,495,891 | 865,698,820 | முனைப்பழியற்ற |
| **2022** | 876,945,548 | 6,597,870 | 870,347,678 | முனைப்பழியற்ற |
| **2023** | 888,309,198 | 1,682,001 | 886,627,197 | முனைப்பழியற்ற |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்பட்டு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான 04 முதல் 09 வருட காலப்பகுதிக்கிடையே இடம்பெற்ற 07 சம்பவங்கள் தொடர்பான ரூபா. 2,086,351 தொகையான மொத்த நட்டம் மற்றும் சேதங்களை பதிவழிப்பு செய்யவோ அல்லது மீள அறவீடு செய்யவோ நடவடிக்கையினை திணைக்களம் எடுத்திருக்கவில்லை. | 2023, 2022, 2021 | நிதி பிரமாணங்களின் அடிப்படையில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் மீது வினைத்திறனான மற்றும் விளைதிறனான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் எந்த விசாரணையும் நடத்தப்படாத நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான மேற்குறிப்பிட்ட 07 சம்பவங்களில் 02 சம்பவங்கள் தொடர்பன விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. 03 சம்பவங்களுக்கு சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது. ஒரு சம்பவம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து நட்டப்பெறுமதி மீள அறவீட செய்யப்படும், அதேசமயம் ஏனைய சம்பவத்திற்கான சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. | 04 முதல் 09 வருட காலப்பகுதிக்கிடையே இடம்பெற்ற 07 சம்பவங்கள் தொடர்பான ரூபா. 2,086,351 தொகையான மொத்த நட்டம் மற்றும் சேதங்களை பதிவழிப்பு செய்யவோ அல்லது மீள அறவீடு செய்யவோ நடவடிக்கையினை திணைக்களம் எடுத்திருக்கவில்லை. |
| 2 | இறப்பர் அபிவிருத்தி | 2023, | 14 | 2024 பெப்ரவரி இல் | இறப்பர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திணைக்களத்திற்கான நிர்வாக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2009 ஆம் ஆண்டு ரூபா 59,304,347 தொகையினை செலுத்தி திணைக்களத்தினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான ரூபா 66,700,000 பெறுமதியான 75 பேர்ச்சஸ் அளவுள்ள காணி கொள்வனவு செய்யப்பட்டது. இருந்தபோதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கூட அந்த காணி இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் உடமையாக்கப்படவில்லை என்பதுடன், 14 வருடங்களுக்கு மேலாகியும் அந்த காணி எந்தவொரு செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022, 2021 | ஆண்டுகளுக்கு முன்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட காணியினை, தாமதமின்றி கையகப்படுத்தி, தேவையான நிர்மாணிப்புக்களை மேற்கொண்டு அந்த சொத்துக்களை விளைதிறனான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். | காணி அளவீடு செய்யப்பட்டது, ஆனால் நில அளவைத் திணைக்களம் இதுவரை காணியின் வரைபடத்தினை வழங்கவில்லை. நிர்மாணங்களுக்கு தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்ய திறைசேரியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | அபிவிருத்தி திணைக்களத்தினால் காணி உடமையாக்கப்படவில்லை மற்றும் 14 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அந்த காணி எந்த தேவைக்கும் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| 3 | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கட்டுப்பாட்டில் உள்ள 69 விடுதிகளின் சட்டரீதியான உரிமைத்துவமானது ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமே உள்ளதுடன் அவற்றின் உரிமைத்துவத்தை முறையாகக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2022 | உத்தியோக பூர்வ விடுதிகளின் சட்டரீதியான உரிமைத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும். | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, பிரதேச செயலாளர்கள் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றிலிருந்து உரிய காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் அந்த நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் முன்னைய ஆண்டில் 04 காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | உத்தியோக பூர்வ விடுதிகளின் சட்டரீதியான உரிமைத்துவத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவை நிறைவுறவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 15 மாவட்டங்களில் உள்ள 32,563 விவசாயிகளுக்கு இறப்பர் மீள்நடவு மற்றும் புதிய நடவுக்காக வழங்கப்பட்ட பயிர்ச்செய்கை மானியத் தொகையில், பயிர்ச்செய்கை கைவிடப்பட்டதால் மீளாய்வாண்டின் இறுதியில் 3,544 விவசாயிகளிடமிருந்து ரூபா 126,306,217 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், அந்த பணத்தை மீள அறவீடு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை | 2023, 2022, 2021 | இறப்பர் நடவுக்காக மானியம் கிடைத்த பின்னர் நடவினை கைவிடுவது குறித்து ஆராய வேண்டும். மேலும், மீண்டும் மானியங்களை வழங்கும்போது இத்தகைய குறைபாடுகளைக் குறைத்து, நிலுவைத் தொகையை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அந்த மீள அறவீடு செய்வது அல்லது பதிவழிப்பு செய்வது குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது மற்றும் அந்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். நிதிப் பிரமாணம் 113 மற்றும் 01.˙.2024 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், மீளப்பெறுவதற்கு கடினமான மானியங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன. | நிலுவைத் தொகையானது இன்னும் மீள அறவீட செய்யப்படடிருக்க வில்லை. |
| 5 | 2010.˙.2011 ஆம் ஆண்டிற்கு பின்னர் இறப்பர் நிலங்களில் கணக்கெடுப்பொன்று நடத்தப்படவில்லை. 2022 ஆம் ஆண்டுக்கான இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் செயல்திறன் அறிக்கையின் பிரகாரம் இறப்பர் பயிரிடப்பட்ட நிலங்களின் அளவு 138,526 ஹெக்டேர்களாகக் காட்டப்பட்டுள்ளது ஆனால் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் தகவல்களின் பிரகாரம், அந்த பரப்பளவு 98,583.56 ஹெக்டேராகக் | 2023 | இறப்பர் பயிரிடப்படும் நிலங்களின் பரப்பளவு குறித்த துல்லியமான தகவல்கள் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் பராமரிக்கப்படல் வேண்டும். | 2023.˙.2024 ஆண்டுகளின் அடிப்படையில் நிலங்கள் மீதான கணக்கெடுப்பொன்று நடைபெற்று வருகின்றது, 2024.12.31 க்குள் இவை நிறைவு செய்யப்படும். | இறப்பர் பயிரிடப்படும் நிலங்களின் பரப்பளவு குறித்த துல்லியமான தரவுகள் திணைக்களத்திடம் இல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காட்டப்பட்டுள்ளது. | | | | |
| 6 | 08 ஆதல் 12 வருட காலப்பகுதியிடையே ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிடமிருந்து பெறப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் மற்றும் 16 மோட்டார் சைக்கிள்கள் திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கூட உடமையாக்கப் பட்டிருக்கவில்லை. | 2023 | திணைக்களத்தால் பெறப்பட்ட பின்னர் பயன்படுத்தப்படும் அந்த வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உரிமைகளானத தாமதமின்றி பெறப்படல் வேண்டும். | அப்போதைய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்ட 03 மோட்டார் வாகனங்களும் 16 மோட்டார் சைக்கிள்களும் குறித்த அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளமையினால், அந்த வாகனங்களை திணைக்களத்திற்கு மாற்றித்தரமாறு அமைச்சிடம் கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் இதுவரையிலும் திணைக்களத்தால் உடமையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| 7 | 2021 ஆம் ஆண்டு முதல் இலங்கை நிர்வாக சேவையில் உள்ள 5 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கும், சிரேஷ்ட பிரிவின் கீழ் உள்ள இலங்கை கணக்காளர் சேவையில் 01 பதவிக்கும் உத்தியோகத்தர்கள் இணைக்கப்படவில்லை. | 2023, 2022, 2021 | பணியாளர்களுக்கான தேவைப்பாடுகள் சரியாக அங்கீகரிக்கப்பட்டு, நிர்வாகத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஆட்சேர்ப்பு செயல்முறையினை விரைவுபடுத்துதல் வேண்டும். | பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் , மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு மேற்படி வெற்றிடங்கள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. | சிரேஷ்ட பிரிவின் கீழான இலங்கை நிர்வாக சேவையின் 08 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கும் 04 பணிப்பாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை |
| 8 | திணைக்களத்தின் உற்பத்தி செயல்முறைக்கு நேரடியாகப் பங்களிக்கும் சிரேஷ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 09 பதவிகளும், இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 61 பதவிகளும் வெற்றிடமாகவே காணப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு | 2023, 2022, 2021 | பணியாளர்களுக்கான தேவைகள் சரியாக அங்கீகரிக்கப்பட்டு, நிர்வாகத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, ஆட்சேர்ப்பு செயல்முறையினை விரைவுபடுத்துதல் வேண்டும். | இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி ஓய்வு மற்றும் இராஜினாமா ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட வெற்றிடங்களுக்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்காமையினால் வெற்றிடங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. | சேவை தேவைப்பாடுகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் செய்வதற்கு அல்லது 08 சிரேஷ்ட இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 66 இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர்க |

| | |
|---|---|
| வரையிலும் இறப்பர் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போக்கொன்று காணப்படவில்லை. | ளை நியமணம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை . |

தலைப்பு - 294 தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 6,112,286,578 | 2,245,677,121 | 3,866,609,457 | முனைப்பழியுள்ள |
| **2022** | 6,235,700,352 | 2,038,023,992 | 4,197,676,360 | முனைப்பழியுள்ள |
| **2023** | 6,314,269,998 | 1,951,187,252 | 4,363,082,746 | முனைப்பழியுள்ள |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 மற்றும் 7.2 ஆம் பந்திகள் ஒரு குறிப்பிட்ட பதவிக்கு ஒதுக்கப்பட்ட ஒரு வீட்டைத் தவிர அனைத்து வீடுகளின் குத்தகை காலப்பகுதி 05 ஆண்டுகளாக உள்ளதுடன் நிர்ணயிக்கப்பட்ட குத்தகைக் காலத்திற்கு அப்பால் ஒரு வீட்டில் வசிக்கும் காலப்பகுதிக்கு தண்டப்பண வாடகை விதிக்கப்பட வேண்டும். ஐந்து ஆண்டுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட 12 காலாண்டுகளானது 06 முதல் 33 வருடங்கள் வரையிலான குத்தகைக் காலத்தை கடந்துள்ள நிலையில், அதற்கு முரணாக அதிகாரிகள் திணைக்கள குடியிருப்புகளில் தண்டப்பண வாடகை செலுத்தாமல் | 2021 | தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 05 வருடங்களுக்கு மேலாக வீடுகளில் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களிடம் இருந்து தண்டப்பண வாடகையை மாத்திரம் அறவிடுமாறு நிறுவன பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்திருந்த போதிலும், அந்த பரிந்துரையை மீளாய்வு செய்வதற்கு பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைக்கு அமைவாக திணைக்களத்தில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகள் ஒரு மாதத்திற்குள் அமுல்ப்படுத்தப்படும். | திணைக்களத்திற்கு குறிப்பிட்டதாக ஒரு புதிய சட்டம் முன்மொழியப்பட்டிருந்த போதிலும், அத்தகைய சட்டம் 2024 செப்தெம்பர் 30 வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | | |
| 2 | ரூபா 176,281,496 பெறுமதியான 06 நிர்மாண செயற்திட்டங்களுக்காக தேசிய வனசீவராசிகள் திணைக்களம் தேசிய இயந்திரவியல் நிறுவனத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் அந்த நிறுவனம் வேலை செய்திருக்கவில்லை. இதனால், பெறுகைக் குழுவின் முடிவின் பிரகாரம் அந்த செயற்திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் இதற்கிடையில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் புதிய ஒப்பந்ததாரருக்கு திருப்பித் தரப்படாததால் நிர்மாணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 69,558,270 விளைவற்றிருந்தது. தேசிய இயந்திரவியல் நிறுவனத்திற்கு 04 செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முன்பணத் தொகையிலிருந்து ரூபா 14,360,310 பிடித்துவைத்தல் பணத்தொகையை சீர்செய்து அறவிடப்பட்டிருக்க வேண்டியிருந்தது. | 2021, 2022, 2023 | பாதியில் நிறுத்தப்படும் இந் நிர்மாணங்களை வேறு முறையில் பூர்த்தி செய்து செயற்திறனான பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். | நிலுவைகளை தீர்ப்பனவு செய்யுமாறு தேசிய இயந்திரவியல் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளருக்கு 2024.07.17 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 இற்குள், நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் நிலுவை பணமும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 3 | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் | 2022, 2023 | தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் | 05 வருடங்களுக்கும் மேலான கடன் மீதிகள் தொடர்பில் | இந்தக் கடன் மீதிகள் 2024 செப்தெம்பர் 30 அளவில் அறவிடப்பட்டிருக்கவில்லை அல்லது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | xxiv ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள ரூபா 1,077,431 தொகையில் உயிரிழந்த 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 478,872, சேவையிலிருந்து விலகிய 19 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 724,136 மற்றும் இடைநிறுத்தப்பட்ட 19 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,365,809 என ரூபா 2,568,817 கூட்டுமொத்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | 4 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகாலம் நிலுவையாக உள்ள கடன் மீதிகள் இனங்காணப்பட்டு, அவற்றை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசிக்கப்பட்டு, அதற்கேற்ப மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதியை பிணைதாரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 4 | திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரேயொரு சபாரி பூங்காவாக இருந்த ரிடியாகம சபாரி பூங்கா ஸ்தாபிக்கப்பட்டு 8 வருடங்களாகியிருந்த போதிலும், பூங்காவின் செயற்பாடு தொடர்பில் குறிப்பிட்ட வழிகாட்டல்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை. | 2023 | பூங்கா செயற்படுவதற்கான வழிகாட்டல்களை உடனடியாக தயாரிக்க வேண்டும். | சபாரி பூங்காவின் செயற்பாடு தொடர்பான வழிகாட்டல்களை தயாரிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான 02 சுற்று கலந்துரையாடல்கள் நிறைவடைந்துள்ளன. | அத்தகைய வழிகாட்டல் 2024 செப்தெம்பர் 30 அளவில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 5 | மீளாய்வாண்டின் இறுதியில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 215,891,993 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரிதியகம சபாரி | 2023 | இந்த சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். | இந்த வலயங்களில் கட்டி முடிக்கப்படாத பகுதிகளை 2025 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி | இந்த நிர்மாணங்கள் 2024 செப்தெம்பர் 30 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பூங்காவின் 10 நிர்மாணங்களில் 06 பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. | | | செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது, அதன் பிறகு இந்த வலயங்களை பயன்படுத்த முடியும். | |
| 6 | சுமார் 500 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ரிடியாகம சபாரி பூங்காவின் 150 ஏக்கர், ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பூங்காவிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 | பூங்காவின் பரப்பளவை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். | பயன்படுத்தப்படாத பகுதிகளில் திட்டத்தின் பிரகாரம் வலயங்கள் நிர்மாணிக்கும் பணி ஒவ்வொன்றாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | இந்த பணிகள் 2024 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 7 | ரிதியாகம சபாரி பூங்காவில் 2023 யூன் 02 இல் நடாத்தப்பட்ட வங்காளப் புலியின் பிரேத பரிசோதனை அறிக்கையின் பிரகாரம், புலி விஷமானதால் இறந்திருந்ததுடன் சபாரி பூங்காவின் பராமரிப்பில் இருந்த விலங்கின் இயற்கைக்கு மாறான மரணம் தொடர்பான விசாரணைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 | விசாரணைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வங்காளப் புலியின் மரணம் தொடர்பாக 2023 இல் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு, விலங்கின் திசு மாதிரிகள் குறித்த தடயவியல் அறிக்கைகள் கிடைக்கப்பெறாததால் விசாரணையின் இறுதி அறிக்கை தாமதமாகியிருந்தது. | தற்போது வரை விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 8 | ரிதியகம சபாரி பூங்காவில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்படும் பஸ்ஸில் 01 லீற்றர் எரிபொருளில் 4.2 கிலோமீற்றர் ஓட முடியும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், 2023 பெப்ரவரி வரை எரிபொருள் மீதி லீற்றர் ஒன்றிற்கு 1.16 கிலோமீற்றராகவும், 2023 மார்ச் முதல் | 2023 | வாகனங்களுக்கான எரிபொருளைப் பயன்படுத்துவது எரிபொருளை சரியாக சமநிலைப்படுத்துவதன் மூலம் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் வாகனக் கட்டுப்பாட்டின் உள்ளக கட்டுப்பாட்டை | இரண்டு பேருந்துகள் பழுதுபார்ப்பதற்காக திருப்பி விடப்பட்டு, பழுதுபார்க்கப்பட்ட பின்னர் விரைவில் எரிபொருள் சமநிலைப்படுத்தலிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.<br><br>பாதுகாப்பு பிரிவில் பேணப்படும் | பேருந்துகளின் என்ஜின்களை சேர்வீஸ் செய்த பின்னர், எரிபொருள் சோதனை மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், ஆனால் இது 2024 செப்தெம்பர் 30 வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| லீற்றர் ஒன்றிற்கு 2.1 கிலோமீற்றராகவும் இருந்தது. இதன் விளைவாக, சனவரி முதல் ஒக்தோபர் வரை 03 பேருந்துகளுக்கான எரிபொருள் செலவு ரூபா 7,063,875 ஆக இருந்ததுடன் சரியான செலவு ஏறத்தாழ ரூபா 3,289,613 ஆக இருந்ததால் ரூபா 3,774,262 அதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது. மேலும், 2023 யூலை முதல் ஒக்தோபர் வரை அந்த 03 பேருந்துகளின் ஓட்டக் குறிப்புகளில் காட்டப்பட்டுள்ள தூரத்திற்கும் பாதுகாப்பு பிரிவின் அறிக்கைகளின் பிரகாரமான தூரத்திற்கும் இடையே 2,190 கிலோமீற்றர் வேறுபாடொன்று இருந்தது. | வலுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிவேடுகளை சரியாக பேணுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

**தலைப்பு - 295 வர்த்தக திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 73,123,984 | 614,277 | 72,509,707 | முனைப்பழியற்ற |
| **2022** | 77,656,946 | 307,139 | 77,349,807 | முனைப்பழியற்ற |
| **2023** | 76,435,732 | 1,049,227 | 75,386,505 | முனைப்பழியற்ற |

| தொ/ இல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வுக்குட்படு நிறுவகத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு வழிமுறைகள் | அறிக்கையின் திகதியில் பரிந்துரையின் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கையில் தடை செய்யப்பட்ட மற்றும் நடவடிக்கை எடுக்கமுடியாத மானியங்களின் மூலம் மற்றும் ஏற்பாடுகளில் இருந்தும் உள்நாட்டு கைத்தொழிலைப் பாதுகாக்கும் நோக்கில் 2018 இன் 2 ஆம் இலக்க எதிர்ப்பு மற்றும் வரிச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. சட்டம் அறிமுகப்படுத்தி 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த சட்டத்தை அமுல்படுத்துதற்காக தேவையான நியதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்காமையின் காரணமாக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | 2022/ 2023 | சட்டத்தை அமுல்படுத்துவதற்குத் தேவையான நியதிகள் விரைவாக வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும். | நியதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் சம்பந்தமான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக. | தேவையான நியதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**தலைப்பு - 296 ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 58,244,028 | 3,000,000 | 55,244,028 | முனைப்பழியுள்ள |
| **2022** | 66,167,636 | 3,216,619 | 62,951,017 | முனைப்பழியற்ற |
| **2023** | 71,761,461 | 1,307,073 | 70,454,388 | முனைப்பழியுள்ள |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்புகள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் | அறிக்கையின் திகதியில் உள்ளபடியாக பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் II E பிரிவின் பிரகாரம் நியமத்திற்கு முரணாக இறக்குமதியை மேற்கொண்ட இறக்குமதியாளர்கள் வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 | உரிய இறக்குமதியாளர்களின் விபரங்களை வர்த்தமானியின் மூலம் வெளியீடு செய்யவேண்டும். | இதன் நிகழ்கால நிலைமையாவது தற்பொழுது இறுதியாக வரைபாக்கப்பட்டுள்ள இறக்குமதியாளர்களை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்குரிய (Black List) வர்த்தமானி அறிவித்தலானது சட்ட வரைபுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உரிய வரைபுக்கு சில திருத்தங்களைச் செய்யுமாறு பிரேரிக்கப்பட்டுள்ளது. அத்திருத்தங்களை உள்ளடக்கி உரிய வர்த்தமானியை எதிர்காலத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்குரிய இறக்குமதியாளர்கள் வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை தோற்றுவிக்கும் குற்கோள், துாரநோக்கு மற்றும் செயற்பணியின் பிரகாரம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதகமான தாக்கத்தை விளைவிக்கின்ற | 2021 | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை தோற்றுவிக்கும் குற்கோள், துாரநோக்கு மற்றும் | எங்கள் திணைக்களத்தின் துாரநோக்கு மற்றும செயற்பணிக்கூற்றின் மூலம் இலங்கையின் ஒட்டுமொத்த முறைமை சம்பந்தமாக பாதுகாத்தல் மற்றும் பேணிக்காத்தல் பிரதான குறிக்கோளாகும். இதன்போது ஒட்டுமொத்த முறைமைக்குள் தேசிய | பாதகமான ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டிராத |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இறக்குமதியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். எனினும் தற்பொழுது ஒவ்வொரு விடயம் தொடர்பாக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுதலினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனவே இத்திணைக்களத்தை தோற்றுவிக்கும் அடிப்படைக் குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான முறைமை அல்லது நடைமுறை இல்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | | செயற்பணியின் பிரகாரம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாதகமான தாக்கத்தை விளைவிக்கின்ற இறக்குமதியாளர்களையும் ஏற்றுமதியாளர்களையும் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருளாதார சுற்றாடல், பொது மக்கள் சுகாதாரம், பொது மக்கள் பாதுகாப்பு உள்ளடக்கப்படும். இதன் காரணமாக இத்திணைக்களத்திடமிருந்து இறக்குமதி அல்லது ஏற்றுமதி கட்டுப்பாட்டு உத்தரவுப்பத்திரத்தை வழங்குவதற்கு முன்னர் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவுப் பத்திரக் கட்டணங்கள் அல்லது மேலதிகக் கட்டணங்கள் மாத்திரமன்றி அந்த உத்தரவுப் பத்திரங்களை வழங்கும் போது மேலே குறிப்பிட்ட ஒட்டுமொத்த முறைமைக்கு நலன்கள் மற்றும் சமூக கிரயம் பற்றி கவனித்து வழங்கப்படுவதுடன் இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்கள் சம்பந்தமா செயற்படுத்தப்படுகின்ற நியதிச்சட்ட ரீதியான நிறுவனங்களை ஸ்தாபித்திருக்குமாயிருந்தால் அந்த நிறுவனங்களின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படும். | காரணத்தால் அனுமதிப்பத்திரமின்றி தடை செய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்யும் பணிகள் இடம்பெற்றவாறு இருந்தது. |
| 3 | திணைக்களத்தினால் மென்பொருட்களை அபிவிருத்தி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் மென்பொருள் முறைமையை தொடர்புபடுத்தல், இணைய வழிப்படுத்தல், இணைய வழிப்படுத்திய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ICTA நிறுவனத்துடன் 2017 பெப்ரவரி 09 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை | 2021 | திட்டமிட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு செயற்திறனாக தலையிட்டு செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இத்திணைக்களம் ICAT நிறுவனத்துடன் 2017-02-09 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் திணைக்களத்திற்காக இணைய தளமாக்கிய உத்தரவுப் பத்திரத்தினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதற்காக இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந்நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை நேரடியாக | ICAT நிறுவனத்துடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. |

கைச்சாத்திடப்பட்டிருந்தது டன் அதற்கிணங்க நிதியை வழங்குதல் ICTA நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இதற்காக ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்திலிருந்தும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டுவரை ரூபா 9,080,000 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந் ததுடன், அவற்றுள் ரூபா 8,119,035 பல்வேறு பணிகளுக்கான செலவிடப்பட்டிருந்தது.

ICTA நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ICTA நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தின் மூலம் கணனி நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்து அதன் முதலாவது கட்டத்தை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும் இக்கட்டமானது திணைக்களத்திற்கு திருப்தியளிக்கும் மட்டத்தில் காணப்படாததன் அடிப்படையில் அதனை சரிசெய்யுமாறு எழுத்து மூலமும் நடாத்தப்பட்ட கூட்டங்களின் மூலமும் ICTA நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தும் அதற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. எனவே இத்திணைக்களத்தினால் திணைக்களத்தில் காணப்பட்ட உள்ளகக் கணனி முறைமைக்கு தேவையான மேம்படுத்தல்களைச் செய்து பயன்படுத்துகின்ற மக்களுக்கு இணைய வழியினூடாக பதிவுசெய்து கொள்வதற்கும், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும், கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், வரவுப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கும் முடியுமான வகையில் செயற்பாட்டுச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | ஒரு கிலோகிராம் சீனிக்காக விதிக்கப்பட்ட விசேட பொருள் வரி ரூபா 50 இலிருந்து 25 சதம் வரை குறைத்ததனால் எதிர்பார்க்கப்பட்ட நிவாரணத்தை பாவனையாளர்கள் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆய்வு செய்வதற்கான விசேட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>(i) இறக்குமதி செய்கின்ற சீனிக்காக உத்தரவுப் பத்திர முறையை அறிமுகப்படுத்தி 2020 ஒக்தோபர் 29 ஆந் திகதிய 2199/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை வழங்குவதற்கு நிதி அமைச்சரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் இதற்காக பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாக சில அறிவுறுத்தல்கள் நிதி அமைச்சினால் வழங்கப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை. அதற்கிணங்க சீனி இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வரையறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சீனி இறக்குமதிக்காக விண்ணப்பப் பத்திரங்களை சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்கள் இறக்குமதி செய்வதற்கு வேண்டிக் கொண்ட அனைத்து இருப்புக்களையும் இறக்குமதி செய்வதற்கு | 2021 | வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதனூடாக அப்போது தொடக்க குறிக்கோளாகக் காணப்பட்ட வெளிநாட்டு நாணயம் செல்வதனைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. | இறக்குமதியை கட்டுப்படுத்தும் அல்லது நிர்வகிக்கும் நோக்கத்திற்காக அனுமதிப்பத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அந்த நேரத்தில் இருக்கும் இருப்பு பற்றிய தரவுகள் திணைக்களத்திடம் காணப்படாதிருந்ததுடன், மேலும் மேலதிக கட்டணம் வசூலிப்பதன் மூலமும் அனுமதிப்பத்திரம் இல்லாமல் செய்யப்படும் இறக்குமதியை அனுமதிப்பதன் மூலமும் அரசாங்கம் எதிர்பார்க்கும் கட்டுப்பாடு இன்னும் செயல்படுத்தப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இவ்வாறு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் தனது தொழில்சார் பொறுப்பினை கணித்து நிறைவேற்றாமையின் காரணமாக இறக்குமதி அனுமதிப் பத்திரத்தினை அறிமுகப்படுத்தியதன் மூலம் இறக்குமதியை கட்டுப்படுத்துதல் அல்லது வெளிநாட்டு நாணயம் வெளிச்செல்வதனைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கள் எதிர்பாரத்தவாறு நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | | | | |
| (ii) சீனி இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர முறைமையானது 2020 ஒக்தோபர் 30 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந் தும் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் 2020 நவம்பர் 18 ஆந் திகதி வரை தாமதித்து அமுல்ப்படுத்தப்பட்டிருந் தது அதற்கிணங்க அனுமதிப்பத்திர முறைமை அறிமுகப்படுத்தப்பட்டத ன் பின்னர் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதலினை தாமதித்த காலப்பகுதியில் 101,527 மெட்ரிக் தொன் சீனியை அனுமதிப் பத்திரம் இல்லாது இற்குமதி செய்வதற்கு | 2021 | வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவசர கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் வர்த்தமானி வழங்கப்பட்டிருந்தும் சில இறக்குமதியாளர்கள் அப்போது நாணயக் கடிதத்தினை திறந்து பொருட்களுக்கு கட்டளையிட்டு அல்லது வழங்குனர்களிடமிருந்து உரிய பொருட்கள் துறைமுகத்திற்கு எடுத்தச் செல்லப்பட்டு இறக்குமதிச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிரந்தது. எவ்வாறாயினும் எந்த ஒரு பொருளையும் இறக்குமதி அனுமதிப் பத்திர கட்டுப்பாட்டிற்கு உட்படுத்துகையில் அப்பொருட்களை கப்பலில் ஏற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளல் எதிர்பார்க்கப்பட்டது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 இறக்குமதியாளர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். | | | எனினும் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது இச்சீனி இருப்பினை விடுவிப்பதற்கு செல்லுபடியான இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினை இலங்கை சுங்கத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கிணங்க இவ்வாறு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாது இறக்குமதி செய்த சீனிக்காக அனுமதிப்பத்திரக் கட்டணமும் மேலதிகக் கட்டணமுமம் அறவிட்டு சுங்கத்திடமிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. | |
| (iii) 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக விலைகாப்புறுதி கப்பல் கட்டண பெறுமதியில் 05 சதவீதமான மேலதிகக் கட்டணத்தை அறவீடு செய்ய வேண்டிய போதிலும், இறக்குமதி அனுமதிப்பத்திரம் இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட சீனி இருப்புக்களின் விலை காப்புறுதி கப்பல் இருப்புக்களின் கட்டண பெறுமதியில் 2 சதவீதம் மாத்திரம் அறவீடு செய்வதற்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) நாயகத்தினால் | 2021 | வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2016-02-11 ஆந் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் III ஆம் பட்டோலையின் பிரகாரம் மேலதிகக் கட்டணமானது விலை காப்புறுதி கப்பல் கட்டண பெறுமதியில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் பொருட்கள் கப்பலில் ஏற்றப்பட்ட ஆனால் பொருட்கள் துறைமுகத்தை அடைவதற்கு முன்னர் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிபத்திரத்தினைப் பெற்றுக்கொள்கையில் 4% ஆக மற்றும் பொருட்கள் துறைமுகத்தை அடைந்ததன் பின்னர் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்கையில் 5% ஆக மேலதிகக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அரசாங்கத்திற்கு இழக்கப்பட்ட குறைக்கப்பட்ட தண்டப்பணத்தை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக் கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தண்டப்பணத்தை குறைத்து இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி ஏற்றுமதி திணைக்களத்திற்கு அதிகாரம் உள்ளது என்பது அவதானிக்கப்படாததுடன் அனுமதிப்பத்திரம் இல்லாது இறக்குமதி செய்யப்பட்ட 294,085 மெட்ரிக் தொன் சீனிக்காக அவ்வாறு கட்டணத்தை குறைத்ததன் காரணமாக அரசாங்கத்தினால் அறவிடவேண்டிய ரூபா 433,523,216 தொகையான பணம் இழக்கப்பட்டிருந்தது. | | | | |
| (iv) சீனிக்காக இறக்குமதி அனுமதிப்பத்தரம் வழங்கும் பிரதான குறிக்கோளாக அவதானிக்கப்பட்டதானது வரி குறைக்கப்பட்டதன் பின்னர் அதிக அளவான சீனியை இறக்குமதி செய்வதனை கட்டுப்படுத்துவதாகும். எனினும் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு முன்னர் மாதாந்தம் சராசரியாக இறக்குமதி செய்யப்பட்ட அளவு 41,779 மெட்ரிக் தொன்களாக இருந்ததுடன் அனுமதிப்பத்திர முறைமையை | 2021 | வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை சுங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2020 ஆம் ஆண்டிற்கான இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் தரவுகளின் பிரகாரம் மாதாந்தம் சீனி இறக்குமதி 58,385 மெட்ரிக்தொன் அளவிலானதாகும். எனினும் அனுமதிப்பத்திர முறைமை அறிமுகப்படுத்தியதன் பின்னர் அது 61,055 மெட்ரிக் தொன் அளவுடையாதாக இருந்தது. அது அண்ணளவாக 4.6% அளவான அதிகரிப்பாகும். | அனுமதிப்பத்திரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் விரும்பிய நோக்கங்களை அடைய, திணைக்களம் இது வரை நிகழ்நிலை கணினி கட்டமைப்பு மூலம் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறிமுகப்படுத்தியதன் பின்னர் அது மாதாந்தம் 61,714 மெட்ரிக்தொன்களாக இருந்ததுடன் அது 47 சதவீதத்தினால் இறக்குமதியின் அளவில் அதிகரிப்பாகும். அதற்கிணங்க அனுமதிப்பத்திர முறைமையை அறிமுகப்படுத்தியதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| **5** | ஆக்கபூர்வமான தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றை பயன்படுத்தி அரச வருமானம் சேகரித்தல், முன்னேற்றுவதற்காக தரப்பினர்களினால் மற்றும் தரப்பினர்களுடன் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கான 2016 நவம்பர் மாதம் 23 திகதிய பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச கணக்குகள் தொடர்பான குழுவின் இடைக்கால அறிக்கையின் கட்டளையின் படி " இருபத்தெட்டு நிறுவனங்களுடன் தொடர்புகள் மேற்கொண்டு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து இணையம் ஊடாக பரிந்துரைக் கடிதங்கள் மேற்கொள்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என அறிவித்து" இருந்த | 2022 | அரச கணக்குக் குழுவின் கட்டளைகளுக்கு இணங்க வேண்டும். | 2016 நவம்பர் 23 திகதி நடைபெற்ற அரச கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது அப்போதைக்கு திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்தின் படியான நிலைமையாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல் 2017 ஆண்டில் ஐஊவுயு நிறுவனத்தினால் அவர்களின் செலவின் கீழ் நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தது. அவ்வாறாயினும் அந்த நிறுவனத்தினால் கணினி முறைமை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை சரியாக பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் அந்த அலுவல்களை கைவிடுவதற்கு நேரிட்டிருந்தது. அதன் காரணமாக திணைக்களத்தினால் நிகழ்வு நிலை கணினி முறைமையொன்று அபிவிருத்தி செய்யும் அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன், | நிகழ்நிலை கணினி முறைமையொன்றின் ஊடாக தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதிலும் அந்தப் பரிந்துரை கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 23 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை. | | | அதன்படி, ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் கீழ் செயற்படும் நுஓடீஉளு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிகழ்வு நிலை கணினி முறைமையொன்று மானியமாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதுடன், அந்த நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் அலுவல்கள் 2023 ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கணினி முறைமையை தயாரிக்கும் அலுவல்கள் 2024 பெப்ரவரி மாதம் அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்துடன், அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பரிந்துரை வழங்கப்பட்ட நிறுவனம் நிகழ்வு நிலையில் தொடர்புபடுத்துவதற்காக அலுவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| **6** | இறக்குமதி கட்டுப்பாட்டிற்குரிய விதிமுறைகள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடல் திணைக்களத்தின் பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்பாக காண்பிக்கப்படுகின்ற போதிலும், இறக்குமதி கட்டுப்பாட்டிற்குரிய பணிகளில் மட்டும் ஈடுப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதிக்குரிய எந்தவொரு விதிமுறைகளும் வெளியிடப்பட்டமை கணக்காய்வினால் அவதானிக்கப்படவில்லை. | 2023 | திணைக்களம் தாபித்தலின் பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்புக்கள் முறையாக அடைவதற்கு முயற்சி எடுக்கப்படல் வேண்டும். | இந்த திணைக்களம் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் கட்டுப்பாட்டின் ஊடாக இந் நாட்டு பொருளாதாரத்திற்கு பிரதிகூலமான தாக்கத்தினை ஏற்படுத்தும் நிலைமைகளை கட்டுப்படுத்தல் போன்று நாட்டின் பாதுகாப்பு, பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்கு பிரதிகூலமான நிலைமைகளை கட்டுப்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் போது அதிக தாக்கம் ஏற்படுவது இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யும் பொருட்கள் தொடர்பாக என்பதனால் | 2017 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதிக்குரிய எந்தவொரு விதிமுறைகளும் வெளியிடப்பட்டிருக்கவவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிக கவனம் செலுத்தப்படுவதோடு இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் சில மட்டும் 2044/41 மற்றும் 2017.11.09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிக்கை பிரகாரம் ஏற்றுமதி கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | |
| **7** | பரிந்துரைக்கப்பட்ட காலம் கடந்த வாகனங்கள் மற்றும் பகுதிகளாக்கப்பட்ட வாகனங்கள் இறக்குமதிக்கான கொள்கையொன்று தயாரிக்குமாறு 2024 சனவரி 23 ஆந் திகதி நடந்த அரசாங்க கணக்குகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் மருந்துகள் உற்பத்திற்கு கொண்டு வரப்படுகின்ற ஸ்பிரிட்கள் தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கை எடுக்கப்படுமாறு அறவிக்கப்பட்டிருந்த போதிலும், அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 | அரசாங்க கணக்குகள் குழுவின் கட்டளைகளுக்கு இணங்குதல் வேண்டும். | வாகனங்கள் இறக்குமதிக்கான தேசிய கொள்கையொன்று தயாரித்தல் சனாதிபதி செயலகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் ஊடாக மேற்கொண்டு செல்லப்படுவதுடன் அவ் அறிக்கை வெளியிடப்பட்டவுடன் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | வாகனங்கள் இறக்குமதிக்கான தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், மருந்துப்பொருட்கள் உற்பத்திக்கு கொண்டு வரப்படும ஸ்பிரிட் தொடர்பான பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| **8** | சீ ஷெல்ஸ் தொடக்கம் தாய்லாந்து வரை போக்குவரத்து செய்யப்பட்ட மீன்களைக் கொண்ட கொள்களன்களை உடைய கப்பலொன்று கொழும்பு துறைமுகத்திற்கு அண்மையான பிரதேசத்தில் தொழிநுட்ப கோளாறுக்கு முகம் கொடுத்து மின்சார வழங்கலானது | 2023 | அரசாங்க கணக்குகள் குழுவின் கட்டளைகளுக்கு இணங்குதல் வேண்டும். | கரிம உரம் உற்பத்திற்காக பயன்படுத்தப்படாத மீன்-கழிவுகள் உள்ளடங்கிய 15 கொள்களன்கள் சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் மிகவும் விரைவாக கைதவிர்ப்பு செய்வதற்கு ஆரம்பிக்கப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மீன் கழிவுகளை (Fish-Waste) கொண்ட 15 கொள்களன்கள் கைத்தவிர்க்கப்பட்டிருக்கவில்லை. |

துண்டிக்கப்பட்டமையின் காரணத்தினால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு அண்மித்திருந்ததுடன், வெளிநாட்டு கப்பலின் தேசிய பிரதிநிதி ஊடாக தேடியறியப்பட்ட தேசிய தனியார் நிறுவனமொன்றிற்கு திணைக்களத்திடமிருந்து வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரம் அடிப்படையில் கரிம உரம் உற்பத்திக்காக இந்த மீன் கொள்கலன்கள் 2022 மார்ச் 09 ஆந் திகதி விற்கப்பட்டிருந்தமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது கரிம உர உற்பத்திற்காக பயன்படுத்தாத மீன் கழிவுகளை (Fish-Waste) கொண்ட 15 கொள்கலன்கள் தொடர்பாக தேடிறியப்பட்டு கைதவிர்ப்பிற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என 2024 சனவரி 23 ஆந் திகதி இடம்பெற்ற அரச கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட அந்த கட்டளைகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**தலைப்பு – 297 கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 22,760,428 | 22,760,428 | - | முனைப்பழியுள்ள |
| **2022** | 21,584,525 | 21,584,525 | - | முனைப்பழியுள்ள |
| **2023** | 21,928,650 | 21,928,650 | - | முனைப்பழியுள்ள |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசு | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்ககைள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு பரிந்துரையினை அமுல்ப்படுத்தும் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆண்டறிக்கைகளை கோவை செய்யாத கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா. 1,529,339,000 ஆக இருந்ததுடன் அது சம்மந்தமாக நிதிப்பரமாணம் 128(2)(உ)இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023<br>2022<br>2021 | நிலுவை வருமானத்தை தனியாக அறிக்கையிடுவதற்கும் துரிதமாக அறவீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆண்டறிக்கைகளை கோவை செய்யுமாறு பணிப்பாளர் சபைக்கும் செயலாளர்களுக்கும் கடிதத்தின் மூலம் மற்றும் இணையவழி முறைமையின் கீழ் பதிவு செய்த கம்பனிகளுக்கு மின்னஞ்சல் மூலமும் செய்திகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | இன்றுவரை அறவிடப்படவில்லை. |
| 2. | 1981 இன் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் (123 ஆம் அத்தியாயம்) 8(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் கோவை செய்யப்பட வேண்டிய பதிவு செய்த 11,940 சங்கங்களிடமிருந்து ரூபா. 13,731,000 வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் | 2023 | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆண்டறிக்கைகளை கோவை செய்யாத சங்கங்களின் பெயர்களை நீக்குவதற்கு நவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கடிதம் அனுப்புதல். | இன்றுவரை அறவிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | லை. | | | | |
| 3. | கம்பனிகள் பதிவாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வைக்கு உட்பட்டு, கம்பனிகள் அதிகாரச்சட்டத்தினை மீறிய கம்பனிகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நீதிமன்ற வழக்கிற்காக முகவராக தோன்றுதல் முதலிய செயற்பாடுகளை நிறைவேற்றுகின்ற இரண்டாம் மட்ட பதவியான கம்பனிகள் பரீட்சகர் பதவிக்காக அங்கீகரித்த 10 பதவிகளில் 05 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | 2023 2022 | கம்பனிகள் அதிகாரச்சட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு அத்தியாவசியமான பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்படாமல் இருப்பதனை கவனத்தில் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்வதற்கான உத்தியோகத்தர் குழுவிற்கு அனுப்பி வைப்பதற்கான கடிதம் அமைச்சிற்கு 2024 ஆகஸ்ட் மாதம் அனுப்பி வைக்கப்பட்டது. | சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்படவில்லை. |
| 4. | திணைக்களத்தின் நடவடிக்கைகளை e-ROC கணனி முறைமையினூடாக இணைய வழியில் மேற்கொள்ளப்படுகின்ற பின்னணியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் அங்கீகரித்த 03 பதவிகளில் இரண்டு பதவிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் பதவியின் அங்கீகரித்த 06 பதவிகளில் 03 பதவிகளானது பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்தே வெற்றிடமாகக் காணப்பட்டன. | 2023 | தகவல் தொழிநுட்ப பிரிவின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு 2024 மே மாத கடிதத்தின் மூலம் வழங்கப்படாததுடன் 2024 !லை மாதம் அரசாங்க நிருவாக அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. |

தலைப்பு - 298 அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,466,181,937 | 1,466,181,937 | - | முனைப்பழியுள்ள |
| **2022** | 1,466,428,500 | 1,466,428,500 | - | முனைப்பழியுள்ள |
| **2023** | 1,470,136,819 | 1,470,136,819 | - | முனைப்பழியுள்ள |

| தொடர் இல. | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் வகையில் பொருத்தமான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 செப்தெம்பர் 06 ஆந் திகதியின் பின்னர் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023<br>2022 | கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | இன்றுவரை கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. |
| 02. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தின் அங்கீகரித்த ஆளணியினர் 19 ஆக இருந்ததுடன் இலங்கை விஞ்ஞான சேவையிலுள்ள 08 பதவிகள், இலங்கை நிருவாக சேவையிலுள்ள 01 பதவி மற்றும் | 2023<br>2022<br>2021 | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொது நிருவாக அமைச்சின் தாமதத்தின் காரணமாக சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது. மற்றும் மூன்றாம் மட்டத்திலுள்ள 25 பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு | பதவி வெற்றிடங்கள் இன்றுவரை நிரப்பப்படவில்லை. |

இலங்கை கணக்காளர் சேவையிலுள்ள 01 பதவி என்பவற்றை உள்ளடக்கிய 10 பதவிகள் அதாவது 53 சதவீதம் 2011 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது. அங்கீகரித்த மூன்றாம் மட்டத்திலுள்ள 30 பதவிகளுக்கு மத்தியில் முகாமைத்துவ சேவை உத்திரோயகத்தர் சேவையிலுள்ள (அதிவிசேடம்) 01 பதவியும் திணைக்கமாக்கப்பட்ட 04 பதவிகளும் இலங்கை தொழில்நுட்ப சேவையிலுள்ள (விசேட தரம்) 23 பதவிகயையும் உள்ளடக்கி 28 பதவிகள் அதாவது 93 சதவீதம் வெற்றிடமாகக் காணப்பட்டது.

நரடைமுறையின் இறுதிவரைபு 2024-03-22 ஆந் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் மிகுதியான 04 பதவிகள் சம்பநதமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உறுதியாக அலோசனை வழங்கப்படவில்லை என.

**தலைப்பு - 299 இலங்கை தேசீய புலமைச் சொத்து அலுவலகம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 13,251,113 | 13,251,113 | - | முனைப்பழியற்ற |
| **2022** | 13,323,415 | 13,323,415 | - | முனைப்பழியற்ற |
| **2023** | 13,228,376 | 13,228,376 | - | முனைப்பழியுள்ள |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசு | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவராண்மையிடமிருந்து (ICTA) சேர்வர் இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் 30 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொண்டு அத்திகதியிலேயே ரூபா 32.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த உடன்படிக்கையானது சேவை வழங்குனரினால் மீறப்பட்டதனால் செலுத்தப்பட்ட பணத்தை திருப்பிச் செலுத்துவதனை துரிதப்படுத்துமாறு உரிய வரிசை அமைச்சு மற்றும் தொழினுட்ப அமைச்சின் மூலம் நிதி அமைச்சின் | 2023<br>2022<br>2021 | பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2024.02.16 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் மற்றும் 2024.04.19 ஆந் திகதி வரிசை அமைச்சின் செயலாளரினால் நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. | இது வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயலாளருக்கு 2024 பெப்ரவரி 16 ஆந் திகதி வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் அறிக்கைத் திகதி வரை பணம் கிடைத்திருக்கவில்லை. அதனால் 2023 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்வர் வசதிகளை வழங்குதல் உள்ளடக்கப்பட்டிருந்தும் அதனை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | | | | |
| 2. | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக 04 ஆண்டுகள் காலமாக ஒரு நிரந்தர கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023<br>2022<br>2021 | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவிற்கு இணங்கியிருத்தல் வேண்டும். | அசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தது. | இன்று வரை உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. |
| 3. | ஆங்கீகரித்த 10 ஆக்கவுரிமை உத்தியோகத்தர் பதவிகள் திணைக்களமயப் படுத்தப்பட்ட பதவிகளாக இருந்த போதிலும் அதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்கள் புலமைச் சொத்து விடயம் தொடர்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு | 2023<br>2022 | நிறுவனத்தின் செயலாற்றலினை அடைந்து கொள்ளும் வகையில் வெற்றிடங்களை ” ரணப்படுத்துதல் வேண்டும். | வர்த்தமானியில் வெளியிடுவதற்கான பரீட்சை அறிவித்தலினை அமைச்சிற்கு அனுப்பி வைத்தல். | சிபாரிசு அமுல்ப்படுத்தப் படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயிற்சிகளுக்கு 03 சந்தர்ப்பங்களிலிருந்து 26 சந்தர்ப்பங்கள் வரையான அளவிடுதல் பங்குபற்றல் செய்யப்பட்டிருந்தும் வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இடமாற்றம் இடம்பெற்றதனால் ஆக்கவுரிமை துறை தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சியானது ஆக்கவுரிமை துறையின் மேலதிக செயலாற்றலுக்கு ஈடுபடுத்த முடியாதிருக்கும் ஆபத்து காணப்பட்டது. | | | | |
| 4. | வியாபாரக் குறிகளை பதிவு செய்தல், புதுப்பித்தல், மாற்றம் செய்தல், ஒப்படைத்தல், அனுமதி உடன்படிக்கைகள் உள்ளடங்கலாக செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்த 13 புலமைச் சொத்து உத்தியோகத்தர் பதவிகளில் 08 பதவிகள் கணக்காய்வுத் திகதியளவில் வெற்றிடமாகக் காணப்பட்டது. | 2023<br>2022 | நிறுவனத்தின் செயலாற்றலினை பாதுகாக்கும் வகையில் வெற்றிடங்கள் ” ரணப்படுத்தப்படுதல் வேண்டும். | இந்த வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதனால் பரீட்சையை நடாத்துவதற்குரிய வர்த்தமானி அறிவித்தலின் வரைபினை தயாரித்து உரிய வரிசை அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. | இன்னும் வெற்றிடங்கள் காணப்பட்டன. |

**தலைப்பு - 300 உணவு ஆணையாளர் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 4,936,914,430 | 4,936,914,430 | - | முனைப்பழியற்ற |
| **2022** | 5,018,678,671 | 5,018,678,671 | - | முனைப்பழியற்ற |
| **2023** | 5,029,112,416 | 5,029,112,416 | - | முனைப்பழியுள்ள |

| தொ. இல | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள் | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்த்தல் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் உள்ளவாறு சிபாரிசினை அமுல்ப்படுத்தும் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 28 | வாகனங்கள் சட்ட விரோதமாக பதிவு செய்யப்படல் மற்றும் மோட்டார் வாகனங்கள் பதிவிற்காக போலியான மற்றும் மோசடியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு | 2022 | கணக்காய்வில் சுட்டிக காட்டப்பட்டுளள மோசடிகள் நிகழ்ந்துள்ளவான பதிவுகள் இரத்து செய்யப்பட்டு போலியான தகவல்கள் சமர்ப்பித்த அவ் வாகனங்களின் பதிவு | இது தொடர்பாக புலனாய்வொன்று புலனாய்வு பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பல ஆண்டுகளாக கணக்காய்வு அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் 4 சந்தர்ப்பங்களின் போது மோசடியாக பதிவு செய்தல் மற்றும் போதியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ் வாகனங்களின் கைமாற்றம் தொடர்பில் மோசடியான மற்றும் போலியான ஆவணங்களை சமர்ப்பித்த தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | உரிமையாளர்களுக் கு எதிராக குற்றவியல் சட்ட விதிகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | | |
| 29 | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வான பதிவு மற்றும் அதற்குரிய விடயங்களுக்காக கடமைகளை நிறைவேற்றுவதற்கு தெவைப்படுகின்ற கணினி தரவுகள் உள்ளிடுவதற்கு அனுமதியுள்ள பயனர்களுக்கு கணினி கடவுச் சொற்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்திலிருந்து வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்ற மற்றும் ஓய்வுப் பெற்று சென்ற உத்தியோகத்தர்களு | 2022 | செயலில் உள்ள பயனர் கடவுச் சொற்களை இனங்கண்டு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்தல் வேண்டும். | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள கணினி அமைப்பிற்கு தேவைப்படுகின்ற பயனர் பெயர்கள் மற்றும் கடவுச் சொற்கள் உரிய முறைமையொன்றின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. சேவை வழங்கல் பிரிவு மற்றும் நிறைவேற்றப்படுகின்ற பணிகளுக்கு அமைவாக குறித்த உத்தியோகத்தர்களுக்கு பயனர் பெயர்கள் பெற்றுக் கொடுப்பதுடன், குறித்த உத்தியோகத்தர் குறித்த பிரிவில் இருந்து | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | க்கு கொடுக்கப்பட்டிருந்த கடவுச் சொற்களை போன்று, திணைக்களத்தில் பணி புரியும் எனினும் கடமை பணித்தலின் பிரகாரம் பயன்பாடற்ற கடவுச் சொற்கள் தொடர்ந்தும் செயற்பாட்டுடன் காணப்படுகின்றமையினால் அக் கடவுச் சொற்கள் பயன்பாடு மோசடி மற்றும் ஊழல் செய்வதற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | | | விலகின்றமை அறிக்கையிடப்பட்டவுடனே உத்தியோகத்தருக்கு உரிய பயனர் பெயர் இரத்து செய்யப்படும். பயனர் பெயர் பெற்றுக் கொடுத்தலானது பிரிவுத் தலைவர்களின் எழுத்து மூல கோரிக்கைகளின் அடிப்படையில் மட்டும் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| 30 | அரசிறை உரிமம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பெற்றுக் கொள்ளாத மொட்டார் வாகனங்கள் மீள அரசிறை உரிமங்களை கோரும் போது பிரதி ஆணையாளர் புலனாய்விடமிருந்து பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று நிபந்தனை வகுக்கப்பட்டுள்ள போதிலும், அத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அரசிறை உரிமம் வழங்கப்படுமென உறுதி செய்துக் கொள்வதற்கு உரிய வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 | பிரதி ஆணையாளர் புலனாய்வு பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் காலங்கடந்த அரசிறை உரிமங்கள் மீள வழங்கப்படுவதற்கு உறுதி செய்யப்படுவதற்கு வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் குறிப்பிடப்படவில்லை. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 31 | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக இரத்து செய்யப்பட்ட | 2022 | இரத்து செய்யப்பட்ட வாகன இலக்கங்கள் மீண்டும் | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக இரத்து செய்யப்பட்ட | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அல்லது செயவிழக்க செய்யப்பட்ட வாகன பதிவு இலக்கங்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வண்ணம் கணினிமயபபடுத்தப்பட்ட தகவல்கள் முறைமையின் ஊடாக முடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வண்ணம் கணினி முறையினை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அல்லது செயவிழக்க செய்யப்பட்ட வாகன பதிவு இலக்கங்கள் மீண்டும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாது. | |
| 32 | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களான ஆணையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள கடவுச் சொல் பயன்படுத்தி முன்னர் பதியப்பட்ட வாகனமொன்றின் அடிசட்டக இலக்கம் உள்ளடங்கலாக தரவு தளத்தினுள்ள எவையேனும் தகவல் மாற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு மாற்றப்படுகின்ற கடந்த கால தரவுகள் ஏதும் மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாத வண்ணம் முழுமையாக அழிந்து செல்வதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. | 2022 | கடந்த கார தரவுகள் ஏதும் அழியாத பிரகாரம் மற்றும் (பழைய மோட்டார் வாகனங்களின் பதிவினை மாற்றுதல் தொடர்பாக) அனைத்து தகவல்களும் மீள பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் கணினி அமைப்பினை மேம்படுத்தல் வேண்டும். | நிறைவேற்று உத்தியோகத்தர்களான ஆணையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள பயனர் பெயர் பயன்படுத்தி முன்னர் பதியப்பட்ட வாகனமொன்றில் மாற்றப்படுகின்ற எவையேனும் தகவல் குறிப்பு புத்தகமாக பெற்றுக் கொள்வதற்கு முடிவதுடன், அதன் போது ஆரம்ப தரவு மற்றும் புதிய தரவு இரண்டினையும் அவதானிக்க வசதியளிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 33 | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்திற்கு இணங்க மோட்டார் வாகன | 2023 | அத்தியவசியமான செலவுகளுக்காக மாத்திரம் அரசாங்க நிதி செலவு | சாரதி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு எதிரிபார்க்கின்ற ஒரு விண்ணப்பதார்ர் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

போக்குவரத்து திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் சாரதி பயிற்றுவிப்பாளர்கள் இல்லாது ஒரு பயிலுனர் மோட்டார் வாகனத்தை தனியாக ஓட்டுதல் சட்டதினால் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான பின்னணியில் சாரதி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளும் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த ஒரு விண்ணப்பதாரருக்கு சாரதி பயிற்சிக்காக L பலகை வழங்கப்பட்டிருந்தும் மேற்கூறிய L பலகையினைப் பயன்படுத்தி உரிய விண்ணப்பதாரருக்கு மோட்டார் வாகனம் ஓடுவதனை பயில்வதற்கு வாய்ப்பு இல்லை. எனினும் அனைத்து எழுத்துமூல பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரருக்கு L பலகையினை வழங்குதல் மற்றும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்காக L பலகையை கொள்வனவு செய்வதற்காக ரூபா 162,495,000 தொகையான அரசாங்க நிதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

செய்யப்படுதல் வேண்டும்.

எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் செயன்முறைப் பரீட்சைக்காக அண்ணளவாக 03 மாத காலம் வழங்கப்படுவதாவது விண்ணப்பதாரருக்கு தகமை பெற்ற பயிற்றுவிப்பாளரிடமிருந்து செயன்முறைப் பயிற்சியைப் பெற்று தனியாக வாகனத்தை வீதியில் ஓடுவதற்கான இயலுமையை வழங்குவதற்காகவாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது அவர்கள் சாரதிப் பாடசாலைகளுடன் தொடர்புகொண்டு உரிய பயிற்சியை பெற்றுக்கொள்கின்ற அதேவேளை தமது வாகதன்தை தகமைபெற்ற பயிற்றுவிப்பாளருடன் பயிற்சிபெறும் வாய்ப்பு உள்ளதனால் அதற்காக தேவையான ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தைக் கொண்ட எல் பலகையானது பணம் அறவிட்டு இத்திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. எல் பலகைக்காக ரூபா 162,495,000 செலவு செய்யப்பட்டிருந்தும் கட்டணத்தை அறவிட்டு வழங்குவதனால் உரிய செலவு மீளப் பெற்றுக்கொள்ளப்ப

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | டுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| 34 | வாகனங்களை அடையாளங் காணும் இலக்கத் தகடுகளை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தின் உடன்படிக்கை செய்த விலையை மீண்டும் திருத்தம் செய்தல் தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன. | | | | |
| (i) | வாகனங்களை அடையாளங்காணும் இலக்கத் தகடுகளை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட கேள்வி கோரல் ஆவணங்களுக்கு மத்தியில் கேள்விதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் தொகுப்பின் முதலாம் பிரிவிற்கு இணங்க சர்வதேச விலை கோரல் முறைமையில் விலை மனுக்கள் கோரப்பட்டது எனவும் விலை மனுக்களை இலங்கை தொலைக் காட்சியில் காண்பித்தல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க சர்வதேச விலை மனுக் கோரல்களின் மூலம் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டுள்ளதனால் மற்றும் வெற்றிகரமான கேள்விதாரர் ஜேர்மன் கம்பனியாக | 2023 | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். | வாகனங்களை அடையாளங்காணும் இலக்கத தகடுகளை வழங்கும் நிறுவனமான எக்ஸஸ் இன்டர்நெசனல் (தனி) லிமிடட்டினால் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளருக்கு விலைகளை அதிகரிக்குமாறு 2022-06-21 ஆந் திகதி சமர்ப்பித்த வேண்டுதல் சம்பந்தமாக MT/50/2022 ஆம் இலக்க 2022-08-02 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்காகத் கிடைத்த அமைப/22/1104/608/010 ஆம் இலக்க 2022-08-22 ஆந் திகதிய அங்கீகாரத்தின் மூலம் தொழில்நுட்ப | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இருக்க வேண்டும் என்பதனைப் போல் உரிய ஜேர்மன் கம்பனிக்காக உள்நாட்டு முகவர் நிறுவனம் உடன்படிக்கை செய்திருத்தல் போன்ற விடயங்களை கவனித்துப் பார்க்கும் போது சர்வதேச போட்டி விலை கோரல் முறைமைக்கு கேள்வி மனுக்களை கோரி ஒப்பந்த உடன்படிக்கை கைசாத்திடப்பட்டுள்ள செயற்படும் நிலையில் காணப்படுகின்ற உடன்படிக்கைக்காக டொலரில் செலுத்திய இலங்கை ரூபாவின் அளவு மாற்றமடைந்ததன் அடிப்படையில் உடன்படிக்கை செய்த விலைகளின் திருத்தத்திற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை. அதற்கிணங்க இந்த விலைத் திருத்தம் பெறுகை வழிகாட்டிக் கோவிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு முரணானது என அவதானிக்கப்பட்டது. | | | மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையினால் நியமித்த விலைகளை பேரம் பேசும் குழு (CANC) நியமிக்கப்பட்டது. அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை அதிகரிப்பு சம்பந்தமாக வழங்கப்பட்ட சிபாரிசின் பிரகாரம் அமைச்சரவையின் மூலம் நியமிக்கப்பட்ட விலையை பேரம்பேசுதல் குழுவின் (CANC) சிபாரிசு சமர்ப்பிக்கப்பட்டது. அச்சிபாரிசு சமர்ப்பிக்கப்பட்ட MT/123/2022 ஆம் இலக்க 2022-12-30 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்து அதற்காக அமைப/23/0023/608/002 ஆம் இலக்க 2023-01-16 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | இவ்விலை திருத்தத்தினை சமர்ப்பிப்பதற்கு முன்னர் வாகன இலக்க | 2023 | பெறுகையுடன் தொடர்புபட்ட அனைத்து தகவல்களையும் தீர்மானம் | -மேற்படி- | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

தகடுகளிலிருந்து மாகாண எழுத்தை நீக்கும் செயற்திட்டத்திற்காக வாகனங்களை ஒழுங்குபடுத்துதல், பஸ் போக்குவரத்து சேவை, மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளரின் (அபிவிருத்தி) தலைமையில் 2023 மார்ச் 14 ஆந் திகதி இராஜாங்க அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலுக்காக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் மற்றும் வழங்குனரின் உள்நாட்டு முகவர் நிறுவனத்திற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டுள்ளதுடன் அதன்போது உடன்படிக்கை செய்த இலக்கத் தகடுகளின் அளவினை வழங்குவதற்குத் தேவையான மூலப் பொருட்களுக்காக அச்சந்தர்ப்பம் வரை கட்டளையிடப்பட்டுள்ளது எனவும் மாகாண எழுத்துக்களை நீக்குவதன் மூலம் உடன்படிக்கை செய்த இலக்கத் தகடுகளின் அளவினை வழங்க முடியாது போகுமாயின் அவர்களுக்கு நட்டம் ஏற்படும் எனவும் வழங்குனர் நிறுவனத்தின்

எடுப்பதற்கு தொடர்புபடுத்துதல் வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரதிநிதிகள் குழுவிசைச் சந்தித்து தெரியப்படுத்தப்பட்டது என குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூலப்பொருட்களின் அளவினை இந்த விலைத் திருத்தத்திற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னர் வழங்குனரினால் இறக்கமதி செய்யப்பட்டுள்ளது என உறுதி செய்யப்படுகின்ற போதிலும் அது தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது விலைத் திருத்தத்திற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | | | |
| (iii) | அமைப/22/1104/608/010 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு செயற்திட்ட குழு நியமிக்கப்பட்டதுடன் 2022 நவம்பர் 22 ஆந் திகதி மேற்கூறிய குழுவின் அறிக்கை அமைச்சரவையினால் | 2023 | பொறுப்பு வகிக்கின்ற உத்தியோகத்தர் கள் தமது கடமையை சிறப்பாக நிறைவேற்றுதல் வேண்டும். | செயற்திட்ட குழுவும் அதன் செயற்பாடும் இத்திணைக்களத்தின் நோக்கெல்லைக்கு புறம்பான ஒரு விடயமாகும். அதற்கிணங்க இப்பந்திக்கான பதிலை வழங்குவது சம்பதமாக போக்குவரத்து அமைச்சின் உரிய பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நியமித்த (CANC) குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வழங்குதல் விலையை திர்மானிக்கின்ற ஏனைய எந்த விடயங்கள் தொடர்பாகவும் மதிப்பீடு செய்யப்படாது நாணயமாற்று விகிதத்தின் மாற்றத்தை மாத்திரம் கவனத்திற்கு எடுத்து குழு அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன் நாணயமாற்று விகிதத்தின் மாற்றத்தின் மூலம் வழங்கல் விடயத்தின் விலைகளுக்கான தாக்கத்தினையேனும் கணிப்பீடு செய்யாது வழங்குனருடன் கலந்துரையாடி இணங்கிக் கொண்ட விலைத் திருத்தத்தினை வழங்குவதற்கு பொருத்தமானது என திர்மானித்திருந்ததன் காரணமாக செயற்திட்ட குழு தமது பொறுப்பினை முறையாக நிறைவேற்றியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | | | |
| (iv) | அமைப/22/1104/608/010 ஆம் இலக்க 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவையினால நியமித்த விலை திருத்த குழுவிற்கு மேற்கூறிய அறிக்கையில் விலையை அதிகரித்தலினை | 2023 | பொறுப்பு வகிக்கும் உத்தியோகத்தர் கள் தமது கடமையை சிறப்பாக நிறைவேற்றுதல் வேண்டும். | -மேற்படி- | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நியாயப்படுத்துவதற்காக நடைமுறைச் சாத்தியமான தர்க்க ரீதியான விடயம் உள்ளடக்கப்படாதிருந்தும் விலை அதிகரிப்பதற்காக வழங்கனரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையினைத் தவிர வேறு எந்த ஆய்வு, மதிப்பீடு தொடர்பாக குறிப்பிடப்படாது வழங்குனருடன் இணங்கிகொண்ட மதிப்பீடாக அடிப்படை இன்றி 62.5 சதவீத விலை அதிகரிப்பு பிரேரணையினை உள்ளடக்கி 2022 நவம்பர் 29 ஆந் திகதி குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக விலை திருத்த குழு தமது பொறுப்பினை முறையாக நிறைவேற்றியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | | | |
| (v) | MT/123/2022 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தில் மேற்கூறிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவதானிப்புக்களுக்கு இணங்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2.5 ஆம் பிரிவிற்கு இணங்க விலையை அதிகரிப்பதற்கான இயலுமை உள்ளதா என சட்டமா அதிபரினை விசாரித்து ஆலோசனையைப் | 2023 | அமைச்சரவைக்கு சரியான தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். | MT/50/2022 ஆம் இலக்க 2022-08-02 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2.5 ஆம் பிரிவில் குறிப்பிட்டவாறு விலையை அதிபரிப்பதற்கு இயலுமை உள்ளதா என்பது தொடர்பாக DMT/H/DE/04/02 ஆம் இலக்க 2023-02-09 ஆந் திகதிய கடித்தின் மூலம் கௌரவ சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கேட்கப்பட்டு, | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

பெற்றுக்கொள்ளுதல் பொருத்தமானது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க விலைத் திருத்தத்திற்காக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 30 இற்கு இணங்க உடன்படிக்கையில் சட்டரீதியான ஏற்பாடு காணப்படுகின்றதா என 2023 பெப்ரவரி 09 ஆந் திகதிய DMT/11/DE/02 ஆம் இலக்க கடித்தின் மூலம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் சட்டமா அதிபரிடம் விசாரிக்கப்பட்டிருந்ததுடன் ''மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஊடக அறிவித்தலில் அடங்கியுள்ள விடயம்'' உடன்படிக்கையின் 30 ஆம் பிரிவில் உள்ளடங்கியுள்ளவை நோக்கெல்லைக்கு உரியதல்லாதது என சட்டமா அதிபரினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. எனினும் சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தினை தொடர்புபடுத்திக்கொள்ளாது விலை திருத்தத்திற்காக தேவையான ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட பிரிவினை திருத்தம் செய்து திருத்தத்திற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் திருத்திய நிபந்தனையை CL/34/2023 ஆம் இலக்க 2023-04-19 ஆந் திகதிய கடித்தின் மூலம் கௌரவ சட்டமா அதிபரின் அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்தது. எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் சம்பநதமாக கௌரவ சட்டமா அதிபரின் அபிப்பிராயமானது DMT/H/DE/04/02/05 ஆம் இலக்க 2023-07-17 ஆந் திகதிய கடித்தின் மூலம் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு செயலாளரிடம் ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை வேண்டுதல்களுக்கு இணங்க 2023-08-03 ஆந் திகதி பெருந்தெருக்கள் அமைச்சில் ஒரு கூட்டம் நடாத்தப்பட்டது. அக்கூட்டத்தின் போது கிடைத்த ஆலோசனைகளுக்கு இணங்க உடன்படிக்கையின் வரைபு தொடர்பாக சிபாரிசு வழங்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உள்ளடக்கிய வரைபு அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. | | | | |
| 35 | அமைப/16/1307/709/061 ஆம் இலக்க 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க சட்டரீதியான சுங்க நடைமுறைகளின்றி இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளின் எரிபொருள் இயலளவினை அடிப்படையாகக் கொண்டு மிகைக் கட்டணம் அறவிடுவதற்கு உட்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்தல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | | |
| (i) | அமைப/16/1307/709/061 ஆம் இலக்க 2016 செப்தெம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க சட்டரீதியான சுங்க நடைமுறைகளின்றி இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளின் எரிபொருள் இயலளவினை அடிப்படையாகக் கொண்டு மிகைக் கட்டணம் | 2023 | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தினை பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பினை தவிர்க்க முடியாத போதிலும் விசேட செயற்பாட்டின் போது கொடுப்பனவினை மேற்கொள்வதற்காக ‘‘நானாவித கொடுப்பனவுகள்’’ (Miscellaneous) முறைமையைப் பயன்படுத்துவதற்கு கணனி முறைமையில் இயலுமை உள்ளதனால் மற்றும் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு உட்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்யும் போது இன்ஜின் இயலளவு 201CC இல் இருந்து 450CC வரையிலான தொகுதியிலுள்ள 296 மோட்டார் சைக்கிள்களுக்காக அறவிட வேண்டிய குறித்த கட்டணம் அறவிடப்படாததன் காரணமாக அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா. 78 மில்லியன் வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | இச்செயற்பாட்டிற்கான அறவீட்டினையும் அந்த முறைமைக்கு இணங்க மேற்கொள்ளும் இயலுமை உள்ளதுடன் அதன் போது தொடர்பு இலக்கத்தினை தெளிவாக குறிப்பிட்டிருக்காத சந்தர்ப்பத்தில் அதனை அடையாளங் காண்பதற்கு கணனி முறைமையினுள் இயலுமை இல்லாததுடன் அதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களுக்காக அறிவிடப்பட்ட பணத்தை உறுதியாக இனங்காண முடியாது. எவ்வாறாயினும் ‘‘நானாவித கொடுப்பனவுகள்’’ (Miscellancous) நடைமுறையின கீழ் இத்தொகுதியிலுள்ள மோட்டார் சைக்கிள்களுக்காக சில அறவீடுகளை இனங்கண்டு கணனி முறைமையின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் அதற்கிணங்க அந்த அறவீடுகளானது மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் என அவதானிக்கப்பட்டது. |
| (ii) | அமைச்சரவை 2023 முறையான | | இப்பதிவு செய்தல் பரிந்துரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தீர்மானத்திற்கு இணங்க பொதுமக்களுக்கு மேற்கூறிய நிவாரணம் தொடர்பாக ஊடக வெளிப்படுத்தல் வழங்கிய 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதியிலிருந்து 04 மாத நிவாரண காலத்திற்குள் பதிவுசெய்தல் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய முடிவுறுத்த வேண்டிய திகதியான 2016 திசெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து அடுத்துவரும் 05 மாத காலம் அமைச்சரவை அங்கீகாரம் இல்லாதும் பதிவு செய்வதற்குத் தேவையான சட்டரீதியான ஆவணங்கள் இல்லாதும் 3088 மோட்டார சைக்களிசகள் பதிவு செய்யபப்பட்டிருந்தன. | | பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளதனால் அது சம்பந்தமாக தற்பொழுது எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை துரிதமாக ஆராய்ந்து பார்க்குமாறு உரிய உத்தியோகத்தர்கள் தெரியப்படுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 36 | கடந்த ஐந்து ஆண்டு காலத்தினுள் வேரஹெர உணவுச் சாலையைக் குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரரிடம் இருந்து ரூபா. 4.1 மில்லியன் நிலுவை வருமானம் மற்றும் தலைமை அலுவலகம் மற்றும் வேரஹெர வளாகத்தில் அமைந்துள்ள ஏனைய நிறுவனங்களிடம் இருந்து ரூபா. 2.5 மில்லியன் நிலுவை வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டி இருந்த | 2023 | முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு இழக்கப்பட்ட வருமானத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹெர மற்றும் நாரஹேன்பிட்டி சுற்றாடலில் அமைக்கப்பட்டுள்ள வெளி நிறுவனங்களிடமிருந்து குத்தகை / வாடகை பணத்தை முறைப்படியாக அறவீடு செய்தல் மற்றும் அரசாங்க வருமானத்திற்கு கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதிலும் அந்த வருமானத்தினை அறவிடுவதற்கு அல்லது நிலுவை வருமானமாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 37 | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் (203 ஆம் அத்தியாயத்தின்) XII ஆம் பகுதியில் அடங்கியுள்ள நிறைவுகாண் ஒழுங்குவிதி இலக்கம் 231 இற்கு இணங்க இந்த அதிகாரச் சட்டம் அல்லது ஏதாவது கட்டளையின் கீழ் வழங்கப்படுகின்ற சான்றிதழ் அனுமதிப்பத்திரம், காணாமல் போகுகையில் அல்லது அழிவடைகையில் இணைப் பிரதியினை வழங்கலாம். எனினும் அதற்கு இணக்கமற்ற வகையில் மோட்டார் வாகனத்தை பதிவு செய்யும் சான்றிதழின் இரண்டாவது பிரதியினை வழங்கி 05 ஆண்டுகளிலிருந்து 25 ஆண்டுகள் வரையான காலத்தின் பின்னர் 2023 ஆம் ஆண்டில் 19 சந்தர்ப்பங்களின் போது சத்திய பிரமாணத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல்களுக்கான பரிகாரமாக முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட மோட்டார் | 2023 | காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒரு மோட்டார் வாகனத்தின் தொடக்க பதிவு செய்தல் சான்றிதழ் அழிவடைந்த அல்லது காணாமல் போனதன் பின்னர் வழங்கப்படுவது இணைப்பிரதி என்ற போதிலும் கடந்த பல ஆண்டுகளில் மூலப் பிரதிக்குப் பதிலாக இணைப் பிரதியினை வழங்குவதன் மூலம் பல்வேறு சிக்கல்களுக்கும் மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் போது பல்வேறு கஸ்டங்களுக்கும் அதேபோல நட்ட நிலைமைகளுக்கும் மோட்டார் வாகனங்களை பதிவுசெய்யும் உரிமையாளர் முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது என போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கும் அதேபோல அவருக்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணையாளர் நாயகங்களுக்கும் பல்வேறு பொது | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாகனங்களைப் பதிவுசெய்தல் சான்றிதழின் இரண்டாம் பிரதிக்குப் பதிலாக மோட்டார் வாகனத்தை பதிவுசெய்தல் சான்றிதழின் மூலப் பிரதி வழங்கப்பட்டிருந்தன. | | | மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதற்கிணங்க இரண்டாம் பிரதியினை இணைப் பிரதியாக (Duplicate) வழங்க வேண்டாம் என வேண்டிக்கொண்ட சமூகத்தில் பேச்சுக்கள் உருவாகியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க Duplicate என்பதனை நீக்குவதற்கு உள்ள இயலுமையினை ஆராய்ந்து பார்ப்பதற்கு திணைக்களத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டு விடயங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட்டது. அதற்கிணங்க எதிர்காலத்தில் அனைத்து பிரசைகளும் உரிய மூலப் பிரதி காணாமல் போகுதல் அல்லது அழிவடைதலின் அடிப்படையில் புதிய பிரதியினை வேண்டும் போது இணைப்பிரதி என்பதனை சான்றிதழில் குறிப்பிடாது வழங்குவதற்கு உரிய சட்டரீதியான ஏற்பாட்டினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| 38 | வாகனங்களை பதிவுசெய்யும் சான்றிதழின் | 2023 | காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளின் | அவதானிப்புடன் இணங்கியுள்ளார். தடுப்பு | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| இரண்டாம் பிரதிக்குப் பதிலாக மூலப்பிரதியை வழங்கியுள்ள 06 வாகனங்கள் தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது அந்த பதிவுசெய்தல் சான்றிதழின் பிரதியை பெற்றுக் கொள்வதனை முன்னிட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 03 சத்தியப்பிரமாணங்களும் ஒரே கையொப்பம் மற்றும் ஒரே வடிவமைப்பிலும் ஏனைய 03 சாத்தியப் பிரமாணங்களும் ஒரே கையொப்பம் மற்றும் ஒரே வடிவமைப்பிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையும் இரண்டாம் பிரதியை மூலப் பிரதியாக மாற்றம் செய்சவதற்கான ஏற்பாடு உள்ளடக்கப்பட்டிருந்தமையும் அவ்வாறான அறிமுகப்படுத்தல் செய்யப்படவில்லையாயின் எந்தவொரு நபருக்கும் இரண்டாம் பிரதியை சமர்ப்பித்து மூலப் பிரதியை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் மட்டுப்படுத்தப்பட்ட நபர்களுக்கு இச்சந்தர்ப்பத்தினை வழங்குவதன் மூலம் ஏனைய இரண்டாம் பிரதீயை பெற்றுள்ள நபர்களின் மனித உரிமை | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கைகள் குறிப்பிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சவால்களுக்கு உள்ளாகியுள்ளது எனவும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் வழங்குகின்ற இதற்குச் சமமான சான்றிதழ் அல்லது அனுமதிப் பத்திரத்தின் இரண்டாம் பிரதிக்குப் பதிலாக மூலப் பிரதிகள் வழங்கப்படாமையும் ஆகிய விடயங்களின் காரணமாக இவ்வாறான இரண்டாம் பிரதிக்கும் பதிலாக மூலப் பிரதியினை வழங்கும் நடைமுறையானது நாட்டின் அடிப்படை சட்டங்களுக்கு இணங்க சட்டத்திற்கு முரணானது என அவதானனிக்கப்பட்டது. | | | | |
| 39 | பதிவுசெய்தல் இலக்கம் 32 - XXXX இனைக் கொண்ட வாகனம் நீண்ட காலமாக வருமான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளாததன் காரணமாக மீண்டும் கடந்த 20 ஆண்டுகளுக்காக வருமான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு 2023 யூலை 07 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த திகதியில் குருணாகல் மாகாண மோட்டார் வாகன திணைக்களத்திற்கு மோட்டார் வாகன ஆணையாளரின் உத்தியோகபூர்வ | 2023 | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக ஒரு புலனாய்வினை மேற்கொள்வதற்காக ஆணையாளருக்கு (புலான்ய்வு) அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முத்திரையுடன் போலி ஆவணத்தை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் மேற்கூறிய போலி ஆவணம் சம்பந்தமாக முறையான பரீட்சிப்பினை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 40 | CAW - XXXX பதிவு இலக்கத்தினைக் கொண்ட மோட்டார் வாகனம் அதன் பதிவுசெய்த உரிமையாளரினால் 2022 ஏபரல் 21 ஆந் திகதி கொகுவல, நுகேகொட பிரதேசத்தில் வசிக்கும் ஒரு நபருக்கு விற்கப்பட்டிருந்ததுடன் அனைத்து சட்ட ரீதியான ஆவணங்களும் அவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. வாகனத்தை கொள்வனவு செய்த நபர் இந்த வாகனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்காக கொகுவல பிரதேசத்திலுள்ள அவருக்குச் சொந்தமான வாகனம் விற்பனை செய்யும் இடத்தில நிறுத்திவைத்திருந்தும் மாலபே வீதி பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் ஒரு பெண்ணினால் இந்த வாகனத்திற்கு சட்டத்திற்கு முரணாக இரண்டாம் பிரதியைப் பெற்று பின்னர் வாகனத்தை | 2023 | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக ஒரு புலனாய்வினை மேற்கொள்வதற்காக ஆணையாளருக்கு (புலான்ய்வு) அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பதிவு செய்யும் சான்றிதழினை இரண்டாம் பிரதியை மூலப் பிரதி என பரிமாற்றம் செய்து போலியாகத் தயாரித்த ஆவணங்களுடன் குத்தகை கம்பனியில் நிதி வசதியினைப் பெற்றிருந்த போதிலும் போலி ஆவணங்களைத் தயாரித்தமை சம்பந்தமாக முறையான பரிசீலனையை மேற்கொண்டு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 41 | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு தீர்வை வரியின்றி இறக்குமதி செய்த பதிவு இலக்கம் KA-XXXX இனைக் கொண்ட பதிவு செய்த ஜீப் வண்டி 2011 ஆம் ஆண்டின் போது டுபாய் நாட்டிற்கு மீள் ஏற்றுமதி செய்ததன் காரணமாக பதிவு செய்தல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறிய இரத்துச் செய்த இலக்கத்தினைப் பயன்படுத்தி ஜா-எல பிரதேசத்திலுள்ள ஒரு நபருக்கு மற்றுமொரு வாகனத்தின் செஸி இலக்கம் மற்றும் இன்ஜின் இலக்கம் உள்ளடக்கப்பட்டு மோட்டார் வாகனத்தினை பதிவு செய்து செல்லுபடியான | 2023 | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தடுப்பு நடவடிக்கைகள் குறிப்பிடப்படவில்லை. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பதிவுசெய்தல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக முறையான பரிசீலினையை மேற்கொண்டு மோசடியாக செயற்பட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 42 | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒரு மோட்டார் வாகனம், ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற ஏதாவது ஒரு வாகனத்தின் மாற்றம் செய்ய முடியாத பிரதான பாகமாக வாகனத்தின் பதிவுசெய்த செஸி இலக்கம் ஒட்டப்பட்டுக் காணப்பட்டது. இதற்கிணங்க பதிவுசெய்த ஒரு மோட்டார் வாகனத்தின் செஸி இலக்கத்தினை மாற்றம் செய்து முன்னைய பதிவினை பேண முடியாதிருந்த போதிலும் முறையான செல்லுபடியாகும் நடைமுறைச் சாத்தியமான காரணங்கள் இல்லாது 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் | 2023 | துரிதமாக உள்ளக பரீட்சிப்பினை மேற்கொண்டு உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானிப்புடன் இணங்கியுள்ளார். தடுப்பு நடவடிக்கைகள் குறிப்பிடப்படவில்லை. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

பதிவுசெய்த 237 ஆம் இலக்கம் தொடர்பான செஸி இலக்கத்தினை பேணுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. செஸி இலக்கத்தினை மாற்றிய மேற்கூறிய வாகனத்தின் முன்னைய செஸி இலக்கத்தின் கீழ் பல ஆண்டுகள் வருமான அனுமதிப் பத்திரம் பெற்றிருந்தமை மேற்கூறிய வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையானது 05 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையான சந்தர்ப்பங்களில் கைமாற்றம் செய்யப்பட்டிருந்தமை சில வாகனங்களுக்காக மோட்டார் வாகன பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பாரச் சான்றிதழில் அடங்கியுள்ள தரவுகளுக்குப் பதிலாக ஏனைய தரவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை ஆகிய விடயங்களை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது மேற்கூறிய தரவு திருத்தங்களின் சட்ட ரீதியான தன்மையானது அதிக அளவில் சவாலுக்கு உட்படுகின்ற போதிலும் அது தொடர்பாக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 43 | அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் பணிப்புரையை அமுல்ப்படுத்தாமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | | |
| (i) | இலங்கை சுங்க திணைக்களத்தினால் விடுவிக்கப்படாத 07 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்தல் மற்றும் அவை தொடர்பான கோவைகளை காணாமல் ஆக்கி மோசடி செய்தமை சம்பந்தமாக 2018 பெப்ரவரி 23 ஆந் திகதி அரசாங்க கணக்குகள் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் உரிய உத்தியோகத்ரத்களுக்கு குற்றப் பத்திரம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் குற்றம் செய்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்த ஒழுக்காற்று நடவடிக்கை கோவைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | 2023 | அரசாங்க கணக்குகள் தொடர்பாக குழுவின் பணிப்புரை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். | இந்த மோட்டார் வாகனங்களுக்குரிய சுங்க கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளனவா என்பது இலங்கை சுங்கத்திடம் விசாரிக்கப்பட்டது. உரிய சுங்கவரி அறவிடப்படவில்லை என இலங்கை சுங்கத்தின் CUS/MV/RMV/02/ 2003 ஆம் இலக்க 2023-10-24 ஆந் திகதிய கடித்தின் மூலம் இத்திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது. இந்த மோட்டார் வாகனம் தொடர்பான மேலதிக பரீட்சிப்பிற்கான விபரம் சுங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த விடயங்களை புலனாய்வு செய்வதற்கும் அதனுடன் தொடர்புபட்ட பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங் கண்டு அறிக்கையிடுவதற்குமாக எனனால் பதவிநிலை உத்தியோகத்தரின் தலைமைத்துவத்தில் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன் உப அறிக்கை தற்பொழுது கிடைத்துள்ளதுடன் அதில் குறிப்பிட்ட விடயங்களும் இறுதி அறிக்கையினை சமர்ப்பித்ததன் பின்னர் அதன் மூலம் அடையாளங் காணப்பட்டுள்ள பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | பதிவு இலக்க தகட்டினை மீளப்பெற்று மேற்கூறிய வாகனம் பெருந்தெருக்களில் ஓடுவதனைத் தவிர்ப்பதற்கு மேற்கூறிய வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு, ஒப்படைக்க முடியாததவையாக எதிர்ப்பினை கோவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க கணக்குகள் குழுவின் விசாரணைகக்கு உட்பட்ட மேற்கூறிய 07 வாகனங்கள் சம்பந்தமாக ஒப்படைப்பு தடைகள் வழங்கப்பட்டிருந்தும் மற்றும் நிறுவன மட்டத்தில் பரீட்சிப்பும் மேற்கொண்டிருந்த அதேவேளை அவற்றில் ஒரு | 2023 | அரசாங்க கணக்குகள் தொடர்பாக குழுவின் பணிப்புரை அமுல்ப்படுத் தப்படுதல் வேண்டும். | தற்பொழுது இந்த வாகங்களை ஒப்படைப்பதற்கு முடியாத வகையில் எதிர்ப்பு கோவை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே மேற்கூறிய (i) ஆம் பந்தியில் குறிப்பிட்ட குழுவின் அறிக்கையின் சிபாரிசில் குறிப்பிடப்பட்ட உரிய வாகனப் பதிவினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாகனத்தை 2021 எப்ரல் 04 ஆந் திகதி மற்றுமொரு நபருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்க கணக்ககள் குழு பணிப்புரைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 44 | சட்ட ரீதியான சுங்கத் தீர்வைகள் செலுத்தப்படாது இலங்கை சுங்கத் திணைக்களத்தின் மூலம் விடுவிக்கப்படாத மற்றும் மோசடியாக இறக்குமதி செய்யப்பட்ட 02 அதிசொகுசு மோட்டார் வாகனங்கள் மற்றும் 04 மோட்டார் சைக்கிள்கள் சுங்க திணைக்களத்தில் இதுவரை விடுவிக்கப்படாத கொள்கலன்களுக்குரிய CBHQ 1 498224 ஆம் இலக்க முழுமையாக விடுவிக்கப்படாத சுங்க குறிப்பேட்டினைப் பயன்படுத்தி பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்து மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்தல் மற்றும் பதிவு செய்வதற்கு முயற்சி செய்தல் சம்பந்தமாக சுங்க திணைக்களத்துடன் ஒன்றிணைந்த பரீட்சிப்பினை மேற்கொண்டு மேற்கூறிய | 2023 | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபனவிதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது சம்பந்தமாக புலனாய்வு செய்வதற்காக பதிவிநிலை உத்தியோகத்தரின் தலைமையிலான ஒரு குழுவின் மூலம் புலனாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அதன் உப அறிக்கை தற்பொழுது ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் இறுதி அறிக்கையின் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகருக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சட்டத்துக்கு முரணான பதிவு செய்தலினை இரத்துச் செய்து நிர்ணயிக்கப்பட்ட சுங்க வரியினை அறவீடு செய்வதற்கும் சட்டரீதியாக முயற்சி எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 45 | ஈ மோடரிங் செயற்திட்டம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | | |
| (i) | ஈ மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துதல் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைக் கட்டணங்களை திருத்தம் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனம் மற்றும் அது தொடர்பாக அமைச்சரவை நியமித்த உத்தியோகத்தர் குழு அறிக்கைக்காக வழங்கப்பட்டுள்ள அமைப/23/0952/608/011-1 ஆம் இலக்க 2023 யூன் 13 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட 3(1) மற்றும் 3(2) பிரேரணைகள் சம்பந்தமாக மேற்கொள்ள | 2023 | உடன்படிக்கை செய்த வழங்குனருடன் ஈ மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக அமைச்சரவையிடமிருந்து உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். | இது சம்பந்தமான பெறுகை நடைமுறை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்படுவதுடன் உரிய கட்டிடத்தினை வாடகைக்குப் பெற்றுக் கொள்வது தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேண்டிய செயற்பாடுகளை முடிவுறுத்தாது உடன்படிக்கை செய்த வழங்குனருடன் ஈ - மோடரிங் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றதா அதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமாகவிருந்தால் ஒரு கொடுக்கல் வாங்கல்களுக்காக செலுத்திய கட்டணம் எவ்வளவு என்பது தொடர்பான உறுதியான இணக்கப்பாடு இன்றி ஈ-மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக கங்காராம விகாரையில் ஒரு சதுர அடி ரூபா 98 வீதம் 10,000 சதுர அடியினை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இது சம்பந்தமாக இறுதித் திர்மானம் எடுக்கப்படவில்லை என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டது. | | | | |
| (ii) | ஈ - மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்டுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது மெட்ரோபொலிடன் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதுடன் உடன்படிக்கைக்கு இணங்க ஒரு | 2023 | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு மற்றும் அமைச்சரவை திர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஈ - மோடரிங் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஒரு கோவைக்கு ரூபா 187.97 இற்கு மேலதிகமாக கட்டிடத்தின் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கா | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | கோவைக்கு ரூபா 187.97 ஆன போதிலும் தற்பொழுது வரை ஒரு கோவைக்கு செலுத்தப்படுகின்ற ரூபா 187.97 இற்கு மேலதிகமாக இன்னும் ரூபா 646 வீதம் (ஒரு மாதத்திற்கு 60,000 பதிவு செய்தலாக கருதி 05 ஆண்டுகளுக்காக ) ரூபா 2,325,600,000 (646X 60000X 12X5) செலுத்தி உடன்படிக்கை செய்த நிறுவனத்துடன் செயற்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்ற போதிலும் மேற்கூறிய தீர்மானம் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கும் அமைச்சரவை தீர்மானத்திற்கும் இணக்கமற்றது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இது சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு தெரியப்படுத்தப்பட்டது. | ன செலவுகள் இதுவரை மதிப்பீடு செய்யப்படவில்லை. |
| 46 | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மாத்தறை கிளையில் சாரதி அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் நடைமுறை மற்றும் வழக்கமான நிருவாக | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கைகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | | |
| (i) | சாரதி அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்காக சித்தியடைய வேண்டிய எழுத்துமூல பரீட்சைக்காக பட்டியல்படுத்தப்படாத 18 விண்ணப்பதாரர்கள் மற்றும் எழுத்துமூல பரீட்சை திகதியில் பங்குபற்றாமையின் காரணமாக பரீட்சை குறிப்பு பதிவேட்டில் சமூகமளிக்கவில்லை என பதியப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என போலியான பெறுபேற்றினை உள்ளடக்கியும் எழுத்துமூல பரீட்சையின் போது எந்த புள்ளியையும் பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரர் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் என போலியான பெறுபேற்றினை உள்ளடக்கியும் பதிவேட்டினை நாளதுவரயையாக்கி செயன்முறைப் பரீட்சைக்கு அனுப்புவதற்கும் செயன்முறைப் பரீட்சையின் இறுதியில் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தினை வழங்கவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2023 | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாத்தறை அலுவலகத்தில் பிரதான மோட்டார் வாகன பரீட்சகரினூடாக இது தொடர்பான புலனாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் சந்தேகத்திற்குரிய மற்றும் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான அனைத்து கோவைகளும் அவர்களால் பரீட்சிக்கப்பட்டது. அதற்கிணங்க உரிய ஒழுங்கீனத்துடன் தொடர்புபட்ட அலுவலக உத்தியோகத்தரின் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டது. இது தொடர்பான புலனாய்வு இன்னும் இடம்பெற்று வருகின்றது. | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | சாரதி அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்காக சித்தியடைய வேண்டிய செயன்முறைப் பரீட்சைக் கு பயட்டியல்படுத்தப்பட ாத 10 விண்ணப்பதாரர்கள் மற்றும் செயன்முறைப் பரீட்சைக் சமூகமளித்திருக்காத தன் காரணமாக பெறுபேற்று பதிவேட்டில் சமூகமளிக்கவில்லை என பதியப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் , செயன்முறைப் பரீட்சை பதிவேட்டில் உரிய பரீட்சையில் சித்தியடையவிலை என தகவல் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தர் மற்றும் செயன்முறைப் பரீட்சை பதிவேட்டில் எந்தக் குறிப்பும் உள்ளடக்கப்படாத ஐந்து விண்ணப்பதாரர்களுக் கு செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார் கள் என போலியான தரவுகளை உள்ளடக்கி செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2023 | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபன கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | -மேற்படி - | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | சாரதி அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்காக தேவையான எழுத்துமூல பரீட்சைக்கு தோற்றியி ருக்காத | 2023 | துரிதமாக உள்ள பரீட்சிப்பினை மேற்கொண்டு தாபன கோவையின் பிரகாரம் | -மேற்படி - | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எனினும் எழுத்துமூல பரீட்சை நடைபெற்ற திகதியில் அத்திகதியில் பயன்படத்தப்படாத பரீட்சை இலக்கங்களையும் போலியான பெறுபேற்றினையும் உள்ளடக்கி ஒரு விண்ணப்பதாரருக்கு செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன் எழுத்துமூல பரீட்சை, செயன்முறை பரீட்சை ஆகிய இரண்டு பரீட்சைகளுக்கும் தோற்றியிருக்காதிருந்தும் மேற்கூறிய பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளார்கள் என போலியான தகவல்களை உள்ளடக்கி சாரதி அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. | | ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | | |
| 47 | இராணுவ படையினால் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்திருந்தமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | | |
| (i) | மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் | 2023 | மோட்டார் வாகன | முப்படைகளின் மோட்டார் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டி |

| | | | |
|---|---|---|---|
| 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வாகனங்களை புதிதாக பதிவு செய்வதற்காக MT - 2 படிவத்துடன் வாகனத்தை சுங்கத்திலிருந்து விடுவிக்கும் போது வழங்கப்பட்ட ஆவணங்கள், சுங்க கட்டணத்தை செலுத்திய பற்றுசீட்டின் மூலப்பிரதி மற்றும் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் வாகனமாயின் உரிய இன்வொயிஸ் போன்ற வாகனத்திற்குரிய மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விசேட நிறுவனங்களுக்கு அல்லது விசேட நபர்களுக்கு மேற்கூறிய ஆவணங்கள் இன்றி வாகனங்களை புதிதாக பதிவு செய்வதற்காக மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தில் ஏற்பாடு உள்ளடக்கப்படவில்லை. எனினும் முன் பதிவுகள் இல்லாது முப்படைகள் பயன்படுத்தி கேள்வி நடைமுறைகளின் பின்னர் சிவில் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள 63 வாகனங்கள் அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்திற்கு இணக்கமற்ற | அதிகாரச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் பிரகாரமான ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதாக இருந்த போதிலும் இறக்குமதி செய்த ஆவணங்களும் தொடர்புபட்ட ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதனால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாகனங்கள் பெருந்தெருக்களில் ஓடுவதற்காக முப்படைகளை அடையாளப்படுத்தும் தொகுதி இலக்கத்துடன் ஒரு இலக்கத்தினைப் பயன்படுத்துவதற்கு மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் பிரகாரம் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க பொதுவாக உள்நாட்டில் பயன்படுத்துகின்ற வாகன பதிவு செய்தலுக்கான ஒழுங்குவிதியானது மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் விசேட நிறுவனங்களுக்கு (முப்படைகள்) மற்றும் விசேட நபர்களுக்காக (சனாதிபதி, பிரதம மந்திரி) மேற்கூறிய ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பாக மோட்டார் வாகன அதிகாரச் சட்டத்தின் 238 ஆம் அத்தியாயத்தின் பிரகாரமான ஏற்பாடுகளை சட்டத்தின் 203 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வாகனங்கள் பதிவு செய்தல்களாக MTA - 02 உடன் அல்லாது வாகனத்தின் உரிமையை மாற்றுதல் / ஒப்படைத்தலாக | ருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வகையில் மேற்கூறிய அடிப்படை நடைமுறைகளின்றி 325 இலக்க தொகுதியின் கீழ் பதிவு செய்து உரிய சிவில் நபர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | | | வாகனத்தை ஒப்படைக்கும் போது பயன்படுத்துகின்ற MTA - 06 மற்றும் MTA - 08 உடன் ஏனைய துணை ஆவணங்களை சமர்ப்பித்ததன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க வாகனங்களை ஒப்படைக்கும் போது வாகனங்களை சுங்கத்திலிருந்து விடுவிக்கையில் வழங்கப்படுகின்ற ஆவணங்கள், சுங்க கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உரிய இன்வொயிஸ்களைச் சமர்ப்பித்தல் அத்தியவசியமற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | முப்படைகளினால் காலத்துக்குகாலம் கேள்வி கோரி விற்பனை செய்கின்ற வாகனங்கள் தொடர்பான விபரம் பொறுப்புக்கூற வேண்டிய பிரதான உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிப்பதுடன் ஒரு சிவில் நபர் முப்படைகளிலிருந்து கொள்வனவு செய்த ஒரு வாகனமாக பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்ற | 2023 | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிவுசெய்தல் இலக்கங்களுக்குரிய இத்திணைக்களத்தின் கணனி விபரத்தின் பிரகாரம் இந்த அனைத்து மோட்டார் வாகனங்களும் இராணுவம், ஆகாய மற்றும் கடற்படைகள் முதலாவது பதிவுசெய்த உரிமையாளராக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க இந்த மோட்டார் வாகனங்கள் இராணுவ விமான மற்றும் கடற்படைகளின் மூலம் ஏலத்தில் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் விண்ணப்பத்தில் குறிப்பிட்ட வாகனத்தின் விபரம் மேற்கூறிய கேள்வி கோரி விற்பனை செய்த வாகனம் தொடர்பான விபரத்துடன் பரீட்சித்து மேற்கூறிய வாகனம் முப்படைகளால் கேள்வி கோரி விற்பனை செய்த வாகனமா என்பது சான்றுபடுத்தப்படுகின்றது. எனினும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கோவைகளுக்கு இணங்க முப்படைகளால் அனுப்பி வைத்துள்ள கேள்வி கோரல் விபரத்தடன் பொருந்தியிருக்காத மற்றும் கேள்வி விபரங்களின் மூலம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்குத் தெரியப்படுத்தாத முப்படைகளின் 40 வாகனங்கள் 325 இலக்க தொகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய வாகனங்களின் பதிவுசெய்தல் தவல்களை உள்ளடக்கிய தொடக்க கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் என தொடக்கமாக இணங் காணலாம். 2011 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை இராணுவ விமான மற்றும் கடற்படைகளின் மூலம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்கு முன்னர் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் உரிய படைத் தொகுதியிடம் விசாரித்து தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க இந்த மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்கு முன்னர் இராணுவ விமான மற்றும் கடற்படையின் மூலம் கேள்வி கோரி விற்கப்பட்டது என்ற உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | முப்படைகளின் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் கையொப்பத்தோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்ட 08 வாகனங்கள் தொடர்பாக கேள்வி கோரப்பட்ட திகதிக்கு முன்னைய திகளிகளின் போது மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுசெய்து சிவில் நபர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க முப்படைகளின் ஏல விற்பனைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனமாக ஏனைய வாகனங்களும் பதிவு செய்யப்படும் ஆபத்து உருவாகியிருந்தது. | 2023 | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இலங்கை இராணுவ, விமான மற்றும் கடற்படைகளின் மூலம் மோட்டார் வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்து வழங்குகின்ற ஆவணங்களில் அந்த மோட்டார் வாகனம் இராணுவப்படைக்கு பயன்பாட்டிற்காக எடுத்த திகதியை உள்ளடக்கிய தகவல்களைக் கொண்ட ஆவணம் வழங்கப்படுகின்றது. அந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு பதிவு செய்தலுக்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் இடம்பெறுகின்றது. அதன் போது இராணுவப் படை பயன்பாட்டிற்காக ஈடுபடுத்திய திகதி அல்லது இராணுவப் படையின் மூலம் கேள்வி கோரி விற்கப்பட்ட திகதி அல்லது இந்த வாகனத்தை பரீட்சித்து பாரச் சான்றிதழ் (CMT 75) வழங்கிய திகதி முதலாவது பதிவுசெய்த திகதியாகக் கருதப்படுகின்றது. மேலும் 325 ஆம் இலக்க தொகுதியினை வழங்குவதற்கான தரவுகளை உள்ளடக்குகையில் பதிவு செய்தல் திகதியாக தரவுகள் உள்ளடக்கப்படுகின்ற திகதி கணனியின் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

மூலம் தானாகவே (Auto) பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இத்திகதியானது தரவுகள் Confirm செய்த பின்னர் பதிவு செய்தல் சான்றிதழினை அச்சிடுவதற்கு முன்னர் மாற்றம் செய்யலாம். அச் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு மறதி ஏற்பட்டிருக்குமாயின் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு திகதிகளில் வித்தியாசங்கள் காணப்படலாம். இதற்கிணங்க கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தவறு இடம்பெற்றுள்ளதற்கான காரணம் உரிய திகதிகளில் சரியாக தரவுகளை உள்ளடக்குவதற்காக ஈடுபடுத்தாமை என தெரிகின்றது. இத்தவறினை சரிசெய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எப்போதும் எடுக்கப்படுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க 325 ஆம் இலக்க தொகுதியை வழங்கும் போது தொடக்க பதிவுசெய்தல் திகதியை தெரிவுசெய்தலானது சிக்கலான நிலைமைக்கு மாறியுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இதனால் தொடக்க பதிவுசெய்தல் திகதிக்கும் ஒப்படைத்தல் திகதிக்குமிடையே வித்தியாசத்தினைக் காணலாம். கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ள இப்பிழையை சரிசெய்வதற்காக அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய 3/2024 ஆம் இலக்க 2024-03-12 ஆந் திகதிய உள்ளக சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | |
| (iv) | முப்படைகளால் முன்னைய பதிவின்றி பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் கேள்வி நடைமுறையின் பின்னர் சிவில் நபர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் அந்த வாகனங்கள் கேள்வி கோரப்பட்ட திகதிக்கு முன்னைய திகதிகளின் போது மேற்கூறிய வாகனங்களின் தொடக்க பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என நிரூபிக்கப்படும் வகையில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமைக்கு போலியான தரவுகளை உள்ளடக்கி முப்படைகளால் கேள்வி கோரப்பட்ட 29 வாகனங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு | 2023 | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | -மேற்படி- | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தன. | | | |
| (v) | முப்படைகளால் 2023 கேள்வி கோரப்பட்ட வாகனங்களின் செஸி இலக்கத்தினை பரீட்சித்த போது முப்படைகளால் தனிப்பட்டவர்களுக்கு கைமாற்றப்பட்டுள்ள 04 செஸி இலக்கங்களுக்காக அச்செஸி இலக்கத்திலேயே பல வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. அதற்கிணங்க ஒரே இலக்கத்தில் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தமை, சரியான செஸி இலக்கம் மற்றும் போலியான செஸி இலக்கம் என்பதனை அடையாளங் காணுதல், முப்படைகளால் கேள்வி கோரப்பட்ட வாகனங்களை உறுதிப்படுத்துதல் என்பவற்றிற்காக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பரீட்சிப்புக்கள் இடம்பெற்றிருக்கவில்லை. | துரிதமாக உள்ளக பரீட்சிப்புக்களை மேற்கொண்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பழைய எண் தொகுதியின் கீழ் உழவு இயந்திரம் இழுவை பெட்டி, கை உழவு இயந்திரம் ஏனைய நில வாகனங்களைப் பதிவு செய்யும் போது முழுமையான செஸி இலக்கம் பயன்படுத்துவதில்லை என அவதானிக்கப்பட்டது. எனவே செஸி இலக்கத்தின் தொகுதியில் ஒரு பகுதி நீக்கப்பட்டு இலக்கத்தில் ஒரு பகுதி மாத்திரம் பயன்படுத்தப்பட்டு பொதுவாக பதிவு செய்தல் இடம்பெற்றுள்ளது. இந்த இலக்கத்தின் பகுதியானது நான்கு இலக்கங்கள் அல்லது ஐந்து இலக்கங்களைக் கொண்டதாகும். ஒரு தொகுதியின் கீழ் 9500 அளவிலான மோட்டார் வாகனங்கள் (மொத்தம் 13 இனை தவிர்த்து) பதிவு செய்யப்படுவதனால் இந்த நான்கு இலக்கங்கள் போதுமானதல்ல அதனால் ஒரே செஸி இலக்கத்தில் பல நில வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கலாம். கணனியின் உதவியின்றி மோட்டார் வாகனங்களை பதிவு செய்த | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | காலத்தில் இவ்வாறு ஒரு செஸி இலக்கத்தின் கீழ் பல மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யக்கூடியதாகக் காணப்பட்டது. அதற்கிணங்க இவ்வாறு ஒரே செஸி இலக்கத்தில் கை உழவு இயந்திரம் அல்லது உழவு இயந்திரம் இழுவை பெட்டிகள் சில பதிவு செய்யப்பட்டிருத்தல் வழக்கமானதாகும். எனினும் நிகழ்காலத்தில் ஆங்கில எழுத்துக்களை பதிவுசெய்யும் போது இவ்வாறான பிழைகள் ஏற்படமாட்டாது. | |
| 48 | அரசாங்க நிறுவனங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள், முப்படைகள் அல்லது நிதி நநிறுவனங்களினால் ஏதாவது ஒரு பதிவு செய்த வாகனத்தினை எச்சப்பொருளாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது நீக்கப்படும் வாகனத்தின் பதிவுசெய்த சான்றிதழினை மோசடியான செயற்பாடுகளுக்கு தொடர்புபடுத்துவதனைத் தவிர்ப்பதற்காக அனைத்து வாகன எச்சங்களும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்தலினை இரத்துச் செய்து | 2023 | பதிவு செய்த வாகனத்தை எச்சப் பொருளாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது நீக்கப்படுகின்ற வாகனத்தின் பதிவினை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முப்படைகளின் மூலம் எச்சப் பொருளாக விற்கப்பட்ட வாகனங்களுக்காக ஒரு மோட்டார் வாகனமாக விற்கப்பட்டது என்ற உறுதிப்படுத்தல் இத்திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் இடம்பெறுவதில்லை. கணக்காய்வின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் இவ்வாறு எச்சப்பொருளாக விற்கப்பட்டுள்ள வாகனங்களின் செஸி இலக்கத்திற்கு இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேவையான சட்டரீதியான மற்றும் செயன்முறையான ஒரு கட்டமைப்பு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொண்டு இதற்கு தேவையான சட்டரீதியான மற்றும் நடைமுறை ரீதியான கட்டமைப்பினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 49 | வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு முழுமையான இலத்திரனியல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கிய அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | | |
| (i) | தொழில்லாளர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு வழங்கிய 02/2022 ஆம் இலக்க பிரதான சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தி மற்றும் 02/2022 (i) ஆம் இலக்க 2022-09-09 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு வெளிநாட்டில் பயன்படுத்தப்படாத | 2023 | சுங்க குறிப்பேட்டிற்கு மேலதிகமாக ஏனைய இறக்குமதி ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து பயன்படுத்தப்படாத வாகனமா என்பதனை உறுதி செய்தல் வேண்டும். | ஒரு மோட்டார் வாகனத்தை பதிவுசெய்வதற்காக இலங்கை சுங்கத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள CUSTOM 53, ASSESMENT NOTICE மற்றும் இலங்கை சுங்கத்தின் மூலம் இத்திணைக்களத்திற்கு பரிமாற்றம் செய்யப்படுகின்ற மோட்டார் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| 6 | 2023 ஆம் ஆண்டில் மத்திய, ஊவா மற்றும் கிழக்கு ஆகிய 3 மாகாணங்களிற்காக பிரதேச பௌதீக திட்டம் தயாரிப்பதற்காக திட்டமிடப்பட்ட போதிலும், 2023 | 2021<br>2022<br>2023 | திட்டமிட்ட பிரகாரம் பௌதீக திட்டங்கள் தயாரித்து சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவியணியனரின் பற்றாக்குறை காரணமாக இந்த திட்டத்தை தயாரித்தலை திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ள முடியவில்லை. | 2024 ஆண்டிலும் பூர்த்தி செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் இறுதிவரையும் எவ்வித திட்டங்களினதும் பணிகள் பூரத்தியாக்கப் பட்டிருக்காததுடன் மத்திய மாகாத்தில் உனர்சி மிக்க சுற்றாடலிற்காக ஆலோசனை கோவையொன்றை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இதுவும் செய்யப்பட்டு இருக்கவில்லை. முகாமைத்துவத்தின் பலவீனமாக மேற்பார்வை இதற்கு காரணமாக இருந்தது. இதன் காரணமாக திட்டமொன்று இன்றி பொருத்தமற்ற நிர்மாணம் மற்றும் பொது வசதிகள் முறையாக இல்லாமை சுற்றாடல் பிரச்சனைகள் ஏற்பட காரணமாக இருந்தது. | | | | |
| 7 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகார பதவியணியினர் 291 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 165 ஆக இருந்ததால் 126 வெற்றிடங்கள் நிலவியது. இது உரிய காலப் பகுதியில் திணைக்களத்தினால் செய்யப்பட வேண்டியிருந்த பௌதீக திட்டத்தை தயாரிப்பதற்கு இயலாமைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. | 2021<br>2022<br>2023 | திணைக்கள பணிப்பொறுப்பை மேற்கொள்ள போதிய பதவியணியினர் பேணப்பட வேண்டுமென. | பௌதீக திட்டம் தயாரிப்பதுடன் தொடர்புடைய உதவி பணிப்பாளரின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. | 2024 ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்டு இருக்கவில்லை. |
| 8. | 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச | 2023 | விரைவில் நிலஅளவை அறிக்கையை | காணிகளிற்காக பிரதேச செயலாளரிடம் | செய்யப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்குகள் வழிகாட்டலின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்கள் முறையாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு சொந்தமான 06 காணிகள் மற்றும் 04 கட்டிடங்களின் உரிமையாண்மையை சுவீகரித்து பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | | பெற்றுக்கொண்டு மதிப்பீடுகள் மேற்கொண்டு கணக்கீடு செய்ய வேண்டுமென. | இருந்து நிலஅளவை திட்டம் மற்றும் உரிமை உறுதிகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உரிமை கிடைத்த பின்னர் மதிப்பீடு செய்யப்படும். | |
| 9. | திணைக்களத்திற்கு சொந்தமான பத்ரமுல்ல தியவன்ன உத்யான மாவத்தையில் அமைந்துள்ள 2015 ஆம் ஆண்டு ரூபா 5,160,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 104 இலக்கம் கொண்ட உத்தியோக பூர்வ இல்லம், 2017 ஆம் ஆண்டு முதல் ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததுடன் திணைக்களத்தின் ஏனைய தேவைபாட்டிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது விளைவற்ற சொத்தாக பேணப்பட்டிருந்தது. | 2021 | திணைக்கள சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இக்காலப்பகுதியின் உத்தியோகபூர்வ இல்லங்களிற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்படாததுடன் எதிர்காலத்தில் உரியவாறு ஒதுக்கப்பட முடியுமென. | பயனடபாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. |

**தலைப்பு - 320 சிவில் பாதுகாப்புத் திணைக்களம்**

| | மொத்த சொத்துக்கள ரூபர் | மொத்தப் பொறுப்புக்கள ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 3,036,737,319 | 439,079,386 | 2,597,657,934 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,018,104,412 | 229,980,938 | 2,788,123,473 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,384,204,629 | 84,984,184 | 2,299,220,445 | முனைப்பழியுள்ள |

| தொ இல் | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்விற்கு உட்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கை | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்பாட்டு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | திணைக்களத்தினால் மன்னாரிலுள்ள கொண்டச்சி பிரதேசத்தில் 1,200 ஏக்கர் நிலப்பரப்பில் 27,000 மர முந்திரிகை மரங்களை உள்ளடக்கிய மர முந்திரிகை பயிரிடல் செயற்திட்டத்தை பேணி வருகிறது. முன்னைய 05 ஆண்டுகளுக்கான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பிடும் போது செலவினம் வருமானத்தை ரூபா 10.6 மில்லியனால் விஞ்சியிருந்தது. இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 180 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கான செலவினங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டால் நட்டம் மேலும் அதிகரிக்கும் என அவதானிக்கப்பட்டது. காட்டு யானைகளிடமிருந்து பயிர்ச் செய்கையைப் பாதுகாப்பதற்காக 120 சிவில் பாதுகாப்புப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர், மேலும் 14,700 முந்திரிகை மரங்கள் | 2021 | பயிரிடுதல், அறுவடை செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயன்முறையை முறையாக முகாமை செய்து செலவினங்களைக் குறைத்து எதிர்பார்த்த நலன்களை அடைந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், | எதிர்காலத்தில் பயிர்ச்செய்கையை சுற்றிலும் மின்வேலியை அமைப்பதற்கும், இலக்கமிடப்படாத முந்திரிகை மரங்களுக்கு இலக்கமிடுவதற்கும், அறுவடை செயன்முறையை முறையாக மேற்பார்வை செய்வதற்கும், போதிய களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கொண்டாச்சி மர முந்திரிகை செயற் திட்டத்தில் உள்ள அனைத்து மர முந்திரிகை மரங்களுக்கும் இலக்கம் போடப்பட்டு முடிவடைந்துள்ள துடன் 27,152 மர முந்திரிகை மரங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. மர முந்திரிகை செயற்திட்டக் காணி இலங்கை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி என்பதனால் திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளினால் நிரந்தர கட்டிடம் அமைக்க முடியாததால் மர முந்திரிகைப் பயிரை சேமித்து வைக்க நிரந்தர களஞ்சியக் கட்டிடங்கள் அமைக்க முடியாது என தெரிவிக்கப்பட்டது. அறுவடை, உலர்த்துதல் மற்றும் சேமித்து வைக்கும் போது ஈர எடை மற்றும் உலர் எடை குறித்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாத்திரமே எண்ணப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், அறுவடை மற்றும் பதிவு செய்யும் செயன்முறை முறையான மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்பட்டதுடன் அறுவடையை களஞ்சியப்படுத்துவதற்கு போதுமான களஞ்சியப்படுத்தல் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | | | தனித்தனியாக பதிவேடுகள் வைத்து பதிவுகள் பராமரிக்கப்பட்டு, தற்போது மர முந்திரிகை திட்டத்தை மர முந்திரிகை கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பதற்கான ஆலோசனைகள் நடந்து வருகிறது. |
| 2. | மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் சௌபாக்கிய தொலைநோக்கு கருத்திற்கு ஏற்ப விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், நிர்மாண மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 17.67 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 18.37 மில்லியன் தொகை திணைக்களத்தின் கெபிட்டி கொல்லாவிலுள்ள படையணி அலுவலகத்தினால் பராமரிக்கப்படும் 20 ஏக்கர் காணியில் மிளகாய் பயிர்ச் செய்கைக்காக பசுமை வீடு ஒன்றை ஆரம்பீப்பதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. அந்தச் செலவினங்கள் முறையான சாத்தியவள ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டதா | 2021 | முறையான சாத்தியவள ஆய்வை மேற்கொண்ட பின்னரே செயற் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் தற்போது 20 ஏக்கர் தொடர்பாக திட்டத்தை தயாரிக்காமல் பரீட்சார்த்த செயற்திட்டமொன்றாக இவ்வாறு பெறப்பட்டுள்ள உருப்படியை உயர் இயலளவில் பயன்படுத்தக் கூடிய வகையில் மிளகாய் பயிர்ச்செய்கை திட்டம் 04 ஏக்கர் பரப்பளவில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதுபோன்ற செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படும் போது முறையாக திட்டமிடப்பட்ட பின்னரே சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக | முதன் முறையாக ரூபா 19,737,736 வருமானம் கிடைத்ததுடன் அதன் பிறகு ஆரம்ப செய்கை முடிந்து 2024 ஆம் ஆண்டு மீண்டும் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு தற்போது பராமரிக்கப்பட்டு வருவதால் இதுவரை ரூபா 3,736,695 வருமானம் கிடைத்துள்ளது. இத்திட்டம் எதிர்காலத்தில் அதிக வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும் என்றும் மேலும், எதிர்காலத்தில் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்துவது முறையாக திட்டமிடப்பட்டு, சாத்தியக்கூறு ஆய்வுக்குப் பிறகு தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும் திட்டங்கள் சாத்தியவள ஆய்வுகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ல் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த முடியாமல் தோல்வியடைந்திருந்தது. | | | | இல்லாமல் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| 3. | 11 கோவைகளின் கீழ் ரூபா 17.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டு பசுமை இல்லம் (Green House) ஒன்றில் மிளகாய் பயிரிடுதல் செயற்திட்டத்திற்காக பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகையின் போது கேள்விகளை திறத்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகளை வழங்குதல், பெறுகைக் குழுவின் தீர்மானங்களை வழங்குதல் மற்றும் பொருட்களை கட்டளையிடுதல் போன்ற பெறுகை நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் பொருட்கள் களஞ்சியங்களால் பெறப்பட்டிருந்தன. கொள்வனவை மேற்கொண்ட பின்னர் கணக்காய்வை தவறாக வழிநடாத்தும் வகையில் சட்டப்பூர்வத்தன்மைய சரிபார்ப்பதற்கு போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. பெறுகைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததால், ரூபா 3.23 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவை மேற்கொண்டு நான்கு கோவைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் | 2021 | பெறுகை வழிகாட்டல்களை மேற்கொள்ளும் போது அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் பின்பற்றப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கௌரவ சனாதிபதியின் அறிவுறுத்தலின் பிரகாரம் குறித்த செயற்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்துமாறு வழங்கப்பட்டிருந்ததால் உத்தியோகத்தர்கள் அதற்கிணங்க செயற்பட்டுள்ளனர். இந்த நடைமுறை சரியானது அல்ல என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது, மேலும் இது போன்ற நிலைமை காலக்கிரமத்தில் இடம்பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. கொரோனா பரவல் காரணமாக பல வணிக வளாகங்கள் திறக்கப்பட்டிருக்கவில்லை, ஆகையால் சந்தை விலைகளை கள ஆய்வு மூலம் பரீட்சித்து குறைந்த விலைக்கு வழங்கிய வழங்குநர்களிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்தனர். அதன் பின்னர் பெறுகை நடைமுறைக்காக ஆவணங்கள் பெறுகை பிரிவுக்கு அனுப்பப்பட்டதாக. | தற்போது அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் வழிகாட்டல் கோவைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

உபகரணங்கள் பயன்படுத்தப் படாமலேயே ஓராண்டு காலப்பகுதிக்கு மேலாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனால் இயந்திரங்கள் மற்றும் மின்சாரப் பொருட்களின் ஒரு வருட உத்தரவாதக் காலப்பகுதி பயன்படுத்தப்படாமல் காலாவதியாகியிருந்தது. விலை ஒப்பீட்டு முறையின் கீழ் கொள்வனவு செய்யும் போது பெறப்பட வேண்டிய ஆகக்குறைந்த விலை விபரங்களின் எண்ணிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கையிருப்பின் கீழ் ரூபா 2.78 மில்லியன் தொகையில் 02 Rotavators ஐ கொள்வனவு செய்த போது ஒரு உறுப்பினரால் கேள்வி திறக்கப்பட்டிருந்ததுடன் விபரக் குறிப்புரைகளுக்கு இணங்க குறைந்த விலை கேள்விதாரர் நிராகரிக்கப்பட்டது, அதன் மூலம் ரூபா 1.98 மில்லியன் அதிக கேள்விப் பெறுமதியின் கீழ் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 5 மில்லியன் தொகை செலவிடப்பட்டு Insect Proof Net வலைகளை கொள்வனவு செய்த போது தாய்வான் மற்றும் இஸ்ரேலில் இருந்து விபரக்குறிப்புரைகளின்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தேவைப் பாடுகளைப் பூர்த்தி செய்த ஆகக்குறைந்த விலைகளின் கீழ் இரண்டு உற்பத்திப்பொருட்கள் நியாயப் படுத்தப்படாமல் நிராகரிக்கப்பட்டு அதிக விலைகளின் கீழ் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 3.75 மில்லியன் செலவில் கட்டிட மூலப்பொருட்கள் மற்றும் தெளிப்பு இயந்திரங்களை கொள்வனவு செய்த போது ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 4. | கதிர்காமத்தில் ஏனைய உத்தியோகத்தர்களுக்கான விடுமுறை விடுதி கட்டிடத்தை தொழிலாளர் கிரயத்தை தவிர்த்து ரூபா 11.13 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு முன் உள்ளூராட்சி சபையின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்கவில்லை. அங்கீகாரம் கிடைத்தவுடன், கட்டிடத் திட்டம் பல சந்தர்ப்பங்களில் அங்கீகாரம் பெறப்படாமல் திருத்தப்பட்டிருந்தது. இப்பிரிவுக்குள் இருந்தே ரூபா 2 மில்லியன் பெறுமதியான கட்டிட மூலப்பொருட்களை வழங்குவதற்குப் பதிலாக அதற்கு அரசாங்க நிதிகள் செலவிடப்பட்டிருந்தன. பெறுகை வழிகாட்டல்களின் | 2021 | உள்ளூராட்சி அதிகாரசபையின் முன் அங்கீகாரத்துடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட வேண்டும். பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் தொடர்பாகவும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். நிர்மாணப் பணிகள் தொழில்நுட்ப மற்றும் பொறியியலாளர் வழிகாட்டலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். தொழில்நுட்ப பரிந்துரைகளின் | பின்னர் பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. ஆரம்ப திட்டத்தில் சிறிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. உள்ளூரில் கிடைத்த மூலப்பொருட்களை வழங்குவதற்கு பிராந்திய அதிகாரிகளின் இணக்கப்பாட்டை தெரிவித்திருக்கவில்லை. எதிர்காலத்தில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கும், கோவைகள் மற்றும் ஆவணங்களை முறையாக பேணுவதற்கும், வழிமுறைகளை முறையாக பின்பற்றுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் படையின் | இக்கட்டிடமானது சமயம் சார்ந்த நிதியம் மற்றும் அரச சார்பற்ற நலன்புரி நிதியினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் ,தற்காக பின்னர் உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. கட்டிடத்தின் குறைபாடுகளை பூர்த்தி செய்யப்பட்டன. எவ்வாறாயினும், கணக்காய்வு பரிந்துரைகளின்படி, தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நிர்மாணமானது ஒரு பொறியாளர்.˙.நிபுணரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன். கணக்காய்வு மூலம் அவதானிக்கப்பட்டுள்ள விடுமுறை விடுதி |

பிரகாரம் பொதுப் போட்டி கேள்வி செயன்முறையைப் பின்பற்றாமல் கட்டிட மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், நிர்மாணங்கள் தொடர்பான அத்தியாவசிய ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு கோவையில் இடப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் எடை குறித்த வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல்களை பெற்றுக் கொள்ளாமை மற்றும் பழைய அடித்தளத்தின் ஒரு பகுதியை பயன்படுத்தியமை மற்றும் கட்டிடத்தின் பாரத்தை தாங்குதல் தொடர்பான பொறியியலாளரின் ஆலோசனை அல்லது வழிகாட்டல்கள் பெற்றுக் கொள்ளமையால் நிர்மாணங்களின் போது 4 அடி உயரத்தில் பல செங்கல் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு கட்டிடத்திற்கு வெளியே சாய்ந்திருந்ததால் அந்த சுவர்கள் அகற்றப்பட்டு, அதற்கான வலுவூட்டப்பட்ட தூண்களின் மீது மீண்டும் சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டு சமநிலை பீம்கள் கட்டப்பட்டன. அவ்வாறு இழந்த உழைப்பு மற்றும் மூலப்பொருட்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்தச் சூழ்நிலையால்

அடிப்படையில் கட்டிட மூலப்பொருட்கள் தெரிவுசெய்யப்பட வேண்டியதுடன் முறையான பூர்த்தி செய்தலுடன் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்

உழைப்பைக் கொண்டு உருவாக்கப்பட்டன, மேலும் அவர்களில் பலர் தொழில் பயிற்சிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தரப்பினராக இருந்தமையால் குறித்த குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. எனினும், குறைபாடுள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மற்றும் நீர் கசிவுகள் உள்ள இடங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு தொடர்பாக திருத்த நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்பில் பாதுகாப்பு அமைச்சினால் விசாரணையும் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்மாணக் கிரயம் நூறு சதவீதத்தால் அதிகரித்து, கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைவதற்கு நீண்ட காலம் எடுத்தது. பதப்படுத்தப்பட்டு உலர்த்தப்பட்ட பலகைகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்குப் பயன்படுத்தப்படாமையாலும், திறமையற்ற ஊழியர் பயன்படுத்தப்பட்டதாலும் பல கதவுகள் மற்றும் ஜன்னல்களை சீராக மூடுவதில் சிரமத்துடன் சிதைவடைந்திருந்தன. கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மூடப்பட்ட பின்னர் இடைவெளிகள் அவதானிக்கப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மரத்தின் தரம் தொடர்பான தொழில்நுட்ப அறிக்கை மூலம் உறுதிப்படுத்தலொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. குளியலறைகள் மற்றும் பல இடங்களில் நிலக்கற்கள் ஒட்டுதல் சரியாக மேற்கொள்ளப்படாததால், நீர் கசிந்து கொண்டே இருந்தது. | | | | |
| 5. | 3,300 சிவில் பாதுகாப்பு சிப்பாய்கள், மின்சார வேலியை (யானை வேலி) பராமரிப்பதற்காகவும் காட்டு யானைகளை விரட்டுவதற்கு 845 சிப்பாய்களும், வனசீவராசி அலுவலகங்களில் 389 | 2021 | மனித - யானை மோதலில் ஈடுபட்டுள்ள ஒட்டுமொத்த பணியாளர்களையும், அரசாங்கத்தின் மொத்த செலவினங்களையும் கருத்தில் | எமது திணைக்களத்திற்கும் வனசீவராசிகள் திணைக்களத்திற்கும் இடையில் மின்சார வேலியை பராமரிப்பது தொடர்பில் ஒருங்கிணைப்பு தொடர்பான | சிவில் பாதுகாப்பு திணைக்களம் வனசவராசிகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அதன் தேவைகளின் அடிப்படையில் படையினரை வழங்குவதாகவும், அந்நடவடிக்கைகளை |

சிப்பாய்கள் உட்பட 4,534 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, இதுவரை அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளின் மொத்த நீளம் 4,756 கிலோமீற்றராகும், மேலும் 99 சதவீதத்திற்கு சமமான 4,725 கிலோமீற்றர் நீளம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் பராமரிக்கப்படுவதற்காக கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரண்டு திணைக்களங்களும் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகின்றன, சேவைகள் எவ்வாறு பரஸ்பரம் வழங்கப்படுகின்றன மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யும் முறை என்பன குறித்து பொதுவான உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. காட்டு யானைகளை விரட்டுவதற்கு சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக ரூபா 427 மில்லியன் வருடாந்த கிரயம் செலவிடப்பட்டு 845 சிப்பாய்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் அந்த சிப்பாய்கள் அது தொடர்பாக சரியான பயிற்சியை பெற்றிருக்கவில்லை. மேலும், காட்டு யானைகளை துரத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு பணியாளர்களை கண்காணிப்பதற்கு சிவில் பாதுகாப்பு திணைக்களம் அல்லது கொண்டு, மனித - யானை மோதலால் ஏற்படும் உயிர் மற்றும் உடைமை இழப்புகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும

உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு தடவைகள் நினைவூட்டப்பட்ட போதிலும் இதுவரை திகதியொன்று இன்னும் வழங்கப்பட்டிருக்கவில்லை. சிப்பாயகளுக்கு முறையான பயிற்சி அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளோம். காட்டு யானைகளை விரட்டுவதற்கு வனவிலங்கு அதிகாரிகளுக்கு மாத்திரமே எமது பணியாளர்கள் உதவுகிறார்கள், தற்போது மனித-யானை மோதலால் ஏற்படும் இறப்புகள் குறைந்துள்ளதாக வனவிலங்கு தரவுகளின் பிரகாரம் தெரிகிறது.

ள வனசீவராசிகள் திணைக்களம் நடவடிக்கைகளை முழுமையாக மேற்பார்வையிடுவதாகவும் தயவுடன் தெரிவிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில், ஆனையிறவுக்கு 4,534 சிவில் பாதுகாப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர், ஆனால் தற்போது அந்த எண்ணிக்கை 3,881 ஆகக் குறைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் 4,756 கி.மீ ஆக யானை வேலிகள் பல்நோக்கு உறுப்பினர்களை அனுப்பியதால், யானைகளின் எண்ணிக்கை 2,111.05 கி.மீ. ஆக குறைந்துள்ளது.

வனசீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உரிய முறையில் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. அவர்களுக்கு போதிய உபகரணங்கள், ஆயுதங்கள், பட்டாசுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2010 முதல் 2020 வரையான காலப்பகுதியில் இலங்கையில் மின்சார வேலிகள் அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 1.64 பில்லியன் கூட்டுமொத்தமாக உள்ள அதேநேரம் 2016-2020 காலப்பகுதியில் மின்சார வேலிகளை பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் உள்ளடங்கலாக மொத்தம் ரூபா 1.16 பில்லியன் செலவிடப்பட்டிருந்தது. குறித்த காலப்பகுதியில் மனித - யானை மோதலினால் 989 பேரும் 3,646 யானைகளும் உயிரிழந்துள்ளன. முன்னைய ஆண்டுகளிற்கு எதிராக சமீபத்திய ஆண்டுகளில் மனித உயிர் இழப்புகள் அதிகரித்துள்ளன, ஆனால் சிவில் பாதுகாப்பு பணியாளர்களால் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியவில்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. | திணைக்களங்கள் அலுவலகங்கள், உத்தியோகபூர்வ விடுதிகள், தங்குமிடங்கள் மற்றும் களஞ்சியங்களை பராமரிப்பதற்கான கட்டிடங்களின் தேவைப்பாடு தொடர்பான நீண்டகாலத் திட்டத்தை திணைக்களம் கடைப்பிடிக்கத் தவறியதால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமான 130,769 சதுர அடி மற்றும் 2,000 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட 128 கட்டிடங்கள் தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டிருந்தன. சில கட்டிட வளாகங்கள் திணைக்களத்தின் செலவினத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. | 2021 | கட்டிடங்களின் தேவைப்பாடு கண்டறியப்பட்டு நீண்ட கால திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும்.. | அந்த கட்டிடங்களின் தேவைப்பாடு குறித்து மீளாய்வு செய்து எதிர்வரும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போது, திணைக்களத்தை மறுசீரமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தை எடுத்த பிறகு, நீண்ட கால கட்டிடத் தேவைகள் குறித்து திட்டம் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. |
| 7. | சேவா வனிதா சங்கத்தினால் திணைக்களத்தின் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு excise புத்தகங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக கந்தளாய் படையணி அலுவலகத்திலிருந்து 239 பணியாளர்களை ஈடுபடுத்தியிருந்ததுடன் மொத்த சம்பளம் தொடர்பாக ரூபா 45.1 மில்லியன் கூட்டுமொத்த கிரயம் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகை திணைக்களத்திற்கு மீள்நிரப்பு | 2021 | சம்பளம் தொடர்பான குறித்த கிரயத்தை திணைக்களத்திற்கு மீள்நிரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டிற்காக பயிற்சிப் புத்தகங்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக திறந்த சந்தையில் இருந்து கொள்வனவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. | திருகோணமலை படையணியில் 2013 முதல் 2019 வரை நடைமுறைப்படுத்தப் பட்டது. அந்த காலப்பகுதியில் அந்த திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட படையினர் தமக்கு வழங்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக இத்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டு கடமைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு முழுநேர வேலைத்திட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில் லை. | | | | ல என தெரிவிக்கப்பட்டது. கணக்காய்வின் பரிந்துரைகளின் படி, 2021 முதல், திட்டம் நிறுத்தப்பட்டு, சேவா வனிதா பிரிவு மூலம் திறந்த சந்தையில் இருந்து பயிற்சி புத்தகங்கள் வாங்கப்பட்டு சிவில் பாதுகாக்கு திணைக்கள உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது. இது துறைசார்ந்த நலன்புரி விவகாரம் என்பதால், திட்டத்தில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பள செலவான ரூபா 45.1 மில்லியன் தீர்ப்பதற்கு முறை இல்லை என்றும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டது. |
| 8. | 2022 ஆம் ஆண்டில், காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து திணைக்களத்திற்கு பெறப்பட்ட சேதனஉரங்கள் உற்பத்தி தொடர்பான 11 இயந்திரங்கள், 5000 லீட்டர் தண்ணீர் தாங்கிகள் 06, பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற 07 இயந்திரங்கள், டிஜிட்டல் அளவுகோல் மற்றும் கிரீஸ் பம்ப்பொன்று மீளாய்வாண்டின் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் சேர்க்கப்படவில்லை. | 2022 | சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கையேகப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள 31 காணிகள் மற்றும் அங்குள்ள கட்டிடங்களின் பெறுமதிகளைக் கணக்கீடு செய்வதற்கு தேவையான மதிப்பீட்டு பெறுமதிகளை பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | அறிக்கை திகதி வரை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக் க வில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) மிஹிந்தலை படைத் தலைமையகத்திற்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 2021 திசெம்பர் 14 ஆம் திகதி இயந்திர ரீதியில் நட்ட இழப்பொன்று ஏற்பட்டிருந்தது. அந்த நட்ட இழப்பைத் திருத்துவதற்கு ரூபா 1.06 மில்லியன் செலவேற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது துடன், இந்த இழப்பு தொடர்பான ஆரம்ப கட்ட அறிக்கையொன்று 07 நாட்களுக்குள் வெளியிடப்படாத துடன், 2023 மார்ச் 31 2023 வரை கூட முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணத்தில் பரிந்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அறிக்கைகளைப் பெறுவதற்கு உளளக நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது டன் குழுலின் பரிந்துரையின் பிரகாரம் செயற்பட்டு எதிர்காலத்தில் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 10. | கால்நடை விவசாய மற்றும் ஏனைய, இசை மற்றும் நடனம், பாதுகாப்பு சேவைகள், நிர்மாணம் மற்றும் பராமரிப்பு சேவைகள் போன்ற வருமானங்களில் இருந்து திணைக்களம் ஒவ்வொரு வருடத்திலும் வருமானத்தினைச் சேகரிப்பதுடன், மீளாய்வாண்டும் அந்த வருமான மூலங்களில் இருந்து மொத்தம் ரூபா. 1,547.8 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. வருடாந்தம் ஈட்டப்படும் இந்த வருமானத்தினைக் கணக்கீடு செய்வதற்கு அரச நிதி கொள்கை திணைக்களத்திடம் | 2023 | வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகள் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் தற்போது இந்தத் திணைக்களத்தினை மீளமைப்பு செய்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது என்பதனால் மற்றும் அது தொடர்பான திட்டம் | வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புகள் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போது இந்தத் திணைக்களத்தினை மீளமைப்பு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதனால் மற்றும் அது தொடர்பான திட்டம் தயாரிக்கப்படுகின்ற |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வினவி தனியான வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | | | தயாரிக்கப்படுகின்றது என்பதால், வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் நடைமுறையில் சாத்தியமல்ல என்பதைத் தெரிவிக்கின்றேன். | து என்பதால், வருமானத் தலைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் நடைமுறையில் சாத்தியமல்ல என்பதைத் தெரிவிக்கின்றேன். |
| 11. | 2022 ஜூன் 12 ஆம் திகதி ரூபா 720,000 ஆன தொகைக்கு சிவப்பு பச்சையரிசி 4,500 கிலோ கிராம் மற்றும் ரூபா 480,000 ஆன தொகைக்கு வெள்ளை பச்சையரிசி 3,000 கிலோ கிராம் தியத்தலாவை இராணுவ முகாம் பயிற்சிப் பாடசாலைக்கு விற்பனை செய்ததன் மூலம் உஹன படையணிக்கு கிடைக்க வேண்டிய ரூபா. 1,200,000 தொகையும், 2022 திசெம்பர், 2023 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களில் மஹஓயா படையணி அங்கத்தவர்களுக்கு வெள்ளை உருண்டை அரிசி 12,014 கிலோ கிராம் விற்பனை செய்தமைக்காக இராணுவ சேவை வனிதையர் பிரிவின் மூலம் மகாஓயா படையணிக்கு கிடைக்க வேண்டிய ரூபா. 1,063,047 ஆன தொகை மற்றும் வெலிசரை படையணி, 2021, 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் நெல், தானியம் மற்றும் ஏனைய படையணி உற்பத்திகளுக்காக | 2023 | அனைத்து செயற்திட்ட வருமானங்களும் நாளதுவரையாக் கப்பட்டு சரியாக கணக்குகளில் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் சரியாக இனம் காணப்பட்டு அறிக்கையிடுவதற்கு த் தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான ஏடு நாளதுவரையாக்கப்ப ட்டு தகவல் ஒழுங்கமைப்பு ஒன்றினைப் பேணுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கின்றேன். | படையணிக்கு தீர்க்கப்பட வேண்டிய தொகை இதைவிடக் குறைவு எனவும், கணக்காய்வுக் கண்காணிப்பின் படி 01 கிலோ சிவப்பு மற்றும் வெள்ளை அரிசிக்கு 1.72 கிலோ நெல்லும், 01 கிலோ சம்பா மற்றும் நாடு நீராவிக்கு 1.67 கிலோ நெல்லும் செலவாகும். அதன் பிரகாரம் அக்காலப்பகுதியல் அதற்காக செய்யப்பட்டுள்ள சில மீதிகள் தற்போது தீர்வு செய்யபடப்டுள்ளதாக வும். வெலிசர முதல் படையணி வரையிலான தொகையானது சுமார் ரூபா 27 மில்லியன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள து. தியதலாவ இராணுவ முகாமுக்கு விற்பனை செய்யப்பட்ட அரிசிக்கான பணத்தை பெற்றுக்கொள்வததற் கும், பிரசோதனையொன் று இடம் பெற்றுள்ளதுடன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை அரசாங்கத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா. 62,758,801 ஆன தொகையும் கிடைக்க வேண்டியதாக இருந்ததுடன், அந்த கிடைக்க வேண்டிய மொத்த தொகையான ரூபா. 65,021,848 செயற்திட்டப் பிரிவினால் இன் காணப்பட்டு அறிக்கை இடப்படாத காரணத்தால் 2023 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், அதற்கு அமைய நிலுவை வருமானத் தொகை அந்த அளவினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | | | விசாரணையின் பின்னர் பணத்தைத் தீர்ப்பதற்கும் திணைக்கள சபையொன்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், படையணிக்காக பெற்றுக்கொண்ட குறித்த அரிசிக்காக அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன்துடன் . அந்த அறிக்கை தொடர்பாக, பாதுகாப்பு செயலாளரின் அறிவுறுத்தல்களைப் பெற்ற பின்னர், பொறுப்பான நபர்களிடமிருந்து அறவீடுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. |
| 12. | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலுவை வருமானத்திலிருந்து முறையே ரூபா. 122,000, ரூபா 274,000 மற்றும் ரூபா. 147,000 என நிலுவையாக இருந்த ரூபா. 543,000 ஆன வருமானம் பல்வேறு காரணங்களினால் நிறுவனத்தினால் அறவிடப்பட முடியவில்லை எனத் தெரிவித்து நிலுவை வருமான மீதிகளில் குறைக்கப்பட்டு காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வருமானத்தினை நீக்குதல் அல்லது | 2023 | நிலுவை வருமானத்தினை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் வருமானத்தினை பதிவழிப்பதாயின் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நிலுவை வருமானமாகக் காட்டப்பட்டிருந்த அறவிடப்பட முடியாத மீதிகள் நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரம் வருமானத்தினை நீக்குதல் அல்லது கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தேவையான அறிவுரை தற்போது வழங்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | வருகை ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தங்களை முறையாக ஆய்வு செய்யாமல் விலைப்பட்டியல்களை வழங்குவதால் நிலுவை வருமானம் என காட்டப்பட்டுள்ளதற்கான காரணமாக இருந்தது. அலுவலக தாமதப் பிழை என்பதால், 2023 இன் நிலுவை வருமானத்தில் இவை காட்டப்படவில்லை, எனவே நி.பி 113 இன் பிரகாரம் இந்த ஆண்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கைவிடுதல் நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | | செயல்பட முடியாது என்றும், இந்த பெறுமதிகள் 2024 இன் நிலுவை வருமானமாக காண்பித்து நி.பி 113 இன் படி அந்த ஆண்டில் பதிவழிப்பதற்கான சாத்தியத்தை சரிபார்க்கவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| 13. | மீளாய்வாண்டு இறுதியில் உரிமையைப் பெற்றுக் கொண்டிருந்த 11 ஹெக்டேயர் பரப்பளவினைக் கொண்ட 21 காணித் துண்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | மதிப்பீடு செய்யப்பட்டு சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | சுட்டிக் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் காணிப் பெறுமதி அல்ல என்பதுடன், குறித்த வளாகத்தில் காணப்படும் கட்டடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி என்பதைச் சுட்டிக் காட்டுகின்றேன். அந்த பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்காக சமர்ப்பிக்கும் போது 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | 2024 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதாக |
| 14. | போக்குவரத்துப் பிரிவிலிருந்து வழங்கப்பட்டிருந்த அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 134,124,000 பெறுமதியான 58 வாகனங்கள் | 2023 | அனைத்து வாகனங்களினதும் பெறுமதி சரியாக நிதிக் கூற்றுகளில் உள்ளீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் | இந்தக் கணக்காய்வு அவதானிப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 58 வாகனங்களிடையே, 43 வாகனங்கள் தொடர்பான கணக்கீடு செய்தல் 2024 ஆம் ஆண்டின் | 43 வாகனங்கள் தொடர்பான கணக்கீடு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய மீதிகளை விரைவில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடாந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ACA 6 கூற்றில் உள்ளீடு செய்யப்பட்டிருக்காததுடன், அதற்கு அமைய அந்தத் தொகையினால் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் கருவிகளின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | வேண்டும். | இரண்டாம் காலாண்டு நிறைவடைவதற்கு முன்னர் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனைய வாகனங்கள் தொடர்பில் பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கணனி முறைமைக்கு உள்ளடக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| 15. | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய திணைக்களத்துக்குச் சொந்தமாக 341 துவிச்சக்கர வண்டிகள் உள்ளன எனக் காட்டப்பட்டுள்ள போதிலும் அந்த துவிச்சக்கர வண்டிகளின் பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | துவிச்சக்கர வண்டிகளின் பெறுமதிகளைச் சரியாகக் கணக்குகளில் உள்ளீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | சபையொன்றின் மூலம் திணைக்களத்தின் துவிச்சக்கர வண்டிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 16. | 2022 ஆம் ஆண்டில் ஆதனம், பொறிகள் மற்றும் கருவிகளின் பெறுமதி ரூபா. 2,314,614,772 ஆக உள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் பெறுமதி ரூபா. 1,761,457,769 ஆகும். அதற்கு அமைய ரூபா. 553,157,003 இனால் அந்தப் பெறுமதி குறைவாக இருந்ததுடன், அந்த வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு | 2023 | அனைத்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய சரியான பெறுமதி கணக்குகளில் உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும். | கணினி ஒழுங்கமைப்பினுள் குறைவாக உள்ளீடு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகள் சொத்துக்கள் கணினி ஒழுங்கமைப்பிலிருந்து அகற்றப்பட்டு, பௌதீக மீதி மீண்டும் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. எனினும் அவ்வாறு ஒப்பாய்வு செய்யப்பட்ட பௌதிக மீதி அனைத்தையும் கணினி முறைமைக்குள் காலப் பகுதியினுள் | இதுவரை கணினி முறைமையினுள் உள்ளீடு செய்யப்பட்டுள்ள மீதிகள் 62 சதவீதமாக இருப்பதாகவும் சரி செய்யப்பட்ட எஞ்சிய மீதிகளை விரைவில் கணனி முறைமையில் உள்ளீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | | | உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. அந்த முரண்பாடே இந்த அவதானிப்பிற்குக் காரணமாக இருந்தது என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். திருத்தப்பட்ட ஏனைய மீதிகளை விரைவில் கணினி முறைமையில் உள்ளீடு செய்யப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| 17. | **கடன் மற்றும் முற்பண ஏடு**<br><br>2017 ஜூலை 05 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 256/2017 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் மற்றும் முற்பண ஏட்டினைத் தயாரித்திருக்காததுடன் கணணி விரிதாள் துணையுடன் கடன் மீதி மற்றும் அறவீடுகள் குறித்துக் கொள்ளப்பட்டிருந்தது.<br>. | 2023 | 2017 ஜூலை 05 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 256/2017 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சி.சி. 10 படிவம் மற்றும் அந்த படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண ஏடு என்பன தயாரிக்கப்படுதல் வேண்டும். | திணைக்களத்தின் CC10 கடன் ஏடு மற்றும் முற்பண ஏடு என்பன கையினால் (Manual) பேணப்பட்டு செல்லாமல் இருந்ததுடன், கணணி விரிதாள் உதவியுடன் கடன் மீதி மற்றும் அறவீடுகள் குறித்துக் கொள்ளப்படுகின்றன. அதற்கு காரணமாக உள்ளது சுமார் 32,000 ஐ அண்மித்த நபர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளமையே என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br>எதிர்காலத்தில் CC10 கடன் ஏடு, பி பேரேடு என்பவை உள்ளடங்கிய கணனி மென் பொருளைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. | சி.சி. 10 படிவம் மற்றும் அந்த படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண ஏடுகள் தயாரிக்கப்படவில்லை ல. |
| 18. | நிதிக்கூற்றுகளில் நிலுவை வருமானம் | 2023 | நிலுவை வருமானங்கள் | வழக்கு தொடுத்தல், நிறுவனங்களுடன் | CML - MTD |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்பான அறிக்கைக்கு அமைய பாதுகாப்பு சேவை மற்றும் செயல் திட்டங்கள் மூலம் சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வு ஆண்டு இறுதியில் ரூபா. 133,700,136 திணைக்களத்துக்கு கிடைக்க வேண்டி இருந்தது. அதில் பாதுகாப்பு சேவைக்காக ரூபா. 11,143,453 கிடைக்க வேண்டி இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த வருமானத்தினை அளவிடத் திணைக்களம் தவறி 01 வருடம் தொடக்கம் 06 வருடத்திற்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தது. | | விரைவில் அறவிடப்படுதல் வேண்டும். | கலந்துரையாடுதல் போன்ற நடவடிக்கைகள் தீர்வு செய்வதற்கு காணப்படும் நிலுவை மீதிகள் தொடர்பில் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | Construction Ltd இடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8,844,478.13 நிலுவைத் தொகை குறித்து நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் புகார் அளிக்கப்பட்டது. அறவிடக்கூடிய அனைத்து வருமானங்களும் இப்போது அறவிடப்பட்டுள்ளன. எஞ்சிய வருமானத்தை அறவிடுவது தொடர்பில் குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. |
| 19. | நிதிப் பிரமாணம் 103 தொடக்கம் நிதிப் பிரமாணம் 110 பிரகாரம் பொலனறுவை படையணியில் 2023 ஆம் ஆண்டில் NLDB விவசாய செயற் திட்டத்தில் நெல் மற்றும் சோள பயிர்ச் செய்கை சேதமடைந்தமை, பொலனறுவை படையணியின் கீழ் உள்ள மாங்கேனி மர முந்திரிகை செயற்திட்டத்தில் மர முந்திரி பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்டிருந்து மொஸ்பிலான் கிருமி நாசினி 100 கிராம் கொண்ட 2,603 பைக்கட்டுகள் 2023 ஜூலை மாதமளவில் காலாவதியாகி இருந்தமை, | 2023 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்ப டுதல் வேண்டும். | இந்த கணக்காய்வு அறிக்கை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு செயற்திட்டம் மற்றும் சிவில் நிர்வாகப் பிரிவுகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தற்போது அவதானிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட உள்ளக விசாரணை சபையால் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டிரு ந்ததுடன், அந்த அறிக்கை கிடைத்த உடன் பாதுகாப்பு அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள து. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொலனறுவை படையணியில் நாடு நெல் 20,019 கிலோ கிராம் தொகை குறைவாக இருந்தமை மற்றும் அம்பாறை படையணியின் கீழ் உள்ள லாஊஹகல கரங்கோவ 2022/2023 பெரும் போகத்தில் நெல் பயிர்ச் செய்கை சேததமடைந்தமை போன்ற சேதங்களை இனங்கண்டு அவற்றுக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு அவை ஏடுகளில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 20. | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் திணைக்களத்தினால் மரணம் அடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் முறையே 56 பேர்களுக்கு மற்றும் 37 பேர்களுக்குக் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த சம்பளம் ரூபா. 1,107,463 உம் மற்றும் அந்தக் காலப் பகுதியிலே சேவையினைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் 85 பேருக்குக் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா. 1,914,647 உம் ஆன சம்பளங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்குத் தவறி இருந்தது. | 2023 | சம்பளக் கொடுப்பனவு தொடர்பில் உள்ளக நிர்வாகத்தினை உறுதிப்படுத்த வேண்டிய மற்றும் கூடுதலாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மரணமடைந்த மற்றும் ஓய்வு பெற்றுச் சென்று உத்தியோகத்தர் களின் இறுதி மாத சம்பளம் இவ்வாறு வங்கியில் இடப்பட்டிருந்ததுடன், அந்தத் தொகை அவர்களது ஓய்வூதிய மரண பணிக்கொடை தொகையிலிருந்து அறவிடப்பட்டு எதிர்காலத்தில் இந்தத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைய அந்தத் தொகை படிமுறையாக அறவிடப்படுகின்றது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | 2024 செப்தம்பர் 30 ஆந் திகதி சேவையை விட்டு வெளியேறிய 85 பேரிடமிருந்து ரூபா 633,451 தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய மீதி ரூபா 1,281,196 தொகை ஆகும். 2024 செப்டம்பர் 30 இல் ரூபா 356,256.75 தொகை ஓய்வு பெற்ற/இறந்த 93 நபர்களிடமிருந்து அறவிட்பட்டது. அறவிடுவதற்கான மீதமுள்ள தொகை ரூபா 751,206 ஆகும். மீதம் அறவிட வேண்டிய தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | தலைமையகத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டிக்கு 2022 செப்டம்பர் 17 ஆம் திகதி "ஹன்னஸ்கிரிய பிரதேசத்தில் என்ஜின் அமைப்பில் ஏற்பட்ட சேததினால் ரூபா. 323,000 நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த நட்டத்தினை உரிய தரப்பினரிடம் இருந்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | நட்டத்தினை உரிய தரப்பினரிடம் இருந்து தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மீண்டும் ஆரம்ப விசாரணை செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதால், மேற்கொள்ளப்பட்டிருந்த விசாரணை அறிக்கை புலனாயய்வுப் பிரிவிடம் அனுப்பப்பட்டுள்ளது. | நட்டம் தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| 22. | வெலிசரை உப படையணியின் மூலம் பேணப்பட்டு வந்த விசேட அரிசி செயற்திட்டத்தில் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக 07 படையணிகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நெல், தானிய வகைகள் மற்றும் ஏனைய படையணி உற்பத்திகளுக்கு உரியதான ரூபா. 62,758,801 ஆன தொகை இலங்கை அரசாங்கத்திற்கு தீர்க்கப்பட வேண்டி இருந்த போதிலும், 2024 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும் அந்தத் தொகை தீர்க்கப்படாது இருந்ததுடன் அந்த பெறுமதியினைத் தீர்ப்பதற்கு போதியளவு நிதி அல்லது அரிசி இருப்பும், வெலிசரை அரிசி செயற்திட்டத்திடம் காணப்படவில்லை. | 2023 | விரைவில் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | அமைச்சு மட்டத்தில் சபையொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | படையணிக்கு தீர்க்கப்பட்பட வேண்டிய தொகை இதைவிடக் குறைவு எனவும், கணக்காய்வுக் கண்காணிப்பின் படி 01 கிலோ சிவப்பு மற்றும் வெள்ளை அரிசிக்கு 1.72 கிலோ நெல்லும், 01 கிலோ சம்பா மற்றும் நாடு நீராவிக்கு 1.67 கிலோ நெல்லும் செலவாகும். அதன் பிரகாரம் அக்காலப்பகுதியல் அதற்காக செய்யப்பட்டுள்ள சில மீதிகள் தற்போது தீர்வு செய்யபடப்ட்டுள்ளதாகவும். வெலிசர முதல் படையணி வரையிலான தொகையானது சுமார் ரூபா 27 மில்லியன் எனவும் மேலும் இப்பணத்தை தீர்வு செய்யாமை தொடர்பில் அமைச்சு மட்டத்தில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | பரிசோதனையொன்று தற்போது நடைபெற்று வருவதுடன் பரிசோதனை சபை அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிப்பதற்குள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. |
| 23. | **மாங்கேணி மரமுந்திரிகை செயற்திட்டம்** | | | | |
| (அ) | பொலன'னறுவை படையணிக்குச் சொந்தமான மாங்கேணி மர முந்திரிகை செயற்திட்டம் 187 ஏக்கரைக் கொண்டுள்ளதுடன் அதில் 155 ஏக்கர் நிலப்பிரதேசத்தில் மர முந்திரிகை மரங்கள் நடப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த நிலப் பிரதேசம் சரியான முறையில் அளவீடு செய்யப்பட்டு வரைபடம் ஆக்கப்படவில்லை என்பதால் பயிரிடப்பட்டுள்ள காணியில் இருந்து வருமானம், செலவு என்பவற்றின் கணக்கீட்டின் துல்லிய தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | 2023 | நிலத்தின் அளவு திட்டவ்டமாக இனங் காணப்படுதல் வேண்டும் மற்றும் வருமானம் செலவு என்பன நாளதுவரையாக் கப்பட்டு மற்றும் சரியாக இனங் காணப்படுதல் வேண்டும். | மர முந்திரிகைக் கூட்டுத்தாபனத்திடம் இந்த மர முந்திரிகை செயற்பட்டத்தில் உள்ள காணித்துண்டு 187 ஏக்கர் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது அளவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. அதனால் காணித் துண்டினை அளவீடு செய்து நிரந்தர வேலியினை அமைப்பதற்கு மரம் முந்திரிகை கூட்டுத்தாபனத்திடம் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பொலன்னறுவை படையணிக்கு கீழ் உள்ள் மாங்கேணி மர முந்திரிகை செயற்திட்டக் காணி முறையாக அளவிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடலடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | பொலனறுவை படையணிக்குச் சொந்தமான மாங்கேணி மர முந்திரிகை செயற்திட்டத்தில் 8,787 மரமுந்திரிகை | 2023 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | மரமுந்திரிகை மரங்கள் / கன்றுகளை சரியாகக் கணக்கீடு செய்தல் செயற்திட்டத்தின் | இது தொடர்பாக பௌதீக மெய்மையாய்வொன்று மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பொலன்னருவ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மரங்கள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தற்போது அங்கு 3,682 மரங்கள் காணப்படுகின்ற காரணத்தால் 5,105 மரங்கள் குறைவாக உள்ளதுடன் அந்த குறைபாடு தொடர்பில் நிதிப் பிரமாணம் 103, 104, 110 என்பவற்றின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | ஆரம்பத்தில் மேற்கொள்ளப் பட்டிருக்காத காரணத்தால் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே இந்த செயற் திட்டத்தில் 8,787 தொகையான மர முந்திரிகை மரங்கள் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இங்கு உண்மையாக 3,682 மரமுந்திரிகைக் கன்றுகளே உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கு அமைய மர முந்திரிகை மரத் தொகைக்கு உரிய சுயவிபர ஏட்டினை பேணிச் செல்வதற்கு தற்போது அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | படையணியின் கட்டளை அதிகாரிக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் அது கிடைத்த பின்னர் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவைப்பாடு காணப்பட்டால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | மர முந்திரிகைப் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் மொஸ்பிலான் அஸிடமிபிரிட் எனும் கிருமி நாசினி 100 கிராம் கொண்ட 2,930 பைக்கெட்டுகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டு தற்காலிக களஞ்சியசாலையில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த அனைத்து பைக்கட்டுகளும் 2023 ஜூலை மாதத்தில் காலாவதியான காரணத்தினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் சுமார் ரூபா. 3,123,600 ஆகும். | 2023 | தேவைப்பாட்டிற்காக மட்டும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் கொள்வனவு செய்யப்படும் கிருமி நாசினிகள் சரியான காலத்தில் பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இந்தக் கொள்வனவு தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மர முந்திரிகை பயிர்ச் செய்கை அல்லது கொண்டச்சி மர முந்திரிகை பயிர்ச் செய்கையின் தேவைப்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இது தொடர்பில் விசாரணை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை தயவுடன் அறிய தருகின்றேன். . இவ்வாறான அவதானிப்பு மீண்டும் ஏற்படாதிருக்க குறிப்பாக மர முந்திரிகை பயிர்ச் | திணைக்களத்தினால் நியமனம் செய்யப்பட்ட உள்ளக பரிசோதனை குழுவினால் இது தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகளை மேற் கொள்ளப்பட்டு இருந்ததுடன் அவ்வறிக்கை கிடைத்தவுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செய்கைக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் தொடர்பிலான தேவைப்பாடு, கொள்வனவு, பயன்பாடு, இருப்புக் கட்டுப்பாடு போன்றவை தொடர்பில் காணப்படும் முறைமைகள் முழுமையாக தனித் தனியாக மீளாய்வு செய்யப்பட்டு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | பொலனறுவை படையணியின் இருப்புப் புத்தகத்தில் மாங்கேணி துணை படையணிக்கு மொஸ்பிலான் அஸிடமிபிரிட் கிருமி நாசினி 1,980 பைக்கட்டுகள் விநியோகிக்கப் பட்டிருந்த போதிலும் அது மாங்கேணி துணை படையணியின் இருப்புப் புத்தகத்தில் 1,916 பைக்கட்டுகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் 64 பைக்கட்டுகள் குறைவாகக் காணப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி ரூபா. 76,800 ஆகும். | 2023 | உதவிப் படையணியின் இருப்புப் புத்தகத்துடன் வித்தியாசம் ஏற்படாத வகையில் சரியான முகாமைத்துவத் தினை ஏற்படுத்துதல் வேண்டும். | இது தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு அறிக்கையினைப் பெற்றுத் தருமாறு தற்போதைய கட்டளை உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ள துடன், அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | திணைக்களத்தினால் நியமனம் செய்யப்பட்ட உள்ளக பரிசோதனை குழுவினால் இது தொடர்பாக பரிசோதனை நடவடிக்கைகளை மேற் கொள்ளப்பட்டு இருந்ததுடன் அவ்வறிக்கை கிடைத்தவுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்தது |
| **(24)** | **NLDB விவசாய செயற்திட்டம்** | 2023 | | | |
| (அ) | பொலனறுவை படையணிக்குச் சொந்தமான தேசிய | 2023 | செயற்திட்டங்க ளுக்கு எழுத்து மூலம் | இந்த அவதானிப்பு உள்ளிட்ட பொலனறுவை | பரிசோதனை சபையொன்று நியமனம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கால்நடை வளங்கள் சபையிடம் இருந்த 90 ஏக்கரைக் கொண்ட கல்லேல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட விவசாய செயற்திட்டமானது பணிப்பாளர் நாயகத்தின் எழுத்து மூல அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | | அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.. | படையணியின் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதன் பின்னர் உள்ளக ஆரம்ப விசாரணை சபை ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிரல் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | செய்யப்பட்டிருந்தது. இது வரை அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |
| (ஆ) | இந்தக் காணி பொலனறுவை படையணியினால் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்கு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அப்போது அதில் நெல் மற்றும் சோளம் பயிர்ச் செய்கைக்காக ரூபா. 1,395,060 செலவிடப்பட்டு ரூபா. 324,100 மட்டுமே வருமானமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா. 1,070,960 நட்டம் திணைக்களத்துக்கு ஏற்பட்டிருந்தது. | 2023 | நட்டம் ஏற்படாத வகையில் பயிர்ச்செய்கை செயற்திட்டங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும். | இந்த அவதானிப்பு உள்ளிட்ட பொலனறுவை படையணியின் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதன் பின்னர் உள்ளக ஆரம்ப விசாரணை சபை ஒன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரிசை அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன். | பரிசோதனை சபையொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. இது வரை அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |
| **(25)** | **லாஹுகல கரங்கோவ நெல் பயிர்ச் செய்கை செயற்திட்டம்** | | | | |
| (அ) | 70 ஏக்கரில் நெல் பயிர்ச் செய்கை செயற்திட்டத்திலிருந்து 105,000 கிலோ கிராம் நெல் விளைச்சலும் மற்றும் | 2023 | நடைமுறையில் அடையக்கூடிய விளைச்சலை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்ட | இந்தப் பிரதேசத்தில் நிலவிய அதிக வரட்சியுடனான காலநிலை காரணமாக பயிர்ச் செய்கை நிலத்திற்கு | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் அறிக்கை தற்போது பாதுகாப்பு |

| | | | |
|---|---|---|---|
| அதிலிருந்து ரூபா. 12,600,000 வருமானமும் பெற்றுக் கொள்ள முடியும் என தகவல்கள் சமர்ப்பித்து திட்டம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், உண்மையாகக் கிடைத்த விளைச்சல் 24,500 கிலோ கிராம் மற்றும் அதிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா. 1,849,750 ஆக இருந்ததுடன் எட்டப்பட முடியாத இலக்கு செயற்திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள து என்பது அவதானிக்கப்பட்டது. | அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். | அண்மையில் காணப்பட்ட ஹெட ஓயா நதியும் காய்ந்த நிலையில் காணப்படுகின்றது. அதற்கமைய செயற்திட்டத்திற்குத் தேவையான நீரினைப் பெற்றுக் கொள்ள முடியாது இருந்தது. செயற்திட்ட முன்மொழிவு தயாரிக்கும் போது திணைக்களத் தலைமையகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த சுற்றறிக்கை மற்றும் அறிவுரைகளுக்கு இணங்க ஒரு ஏக்கரில் பெற்றுக் கொள்ளக் கூடிய விளைச்சல் தொகை 1,500 கிலோ கிராம் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது டன் பிரதேசத்தில் காணப்பட்ட நெல் விலைகளுடன் ஒப்பிட்டு விலை ரூபா. 120 எனக் கொண்டு வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் இந்த பயிர்ச் செய்கை செயற்திட்டம் தொடர்பில் தவறான பயன்பாடு அல்லது முறைகேடு இடம்பெற்றுள்ளதா என்பதனைக் கண்டறிவதற்கு என்னால் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும், அதன் அறிக்கைக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும், மேலும் தெரிவித்துக் | அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கொள்கிறேன். | |
| (ஆ) | நெல் பயிர்ச் செய்கை செயற்திட்ட திட்டத்திற்கு அமைய 64 படை வீரர்களை ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உண்மையாக செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு 74 படைவீரர்களை ஈடுபடுத்தி இருந்ததனால் முறையான அனுமதியின்றி கூடுதலாக படை வீரர்கள் 10 பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், செயற்திட்டத்திற்காக ரூபா. 21,528,146 செலவு மீளாய்வாண்டில் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் இந்த செயற் திட்டத்திலிருந்து கிடைத்த வருமானம் ரூபா. 1,849,750 என்பதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா. 19,678,396 ஆகும். | 2023 | நட்டம் ஏற்படாத வகையில் செயற் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்ட முன்மொழிவில் செயற்திட்டத்திற்காக 64 படை வீரர்கள் முன்மொழியப்பட்டிருந்த போதிலும், தேவைப்பாட்டின் அடிப்படையில் 01 ஏக்கருக்கு ஒரு படை வீரர் என 70 படை வீரர்கள் மற்றும் 04 கண்காணிப்பு உத்தியோகத்தர்கள் எனும் ரீதியில் 74 பேர் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். விசேட கடமைகளுக்கு வெளியே சென்று மீண்டும் அலுவலகத்தில் மேலதிகமாக இருந்த படைவீரர்கள் மேலதிகமாக இதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் அறிக்கை தற்போது பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது |
| 26. | கணக்குப் பிரிவினால் ரூபா. 69,310,000 இற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்த 6 பிரதேசங்களில் அமைந்துள்ள 176 ஏக்கர் 3 ரூட் 39.5 பேர்ச் கணக்குகளில் காணப்பட்ட போதிலும் திணைக்களத்திடம் அவ்வாறான 6 காணித் துண்டுகள் இல்லை என நிர்வாகப் பிரிவு வழங்கியிருந்த தகவல்களுக்கு அமைய | 2023 | கணக்குப் பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவின் தகவல்களிடையே முரண்பாடு இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | ஆராய்ந்து பார்த்து தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு, இந்த சொத்துக்கள் பொது 287 படிவத்திற்கு அமைய சரி பிழை பார்க்கப்பட வேண்டியதுடன் அதற்காக சபை ஒன்று நியமிக்கப்பட்டு தேவையான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதனைத் | தீர்வு செய்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் குழு அறிக்கை கிடைத்தவுடன் செயன்முன்னேற்றத்தை அறிவிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | | | தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வருடாந்த பொருட்கள் கணிப்பாய்வின் மூலம் காணி மற்றும் கட்டடங்கள் ஒப்பாய்வு செய்யப்படுவதில்லை என்பதனால் தங்களது அவதானிப்பு தொடர்பில் விசேட கவனத்தினை செலுத்தி மேலே கூறப்பட்ட சபையின் மூலம் செயல்பட்டு அறிக்கையொன்றினை விரைவில் வழங்குவதற்கும், அதற்கமைய தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| 7 | வங்கி பதவியணியினரில் 9894 உத்தியோகத்தர்களுக்காக திணைக்கள செலவின விடயத்தில் சம்பளம் செலுத்தப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 853 மில்லியன் ஆகும். சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் சங்கங்களால் சம்பள செலவினத்திற்காக வருடாந்தம் இலாபத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வங்கி ஆரம்பத்திலிருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 43.4 பில்லியன் தொகை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய சம்பளமாக ஒதுக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அந்தப் பணத்தை மீண்டும் அரசாங்கத்திற்கு செலுத்துதல் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக சமுர்த்தி திணைக்களத் திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களில் சமூக | 2021<br>2022<br>2023 | திணைக்கள செலவு விடயங்களிலிருந்து வங்கி பதவியணியினருக்கு வழங்கப்படும் சம்பளம் மீண்டும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வங்கியின் பதவியணியினருக்கு வழங்கப்படும் ரூபா 43.4 பில்லியன் சம்பளம் தொடர்பாக வங்கியின் முகாமைத்துவ குழுவிற்கு விடயத்தை சமர்ப்பித்து, அதன் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு இன்று வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்களை ஸ்தாபிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

தலைப்பு - 332 நீர் வடிகாலமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 92,460,664 | 238,423,338 | (145,962,674) | முனைப்பழியுள்ள |
| **2022** | 145,620,702 | 228,995,074 | (83,374,372) | முனைப்பழியுள்ள |
| **2023** | 152,030,839 | 274,669,374 | (122,638,535) | முனைப்பழியுள்ள |

| தொ/இ | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தவிர்ப்பு நடவடிக்கை | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்பாட்டு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | பிரஜா ஜல அபிமானி செயற் திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட 09 செயற் திட்டங்களின் தெரி கணக்காய்வு பிரகாரம், நிறைவேற்றப்படாத வேலைகளிற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு ரூபா 2,577,811 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தமை என்பது அவதானிக்கப்பட்டது. | 2021 | கூடுதலாக செலுத்திய பணத்தை அறவிடுவதற்கும் நிறைவேற்றப்படாத வேலைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதுடன் கவனயீனமாக செயற்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஆரம்ப புலனாய்வு ஒன்றை மேற்கொண்டு உத்தியோகத்தர்களுக்கு எச்சரிக்கை உடனான அறிவுறுத்தல் உடன் கூடிய கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. | கணக்காய்வு பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| 2 | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் 12 மாதங்களின் பின்னர் அல்லது 25,000 கிமீ தூரம் ஓடிய பின்னர் அல்லது பிரதான என்ஜின் பழுதுபார்த்த பின்னர் பரிசோதிக்கப்பட | 2021 | பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிராகரம் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எரிபொருள் எரிவு பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | எரிபொருள் எரிவு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேண்டிய போதிலும் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் தொடர்பில் நடாத்தப்பட்ட கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது திணைக்களத்திற்கு உடமையான வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் எரிவு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 3 | காலி மாவட்டத்தில் அமுலாக்கப்பட்ட எல்பிட்டிய குலன்கட்ட குடி தண்ணீர் செயற் திட்டத்திற்காக தயரிக்கப்பட்ட 27 சதவீதத்தால் மதிப்பீட்டு தேவைகளை விஞ்சி ரூபா 788,006 பெறுமதியான வித்தியாசமான டயா மீற்றர் பீ.வீ.சீ குழாய்கள் மற்றும் பொருத்திகள் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | 2021 | திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட நீர் குழாய்களை பகிர்ந்தளிப்பதற்கு முறையான வேலைத் திட்டமொன்று இருக்க வேண்டியதுடன் அதற்கான உள்ளகக் கட்டுப்பாடு முறைமை பலப்படுத்தப்பட வேண்டும். | மிகையாக காணப்படும் உப் பாகங்களை பொருத்தமான ஏனைய சங்கங்களுக்கு வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. | கணக்காய்வு பரிந்துரை செயற்படுத்தப்படடிருக்கவில்லை |
| 4 | திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 23 மாவட்டங்களில் சமுதாய அடிப்படை அமைப்புகளின் 311 நீர் செயற்திட்டங்கள் 2000 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையிலும் செயற்படாதிருந்தது. | 2021 | செயற்படுத்தப் படாத நிலைமையில் காணப்படும் சமுதாய நீர் அமைப்புக்களின் மீளச் செயற்படுத்த கூடியதாக செயற் திட்டங்களை அமுலாக்குவதற்கு நடவடிக்கை | செயற்படுத்தப் படாத நிலைமையில் காணப்படும் சமுதாய நீர் அமைப்புக்களின் மீளச் செயற்படுத்த வருடாந்தம் கிடைக்கும் நிதி ஏற்பாடுகளின் பேரில் நிகழ்ச்சித் திட்டங்களை | கணக்காய்வு பரிந்துரைகளை செயற்படுத்து வதில் மந்தமான நிலை காணப்படுகின்றது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்க வேண்டும் | செயற் படுத்தப்படுகின்றன. | |
| 5 | நீர் செயற்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நீர் தாங்கிகளுக்கு வெளித் தரப்பினர் நுழைய முடியாத வகையில் பாதுகாப்பு மேவுகை யொன்று இட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பத்தேகம, கீமியகந்த குடிநீர் செயற்திட்டம், இமதுவ மயுர குடிநீர் செயற்திட்டம் அம்பன அல்பிட்டிய பெஹசர நீர் செயற்திட்டங்களின் நீர் களஞ்சிய தாங்கி களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாதுகாப்பு மேவுகையொன்று இடப்பட்டிருக்கவில்லை. | 2021 | மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் | நிதி ஏற்பாடு கிடைக்காமையால் பூர்த்தி செய்வதற்கு முடியதுள்ளது | 2023 செப்தம்பர் வரையிலும் களஞ்சிய தாங்கிகளுக்காக பாதுகாப்பு மேவுகையொன்று இடப்பட்டிருக்க வில்லை |
| 6 | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 751(1), 752, 763 ஆம் பந்திகளின் பிரகாரம் சமூக நீர் வழங்கல் திட்டங்களை நிர்மாணிப்பதற்காக சமூகம் சார்ந்த நிறுவனங்களுக்கு கொள்வனவு செய்யப் பட்டு விநியோகிக்கப்பட்ட நீர் குழாய்கள் மற்றும் துணைப் பொருட்கள் மற்றும் நன்கொடை யாகப் பெறப்பட்ட 2,543 நீர்மானிகள் தொடர்பான தகவல்கள் பொருட்கள் | 2022 | திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் உபகரணங்கள் மற்றும் துணைக்கருவி களுக்கு முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்தி தற்போது களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் குறித்து கணக்கெடுப்பு நடாத்தி, அனைத்து | எதிர்காலத்தில் அனைத்து பெறுவனவுகளும் இருப்பு புத்தகங்களில் பதிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது | 2023 ஆம் ஆண்டின் பின்னர் மாவட்ட அலுவலகங்களில் இருப்பு புத்தகங்களில் பதிவு செய்வதுடன் அதற்கு முன்னைய கொள்வனவுகள் பதிவு செய்யப் பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பதிவேட்டில் உள்ளடக் கப்படவில்லை. | | உபகரணங்களின் பௌதீக இருப்பை உறுதிசெய்து, பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| 7 | 2012 சனவரி 05 மற்றும் 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதிய முறையே 01/2012 மற்றும் 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் மூன்று பேர் கொண்ட குழுவொன்றின் மூலம் சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்கு நிர்மாண ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட மாணிக்கத்வார மற்றும் பல்லேகம கிராமங்களின் 800 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கும் செயற் திட்டம் கையளிக்கப்பட்ட போது அத்தகைய மூவரடங்கிய குழுவின் பரிந்துரையின் பேரில் மேற்கொள்ளப்படாததடன் திணைக்களத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களால் அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எட்டப்படாமல் திட்டம் | 2022 | முறையான நடைமுறை ஒன்றை பின்பற்றாமல் ஒப்பந்தத்தை அழைப்புச் வழங்கியமை செயற்திட்டம் தோல்வி அடைவதற்கு நேரடியாக தாக்கம் அளித்துள்ளதால் அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ரூபா 5 மில்லியனுக்கு குறைந்த செயற்திட்டங்கள் சமூக அடிப்படையில் வழங்கப்படுவதால் விலை விபரங்களை பெற்றுக் கொண்டு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வில்லை | 2022 ஆம் ஆண்டின் பின்னர் புதிய நீர் செயற் திட்டங்களை ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை முறையான நடைமுறை ஒன்று பின்பற்றப்படாமல் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான ஒழுக்கற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தோல்வி யடைந்து இருந்தது. அவ்வாறே ரூபா 48 மில்லியனான மாத்தளை மாவட்டத்தில் 05 நீர் செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் மாவட்ட பொறுப்பான உத்தியோகத்தரின் பரிந்துரை அடிப்படையில் சமூக அடிப்படையிலான அமைப்பிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த 05 நீர் செயற் திட்டங்கள் மூலம் 970 குடும்பங்களுக்கு நீர் வழங்குவதற்கு எதிர் பார்க்கப்பட்ட போதும உள்ளவாறு 377 குடும்பங்களுக்கே நீர் இணைப்பு வழங்கப்பட்டிருந்தன. அந்நீரும் சுத்தமான குடிநீரென உறுதிப்படுத்தும் அறிக்கை காணப்படவில்லை. | | | | |
| 8 | மொனராகலை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட 04 நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில், நிர்மாண ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள 84 வேலைகளில் எவ்வித நிர்மாணமும் மேற் கொள்ளப்படாத நிலையில் மொத்தம் ரூபா 2,195,071 மற்றும் பாதி முடிக்கப்பட்ட அல்லது அளவுப் பத்திரரத்தில் குறிப்பிடப்பட்ட நியமங் களுக்கு மாறாக செய்யப்பட்ட 17 நிர்மாணப் பணிகளுக்காக மொத்தம் ரூபா | 2022 | இந்த ஒப்பந்த நடவடிக்கைககளை முறையாகக் கண்காணிக்காமல் கொடுப்பனவுகளை உறுதி செய்ததாலும், பணம் செலுத்தியதாலும் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட பொறுப்புள்ள நபர்கள் மீது நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய செயலாற்றல் பிணை மற்றும் முற்பண பினை முறி நீடிக்கப்பட்டு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன | செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை ஒப்பந்த நடவடிக்கைகள் தொடர்பாக முறையான கண்காணிப்பு இல்லாமல் முறையாக இல்லாமல் கொடுப்பனவு செய்தமைக்காக உரிய உத்தியோகத்தர் தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 777,347 ஆனது மாவட்ட பொறியியாளர் களின் சான்றிதழ்களின் அடிப்படையில் செலுத்தப் பட்டிருந்தது. மேலும் ஒரு திட்டத்திற்கு ரூபா 3,929,236 முற்பணமாக செலுத்தப்பட்டு அது தொடர்பான பணிகள் எதுவும் நடைபெறாமல் 2023 மார்ச் வரையில் மேற்கூறிய திட்டங்கள் அனைத்தும் பாதியில் கைவிடப்பட்டிருந்தன. அதன்படி, அதற்காக செலவிடப்பட்ட ரூபா 17,730,116 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | | | | |
| 9 | மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 பிரதேசங்களில் 4 ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் நீர்த் தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில் பல வேலைகளின் செயற்திறனுக்கான சான்று அல்லது உறுதிப்படுத்தல் இன்றி ரூபா 295,000 மற்றும் நிறைவேற்றப் படாத பணிகளுக்கான மேலதிக கொடுப்பனவு களுக்காக ரூபா 4,148,606 ஆன அரச பணம் விரயமாக்கப் பட்டிருந்தது. இத்திட்டங் களை ஆரம்பிக்கும் முன்னர், அந்தந்த இடங்களில் நீர் நிலை பரிசோதனை உள்ளிட்ட சாத்திய வள ஆய்வு | 2022 | இந்த ஒப்பந்தப் பணியில் உத்தியோகத்தர் களின் அலட்சியத்தால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வில் தெரிய வந்துள்ளதால், இதற்கு காரணமான உத்தியோகத்தர் கள் மீது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த நிர்மாண பணிகளை | ரூபா 295,100 தொகை நிறுத்தி வைத்தல் தொகையில் இருந்தும் மற்றும் இறுதி பட்டியல் மூலம் கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிறைவேற்றாத வேலை உடனே பூர்த்தி செய்யுமாறு ஒப்பந்தக்காரருக்கு அறிவித்தல். | செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடையாமல் இருந்ததுடன் மேலதிக கொடுப்பனவு செய்து அரசுக்கு நட்டம் ஏற்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதி பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடாத்தப்படாததுடன் அமைக்கப்பட்ட 03 கிணறுகளிலும் நீர் எதிர்பார்த்த அளவை விட குறைவாகவும், பயன்பாட்டிற்கு தகுதியற்றதாகவும் தண்ணீர் மாதிரி பரிசோதனையின் போது உறுதி செய்யப்பட்டது. இதன்படி, இந்த நீர் வழங்கல் தொடர்பான உத்தியோகத்தர்கள் மிகவும் அலட்சியமாக செயற்பட்டு அரசாங்கத்திற்கு நட்டமொன்றை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது. | | விரைவாக முடிக்க வேண்டும். | | |
| 10 | தேசிய சமூக நிர் வழங்கள் திணைக்களத்தைநிறு வுவதற்கான சட்ட வரைபுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்து 9½ வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற் காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. அதன் காரணமாக திணைக்களம் ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள் வதற்கு திணைக்களத்திற்கு சட்ட பின்னணி ஒன்று காணப்படவில்லை. | 2021<br>2022<br>2023 | சட்டவரைஞர் திணைக்களத்தி னால் இறுதி வரைபு தயாரிக்கப் பட்டுள்ளதுடன் அதற்கான அவதானிப்புக்க ள் விரைவாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின் றது. | இச்சட்டத்தின் வரைவு அவதானிப்பு நடவடிக்கை களுக்காக இராஜாங்க அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள து. | இதுவரை சட்டம் நிறைவேற்றப்பட்டிருக் கவில்லை. |
| 11 | வருடாந்த வரவு செலவுத் திட்ட | 2023 | பெறுகை நடைமுறைகளி | திட்டங்கள் மாற்றப்பட்டு | 30 Namo Filtors |

| | | | |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டின் கீழ் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் நோக்கத்திற்காக 80 Nano Filtersகளை நிர்மாணித்து நிறுவுவதற்காக 2021 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 31 வரை 25 மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு முடிக்கப்பட்டிருந்ததுடன் அன்றைய திகதி வரை மொத்தம் ரூபா 120,718,050 செலவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மொனராகலை மாவட்டத்தில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்ட 05 Nano Filters தொடர்பான மாதிரி கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வகையில் பெறுகை வழிகாட்டுதல்களின் 8.14.1 இன் பிரகாரம் ஒப்பந்த காலத்தை நீடிக்காமல் நிர்மாண வேலைகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டிருந்தும் அதற்கான தாமதக் கட்டணம் வசூலிப்பதற்கு மற்றும் செயலாற்றல் உத்தரவாதங்களை பணமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப் படாமை நிர்மாணம் தொடர்பான அங்கீ கரிக்கப்பட்ட அளவுப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு முரணாக நிர்மாணங்கள் மேற் | ல் உத்தியோகத்தர்களின் அலட்சியம் மற்றும் அலட்சியத்தால் அரசுக்கு ஏற்படும் இழப்பு, எதிர்பார்த்த மக களின் தேவைகள் நிறைவேற்றப்படாமை தொடர்பாக கணக்காய்வின் போது கண்ட பிடிக்கப்பட்ட விடயங்கள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ள மையால் அது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு நிர்மாணங்கள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள ஒப்பந்தப் பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிர்மாணிப்புகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது | நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.அரசுக்கு நட்டமேற்படுத்தியமை தொடர்பாக நிதி பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்ளப்படும் போது தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் வழங்கிய பொய்யான சான்றிதழின் அடிப்படையில் மொத்தம் ரூபா 7,385,602 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன. | | | | |
| 12 | மொத்தம் ரூபா 183,600 செலவிடப்பட்டு மொனராகலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 4 குழாய்க் கிணறுகளை அமைப்ப தற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது புவியியல் ஆய்வுகளை மேற்கொண்டு 2021 ஆம் ஆண்டு பணிகள் ஆரம்பித்திருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் வரை மொத்தம் ரூபா 1,260,058 செலவிடப்பட்டு அவற்றில் 2 கிணறுகள் மாத்திரமே கட்டப்பட்டுள்ளன. அமைக்கப்பட்டுள்ள குழாய் கிணறுகள் மூலம் நீர் விநியோகம் செய்யும் பணிகள் ˙ திணைக் களத்தினால் செய்யப்பட வில்லை. அதன்படி மேற்படி புவியியல் ஆராய்ச்சிக்கு செலவிடப்பட்ட ரூபா 183,600 உட்பட இப் | 2023 | இந்த முறையற்ற ஒப்பந்தப் பணியினால் ஏற்பட்ட நஷ்டம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய துடன் 04 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு பயன்களை எதிர்பார்க்கும் மக்களுக்கு சேவைகளை வழங்க வேண்டும். | நீர் செயற்திட்ட மொன்று ஓராண்டு போன்ற குறுங்கால பகுதியில் பூர்த்தி செய்யப்படாத முடியாதவை ஆகும். இவ்வாண்டின் போது புதிய மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்திட்டம் பூர்த்தி செய்யப் படாமல் இருந்ததுடன் இடம்பெற்ற நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பணிகளுக்காக செலவிடப் பட்ட ரூபா 1,443,658 ஆன மொத்தத் தொகை விளைவற்ற செலவின மொன்றாக காணப்பட்டது. | | | | |
| 13 | மெனிக்கடவர, பள்ளேகம கிராமங்களில் உள்ள 800 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் திட்டத்தின் 14 பணிகளுக்காக மொத்தம் ரூபா 28,530,317 தனியார் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் Pump house மற்றும் Sand filter என்பவற்றின் நிர்மாணம் 2023 பெப்ரவரி வரையில் அமைக்கப்பட வில்லை. இத்திட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டு கணக்காய்வு திகதி வரையில் 03 வருடங் களுக்கு மேற்பட்ட போதிலும், திட்டம் முடிக்கப்படாததால் செலவிடப்பட்ட ரூபா 28,530,317 ஆனது விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | 2022 | கணக்காய்வு அவதானிப்புக்களில் கூறப்பட்டுள்ள படி, இந்த ஒப்பந்தப் பணிகளில் அலட்சியமாக இருந்து அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதற்கும், சேவையைப் பெற எதிர்பார்க்கும் மக்களுக்கு உடனடியாக சேவையை வழங்காமைக்கும் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் செயற்திட்டத்தை செயற்படுத்து வதற்கு உள்ளது | 2024 மார்ச் வரையில் ரூபா 33 மில்லியான செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் இதுவரை செயற் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை அரசுக்கு நட்டம் ஒன்றை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தருக்கு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை |
| 14 | அநுராதபுரம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 53,537,675 ஆன 4 நீர் திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் 2021 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுட | 2022 | ஒப்பந்தத்தை வழங்கும் போது ஒப்பந்ததாரரின் நிதி மற்றும் பௌதீக திறன் மற்றும் முன்னைய வேலைகள் தொடர்பாக சரியான மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். | குறித்த செயலாற்றல் பிணை முறி மற்றும் முற்பண பிணையை நீடிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. | இதுவரை செயற் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ன் சுமார் ஒரு வருடத்தில் அதன் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்திருக்க வேண்டும். இதில் ஒரே ஒரு திட்டத்தில் நீரேற்று நிலையம் அமைக்கும் பணி மட்டும் முடிவடைந்த நிலையில், மீதமுள்ள பணிகள் ஓராண்டுக்கு மேலாகியும் முடிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | | மேலும், ஒப்பந்தங்கள் செயற் பாட்டில் இருக்கும் போது அவற்றை தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டும். | | |
| 15 | மீளாய்வாண்டில் மொத்தம் ரூபா 4,290,300 செலவிடப்பட்டு ஒரு வருட உத்தரவாதக் காலத்துடன் 945 நீர் மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுட ன் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் வரையில் அந்த நீர்மானிகள் ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப் பட்டன. அதன் படி, உத்தரவாதத்து டனான விலைக்கு அந்த நீர் மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை பலனளிக்காமல் போயிருந்தது. | 2022 | தேவையை முறையாக கண்டறிந்து கொள்வனவு செய்து, அரச பணத்தை செயற்திறனாகப் பயன்படுத்துவது உத்தியோகத்தர் களின் பொறுப்பு என்பதை புரிந்து கொள்ளாத உத்தியோகத்தர் கள் மீது தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் | சிவில் நிர்வாகங் களுக்காக புதிய மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதுடன் அந்நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட உடன் இந்நீர்மானிகள் பயன்படுத்தப்படும். | அரசின் பணத்தை செயற் திறனாக ஈடுபடுத்தப்படாத உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |
| 16 | மட்டக்களப்பு பிரதேசத்தில் 5 நீர் வழங்கல் திட்டங்களுக்கும் மொனராகலை பிரதேசத்தில் 04 நீர் வழங்கல் திட்டங் களுக்கும் பொறியிய லாளர் மதிப்பீட்டை விட 24 சதவீதம் முதல் 29 சதவீதம் | 2022 | ஒப்பந்த மதிப்பீடு மற்றும் வழங்கலின் போது இது போன்ற முறைகேடு களைத் தடுக்கவும், அரசுக்கு நட்டம் ஏற்படாத வகையிலும் | கொள்கை மாற்றங்கள் காரணமாக செயற் திட்டத்தின் விடயப் பரப்பு மாற்றப்பட்டதால், ஒரு புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாரிக் கப்பட்டு இந்திய அரசின் | 2024 ஆகஸ்ட் வரை உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதிக பெறுமதியில் ஒப்பந்தங்கள் வழங்கப் பட்டிருந்ததுடன் அந்த அதிகரிப்பினால் ஒப்பந்தங்களின் மொத்தக் கிரய அதிகரிப்பு ரூபா 14,463,172 ஆகும். பெறுகை வழிகாட்டியின் பந்தி 4.3 இல் உள்ள அறிவுறுத்தல்களின் படி, பொறியியல் மதிப்பீடு களைத் தயாரிப்பதன் மூலம் உத்தேசிக்கப்பட்ட நோக்கங்கள் அடையப் படவில்லை மற்றும் அதற்காக செலவிடப்பட்ட கிரயம் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | | இழப்பைத் தவிர்க்கவும் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| 17 | மொனராகலை ரணுகல்ல பிரதேசத்தில் 500 குடும்பங்களுக்கு நீர் வழங்கும் இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 1,665,984 மதிப்பீட்டில் நீர் தாங்கி நிர்மாணிக்க திட்டமிடப்பட்டு ரூபா 2,314,123 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு ரூபா 462,824 ஆன முற்பணம் செலுத்தப்பட்டது. தாங்கியின் நிர்மாணம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நிறுத்தி வைப்பதற்கு 2021 நவம்பர் 17 ஆம் திகதி முடிவு செய்யப்பட்டது. இத் திட்டத்தின் முதற்கட்ட கட்டுமானப் பணிக்கு அப்போது மொத்தம் ரூபா 6,147,244 செலவிடப் பட்டிருந்தும் இற்றை வரை உத்தேசித்த | 2022 | திட்டம் செயற் படுத்தப்படுத்தும் போது முறையான ஆய்வு மற்றும் திட்டமிடலுடன் செய்யப்பட வேண்டும், அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முறையான மேற்பார்வை இருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியதால் அரசுக்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது | முறையான திட்டமொன்ற இல்லாமல் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | | | | |
| 18 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாண இலக்கம் 128(அ,ஆ) மற்றும் 133 இன் பிரகாரம் பிரகாரம், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்பாட்டில் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அமுலாக்குவதற்கு உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிக்கப் பட்டிருந்ததுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவிற்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் முறைப்படி நடைபெற வேண்டும். எவ்வாறாயினும், திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளக கணக்காய்வாளர் பதவி ஒதுக்கப்பட்டிருந்த பொதிலும் உள்ளக கணக்காய்வு பிரிவு தாபிப்பதற்கும் அந்த பதவிக்காக உயர் மட்டத்தில் திணைக்களத்தின் செயலாற்றல் மற்றும் வினைத்திறனை உயர்த்தும் நோக்கில் இதனை திறனுடன் | 2022 , 2023 | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு கணக்காளர் II/II ஆம் தரத்தின் பதவி கணக்காளர் ஐ ஆம் தரத்தின் பதவியொன்றாக திருத்தியமைக்கும் படி அமைச்சின் செயலாளர் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கையொன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பேணுவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 19 | நிதிக் கூற்றுக்களில் நிதியலல்லாத சொத்துக்கள் பற்றிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 74,767,000 பெறுமதியான போக்குவரத்து உபகரணங்களில் வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான ரூபா 10.70 மில்லியன் பெறுமதியான 04 மோட்டார் வாகனங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022, 2023 | பயன்படுத்தப்படுகின்ற வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையாக கையேற்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | இவ்வாகனங்கள் நீர்ப்பாசன மற்றம் ஆரோக்கிய | 2024 செப்தம்பர் வரையிலும் கையேற்கப் பட்டிருக்கவில்லை. |
| 20 | ஐக்கிய நாடுகளின் அவசர சிறுவர் நிதியம் (UNICEF) மூலம் நாட்டின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக கிடைத்திருந்த வெளிநாட்டு மானியத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டின் போது 62 சதவீதம் அதாவது ரூபா 2.3 மில்லியனும் 2023 ஆம் ஆண்டின் போது 66 சதவீதம் அதாவது ரூபா 6.6 மில்லியனும் சேமிக்கப்பட்டிருந்தது. இந்த நிதியத்தின் மூலம் கிடைக்கக் கூடிய கருத்திற் கொள்ளக் கூடியளவு ஏற்பாடுகள் குறித்த செயற்பாடு களுக்கு பயன்படுத்தமால் வருடாந்தம் சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 2023 | வெளிநாட்டு மானியங்கள் என கிடைக்கக்கூடிய பணம் குறிப்பிட்ட குறிக்கோள் களுக்காக செலவிடுவதற்காக முகாமைத்துவத்தினால் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். | தவர்ப்பு நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டிற்காக இதுவரை ரூபா 3 மில்லியன் ஏற்பாடு இதுவரை பயன் படுத்தப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் கிராமிய நீர்ச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்க ாக 2023 ஆண்டின் போது வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 389 மில்லியனான ஏற்பாடு களில் ரூபா 217 மில்லியன் தொகை அதாவது 56 சதவீதம் திணைக்களத்தினால் ஏற்பாடுகள் வழங்கியிருந்த செயற்பாடுகளுக்கா க பயன்படுத்தப்பட்டிரு க்க வில்லை. | 2023 | கிராமிய நீர் செயற்திட்டங்கள் செயற்படுத்துவத ற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங் களினால் வழங்கப் படுகின்ற ஏற்பாடுகள் வழங்கப்பட்ட கருமங்களுக்கா க பயன்படுத்துவதற் கு முகாமைத்துவத் தினால் பொறுப்புடன் செயற்பட வேண்டும். | தவிர்ப்பு நடைமுறைகள் குறிப்பிடப்பட்டிருக் கவில்லை | 2024 ஆம் ஆண்டில் வீடமைப்பு அமைச்சிலிருந்தும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைத்த நிதி ஏற்பாடுகளில் செப்தம்பர் 30 ஆந் திகதி வரை 20 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப் பட்டிருந்தது. |
| 22 | நீர் செயற்திட்டங்களை செயற்படுத்து வதற்காக ஏனைய நிறுவனங் களிலிருந்து திணைக் களத்திற்கு கிடைக்கப் பெற்று வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணத்தில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 2 வருடங்களை விட மிகையான மீதிகள் ரூபா 30 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற் திட்டங்களை இனங்கண்டு அந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க | 2023 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற் திட்டங்களின் எஞ்சிய பணத்தை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . | 2024 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களின் நிறுத்தி வைக்கப்பட்ட தொகையில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 10.38 மில்லியனாகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 23 | இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொட, பெல்மடுள்ள, அயகம மற்றும் மாதம்பே ஆகிய பிரதேங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 செயற்திட்டங்களில் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 1.4 மில்லியன் தொகை மிகைக் கொடுப்பனவு செய்து அரச பணத்தை துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தது. | 2023 | நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவுகளை சான்றுபடுத்திய பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கூடுதலான கொடுப்பனவு தற்போது இடம் பெறாமையை தவிர்ப்பதற்குரிய தொழில்நுட்ப பிரிவிற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | குறித்த பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |
| 24 | திணைக்களம் ஆரம்பித்தல் தொடர்பான 2014 மார்ச் 13 திகதிய 17/2014 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் இலக்கம் 614:2013 கொண்ட ‘‘குடிநீருக்கான விவரக் குறிப்பு’’ இணங்க நீர் தரப்பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் பௌதீக கணக்காய்வு பரிசோனையின் போது படி 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 92 நீர் வழங்கும் செயற் திட்டங்களில் 12 செயற் திட்டங்களின் நீர் தரப் | 2023 | பொதுமக்களுக்கு சுத்தமான நீர் வழங்குவது திணைக்களத்தின் முக்கிய பணிப் பொறுப்பாக காணப்படுவதனால் அதற்காக அறிமுகப்படுத்தியுள்ள செய்முறையொன்றை சிறந்த கண்காணிப்புடன் பேணிச் செல்ல வேண்டும். | ஆண்டிற்கு இரண்டு முறை நீரின் தரத்தை பரீட்சிக்கப்பட வேண்டுமென சமூக அடிப்படை அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நடமாடும் நீர் ஆய்வு கூடமொன்றை பயன்படுத்துவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | 2024 செப்தம்பர் வரையிலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்படவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பரிசோதனை மேற் கொள்ளாமல் இருந்ததுடன் 2023 செப்தெம்பர் அளவில் 05 செயற்திட்டங்களில் இறுதியாக நீர் பரிசோதனை 04 வருடங் களுக்கு முன்னரே நடைபெற்றிருந்தது. அதே போல் 08 செயற் திட்டங்களில் ஒரு வருடத்திற்கு முன்னரும் 06 செயற்திட்டங்கள் 2 வருடங்களுக்கு முன்னரும் 08 செயற் திட்டங்களில் 03 வருடங்களுக்கு முன்னரும், நீர் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் 28 செயற் திட்டங்கள் மாத்திரம் நீர் தரப்பரிசோதனை 2023 ஆண்டின் போது மேற் கொள்ளப்பட்டிருந்தது . | | | | |
| 25 | புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் கூட்டுத்தொகை ரூபா 26.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களில் ஒரு செயற்திட்டத்தின் குழாய் கிணற்றில் மணல் நிரம்பியிருந்த காரணத்தினால் மற்றும் 02 செயற்திட்டங்களில் ஆரம்பத்தில் இனங் காணப்பட்ட நீர் மூலவளம் கோடை காலத்தில் வற்றுதலுக்கு உள்ளாவதனால் மாற்று முறைகள் | 2023 | இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட காரணத்தினால் அரசிற்கு நட்டம் ஏற்படுவது போலவே அந்த விடயம் உரிய நியமத்துடன் நிறைவேற்றப்படாமையால் நலன்களை எதிர்பார்க்கும் பொது மக்களின் தேவைப்பாடு நிறைவேற்றப்படாமை தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை | தேவையான தொழில்நுட்ப பொறியியலாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | நிதிப் பிரமாணங் களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயன்படுத்தி நீர் வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த மாற்று மூல வளங்களை தெரிவு செய்யும் போது நீர் சுத்தமான குடிநீர் என்பதை உறுதிப் படுத்திக் கொண்டிருக்க வில்லை. கணக்காய்வு தெரிவுப் பரிசோத னைக்கு உட்படுத்திய நீர் தரப் பரிசோதனை அறிக்கையின் படி பயன்பாட்டிற்கு பொருத்த மற்றது என உறுதிப் படுத்தப்பட்டிருந்த 11 ஏனைய செயற் திட்டங்கள் மூலம் 1,518 நலன்பெறு குடும்பங் களுக்காக குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. | | எடுத்து பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| 26 | 220 குடும்பங்களுக்காக சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக ரூபா 7 மில்லியன் மதிப்பீட்டு கிரயத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாத்தளை மாவட்டத்தில் ஓபல்கல மெத்சித் நீர் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் 2019 ஆண்டின் போது 04 சமூக நீர் அடிப்படை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டு செயற் திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 7 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 05 குடும்ப அலகுகளுக்கு மாத்திரம் நீர் வழங்கள் | 2023 | கணக்காய்வு அவதானிப்புக்களில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொது நிர்வாக அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒழுக்காற்று பரிசோதனை உத்தியோகத்தர் குழாமில் உததியோகத்தர்கள் தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் வரையிலும் ஒழுக்காற்று பரிசோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 2020 ஒக்தோபர் 06 திகதி பொதுமக்களின் உரிமைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்பம் முதல் சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டது என உறுதி செய்யப்படவில்லை. இதன் மூலம் பெற்றுக்கொண்ட நீர் மாதிரிகளை தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையின் ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த போது பயன்படுத்தத் தகுதியற்றவை என அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் படி இந்த செயற்திட்டத்தின் நிறைவேற்றப்படாத நிர்மாண வேலைகள் மற்றும் பொருத்துக்களுக்காக ரூபா 1.2 மில்லியன் தொகை நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளாமல் கொடுப்பனவு செய்து அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. | | | | |
| 27 | 2021 ஆண்டின் போது குருநாகல் மாவட்டத்தில் மொத்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 78 மில்லியனுக்கான 09 சமூக நீர் செயற்திட்டங்கள் நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கைகளுக் | 2023 | பெறுகை அலுவல்களின் போது ஏற்பட்டிருந்த முறைகேடு தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்த வேண்டியதுடன் அதனூடாக அரசுக்கு | பூர்த்தி செய்யப்படாத வேலைப் பகுதிகளுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தன. | அரசிற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கு அணுகியிருந்தது. இந்த ஒப்பந்தக்காரரின் தொழிநுட்ப இயலுமை, இயந்திர உபகரணங்கள் போதியளவாக என மற்றும் முன்னைய அனுபவங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஒப்பந்த வேலை வழங்கப் பட்டிருந்தது. அதன்படி 2024 பெப்ரவரி மாதம் அளவில் வழங்கப் பட்டிருந்த 09 ஒப்பந்த வேலைகளின் மதிப்பீட்டு பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 51 மில்லியன் தொகைக்கான 06 ஒப்பந்த வேலைகளின் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டு இணங்கப்பாட்டுடன் ஒப்பந்த வேலையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்த வேலைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 38 மில்லியன் கூட்டுத் தொகையான தொகை சிக்கனமற்ற செலவொன்றாக காணப்பட்டது. | | ஏதேனும் நட்டம் ஏற்பட்டிருந்தால் அதற்கு பொறுப்புச்சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| 28 | குருநாகல் மாவட்டத்தில் சந்ததிய சமூக அடிப்படை அமைப்பு மற்றும் ரம்பேவ குடிநீர் செயற்திட்டத்திற்காக ரூபா 15 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 நீர்த் | 2023 | காணப்படுகின்ற ஏற்பாடுகளின் படி செயற் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து பொது | நிதி ஏற்பாடுகள் கிடைக்கும் வகையில் கட்டம் கட்டமாக பூர்த்தி செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை ழுங்கப்பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப் படவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொட்டிகளின் நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2024 மார்ச் அளவில் 3 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து குறிப்பிட்ட நீர்த் தொடர்பினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இந்த தொட்டிகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற தன்மையை அடைந்திருந்தது. | | மக்களுக்கு நீரை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | | |
| 29 | குருநாகல் மாவட்டத்தில் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட 19 சமூக நீர் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நலனாலி மக்களுக்கு குடிநீர் வழங்க முடியாமல் இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 திகதியளவில் அந்த செயற்திட்டங்களில் 14 செயற்திட்டங்களுக்காக ரூபா 106 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதே போல் புத்தளம், திருகோணமலை, மத்தளை, மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் 2021 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 11 சமூக நீர் செயற் | 2023 | காணப்படுகின்ற ஏற்பாடுகளின் படி செயற் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து பொது மக்களுக்கு நீரை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டு மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை ழங்கப்பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப் படவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டங்களின் நிர்மாண வேலை அலுவல்களில் இடை நடுவில் நிறுத்தப் பட்டிருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தில் அச்செயற் திட்டத்திற்காக திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 18.6 மில்லியனுக்கான தொகையும் விளைவற்றுக் காணப்பட்டது. | | | | |
| 30 | அனுராதபுர மாவட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது 08 சமூக நீர் செயற்திட்டங் களுக்காக நெனோ சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூபா 19 மில்லியன் தொகை செலவிடப்பட்டு நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களில் 03 செயற்திட்டங் களுக்குரிய சுத்திகரிப்பு நிலைய கட்டிடங்கள் 02 வருட காலத்தை விட மிகையான காலம் முதல் நிர்மாண வேலையை பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் படி அதற்காக திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 6.6 மில்லியனுக்கான மொத்தக் கிரயமும் விளைவற்றதாக மாறியுள்ளது. | 2023 | பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள் ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒப்பந்தக்காரர்க ளை தெரிவு செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர்க ளின் நிதி மற்றும் செயற்பாட்டு சாத்தியவள தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஒப்பந்த வேலைகள் வழங்கியிருந்த உத்தியோகத்த ருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | விரைவில் பூர்த்தி செய்வதற்கு உரிய கம்பனிக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் வரையிலும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப் படவில்லை. ஒப்பந்தக்காரர்களின் நிதி மற்றும் செயலாற்றல் தொடர்பில் சாத்தியவள தொடர்பில் கவனம் செலுத்தாமல் ஒப்பந்தத்தை வழங்கிய உத்தியோகத்தருக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |
| 31 | மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 56 மில்லியனுக்கான | 2023 | செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளை | புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி | தாமதத்தின் பேரில் இடம்பெறும் மேலதிக கிரயம் தொடர்பாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாத்தறை, வெலிகம போரம்ப கனங்கே (தெற்கு) சமூக நீர் வழங்கள் செயற்திட்டம் 2019 நவம்பர் 08 திகதி ஆரம்பிக்கப்பட்டு நிர்மாண வேலைகள் 08 பகுதிகளாக பகிரப்பட்டு சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் 02 வேலை விடயங்கள் குறிப்பிட்ட நாளுக்கு முன்னர் பூர்த்தி செய்யாமையால் சந்தையின் விலைகள் அதிகரித்ததனால் ஆரம்ப மதிப்பீட்டை விட ரூபா 7 மில்லியன் தொகை மிகையான புதிய மதிப்பீடொன்று தயாரிப்பதற்கு நேரிட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 திகதியளவில் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 27 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 4 வருடங்களை கடந்திருந்த போதும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டதுடன் அதற்காக செலவிடப் பட்டிருந்த பணம் விளைவற்ற செலவொன்றாக மாறி இருந்தது. | | விரைவுபடுத்த வேண்டியதுடன் தாமதம் அடைவதனால் மேற்கொள்ள நேரிடுகின்ற கிரயம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | செய்யப்பட்டுள்ளன. | பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறிபபிடப்பட்டிருக்கிவல்லை. |
| 32 | சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 36 பதவிகளில் 18 பதவிகள் உட்பட அனைத்து தொகுதிகளிலும் வெற்றிட எண்ணிக்கை சுமார் 14 சதவீதத்தில் காணப்பட்டது. | 2023 | திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு தேவையான பதவியணி பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட | வெற்றிடங்களை நிரப்புவதற்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மிகை பதவிகளுக்காக புதிய பதவிகளை ஏற்படுத்துமாறு முகாமைத்துவ | குறிதத் அங்கீகாரம் கிடைக்காமையால் பதவியணி வெற்றிடங்கள் மற்றும் மிகை அவ்வாறே காணப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| எவ்வாறாயினும் 72 ஊழியர்களின் மிகை யொன்றும், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 9 ஊழியர்களும் அவதானிக்கப்பட்டது. | வேண்டும் | சேவைகள் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது |

**தலைப்பு – 333 கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம்**

| | மொத்த சொத்துக்கள் ரூபா | மொத்த பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 17,255,802 | 17,255,802 | 17,255,802 | முனைப்பழியற்ற |
| **2022** | 17,593,702 | 17,593,702 | 17,593,702 | முனைப்பழியற்ற |
| **2023** | 18,637,632 | 18,637,632 | 18,637,632 | முனைப்பழியற்ற |

| தொஇல | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கையின் ஆண்டு | தலைமை கணக்காய்வாளர் அதிபதியின் பரிந்தரை | நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அது தொடர்பான தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|---|
| 01 | அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும் மத்தியப்படுத்திய ஆவணவாக்கலின் மூலம் அரச சொத்துக்களின் முகாமைத்துவம், சொத்துக்கள் தொடர்பான கிரய முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புச் செய்தல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கிகரிக்கப்பட்ட பாதீட்டு பிரேரணை ஒன்றின் பிரகாரம் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது. காணி, கட்டிடம், மோட்டார் வாகனங்கள், கப்பல்கள், விமானங்கள், இயந்திரங்கள் | 2023 | | | |

முதலியவற்றை உள்ளடக்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியான அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும் மத்தியப்படுத்தி ஆவணமாக்குதல் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம் நிறைவேற்ற வேண்டிய முன்னணி செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தை தோற்றுவித்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் 06 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதும், மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கி மத்தியப்படுத்திய ஆவணவாக்கலினை மேற்கொள்வதற்கு கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு இயலாதிருந்தது. கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தினால் சொத்துக்கள் தொடர்பாக மத்தியப்படுத்திய ஆவணப்படுத்தல் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிலைமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | | | |
| (i) | அரச நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக மத்தியப்படுத்திய தகவல் தொகுதிக்குரிய தகவல்களை உள்ளீடு செய்ய வேண்டிய 1,773 அரச நிறுவனங்களை (அரச நிறுவனங்கள் மற்றும் பொது முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள்) 2021 திசெம்பர் 31 திகதி இனங்கண்டிருந்த போதும், அலுவலகத்தினால் அந் நிறுவனங்களிற்குரியதாக காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களை தகவல் தொகுதியினுள் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை | 2023 | கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தை இஸ்தாபித்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த மையப்படுத்தப்பட்ட தரவு அமைப்பை ஒரு நிகழ்நிலை தகவல் முகாமைத்துவம் முறைமை மூலம் நிறுவ 2017 முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, மேலும் நிகழ்நிலை நிதி சாராத சொத்து முகாமைத்துவ முறைமை (NFAMS) 2023.09.01 முதல் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 06/2023 மூலம் நிறுவப்பட்டது, மேலும் வாகனத் தகவல் 2023.09.01 முதல் அதன் முதல் தொகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது. | காணிகள் மற்றும் கட்டிடங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கிய தரவு முறைமை 2024 ஆம் ஆண்டு டிசம்ப்ர் 31 ஆம் திகதி வரையில் இற்றைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 2023 செப்டம்பர் 01 திகதி முதல் நிதியல்லா சொத்து முகாமைத்துவ தொகுதியை (NFAMS) இஸ்தாபித்த போதும், வாகன மொடியுலின் கீழ் அத்திகதியிருந்து மாத்திரம் காப்புச் செய்யப்படும் வகையில் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அழைப்பிக்கப்பட்டு இருந்தன. அவ்வாறாயினும் அரசிற்கு சொந்தமான கப்பல்கள், ஆகாய விமானங்கள், புகையிரதம், மக்கள் போக்குவரத்து பேரூந்து வண்டிகள் போன்ற, தகவல் தொகுதியிற்கு உட்படுத்த இது வரை இயலாதிருந்தது. | 2023 | விரைவில் தகவல்களை அழைப்பித்து நிதியல்லா சொத்து முகாமைத்துவ மறைமையயை ஸ்தாபிக்க நடவக்கை எடுக்க வேண்டும். | -மேற்படி- | வாகன மொடியுலின் கீழ், அரசாங்கத்திற்கு சொந்தமான கப்பல்கள், விமானங்கள் , ரயில்கள் மற்றும் பயணிகள் பேருந்துகள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களின் தகவல்களும் 2024 டிசம்பர் 31 ஆந் திகதி வரை தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்கப்படவில்லை. |
| (iii) | கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 மூலம் பொறிகள், இயந்திர உபகரணங்கள், நிர்மாணம், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களிற்கான தகவல்களை சமர்ப்பிக்குமாறு அறிவித்திருந்த | 2023 | மேற்படி- | - மேற்படி- | இயந்திர உபகரணங்கள், நிர்மாணம், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவற்றிற்கான தகவல்களை அரச நிறுவனங்களிடமிருந்து பெற்று உரிய தரவு முறைமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போதும், 2023 திசெம்பர் 31 திகதி வரை எந்தவொறு நிறுவனத்தில் இருந்தும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | | | 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நாளதுவரையாக்கப்படவில்லை. |
| (iv) | அரச நிறுவனங்களினால் வாகனம் அல்லாத ஏனைய சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் பராதீனம் செய்தல் தொடர்பான தகவல்கள் அலுவலகத்திற்கு அறிக்கையிடுவதற்கான முறைமையொன்றை 2024 செப்டம்பர் 04 திகதி வரை இஸ்தாபித்திருக்கவில்லை. | 2023 | சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் பராதீனம் செய்தல் தொடர்பான தகவல்களை உள்ளீடு செய்து நிதியல்லா சொத்து முகாமைத்துவ முறைமையை விரைவில் ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | - NFAMS என்பது நிகழ்நேரத் தரவைப் வழங்கும் ஒரு நிகழ்நிலை தகவல் முறைமையாக உள்ளதுடன் முதலாவது மொடியுல் ஆக வாகன மொடியுல் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏனைய நிதி அல்லாத சொத்து மொடியுல்கள் படிப்படியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | வாகனங்களைத் தவிர மற்ற சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் குறித்து அறிவிப்பதற்காக 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முறைமையொன்று காணப்படவில்லை. |
| (v) | 2023 ஆகஸ்ட் 09 திகதி அரச கணக்குகள் மீதான செயற்குழுவினால் வழங்கிய கட்டளை பிரகாரம் அலுவலத்தினால் NFAMS இற்கு தகவல்களை உள்ளீடு செய்ய ஒவ்வொறு சொத்துக்களிற்கும் நிகழ்நிலை (Online) தகவல் தொகுதியை செயற்படுத்தி பூரணப்படுத்த 2023 திசெம்பர் 31 முதல் 2025 | 2023 | தகவல்களை பெற்றுத்தராத அரச நிறுவனங்களிடம் இருந்து விரைவில் தகவல்களை பெற்று முறைமையை நாளாதுவரையாக்க வேண்டும். | NFAMS அமைப்பின் வாகன தொகுதியை செயல்படுத்துவதன் முன்னேற்றம் - அரச நிறுவனங்களின் (அரச நிறுவனங்கள், பொது முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்) தரவு உள்ளீட்டு புள்ளிகளில் (data entry points) 95 சதவீதம் இப்போது தகவல்களைப் பதிவு செய்துள்ளன. | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் மாத்திரம் அறிக்கையிடப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரையான கால வீச்சளவினுள் கால சட்டகமொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வாகன மொடியுலை 2023 செப்டம்பர் 01 இலிருந்து நடைமுறைப்படுத்தி 2023 திசெம்பர் 31 திகதியளவில் தகவல் தொகுதியை பூரணப்படுத்துவதாக குறிப்பிட்டிருந்த போதும், 2023 திசெம்பர் 31 திகதி வரை 110 அரச நிறுவனங்களின் வாகனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | | | |
| (vi) | கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தினால் அரசின் அனைத்து நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு பெறுமதிகளையும் உள்ளடக்கி மத்தியப்படுத்திய ஆவணத்தை தயாரித்திருக்காத காரணத்தால் அரச கணக்குகளில் காண்பிக்கப்படும் நிதியல்லாத சொத்து மீதியின் சரியான தன்மையை உறுதி செய்து | 2023 | அரசாங்கத்தின் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற நிதியல்லா சொத்துக்களின் பெறுமதியை சரியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் முறைமை தயாரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதியல்லா சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையில் (NFAMS) முதலாவது மொடியூலாக வாகன மொடியூல் அமுல்படுத்தப்பட்டதுடன் ஏனைய நிதியல்லா சொத்துக்கள் மொடியுலை படிப்படியாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் சகல நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பெறுமதியை உள்ளடக்கி மத்தியமயப்படுத்தப்பட்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்ள முடியவில்லை. | | | | |
| 02 | 2023 திசெம்பர் 31 இல் அலுவலகத்தின் 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவ் வெற்றிடங்களிற்கு இடையே 06 சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் காணப்பட்டன. அது அங்கீகார பதவி எண்ணிக்கையில் 50 சதவீதமானது. | 2023 | திணைக்கள கடமை பணிகளை மேற்கொள்வதற்காக அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்பி அல்லது அங்கீகார ஆளணினரை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அலுவலகத்தின் செயல்பாடுகளைப் பராமரிக்க இந்த வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அலுவலகத்தின் வெற்றிடங்கள் 13 காணப்பட்டன. |

**தலைப்பு - 334 பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்**

| | மொத்தசொத்துக்கள ரூபா | மொத்தபொறுப்புக்கள ரூபா | உரிமை மூலதனம ரூபா | அபிப்பிராயம |
|---|---|---|---|---|
| **2021** | 111,725,148.6 | - | 111,725,148.6 | தகைமையற்ற |
| **2022** | 133,113,115.07 | - | 133,113,115.07 | தகைமையற்ற |
| **2023** | 137,767,817.22 | - | 137,767,817.22 | தகைமையற்ற |

| தொ இல | கணக்காய்வுஅபிப்பிராயம் | அறிக்கை ஆண்டு | பரிந்துரை | நிறுவனத்தால் எடுக்கப்பட்டபாதுகாப்பு அளவீடுகள் | அறிக்கைதிகதியிலுள்ளவாறுபரிந்துரையின் அமுலாக்கல் நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | திணைக்களத்தின் நீண்டகாலம் சேவையில் இல்லாகஊழியர்களிடமிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறுஒருஆண்டிற்குமேலாகஅறவிடவேண்டியிருந்த உத்தியோகத்தர்களின் இறந்தமற்றும் இராஜனாமாசெய்தவர்களின் நிலுவையாக இருக்கின்றகடன் மீதிரூபா 346,480 ஆக இருந்தது. | 2023 | நிலுவைகடன் மீதியைஉடனடியாகஅறவிடப்படநடவடிக்கைஎடுத்தல் வேண்டும். | நிலுவையாக இருக்கின்றகடன் மீதியைநடவடிக்கைஎடுக்கப்படுகின்றன. | கடன் பிணைமுறிஊடாகரூபா 250,000 ஆனநீண்டகாலம் நிலுவையாக இருக்கின்றகடன் மீதிபிணைவைப்பாளரிடமிருந்துஅறவிடப்பட்டதுடன் மீதி 2023 திசெம்பர் 31 இல் நிறுவனம் மூடப்பட்டமையால் ரூபா 126,000 ஆனமீதிஅறவிடவேண்டியிருந்தது. |
| 2 | 2020 ஒக்தோபரில் ஆட்சேர்கப்பட்ட 34,605 பயற்சியார்களில் 22,306 மாத்திரம் 6 மாதகாலபயிற்சியின் பின்னர் மூன்றாவதுகட்டத்தைபூர்த்திசெய்திருந்ததுடன் 2022 அளவில் கொடுப்பனவுநிபந்தனைகும் நிறைவேற்ப்பட்டதுடன்பயற்சியைவெற்றிகரமாகபூர்த்திசெய்தவர்களிற்குNVQ 3சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் | 2021 2023 | NVQசான்றிதழைப்பெறாதவர்கள், அதைப்பெறாததறகானகாரணங்களைஎக்கண்டறிந்துநிவர்த்திசெய்யவேண்டியதுடன் அவற்றினைபூர்த்திசெய்வதற்குஉடனடிநடவடிகைகை எடுக்கப்படவேண்டும். | NVQசான்றிதழ் வழங்குவதற்கும்பயிற்சியைபூர்த்திசெய்தவர்களிற்குநிரந்தரநியமஙக்ள் வழங்குவதற்கும் நடவடிக்கைஎடுக்கப்படுகின்றது,ஆனால் நிரந்தரநியமனங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனம் மூடப்பட்டிருந்தஆயெ்ரீஅதேநேரம் நிரந்தரமாகநியமிக்கப்பட்டிருக்காதபயிற்சியாளர்கள் இன்னமும் இருந்தபோதிலும் பல்துறைஅபிவிருத்தபடையணிஉதவிபயிற்சியாளர்களின் நிர்வாகவெலைகள் ஒருங்கிணைந்தசேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்குமாற்றப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2022 மேஅளவில் பயிற்சிபூர்த்திசெய்யாதவர்களும் உள்ளனர். 2023 திசெம்பர் 31 ஆம்திகதியளவில் நிரந்தரநியமனம்பெறாதமற்றும் NVQசான்றிதழ்பெறாத 41 பல்நோக்குஉதவியாளர்கள் இருந்தனர். | | | | |
| 3 | 2021 இல் வேலைதேடுவோருக்குபொருத்தமான அரசாங்கவேழலகளைபயிற்சியளித்து ஒதுக்கியபின்னர் NVO 3 சான்றிதழ் வழங்குவதற்குஎதிர்பார்க்கப்பட்டபோதிலும் பயிற்சிகாலத்தின் பொதுவிலகியபயிற்சியாளர்களின் எண்ணிக்கை 2470 ஆக இருந்தது. அந்தபயிற்சியாளர்களிற்குசெலுத்தப்பட்டஒவ்வொருவருக்கும் மாதாந்தஊதியம் ரூபா 22,500 ஆனதுபயனற்றதாக இருந்தது. அந்தவிலகிச்சென்ற 2,470 பயிற்சியாளர்களிற்கானஒழுாதபடிரூபா 55.58 மில்லியனாக இருந்தது. 2022 இல் 100,000 வேலைநிகழ்ச்சித் திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் 2020 இல் சேர்க்கப்பட்ட 34,605 நியமனங்கள் NAITA இன் பயிற்சிநிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியிருந்ததுடன் அவர்களில் | 2021<br>2022<br>2023 | திணைக்களத்தின் குறித்தநோக்கங்கள் பயிற்சியாளர்கள் வெளியேறியமையால் அடையப்பட்டிருக்காததுடன் வெளியேறுதலை குறைப்பதற்குமுறையானநடவடிக்கைஎடுக்கப்படவேண்டும். பயிற்சியாளர் வெளியேறியமைக்குகுறிப்பிடப்பட்டகாரணங்கள் ஆய்வுசெய்யப்பட்டுஉடனடியானஅளவீடுகளைஎடுக்கப்படவேண்டும். | வெளியேறும் பயிற்சியாளர்களைகுறைப்பதற்குஅளவீடுகள் எதுவும் எடக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தைவிட்டுவெளியேறியபல்துறை அபிவிருத்திபடையணிஉதவிபயிற்சியாளர்களமற்றும் பயிற்சிபூர்த்தியாக்கப்பட்டமற்றும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காதபயிற்சியாளர்கள் இரண்டினதும் எண்ணிக்கைஆகும். நிறுவனம் மூடப்பட்டதிலிருந்து கணக்காய்விற்குஉள்ளபடியானதரவுகிடைத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அரசாங்கத்தால் மூலதன பங்களிப்பாக ரூபா 1,124,665,353,761 வழங்கப்பட்டிருந்த 13 பொது முயற்சிகளில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அப் பெறுமதி ரூபா 1,047,966,900,772 ஆக இருந்ததுடன் | 2023 | அரசாங்கத்தின் உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களில் நிதி நிலமையை | அரசாங்க உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களின் நிதி நிலைமைகளை | 2023 ஆம் ஆண்டின் வரையிலும் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் தேறிய சொத்துக்கள் (மொத்த சொத்துக்கள் – மொத்த வெளிப் பொறுப்புக்கள்) பெறுமதிகளின் மறை பெறுமதி ரூபா 630,632,144,273 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதிச் சொத்துக்களின் கீழ் இந்த மூலதன பங்களிப்பு காண்பிக்கப்பட்ட போதும் அப் பெறுமதி முழுமையாக பதிவழித்தல் (impairment) முழுமையாக வெளிப்பொறுப்புக்களின் கீழ் பேணி செல்கின்ற நிலைமைக்கு உட்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இதற்காக அடிப்படையாக தாக்கம் அளித்த உரிய நிறுவன நட்ட பெறுவனவின் காரணமாக நிறுவகிக்கப்பட்ட இலாபம் மறை பெறுமதியை கொண்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | | கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றின் பெறுமதியில் குறைவடையுமாயின் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உரிய பிரகாரம் உள்ளடக்குதல் வேண்டும். | ள கால ரீதியாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவற்றின் பெறுமதிகள் குறைவடைந்ததை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப் படும். | |
| 31 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,019,627,985,708 மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 892,034,785,542 ஆன அரசாங்கத்தின் மூலதன பெறுமதியுடன் 05 பொது முயற்சிகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 371,771,137,033 மாத்திரம் ஆகும். ஆதன் பிரகாரம் இந்த அரசாங்க தொழில் முயற்சிகளில் முதலீடு செய்யப்பட்ட மூலதன பங்களிப்பு பெறுமதி (impairment) குறைவடைந்து செல்கின்றமை அவதானிக்கப்பட்டது. | 2023 | மேற்படி | அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளில் நிதி நிலைமைகளை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி தேவையான திருத்தங்கள் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| 32 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட அரசாங்கத்தின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான அரசாங்க மூலதன பங்களிப்பு பெறுமதி ரூபா 2,165,981,657,905 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,121,653,720,125 அரசாங்கத்தின் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான | 2023 | மேற்படி | அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளில் நிதி நிலைமைகளை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி தேவையான | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அத்திகதியில் இந்த தொழில் முயற்சி நிறுவனங்களில் தேறிய சொத்துக்களின் மொத்த பெறுமதி ரூபா 1,669,676,388,290 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட மூன்று வகைகளுக்குரிய அரசாங்கத்தின் பங்களிப்பு அந்த நிறுவனங்களின் தேறிய சொத்துக்களுடன் ஒப்பிடும் போது ரூபா 451,977,331,835 இனால் அதாவது 21 சதவீதத்தால் வலுவிழந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | திருத்தங்கள் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 33 | 2022 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் முதலீடு செய்யப்பட்ட 32 நியதிச்சட்ட சபைகளுக்குரிய ரூபா 117,718,706,426 தேறிய இலாபம் உழைக்கப்பட்ட போதிலும் 36 அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான 30 கம்பனிகளுக்குரிய ரூபா 804,795,113,607 மற்றும் ரூபா 133,722,486,417 ஆக தேறிய நட்டம் உழைத்ததன் காரணமாக 98 சதவீதத்திற்குரிய ஒட்டுமொத்தமாக ரூபா 820,798,893,548 தேறிய நட்டம் உழைக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் படி 2022 ஆம் ஆண்டில் நடு ஆண்டு சனத்தொகை 22,181,000 ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான 98 தொழில் முயற்சிகளுக்காக 2022 ஆம் ஆண்டிற்காக செலவிடப்பட்ட ஒரு நபரின் தேறிய நட்டம் ரூபா 37,000 மாத்திரமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | 2023 | மேற்படி | அண்மைக் காலத்தில் பொதுத் திறைசேரியினால் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டிருந்த கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பில் பொருளாதாரத்தை நல்ல நிலைமைக்கு கொண்டு வருதல் தற்போது நட்டம் பெற்ற பொது முயற்சிகளில் கவனத்தில் கூடிய அளவில் இலாபம் உழைக்கும் நிலைமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர் காலத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபார பொது முயற்சி நிறுவனங்களுக்காக | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | செலவிடப்பட்ட ஒரு தனிநபர் தேறிய நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. | |
| 34 | 08 பொது முயற்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பு ரூபா 10,803 மில்லியனாக காணப்பட்டதுடன், அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 4,323 மில்லியனாக காணப்பட்ட காரணத்தால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அரசின் நிதிக்கூற்றுக்களினுள் மூலதனப் பங்களிப்பு ரூபா 6,480 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023/ 2022/ 2021 | அரச உரிமை தன்மையில் உள்ள நிறுவனங்களுடன் கால ரீதியில் மீதிகளை உறுதிப்படுத்தி பெற்று மதிப்பீட்டுக்கு உட்படுத்தி சரியான நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் கணக்குகளில் சரியான தன்மையை உறுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த வேறுபாடு ஏற்படுவதற்கு தாக்கமளித்த காரணங்கள் என்ன என்பதை இனங்காண்பதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் உரிய வேறுபாடுகளை சரியான பிரகாரம் இனங்கண்ட பின்னர் முறையான அங்கீகாரத்துடன் பிரதான பேரேட்டுக் கணக்குகளில் அறிக்கை இடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| 35 | ஸ்ரீ லங்கா இன்ஸ்சிடியூட் ஒப் பயோடெக்னொலொஜி பிரைவட் லிமிடெட் (Sri Lanka Institute of Biotechnology (Pvt) Ltd) என்ற நிறுவனத்தில் இருந்து கிடைத்த நேரடி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்கொன்றின் விலை ரூபா 10 ஆன 52,472,573 பங்குகள் பொது திறைசேரிக்கு சொந்தமாக இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் குறிப்புக்களில் பங்கொன்றின் விலை ரூபா 100 ஆன 200,000 பங்குகள் மூலதன பங்களிப்பாக | 2023 | மேற்படி | உரிய வரிசை அமைச்சின் செலவினத் தலைப்பின் உரிமை மூலதன செலவின விடயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மூலதனப் பங்களிப்பு பிரதான பேரேட்டுக் | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிறுவனங்களுக்குரிய மூலதன பங்களிப்பு ரூபா 504,725,732 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | | | கணக்குகளின் அறிக்கையிடாமையின் அடிப்படையில் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டின் போது உரிய அறிக்கை இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| 36 | 02 கம்பனிகளின் உரிமை பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அதன் பேரளவு பெறுமதியின் பிரகாரம் கணிப்பிடும் போது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பங்குப் பெறுமதி ரூபா 5,141 மில்லியன் ஆக இருந்த போதிலும் அது அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 14,476 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் மூலதன பங்களிப்பில் ரூபா 9,335 மில்லியன் இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 2023/ 2022 | மேற்படி | Bogala Graphite Lanka PLC இல் உரிய கணிப்பீடுகளை சரி செய்வதற்கு குறிப்பிடுகின்றோம். மிகின் லங்கா (தனியார்) கம்பனியில் இருந்து அரச வங்கிகளுக்க செலுத்த வேண்டிய கடனை அறவிட முடியாதிருந்தமையால் அந்த கடனுக்காக அரசாங்கத்தால் திறைசேரி பிணைமுறி விநியோகிக்கப்பட்டமையால் அந்த கடனுக்கான வருடாந்த வட்டி உரியஅரச வங்கியின் மூலம் அரசாங்கத்திற்கு வழங்கப்படுகி | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ன்ற வரியில் இருந்து (Levy) பதிவளித்தல் தவிர மிகுதி தொகை மாத்திரம் அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. இதன் மூலம் மிகில் லங்கா (தனியார்) கம்பனிக்காக இருந்தமையால் மற்றும் மூடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட மிகின் லங்கா (தனியார்) கம்பனியுடன் அரசாங்கத்திற்கு தற்போது உள்ள ஒரே ஒரு கடப்பாடு மூலதனமாக இருந்தமையால் அந்தத் தொகையை மூலதனமாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | |
| 37 | 1994 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் 30/94 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், வெளிநாட்டு மானியம் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும், மாதிரி பரிசோதனையின் மீது பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம், 2023 ஆண்டினுள் அவ்வாறு பொது திறைசேரியை அறிவூட்டாது 11 நிறுவனங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 22,210 மில்லியன் ஆன வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதிக்கு | 2023/ 2022 | சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுத்தல், அமைச்சின் கீழ் வருகின்ற பல்வேறு திணைக்களங்களுக்கு இடையே சரியான தொடர்பு மற்றும் இணைப்பினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை | எதிர்காலத்தில் மொத்த மாணியம் தொடர்பாக அமுல்படுத்த வேண்டிய முறை தொடர்பாக 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் சட்ட ரீதியான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்பாடு பெற்றுக் கொண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | எடுத்தல் மற்றும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கின்ற தரப்பினர்களுக்கு உரிய பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரகாரம் உரிய கட்டளை அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இந்த திணைக்களத்தில் இருந்தும் சுற்றறிக்கை மூலம் மொத்த மாணியம் தொடர்பான நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 38 | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் மாதம் 12 திகதி வெளியிடப்பட்ட இடைக்கால வெளிநாட்டு கடன் செலுத்துவதை இடைநிறுத்தும் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஏப்ரல் மாதம் 13 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதிக்கு 401 கடன் உடன்படிக்கைகளிற்கு உரிய கடன் தவைணகளில் உள்ளடக்கப்பட்ட கடன்செலுத்துதலாக ரூபா 1,439,066 மில்லியனும், வட்டியாக ரூபா 673,964 மில்லியனும் செலுத்துவதை இடைநிறுத்தியிருந்த போதும் அது தொடர்பாக அரசின் நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் செய்திருக்கவில்லை. | 2023/ 2022 | நிதிக்கூற்றுக்களின் பயனர்களுக்கு முக்கியமான தகவல்களை பொருத்தமாக வெளிப்படுத்துதல் வேண்டும். | எதிர்காலத்தில் வெளிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிலைமை காணப்பட்டது. |
| 39 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெற்ற ஒன்றிணைந்த நிதிய மறைப் பெறுமதியான ரூபா 990,490,932,444 மற்றும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கில் மறைப் பெறுமதியான ரூபா 14,040,298,131,574 கூட்டப்பட்டு ரூபா 15,030,789,064,018 பொது நிதியம் (General Fund) உரிமை மூலதனம்/ தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் | 2023 | மேற்படி | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிதி அறிக்கையிடல் முறைமையில் இடம்பெறுகி | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த நிலைமை காணப்பட்டது. |

கூற்றில் குறிப்பிடப்பட்ட போதிலும், அந்த கணக்கீடு செய்தல் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ன்ற குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்காக அரசாங்கக் கணக்குக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட குழுவின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் திரண்ட நிதியத்தின் பெறுமதி மற்றும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் பெறுமதிகளின் கூட்டுமொத்த பொது நிதியமாக (General Fund) ஆக குறிப்பிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உரிமை மூலதனம் / தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றின் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி மற்றும் அதற்குரிய ஆண்டில் ஏற்பட்ட மாற்றங்களைப் போன்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டிற்காகவும் ஆரம்ப மீதி மற்றும் ஆண்டில் இடம்பெற்ற வேறுபாடுகளை உள்ளடக்க வேண்டியிருந்தமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட திரண்ட நிதியத்தின் மீதி மற்றும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் மீதி மொத்தக் கணக்கில் சேர்த்துக் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி | |
| 40 | நிதிக்கூற்றுக்களில் அரசின் உரிமை பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடு மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடாக வகைப்படுத்தியிருக்கவில்லை. மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் உரிமையின் பெறுமதி அவற்றின் பெயரளவு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அவற்றின் 2023 திசெம்பர் 31 திகதியிலான சந்தை பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2023/ 2022 | மேற்படி | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சந்தைப் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |
| 41 | 2021 இன் 12 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் மற்றும் 2013 இன் இலக்கம் 15 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் திருத்திய 2003 | 2023/ 2022/ 2021 | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட | 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் மூலம் 2003 | மேற்படி |

இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் பிரகாரம், ஏதேனும் ஆண்டு இறுதியில் காணப்பட முடியுமான உச்ச பொறுப்பு பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்தை விஞ்சக்கூடாத போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையில் அவ் எல்லை 104.06 சதவீதம் ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| **பொறுப்புக்கள்** | **2023 திசெம்பர் 31 திகதியன்று பொறுப்புக்கள் பெறுமதி * ரூபா பில்லியன்** |
|---|---|
| ---------- | ----------- |
| வங்கி மேலதிக பற்று | **80** |
| மத்திய வங்கி முற்பணம் | **-** |
| அரசாங்க கடன்கள் | **29,150** |
| நிதிக்கூற்றுக்களினூடாக கணக்கீடு செய்யப்படாத பொறுப்பு கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்- | **15** |
| மொத்த பொறுப்புக்கள் | **29,245** |
| மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | **28,103** |
| **மொத்த பொறுப்புக்கள் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக(%)** | **104.06** |

* பொது திறைசேரியின் பிணைமுறி மீது பொது முயற்சிகள் மூலம் பெற்றுக் கொண்டுள்ள கடனிற்காக வங்கிக்கு வழங்கியுள்ள பிணைமுறி மற்றும் நிவாரணக் கடித பெறுமதியான ரூபா 2,034 பில்லியன் மற்றும் அமைச்சு, திணைக்களம் மற்றும் விஷேட செலவு அலகுகளில்

வேண்டும்.

இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்புக்கள்) சட்டம் கலைக்கப்பட்டுள்ளது. அதற்கு மேற்கூறப்பட்டவாறு காணப்பட்ட அரசாங்க நிதி விதிக்குப் பதிலாக இந்தப் புதிய சட்டத்தின் மூலம் அரச நிதி விதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த புதிய சட்டத்தில் அரச கடன்கள் தொடர்பாக அரச நிதி விதி ஒன்று உள்ளடக்கப்படாது இருந்த போதும் அரச கடன் நிலைபேறான மட்டத்தில் குறைத்து பேணிச் செல்வதற்கு உறுதிப்படுத்துதல் நிதி முகாமைத்துவத்திற்குரிய நோக்கமாக அந்த சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வருமான மூலங்கள் அரச நிதிக் கொள்கையின் மூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பித்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றின் பிரகாரம் ரூபா 117 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் மேற்குறிப்பிட்ட பொறுப்புக்களிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | அரசாங்கத்தின் கடன் பெறும் தேவையைக் குறைத்து அரச கடன்களைக் குறைத்துக் கொள்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| 42 | “2006 ஆண்டின் இறுதியில் வரவுசெலவுத் திட்ட இடைவெளி, அவ் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்ஞாததாக மற்றும் அம் மட்டத்தை அதன் பின்னர் தொடர்ந்து பேணிச் செல்வதற்கு பொறுப்பேற்று அரச கடனை தூரநோக்கு மட்டம் வரை குறைத்தல்” அரசாங்கத்தினால் கடைபிடிக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த நிதி முகாமைத்துவத்திற்கு அடிப்படையான நோக்கமாக 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவில் காட்டப்படுகிறது. எனினும் மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளியை, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு மதிபிடவும், மீளாய்வாண்டு இறுதியிலான உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு பேணிச் செல்ல நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு. | 2023/ 2022/ 2021 | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2003 இன் 03 ஆம் இலக்க நிதிச் சட்டம் (பொறுப்புக்கள்) சட்டம் 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளதுடன் இந்த புதிய சட்டத்தின் மூலம் பாதீட்டு நிலுவையின் அடிப்படையில் அல்லாமல் ஆரம்ப மீதியை அடிப்படையாகக் கொண்ட அரச நிதி விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது 0.6 சதவீத ஆரம்ப கணக்கின் மிகையும் பெற்றக் கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் | மேற்படி |

| மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | பாதீட்டு இடைவெளி | மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளி, மதிப்பி | உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, |
|---|---|---|---|

| | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | டப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக | மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| ரூபா பி. | ரூபா பி. | ரூபா பி. | % | % |
| 28,103 | 3,783 | 2,584 | 13.46 | 9.19 |

2024 ஆம் ஆண்டின் போது 0.8 சதவீத ஆரம்ப மிகையும் 2025 ஆம் ஆண்டு முதல் 2.3 சதவீத ஆரம்ப மிகையும் பெற்றக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 43 | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளபடியாக அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 99 கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 3,782 மில்லியனான வரவு மீதி தீர்க்கப்படாமல் காணப்பட்டது. அதில் ரூபா 50 மில்லியன் மீதியானது பல ஆண்டுகளாக நிலவி வருவதுடன், அம் மீதிகளை தீர்த்துக் கொள்ள 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023<br>2022<br>2021 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காணப்படுகின்ற கட்டுநிதி தீர்த்து வைத்தல் பொறுப்பு உரிய நிறுவனத்திற்கு உரியதாக இருந்ததுடன் இந்தத் திணைக்களத்தின் பணிப் பொறுப்புக்களாக அந்த நடவடிக்கைகள் மேற்பார்வை செய்தல் மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் இந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்காக தேவையான ஆலோசனைகள் உரிய நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனத்துட | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ன் கலந்துரையாடல் பல தடவைகள் நடாத்தி தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| 44 | மீளாய்வாண்டில் 07 பங்களிப்பாளர்களிடம் இருந்து 10 செயற்திட்டங்களுக்கு உரியதாக கிடைத்திருந்த போதும், உரிய நோக்கத்திற்கு ஈடுபடுத்தாமல் கூட்டுமொத்தமாக ரூபா 73,426,055 வெளிநாட்டு மானியம் மீண்டும் வழங்குனருக்கு அனுப்பி வைக்கபட்டிருந்தது. | 2023<br>2022 | இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கின்ற வெளிநாட்டு மாணியங்கள் உச்ச அளவில் உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவ்வாறான நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களமும் நடவடிக்கைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| 45 | அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட 07 திறைசேரி முற்பணக் கணக்குகளில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 1,293,506,349 மீதியொன்று தீர்த்து வைக்கப்படாமல் பல வருட காலமாக தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்தது. | 2023<br>2022 | நீண்காலமாக தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற முற்பணக் கணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | மேற்படி |
| 46 | அரசாங்க உத்தியோகத்தர்களின் 14 முற்பணக் கணக்குகளின் கூட்டுமொத்தமான ரூபா 9,027,522 மீதி மற்றும் மேலும் 02 முற்பணக் கணக்குகளின் கீழ் கூட்டுமொத்தமான ரூபா 408,233 ஆன மறை மீதி என்பன தீர்த்து வைக்கப்படாமல் பல வருட காலமாக தொடர்ச்சியாக பேணிச் செல்லப்பட்டிருந்தது. | 2023<br>2022 | மேற்படி | இந்த மீதி தொடர்பாக திணைக்களத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற பழைய தகவல்கள் பகுப்பாய்வு செய்து செயலிழந்த நிலைக்குக் காரணங்கள் சரியாக | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| 47 | 2008 மே 22 திகதி நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1550/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் 7 பந்தி பிரகாரம் இலங்கையிலிருந்து ஆரம்பமாகும் விமான பயணத்திற்காக இலங்கைக்கு வெளியில் விநியோகிக்கும் அல்லது விற்வனை செய்யும் ஒவ்வொறு பயணச் சீட்டு தொடர்பாகவும் அவ்வாறான பயணச் சீட்டு விற்பனை செய்த முறை மற்றும் அல்லது விநியோகிப்பதை கவனிக்காது அ.டொ 60 மிகை அறவீடு அல்லது அத்தொகைக்கு சமமான தொகை அறவிட வேண்டுமெனவும், அவ் வர்த்தமானியில் 8 பந்தி பிரகாரம் அவ்வாறு திரட்டும் மிகை அறவீட்டுத் தொகை சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கின்றவாறு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2008 ஆகஸ்ட் 01 திகதி முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை சிவில் விமான சேவை அதிகாரசபையினால் மிகை அறவீடாக ரூபா 22,113 மில்லியன் திரட்டியிருந்த போதும் அத்தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. மேலும் இந்த மிகை அறவீட்டை தொடர்ந்தும் அறவிட இயலுமை காணப்படுவதாகவும், அம் மிகை அறவீட்டுத் தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கும் சட்டக் கடப்பாடு காணப்படுவதாகவும் குறிப்பிட்டு 2017 ஏப்ரல் 07 திகதிய சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கடிதத்துடன் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவூட்டப்பட்டிருந்தார்.<br>அவ்வாறாயினும், கணக்காய்வு திகதியளவிலும் இம் மிகை அறவீட்டுத் தொகையை சிவில விமான சேவைகள் அதிகாரசபையிடமிருந்து அறவிட பொது முயற்சிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023<br>2022<br>2021 | அரசாங்க வருமானங்களை ளச் சேகரித்தல் தொடர்பாக முறையான திட்டம் ஒன்றைத் தயாரித்து அமுல்படுத்துதல் வேண்டும். | 2023 நவம்பர் மாதம் முதல் 2024 மார்ச் மாதம் வரை வெளிநாட்டு விற்பனை மிகைக் கட்டண வருமானம் ஆன ரூபா 1,766,269,517 தொகையில் ரூபா 393,000,000 தொகை நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் ரூபா 1,373,269,517 தொகை திரண்ட நிதியத்தில் 2024.05.10 ஆந் திகதி செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருமானம் இரண்டு வாரங்கள் வீதமான இரண்டு காலாண்டிற்கு விமான சேவைகள் நிறுவனத்தில் இருந்து அறவிடப்படுவதுடன் இரண்டாவது காலாண்டின் நிதி பெறுவனவுகள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் | 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2023 நவம்பர் வரையான காலப் பகுதிக்குரிய பணத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | திகதியாக இருந்தமையும் அதன் பிரகாரம் அடுத்து வரும் மாதங்களுக்குரிய அனுப்புதல்கள் ஏதாவது மாதத்தின் இறுதியில் அடுத்து வரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 48 | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 190,789,890,831 உப கடன் மீதி பெறவேண்டியதாக காணப்பட்டது. உரிய நிறுவனம் உப கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக 03 நிறுவனங்களுக்குரிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,316,324,489 நிலுவை உப கடன் மீதி காணப்பட்டது. | 2023<br>2022 | அரச உபகடன்களை வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் உபகடன் சேவையிடல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். | 2024 இன் 33 ஆம் இலக்க அரச கடன் முகாமைத்துவ சட்டத்தை அமுல் படுத்துதலுடன் கடன் ஆபத்தின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கடன் பெறுநர்கள் இந்த நிதி வசதியீனத்துடன் இல்லாதிருந்தமைக்கு பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மாத்திரம் உப கடன் கடன் விநியோகிக்கப்படுகின்றது. | 2024.09.30 ஆந் திகதி வரையில் அந்தக் கடன் தொகையில் ரூபா 3,866,667 தொகை மாத்திரம் இந்த ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 49 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப கடனுக்காக கிடைக்க வேண்டிய வட்டி பெறுமதி ரூபா 9,439,025,443 ஆக இருந்ததுடன், 03 நிறுவனங்களுக்குரிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட அறவிட வேண்டிய வட்டி பெறுமதியின் கூட்டுமொத்தம் ரூபா 912,059,388 ஆக இருந்தது. | 2023 2022 | மேற்படி | மேற்படி | இதுவரையில் உபகடனுக்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 50 | 2023 சனவரி 01 ஆம் திகதி வரையில் 02 நிறுவனங்களுக்குரிய உப கடன் உடன்படிக்கைகள் 04 இன் கீழ் காணப்பட்ட உப கடன் மீதிகளின் கூட்டு மொத்தமான ரூபா 114,487,221 தொகையில் மீளாய்வாண்டின் போது எந்தவொரு நிலுவைப் பணத்தையும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | 2023 | மேற்படி | மேற்படி | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலுவை உப கடன் மீதி அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| 51 | 2023 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் மூலம் எந்தவொரு நிதிஏற்பாடும் பெற்றுக்கொள்ளாமல் 2022 மார்ச் 31 ஆம் திகதி முதல் 2022 யூலை 22 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் நாட்டில் நடைபெற்ற நெருக்கடியான நிலைமையின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட ஆதனங்களுக்கு ஏற்பட்ட இழப்பீடு தொடர்பாக 2022 இன் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் 6(1) பிரிவில் குறிப்பிடப்பட்ட குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர சந்தர்ப்ப பொறுப்புக்கள் செலவின தலைப்பின் மூலம் செலவின தலைப்பு 130 அரசாங்க பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கிடைத்த குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி 41 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ரூபா 1,050,339,626 தொகை மீளாய்வாண்டில் இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 | மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டை முழுமையாக இனங்கண்டு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாட்டை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் ஏதாவது வருடம் ஒன்றில் பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது இவ்வாறான இழப்பீட்டிற்காக முழுமையான இழப்பீடு மதிப்பீடு செய்யும் இயலுமை காணப்படுமாயின் மற்றும் அந்த இழப்பீடுகளை எதிர் வரும் ஆண்டு வரை காலம் தாழ்த்துவதற்கு முடியுமாக இருக்குமாயின் அதற்குத் தேவையான ஏற்பாடுகள் எதிர்வரும் ஆண்டின் | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலமையில் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 52 | பொது முயற்சிகளை மீள் கட்டமைப்பதற்குரிய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் பொது முயற்சிகள் மீள் கட்டமைப்பு அலகொன்று ஸ்தாபித்து 2022 திசெம்பர் 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பொது முயற்சிகளை மீள்கட்டமைப்பதற்குரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. | | | | |
| (i) | அரசாங்கத்திற்கு சொந்தமான பொது முயற்சிகள் மறுசீரப்பு கொள்கையின் 02 ஆவது மூலதத்துவங்களில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிர்வாக கம்பனியை ஸ்தாபித்தல் மற்றும் 2023 மே 15 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட இலக்கம் MF/036/CM/2023/107 மற்றும் 2023 மே 08 ஆம் திகதிய அமைச்சரவை குறிப்பில் 4.2 மற்றும் 4.3 பந்தியின் பிரகாரம் அமைச்சரவை குறிப்பு இணைப்பு 02 மற்றும் 03 இல் பட்டியல் இடப்பட்டுள்ள 72 நிறுவனங்களை மீள் கட்டமைப்பதற்காக பிடிப்புக் கம்பனி (HOCO) இற்கு அதன் ஒன்றிணைந்த கம்பனியாக கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மீள் கட்டமைப்பதற்கான கட்டுப்பாட்டு கம்பனி (HOCO) ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பொது முயற்சிகள் மறுசீரமைப்புச் சட்டம் இன்னும் வரைவுக் கட்டத்தில் காணப்படுகின்றமையால் துணைக் கம்பனி இது வரை ஸ்தாபிக்கப்படவில்லை. | இது வரையிலும் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) | மேலும், அந்த பிடிப்புக் கம்பனிக்கு (HOCO) கையளித்து மீள் கட்டமைப்பதற்கு மேற்கூறப்பட்ட குறிப்பில் இணைப்பு 02 பட்டியலில் குறிப்பிடப்பட்ட 08 நிறுவனங்களில் 07 நிறுவனங்கள் தற்போது வரையில் கட்டுப்பாட்டு கம்பனிக்கு கையளிக்காமல் பொது முயற்சிகளை மீள் கட்டமைப்பின் கீழ் அரசாங்கத்திற்குரிய பங்குகளை அகற்றும் (Divesting) செயற்பாடுகளுக்காக கொடுக்கல் | 2023 | மேற்படி | முன்னாள் அரசாங்கத்தின் முன்னுரிமையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 07 பொது முயற்சிகள், அரசாகத்திற்குச் சொந்தமான பங்குகளை அகற்றும் செயற்பாடுகள் இதுவரை | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாங்கல் ஆலோசனையாளரை தெரிவு செய்து கேள்வி கோரும் செயற்பாடுகளில் சில கட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தமையும், அதன் கீழ் உள்ள ஒரு நிறுவனம் சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | | முடிவடைந்திருக்கவில்லை. ஹில்ட்டன் கொட்டலுக்குரிய கலந்துரையாடல் மட்டத்தில் காண்பிக்கப்பட்ட போதும் வரையறுக்கப்பட்ட லங்கா கொஸ்பிட்டல் கோப்பிரேசன் நிறுவனத்திற்குரிய முன்மொழிவுகளை பூர்த்தி செய்தல் இறுதிக் கட்டம் வரையும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |
| 53 | திறைசேரி செயற்பாட்டு நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக ஒன்றிணைந்த மென்பொருள் முறைமையொன்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிற்காக ஒன்றிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (ITMIS) அறிமுகப்படுத்துதல் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ஒட்டுமொத்த முதலீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 7,920 மில்லியனுக்கு சமமான அ.டொலர் 60 மில்லியன் ஆகும். 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அண்ணளவாக 13 வருட காலம் கடந்திருந்ததுடன், கணக்காய்விற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ரூபா 5,647 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த முறைமை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப பிரதான செயற்பாடுகளில் 13 துறைகளை முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படுத்தும் நிலைமைக்கு உட்படுத்தியிருக்கவில்லை. எனினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ITMIS | 2023 | தற்போதும் பின்னடைவிற்கு உட்பட்டுள்ளமையால் முறைமையினை விரைவாக முழுமையாக அபிவிருத்தி செய்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முறைமையின் பிரதான 08 செயற்பாடுகள் ITMIS பரவலாக்கலுக்கு உரிய அரசாங்கத்தின் செலவினத் தலைப்பு 172 இல் 164 இற்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது. கொவிட் தொற்று நோய் நிலைமை, சமூக மற்றும் நிதி நெருக்கடிகளின் காரணமாக நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமை, மின்சாரம் மற்றும் போக்குவரத்து சேவைகள் வீழ்ச்சியடைந்த | தற்போது வரையில் ITMIS முறைமை முழுமையாக அமுல்படுத்தப்படாது இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. |

முறைமை தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 43,887,382 மற்றும் அ.டொலர் 989,103 தொகையும் உரிய கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

மை, முறைமைகள் தொடர்பாக உள்ளக ரீதியிலும் வெளியக ரீதியிலும் விசேட நிபுனர்கள் / குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் போன்றவை தாமதத்திற்கு காரணமாக இருந்தது. ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட பயணர்களின் அனுமதிப் பத்திரம் (User Licenses) 5000 உம் தற்போது பயன்படுத்தப் படுகின்றமையால் மேற்கூறப்பட்ட மிகுதி நிறுவன முறைமைகளுக்கு சேர்த்தல் தாமதம் அடைந்திருந்தது. இதற்காக தேவையான மிகுதி அனுமதிப் பத்திரங்கள் எதுவும் மேலதிக செலவினம் இன்றி பெற்றுக் கொள்வதற்கு அமைச்சின் சேவை வழங்குனருடன் கலந்துரையாடி உள்ளதுடன் முறைமையின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உடன்படிக்கை யினை நாளதுவரையா க்கிய பின்னர் அடுத்து வரும் ஆண்டின் ஆரம்பத்தில் இந்த அனுமதிப்பத்திர ங்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்பட் டுள்ளது. | |
| 54 | ITMIS ஆரம்பத்தில் இருந்து அது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சம்பள முகாமைத்துவ செயற்பாட்டு துறைகள் ஸ்தாபித்து அமுல்படுத்தாமல் 2016 ஆம் ஆண்டின் போது e-Payroll பெயருடைய ஏனைய சம்பள முகாமைத்துவ முறைமையொன்று நிதி அமைச்சுக்கு மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 5,704,871 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | 2023 | பொருளாதார நிலைமை மற்றும் செயற்திறன் தன்மை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி மொத்த அரச துறைக்காகவும் சம்பள முகாமைத்துவ முறைமை ஒன்றை அமுல்படுத்துவ தை விரைவுபடுத்து தல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் நடைபெற்ற அமைச்சின் கொள்கை ரீதியான கூட்டத்தின் போது மொத்த அரசாங்கத் துறைகளுக்கா கவும் சம்பள முகாமைத்துவ த்திற்காக தனிப்பட்ட மென்பொருள் ஒன்றை வழங்குவதற் கு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் e-payroll சம்பள முகாமைத்துவ முறைமை தற்போது நிதி அமைச்சிலும், திறைசேரி திணைக்களத் தில் பரிசோதனை மட்டத்தில் அமுல்படுத்தப் படுகின்றது. | இதுவரையில் e-payroll சம்பள முகாமைத்து வ முறைமை நிதியமைச்சி லும் திறைசேரித் திணைக்களத் திற்கும் மாத்திரம் அறிமுகப்படு த்தப்பட்டுள்ள து. |
| 55 | 2023 திசெம்பர் 31 திகதி சமர்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிற்கான (8493) காலப் பகுப்பாய்வு அட்டவணை பிரகாரம், | 2023 | மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காக விரைவாக | இந்த கடன் மீதிகள், தாபன விதிக் கோவை, | மீளாய்வாண் டின் இறுதி வரையிலும் நீண்ட கால |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாகாணசபைகளுக்கு இடமாறிச் சென்ற உத்தியோகத்தர், கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் மாகாணசபைக்கு நிறந்தரமாக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர், மரணித்த உத்தியோகத்தர், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கடமை தடைவிதித்த உத்தியோகத்தர், கடமையை விட்டுச் சென்ற/ முடிவுறுத்திய உத்தியோகத்தர் இரட்டை அடிப்படையில் இடமாற்றம், வெளிநாடு சென்ற/ உள்நாட்டு விடுமுறை பெற்ற மற்றும் ஏனைய வகையின் கீழான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகளிற்கிடையிலான கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 112,939,218 ஆக இருந்ததுடன் 10 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 277,066,082 ஆக இருந்தது. | | நடவடிக்கை எடுத்து காணப்படுகின்ற முறைமையை விருத்தி செய்தல் வேண்டும். | நிதிப்பிரமானம் மற்றும் காணப்படுகின்ற சுற்றறிக்கை ஏற்பாடுகளைப் பின்பற்றி தீர்த்து வைத்தல் அந்த அந்த நிறுவனங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். காலாண்டு ரீதியில் அந்த நிறுவனங்களின் செயல் முன்னேற்றத்தைப் பெற்று கடன் மீதிகள் அறவிடும் செயல்முன்னேற்றம் பரீட்சித்து தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி தொடர்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | ரீதியில் தீர்த்து வைக்கப்படாத மீதிகள் அவதானிக்கப்பட்டது. |
| 56 | 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் 17 அரசாங்க தொழில் முயற்சிகளுக்குரிய நடைமுறை விகிதம் நலிவான நிலையில் காணப்பட்டது. விசேடமாக இலங்கை விமான கம்பனியின் நடைமுறை விகிதம் 0.15 ஆன மிகவும் குறைந்த பெறுமதியை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த அரசாங்க இந்த பொதுமுயற்சிகளின் திரவத் தன்மை கஸ்டமான நிலைமைக்கு முகங்கொடுத்தல் கூடிய ஆபத்துடன் உள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. | 2023 | அரசாங்கத்தின் உரிமைத் தன்மையில் உள்ள நிறுவனங்களில் நிதி நிலைமைகளை கால ரீதியில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி தேவையான உரிய நடவடிக்கைகளை | பொது முயற்சிகளின் முதலீட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பில் வரையறுக்கப்பட்ட நிதித் தேவைகள் மறைமுகமாகத் தாக்கமளித்திருந்தது. எனினும் | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலைமையை காணக் கூடியதாக இருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுப்பதற்கும், அவ்வாறே பெறுமதிகள் குறைவடைதல் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் உரிய பிரகாரம் வெளிப்படுத்தப் படல் வேண்டும். | பொது முயற்சிகளினால் முகங்கொடுக்கின்ற திரவத்தன்மை பிரச்சனைகளை முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான நிதி சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| 57 | 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை 16 பொது முயற்சி தொடர்பாக மிகை மூலதன நிலைமை அவதானிக்கப்பட்டது. இதில் சில நிறுவனங்களில் அரசாங்கத்தின் மூலதனத்தை விட செலுத்துவதற்குள்ள நீண்டகால கடன் உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தது. மேலும் அரசாங்கத்தின் மூலதன பங்களிப்பு மறை பெறுமதியாக கொண்டுள்ள பொது முயற்சிகளும் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனங்கள் முழுமையாக நீண்ட கால கடனின் மூலம் நிதியேற்றம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த சகல நிறுவனங்களும் உயர்ந்த ஆகக் கூடிய நிதி ஆபத்திற்கு (Financial Risk) தொடர்ச்சியாக காணப்பட்டமை தொடர்பாக அதிக ஆபத்திற்கு முகங்கொடுத்து இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | 2023 | மேற்படி | பொது முயற்சிகளின் நிதி ஆபத்தினை குறைத்துக் கொள்வற்காக 2023 ஆம் ஆண்டு முதல் மறசீரமைப்பு மேற்கொள்ளப் படுவதுடன் அதன் விளைவாக அதிக திரவ நிலமையினை நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதற்கான இயலுமை ஏற்பட்டுள்ளது. | மேற்படி |
| 58 | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான வியாபாரங்களில் மூலனப் பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 241,651 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 34,090 மில்லியன் அதாவது 14 சதவீதம் ஒவ்வொரு நிறுவனங்களினதும் நடைமுறை வடிவத்தில் அதாவது கடன் மற்றும் கடன் வட்டி செலுத்துதல் மற்றும் சம்பளம் மற்றும் வேதனங்களை | 2023 | மீண்டெழும் வடிவில் உள்ள செலவினங்களைச் செய்வதன் மூலம் நிறுவனங்களின் மூலதன பங்களிப்பை அதிகரிக்காதிருந்தமையால் | இந்த நிறுவனங்கள் யாவற்றிலிருந்தும் முழுமையான உரித்து பொதுத் திறைசேரிக்கு உரியதாகும். அதன் பிரகாரம் | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகைகளை உள்ளடக்கி இருந்தது. | | அதற்காக உரிய திட்ட முறைமை ஒன்று பின்பற்றப்படல் வேண்டும். | அந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற தொழிற்படு மூலதனப் பிரச்சனைகள் அல்லது ஏனைய மீண்டெழும் வடிவிலான செலவினங்களுக்காக தேவையான நிதிப் பங்களிப்பு பொதுத் திறைசேரியினால் வழங்கப்படல் வேண்டும். | |
| 59 | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான 05 பொது முயற்சிகளுக்காக ரூபா 176 மில்லியன் மூலதன பங்களிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக திறைசேரிக்கு உரித்தான பங்குகளின் எண்ணிக்கையில் மாற்றம் அடைந்திருக்கவில்லை. | 2023 | அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பங்குகளில் முதலீடுகளுக்குரிய பங்குச் சான்றிதழை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பங்குச் சான்றிதழை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு உரிய விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது. |
| 60 | மிஹின் லங்கா (தனியார்) கம்பனி கலைத்தல் தொடர்பாக இலக்கம் MOF/DG/LAD/CO/142/2017 மற்றும் 2017 ஒக்டோபர் 30 ஆம் திகதிய அமைச்சரவை குறிப்பில் முன்மொழிவு இலக்கம் (அ), (ஆ) மற்றும் (இ) இற்கான இலக்கம் அமப/17/2383/733/026-1 மற்றும் 2017 நவம்பர் 08 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி செயலாளரால் கம்பனியை கலைப்பதற்காக விஷேட முன்மொழிவொன்று அங்கீகரிக்கப்பட்டு வணிக நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த கோரிக்கையின் படி 2018 மார்ச் 18 ஆம் திகதி கலைப்பாளர் | 2023 | நிதியத்தை வழங்கும் போது அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய பாதகமான நிலைமையினைக் குறைக்கும் வகையில் காணப்படுகின்ற நிலைமையில் முறையான மதிப்பீட்டுடன் மேற்கொள்ளல் வேண்டும். | இவ்வாறான நிறுவனங்களைக் கலைக்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து மூடும் சந்தர்ப்பம் வரையிலும் திறைசேரி கடப்பாடுகளுக்காக எடுக்க வேண்டிய செலவினங்களுக்காக தேவையான நிதியேற்பாடுக | மேற்படி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட நிலைமையின் போது மக்கள் வங்கியிலிருந்து அந்த நிறுவனம் பெற்ற கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி செலுத்துவதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 272 மில்லியன் மற்றும் ரூபா 441 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 713 மில்லியன் ஆன மூலதன பங்களிப்பொன்று மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியில் இருந்து வழங்கப்பட்டிருந்தது. | | | ள் பொருத்தமான செலவின விடய குறியீட்டின் கீழ் வழங்குவதற்கு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்துடன் கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடுகின்றோம். | |
| 61 | மீளாய்வாண்டின் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் கணக்கு குறிப்பு 15 இன் கீழ் இலங்கை டொலிகொம் நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை குறிப்பிடப்படாதிருந்ததுடன், பெறுமதி ரூபா 1,271,480,516 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், இலங்கை டொலிகொம் நிறுவனத்தில் இருந்து கிடைத்த மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான இலங்கை டொலிகொம் நிறுவனத்தின் பங்கு உரிமை 50.23 சதவீதம் ஆக இருந்த போதும், அரசாங்கத்தின் நிதி கூற்றுக்களில் அது 49.5 சதவீதமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 | அரசாங்கத்தின் உரிமையில் காணப்படுகின்ற நிறுவனங்களுடன் காலரீதியில் மீதிகளை உறுதிப்படுத்தி பெற்று கணக்குகளில் சரியாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒரு கைதவறு காரணமாக, தொடர்புடைய பங்கு பெறுமதி பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் அந்த பெறுமதியையம் உள்ளடக்க நான் நடவடிக்கை எடுப்பேன். தொடர்புடைய சதவீதத்தைக் கணக்கிடுவதில் ஏற்பட்ட கணிதப் பிழையால் இந்த வித்தியாயசம் ஏற்பட்டதுடன் எதிர்காலத் திருத்தத்திற்காக இதைக் குறித்துக்கொண்டுள்ளேன். | - மேற்படி- |
| 62 | அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் | 2023 | அரசாங்கத்திற் | இணங்குகின்ே | - மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளில் மூலதன பங்களிப்பின் அதிகரிப்பு ரூபா 269,386 மில்லியன் ஆக இருந்ததுடன், அதில் ரூபா 228,771 மில்லியன் அதாவது 85 சதவீதம் 2023 செப்டம்பர் 26 ஆம் திகதிய அமப 23/1812/604/118-1 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் இலங்கை மின்சார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை விமான கம்பனியின் ஐந்தொகையில் மீள் கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உரிமை மூலதன முதலீட்டின் காரணமாக அதிகரித்திருந்தது. | | குச் சொந்தமான தொழில் முயற்சிகளை இனங்கண்டு பொறுப்புக்கள் அரசாங்கத்திற்கு கையேற்றதன் காரணமாக அரசாங்கம் நிதி நெருக்கடிக்கு தாக்கமளித்திருந்தமையினால் அந்தப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கு உரிய திட்ட முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | றன். குறிப்பிட்டுக்கொள்கின்றோம். சர்வதேச நிதி நிதியம் நிகழ்ச்சித்திட்டத்தின் படி இந்த நிறுவனங்களின் ஐந்தொகைக் கணக்கு மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்கு ஒத்திசைவாக இந்த ஒருநாள் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டுள்ளது. | |
| 63 | 2019 சனவரி 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வெளிநாட்டு மானியங்களை பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியினால் ஒவ்வொரு வெளிநாட்டு மானிய நிறுவனங்கள் 13 நிறுவனங்களுடன் கூட்டுப் பெறுமதி ஜப்பான் யென் 984,000, யூரோ 134,810,000, அ.டொலர் 58,417,841, கொரியன் வொன் 400,000, சீன யுவான் 2,000,000,000 மற்றும் ரூபா 4,545,750 ஆக பல்வேறு நாணயங்களில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த வெளிநாட்டு மானியங்கள் கிடைத்திருந்தமைக்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 | இலங்கை அரசாங்கத்தினால் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்படுகின்ற வெளிநாட்டு மானியங்களை முழுமையாக பெற்று உச்ச அளவில் நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்பார்த்தபடி வெளிநாட்டு உதவி பணமாக்கப்படாமைக்கு கொள்முதல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாமதம், கோவிட் தொற்றுநோய் காரணமாக பணிகள் பாதிக்கப்பட்டமை, கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முடிக்கத் தவறியது மற்றும் தொடர்புடைய நிறுவனங்களால் கடன் மற்றும் உதவி பயன்பாட்டை முறையாக செயல்படுத்தத் தவறியது, திட்டங்களை செயல்படுத்து | 2023 ஆண்டு இறுதியளவில் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ம் நிறுவனங்களில் நிர்வாக குறைபாடுகள் மற்றும் நன்கொடை நிறுவனங்களில் ஏற்பட்ட தாமதங்கள் போன்ற காரணங்கள் என்பது அவதானிக்கப்பட்டன. இருப்பினும், மானிய நிதி அதிகபட்ச அளவில் பயன்படுத்தப்படுவதையும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கு அதிக பங்களிப்பை வழங்குவதையும் உறுதிசெய்ய, வெளியுறவு வளத் திணைக்களம் மூலம் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளும் வரும் காலத்தில் எடுக்கப்படும் என்று நம்பப்படுகிறது. | |
| 64 | கடன் கொடுப்பனவுகள் தற்காலிகமாக கைவிடப்பட்டதன் காரணமாக 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் மேற்கூறப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்குரிய பயன்படுத்தப்படாத மீதியின் அடிப்படையில் அர்ப்பணித்தல் கட்டணம் (Commitment Fee) செலுத்தப்படாதிருந்தமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் இந்த கடன் தொகைகளுக்குரிய பயன்படுத்தப்படாத மீதியின் அடிப்படையில் சராசரி அர்ப்பணித்தல் கட்டண பெறுமதி | 2023 | கடன் செலுத்துவதை கைவிடுவதற்கு உரியதாக எழக்கூடிய மேலதிக செலவினங்களை முன்கூட்டியே இனங்கண்டு உரிய மூலோபாயத் தீர்வுகள் வழங்குதல் | இலங்கை அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட சில கடன் கொடுப்பனவுகளை நிறுத்தி வைப்பதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்காலக் கொள்கையின் படி, | இன்றளவிலும் இந்த நிலைமை அவதானிக்கப்படுகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அல்லது கொடுப்பனவு தாமதத்தின் காரணமாக அப்பெறுமதியினை விட உயர்ந்த பெறுமதி செலுத்த வேண்டி ஏற்படும் ஆபத்து காணப்படுகின்றமை கணக்காய்வின் போது மேலும் அவதானிக்கப்பட்டது. | | வேண்டும். | பாதிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவை 2022.04.12 ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, செலுத்தப்படாத அர்ப்பணிப்புக் கட்டணங்கள் மற்றும் தண்டப்பண வட்டி கடன் நிலுவை பற்றிய கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்குரிய உடன்படிக்கை பேச்சுவார்த்தைகளில் கலந்துரையாடப்படும். | |
| 65 | நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமான மதிப்பீட்டை திருத்துவதற்காக அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் மாத்திரம் குறிப்பிடப்படுவதால், பாராளுமன்றத்தினால் அங்கீகரித்த வருமான மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்த சந்தர்ப்பம் வழங்கியதால் வருமானம் பொருத்தமானதாக மதிப்பீடு செய்யும் பொறுப்பில் நலிவுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023/ 2022/ 2021 | வருமானங்களை சரியாக மதிப்பீடு செய்து மதிப்பீடு தயாரித்தல், அவற்றை திருத்தும் போது பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்ய வேண்டிய முறை தொடர்பாக கவனம் செலுத்த வேண்டி இருந்தமை மற்றும் பாராளுமன்றத்தால் பின்பற்றப்பட்ட | வழங்கப்பட்ட பதில் பொருந்தவில்லை. | 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தின் மூலமும் இது பற்றி தெளிவாக குறிப்பிடப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வருமான மதிப்பீடு பாராளுமன்றம் முறையாக அங்கீகரிக்காமல் திருத்துவதற்கான இயலுமை வரையறுக்கப்படல் வேண்டும். | | |
| 66 | மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வெளிநிறுவனங்களுக்கு 10 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 115,977.35 மில்லியன் பெறுமதியான பிணைமுறி 10 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 28,838.4 மில்லியன் பெறுமதியான சலுகைக் கடிதம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவற்றின் செல்லுபடி காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023/ 2022 | திறைசேரி பிணைமுறி மற்றும் சலுகைக் கடிதம் விநியோகித்தல் செயற்பாடுகளை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லல் சேண்டும். | 2024 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரச கடன் முகாமைத்துவ சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டவுடன் கடன் இடர் மதிப்பீடு ஒன்றின் அடிப்படையில் பெறுநர்கள் ஏதும் நிதி நெறுக்கடியில் இல்லை என பரிந்துரைகள் பெற்றுக் கொண்ட பின்னர் மட்டும் திறைசேரி பிணைமுறி வழங்கப்படும். | 2023 ஆம் ஆண்டு இறுதியளவில் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது |